உ

கணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீதத்துவராயசுவாமிகள்
அருமையாகிய பலநூல்களினின்றும்
திரட்டியருளிய

குறுந்திரட்டு.

இஃது,
சமிவனக்ஷேத்திரமென்னுங்
கோயிலூர்

அ. இராமசாமிச்சுவாமி
யவர்களால்

காரைக்குடி. அழ-சித-சிதம்பரஐயாமுதலிய
பலருடையவேண்டுகோளின்படி
கோயிலூர்ப்பிரதி முதலிய பலபிரதிருபங்களைக்கொண்டு
பிழையறப் பரிசோதித்து,

சென்னை:
மிமோரியல்அச்சியந்திரசாலையில்
பதிப்பிக்கப்பட்டது.

முதற்பதிப்பு.
இதன்விலை ரூபா - உ.

ஸர்வதாரிஸூ புரட்டாசிமீ

1888.

உ

கணபதிதுணை.

சூசிபத்திரம்.

———:o:———

பாடபேதம்.

சமயம்-சமையம்.
அனேகம்-அநேகம்.
ஆனந்தம்-ஆநந்தம்.
அனந்தம்-அநந்தம்.
உலகாயுதன்-உலாகாயதன்.
சன்னிதி-சந்நிதி.
விஞ்சதி-விம்சதி.
சொரூபம்-சுரூபம்-ஸ்வரூபம்.
பெந்தம்-பந்தம்.
சன்னியாசம்-சந்நியாசம்.
செகத்து-சகத்து-ஜகத்து.
பிரயோசனம்-பிரயோஜனம்.
சாத்திரம்-சாஸ்திரம்-சாஸ்த்ரம்.
சொப்பனம்-சொற்பனம்.
சாட்சி-சாஜி.
விவகாரம்-வியவகாரம்.
விரத்தி-விரக்தி.
பத்தி-பக்தி.

இவ்வண்ணம்பலபாடபேதமுளது.

உ

கணபதி துணை.

திருச்சிற்றம்பலம்.

சொரூபானந்தசுவாமிகள், தத்துவராயசுவாமிகள்

சரித்திரச்சுருக்கம்.

———:0:———

பூமிதேவிக்குத் திருமுகம்போலச் சிறந்திருக்கிற தமிழ்நாடு பலவற்றினு மேம்பட்ட நடுநாட்டிலே வீரமாநகரத்திலே பிராமணகுலத்திலே சற்றேறக்குறைய ௩௦௦௵ த்திற்குள்ளாக மாத்துவப்பிராமணருக்குள்ளே யிவ்வுலகஞ்செய்த மாதவமென்று சொல்ல இரண்டு புண்ணியமூர்த்திகள் அவதரித்தார்கள். அவர்கள் அம்மான் * மருமகன் என்கிற முறைமையையுடையவர்கள், அவ்விருவரும் வடமொழி தென்மொழி யிரண்டிலும் வல்லவராய் அறிவாசார முதலியவைகளிற் சிறந்தவர்களாய்ப் பிரமசாரியர்களாகியே யிருந்து தங்கள் கருமத்தில் வழுவாது நடந்துவருநாளில் வேதசாஸ்த்ர விதிகாசபுராண விலக்கிய விலக்கணம் யாவையும் படித்து ஐயந் திரிவு அறியாமை யென்பவை யில்லாமல் அவைகளின் பொருள்களை ஆராய்ந்தறிந் தெப்போதுந் தத்வ விசாரணையும் சொரூபவிசாரணையுஞ் செய்துவருதலாலும், அவைகளையே எவர்களுக்கும் போதித்தலாலும், பெரியவிருக்ஷந்தோன்றற்கிடனான சிறிய ஆலம்விதைபோல ஞானங்குரமானவராதலாலும், இவர்களுக்கு அப்பருவத்திலே தானே பூர்வநாமம்போய்த் தத்வராயரென்றும், சொரூபானந்தரென்றும், காரணநாமமுண்டாயின.

(இவர்கள்) பூர்வ தவக்குறைவால் வந்தவர்களாதலால் ஆத்மவிசாரணை செய்யவேண்டுமென்கிற விவேகமே மேலிட்டாலோசித்தார்கள். அவையென்னெனில்? இம்மையில், யாவரினுஞ் சிறந்த அரசர்கள் வாழ்வுஞ் சிலநாளி லழிந்துவிடும் அதனால் வருமின்பமு முள்ளிப்பூவின் றேனை யொக்குமென்றும் மறுமையில், இந்திராதி தேவர் பதங்களும் ஆயுண் மிகுந்திருந்து காமாதி

---

* சொரூபானந்த சுவாமிகளுடன் பிறந்தாள் பிள்ளை-தத்வராயசுவாமிகள்.

ன்பமுற்றழியுமென்றும் இளமையாதியும் நிலையல்லவென்றும் நினைத்துப் பெண்ணாதி மூவாசையுந் துறந்து சாந்திமுதலாகிய குணங்களைத் தமக்கங்கமாகக் கொண்டு தலையில் நெருப்புப்பற்றிக்கொண்டவன் நீர் தேடுதல் போலவும், மிகுந்த கோடைவெயிலிலகப்பட்டவன் நிழல் தேடுதல்போலவும், அதிதீவர பக்குவமுடையவர்களாய்ச் சனனமரண மொழிக்கவல்ல ஞானாசிரியரைத்தேடி அடுக்கவேண்டிப் பலநாள் பலவிடங்களிலுந் தேடிப்பார்த்துங் கிடையாமையால் மிகவும் வருத்தமடைந்து ஒருநாள் போம்வழியில் ஒரு சிறந்த சோலையில்பெரியஆலம்விருக்ஷத்தின்கீழிருந் தாலோசித்தார்கள். அவை யென்னெனில்? நாம் இப்படித்தேடினால் எத்தனைகாலஞ் செல்லும் ஆதலால் ஒருவர் உத்தரதிசையிலும் ஒருவர் தக்ஷணதிசையிலும்போய்த் தேடிப்பார்ப்போம் நமக்குள் எவருக்குமுன்னே ஆசிரியர்கிடைத் தனுக்கிரகம் பெற்றுக்கொள்ளுகிறமோ அவரே மற்றொருவருக்கும் ஆசிரியரென்று நிச்சயித்துக்கொண்டு போனார்கள். இவர்களில் தென்றேசத்திற் சென்ற "சொரூபானந்தசுவாமிகள்" பல தேசங்களிலும்,பலஊர்களிலும்,பல வனங்களிலும், பல மலைகளிலும்,பல நதி தீரங்களிலும், பல புராதனாலயங்களிலுந் தேடிக்கொண்டு திருவரங்கமுந் திருவானைக்காவும் காவேரிநதியும் தெற்காக வடக்கேபோய்த் திருப்பைஞ்ஞிலியென்கிற சிவஸ்தலத்தையும் திருவெள்ளறை யென்கிற விஷ்ணுஸ்தலத்தையும் தன் பாங்கினுடைத்தாயிருக்கிற கோவத்தமென்னும் ஸ்தலத்துக்குச் சமீபத்தில் போம்பொழுது இவருக்கு ஒருகாரணமுமின்றிப் பேரானந்தமும் சரீரத்திலே புளகாங்கிதமும் உண்டாகிக் கைகள் அஞ்சலிமுகிழ்த்திடக் கண்களில் நீர்பெருகக்கண்டு நான்தேடிவந்த ஞானாசிரியரிருக்கிற ஸ்தானம் இதுவேயென்று அந்த நகரைப் பிரதக்ஷணமாய் வந்து உள்ளே போய் இவ்விடத்திலே பெரியவர்கள் உண்டோவென்று விசாரித்தார். அவ்விடத்திலுள்ளவர்கள் இந்த ஊர்க்குப்புறத்திலே நாணற்புத விருக்கின்றது; அதனுள்ளே யொருபெரியவ ரிருக்கின்றார். அவர் பெயர் * சிவப்ரகாசசுவாமிகளென்றும் அவர் ஒவ்வொரு தினத்திலே சாயங்காலத்தில் அந்தப் புதலைவிட்டு வெளியில் வருகின்றாரென்றுஞ் சொல்ல அவ்விடத்திலேபோய் இவர் காத்துக்

* சிவப்ரகாசசுவாமிகள் பூர்வஸ்தலம் திருவாரூர்-இவர் சுத்தவைதீக சைவர்.

கொண்டிருக்கிறபோது அந்தச் சிவப்ரகாசசுவாமிகள் ஒருநாள் வெளியிலே வந்தார். சொரூபானந்த சுவாமிகள் நமஸ்காரம்பண்ணி நெடுங்காலமா யலைகின்ற ஜனன மரணப்பிரவாகத்தினின்றும் அடியேன் கரையேற ஞானோபதேசம் பண்ணவேண்டுமென்று பாததாமரையைப் பிடித்துக்கொண்டு முறையிடும்பொழுது நாம் நினைத்திருந்த அதிதீவரபக்குவ னிவனேயென்று ஆலோசித்து அப்பா உனக்காகத்தான் இங்கே இதுவரையில் யானிருந்தேனென்று மேலான மஹாவாக்யத்தைச் சிரவணாதிகளால் அநுக்கிரகம்பண்ண அவ்வநுக்கிரகத்தைப் பெற்றுக்கொண்டு ஸ்வாநுபூதியாகவேண்டிச் சமாதிபண்ணிக்கொண் டிருக்குநாளில்; வடக்கே தேடிக்கொண்டுபோன தத்வராயசுவாமிகள் அத்தேசமுழுமையுந் தேடி ஆசிரியர் கிடையாமல் மறுபடியுந் தென்றேசத்திற்கேவந்து சொரூபானந்த சுவாமிகளைக்கண்டார். "சொரூபானந்த சுவாமிகள்". தனக்காசியர் கிடைத்ததும் அநுக்கிரகம் பெற்றுக்கொண்டதும் பிறவுஞ்சொல்லத் தத்துவராயசுவாமிகள் மிகவும் அதிசயமடைந்து சொரூபானந்த சுவாமிகளை வணங்கி மேலான ஞானுநுக்கிரகம் பெற்றுக்கொண்டு நிருவிகற்ப சமாதியிலிருந்து நித்யநிரதிசயானந்தத்தை யநுபவித்துக் கொண்டிருந்தார். இப்படியிருக்குங் காலத்திலே; பெரியோர்களுக்குத் தாம் பெற்றபேறு உலகம் பெறவேண்டுமென்கின்றசங்கல்பம் சுபாவமானபடியால் "சொரூபானந்தசுவாமிகள்" திருவுள்ளத்தில் இந்தத் தத்வராயர் தென்மொழியிற் பாடுதலில் மிகவும் வல்லவரா யிருக்கையால் இவரைக்கொண்டு லோகோபகாரமாச் சிலசாஸ்திரங்களைச் செய்விக்க வேண்டுமென்று நினைத்து உபாயமாய்க் குறிப்பித்துக்கொண்டுவர அவர்சதாநிஷ்டையில் இருக்கின்றவரானபடியால் அவருக்கு இந்தக்குறிப்பு மிகவுந் தோன்றும விருந்தது கண்டு இக்கருத்து நன்றாய்த் தெரிவிக்கவெண்ணி ஒருநாள் அமாவாசையில் அப்யங்கஞ்செய்ய வேண்டியவர்போல ஏவலாளரைத் தயிலங்கொண்டுவாருமென்று சொல்ல அருகேநின்ற தத்வராயசுவாமி அமாவாசையென்கிறதை யனதிலே நினைத்து அம்மென்றார். அப்போது "சொரூபானந்தசுவாமிகள்" கோபித்துக்கொண்டவர்போல விதிவிலக்கென்கிற சங்கல்பமுங்கடந்து காலாதீதராய்நின்ற நமக்கு விதிவிலக்குண்டோ நம்மெதிர் நிற்கவேண்டாம் போமென்று சொல்லத் தத்வராயசுவாமிகள் அகண்டபரிபூரண சச்சிதானந்தமாய் விளங்குகின்ற சுவாமிகளுக்கு நான்

விதிவிலக்குக் கற்பித்த குற்றத்தால் இனி நானிந்தச் சரீரத்தோடி ருத்தல் தகாது. கடலில்விழுந்திறத்தலின்றி இதற்குப் பரிகாரம் வேறில்லையென்று நினைத்து ஆசிரியர் சந்நிதானத்தை நோக்கிக் கொண்டே பின்னிட்டபடிநடந்து ஆராமை மேலிட்டுக் கண்களிற் தசலம் ஈரைதாரையாய்ப் பெருகப் பரமாசிரியராகிய "சிவப்ர காச சுவாமிகளையும்" ஆசிரியராகிய "சொரூபானந்தசுவாமிகளை யுங்" குறித்துச் சொரூப சாக்ஷாத்கார விலாசத்தை நவநவமாய்த் தமது சுவாநுபூதியின்க ணனுபவித்தபிரகாரம் பின்னுள்ளவாத் மகோடிகளும் அவ்வநுபூதியைப் பெற்றுய்யும்படி ஜீவகாருண் ணியத்தினால் தமது சொரூபாநுபூதி ஆவேசத்தால் ஸ்தோத்திர மாய்ச் - சிவப்ரகாசவெண்பா - தத்வாமிர்த மென்னும், இரண்டு டன்-திருத்தலாட்டு, பிள்ளைத்திருநாமம், வெண்பாவந்தாதி, கலி த்துறையந்தாதி, சின்னப்பூவெண்பா, தசாங்கம், இரட்டைமணி மாலை, மும்மணிக்கோவை, நான்மணிமாலை, கலிப்பா, ஞானவி னோதன் கலம்பகம், உலா, சிலேடையுலா, நெஞ்சுவிடுதூது, கலி மடல், அஞ்ஞவதைப்பரணி, மோகவதைப்பரணி, அமிர்தசாரவெ ண்பா வென்னும் ஆகப் பதினெட்டையும் திருவாய் மலர்ந்தருளி க்கொண்டுபோம்பொழுது அருகில்நின்றமாணாக்கர்கள் அப்போ தைக்கப்போதே அப்பிரபந்தங்களைத் தனித்தனி யெழுதிக்கொண் டுபோய் "சொரூபானந்தசுவாமிகள் சந்நிதானத்திற்படிக்கச்சுவா மிகள்" அச்சாஸ்திரங்களில் விருப்பமில்லாதவர்போல் மயிருள் ளவள் வாரிமுடிக்கிறதுபோல வாயுள்ளவன் பாடியநுப்புகிறு னென்று திருவாய்மலர்ந்து கொண்டிருந்தார். அப்படியிருக்க இ ங்கே தத்வராயசுவாமிகள் ஆசிரியர் தரிசனத்துக் கபாத்திரனாய் விட்டேனே இனி நானெந்தச்சனனத்தில் தரிசிப்பேனென்னும் ஏக்கத்தினாலே தாயைக்காணாத இளங்குழந்தையைப்போல அழு துமுகம்வீங்கி பாடுதுறையில் திருவடிமாலையைப் பாடிக்கொண்டு விழுந் திறக்கக் கடலுக்குச் சமீபத்தில் போம்பொழுது அந்தச் செய்தியையு மாணாக்கர்கள் வந்துசொல்ல சொரூபானந்த சுவா மிக ளறிந்து குருவுக்கு வீங்கியை வரச்சொல்லுமென்று கட்டளை யிட அதைக்கேள்விப்பட்ட தத்வராயசுவாமிகள் தந் தேகவருத்த முழுதும் நீங்கி நடக்கச் சக்தியும் பெற்றுக்கொண்டு சுவாமிக ளால் அனுப்பப்பட்ட மாணாக்கர்களைப்பார்த்துக் கருணாநிதியா கிய சுவாமிகள் மகா அபராதியாகிய வென்னையும் வரக் கட்டளை யிட்டதோவென்று பேரானந்தமடைந்து மேற்படி பிரபந்தத்தில்

திருவருட்கழன்மாலே, போற்றிமாலே, புகழ்ச்சிமாலே முதலானவை யடங்கிய பாடுதுறையென்னும்பிரபந்தத்தைப்பாடிக்கொண்டு சிரசின்மேல் அஞ்சலியஸ்தராய்ச் சுவாமிகளுடைய சந்நிதானத்தைப் பார்த்துக்கொண்டேவந்துபிரதக்ஷணம்பண்ணிஅஷ்டாங்கபஞ்சாங்கமாகஅனேக நமஸ்கா ரஞ்செய்து முன்னிலும் அதிகமாய்க்கண்களில்நீர்பெருக மயிர்க்குச்செறிந்துபரவசப்பட்டு நெஞ்சமுருகி ஸ்தோத்திரம்பண்ணிக்கொண்டு நிற்கும்போது சுவாமிகளும் இருவென்றுகட்டளேயிட இருந்துசுவாமிகளின்பணிவிடைசெய்துகொண்டு மிகவும் சந்தோஷமடைந்திருக்குநாளில் சுவாமிகள் தத்வராயர் பாடிய சாஸ்திரங்களேயெல்லாம் பார்வையிட்டுச் சொல்லமைதியும் பொருளமைதியு நோக்கிச் சந்தோஷத்தைத் தனக்குள்ளே யடக்கிக்கொண்டு இந்தச் சாஸ்திரங்கள் மிகக் கற்றவர்க்கன்றி மற்றவர்க்குதவாதென்று நினேத்துத் தத்வராயசுவாமிகளேப்பார்த்து அப்பா இந்தச் சாஸ்த்ரங்களெல்லாம் உனக்கே பாடிக்கொண்டனேயன்றி யுலகத்தாருக் குபயோகமாகப் பாடவில்லேயேஎன்றருளிச்செய்ய அப்போது, மடைத்தொழிலாளர்கள் சுவாமீ அமுதுகொள்ள வெழுந்தருள வேண்டுமென்று விண்ணப்பஞ்செய்யச் சுவாமிகளும் நித்யகர்மங்களே முடித்து அமுதுக்கெழுந்தருளத் தனியேயிருந்த தத்வராயசுவாமிகள் ஆசிரியர் திருவாக்கை ஆலோசித்து அப்படியே தாமும் நினேத்து சுவாமிகள் அமுதுகொண்டுவருமுன்னர் எல்லாருக்கும் பிரயோஜனப்பட மோகவதைப் பரணியில் ஒருபிரகரணமாகச் சசிவர்ணபோதமென்னும் ஒரு சாஸ்த்ரத்தைச்செய்து சுவாமிகள் திருவடியிலேவைத்துநமஸ்காரம் பண்ணச் சுவாமிகள்தத்துவராயர்விரைந்துபாடினதையும் அச்சாஸ்த்ரத்தின் பாகத்தையும் பார்த்துச்சந்தோஷமடைந்தருளினர். பின்னும், தத்வராயசுவாமிகள்-பிரமகீதை, ஈசுரகீதைமுதலிய வேதாந்தசாஸ்த்ரங்களுஞ்,சில மத சித்தாந்தநூல்களுஞ்,செய்துகொண்டுநிர்விகற்பசமாதியி லிருக்குநாளில் யாத்திரைசெய்கின்றவராகிய சிலஆராத்தியர்களுஞ் சிலவித்வான்களும்சொரூபானந்தசுவாமிகள் சந்நிதானத்தில்வீற்றிருக்கிற தத்வராய சுவாமிகளின் முன்னேவந்துபோர்முகத்தாயிரங்களிற்றி யானேயைக்கொன்ற சுத்த வீரனேத்தலேவனுகக்கொண்டு பாடப்பட்ட பரணியென்னும்பிரபந்தத்தைவீரமென்பது கனவிலும் கேட்டறியாத உம்முடையஆசான்மேலெப்படி நீர் பாடினீரென்று கேட்க அதற்குத் தத்வராய சுவாமிகள் நம்முடையசுவாமிகள் சிஷ்யருடைய அகங்காரமாகிய

யானையை கொல்லுதலாற் பாடினேமென்று சொல்ல அதற்கு அவர்கள் நீர் சொல்லும் அகங்கார யானை கண்ணுக்குப் புலப்படாமையால் ஒவ்வாது ஆயினும் ஒரு சிஷ்யனுடைய அகங்காரமாகிய யானையைக் கெடுத்தற்கு அனேகநாட் செல்லுமே இவர் ஏககாலத்தில் ஆயிரஞ் சிஷ்யர்கள் அகங்காரத்தைக் கெடுத்ததெப்படியென்று வினவ? அதற்குத் தத்வராயசுவாமிகள் அநுபவத்திற் காட்டவேண்டுமென்று பிரதியுத்தரமொன்றுஞ் சொல்லாமற் சமாதிசெய்திருந்தார். சொரூபானந்த சுவாமிகளின் சந்நிதானம் பட்டமையால்!வந்த வித்வான்களனைவரும் இராப்பகல் ஒன்றுந் தெரியாமல் மூன்றுதினமளவும் பரிபூரணநிசையி லிருந்தார்கள்;நாலாநாள் தத்வராயசுவாமிகள் திருக்கண்விழித்தபின்பு அவ்வித்வான்களும் எழுந்து சுவாமிகளையும், தத்வராய சுவாமிகளையும், நமஸ்காரம்பண்ணி நீங்களறியாமையினால் ஆக்ஷேபித்தோம் தங்கள் சந்நிதானத்தினது விசேஷம் ஏககாலத்தில் பதினாயிரஞ் சிஷ்யர்கள் நேரிட்டாலும் பரிபாகப்படுத்தத்தக்க வல்லபமுள்ளதென்று அவர்கள் பலரும் இப்பிரபந்தங்களைக்குறித்து ஒவ்வொரு கவிகளைச்சாத்தி மாணாக்கர்களாய் வழிபட்டுப் போனார்கள். பின்பு தத்வராயசுவாமிகள் லோகோபகாரமாக வேதாந்த முதலியபல சாஸ்த்ரத்தினின்றுஞ் சுவாநுபூதிக்கிசையச் சாரமாயுள்ளசெய்யுட்களை யெல்லாந் திரட்டிக், குறுந்திரட்டென்று ஒரு சாஸ்த்ரம் அருளிச்செய்தார். இப்படியாகச் சுவாமிகளுடனிணைபிரியாமல் இருக்கும்பொழுது சொரூபானந்த சுவாமிகள் யாதோ ஒரு திருவிளையாட்டை நினைத்துத் தத்வராயசுவாமிகளை வைத்துத் தாம் பிரிந்து புறப்பட்டுப் போகையில் இவரும் பின்றொடரச் சுவாமிகளுந் தமக்கு நேரிட்டபடி வழியொன்றின்றிக் காடு நாடு மலைகள் முதலான விடங்களிற் சுற்றித்திரிந்து சமுத்திரத்தின் சமீபத்திற்போயினர். தத்வராய சுவாமிகள் கூடவேபோய் சொரூபானந்த சுவாமிகள் கடன்மேல் நடக்கக் கடற்சலம் விலகி வழிகொடுக்க அதைக்கண்டு தாமும் கடலில் நடக்க ஜலம் வழிவிடாமையால் கரையிலேநின்று பசுவைநீங்கிய விளங்கன்றுபோலக் கதறித் திக்குகள்தோறுந் தேடும்பொழுது சொரூபானந்த சுவாமிகள் தரிசனங்கொடுத்துப் பின்பு அகண்ட பரிபூரண சச்சிதானந்தமாய் விளங்கினர். அதைக்கண்ட தத்வராயசுவாமிகள் அதிசயமும் ஆராமையும் அடைந்து சுவாமிகளுக்குச் செய்யவேண்டிய உத்தரகிரிகைகளெல்லாமுடித்துச்சுவாமி

களையே தியானித்துக்கொண்டிருந்து பிரிவாற்றாமையாலோ பேரன்பினாலோ சுவாமிகளையன்றித் தமக்கொரு செயலின்மையினாலோ தாமும் உடனேபரிபூரண நிசையையடைந்தார். இவர்களுக்குத் திருவலஞ்சுழியும், வாசஸ்தானம்.சிவப்ரகாசசுவாமிகள்சமாதி திருவாரூர் சமீபஸ்தானம். சொரூபானந்த சுவாமிகள் சமாதி திருவண்ணாமலைக்கும் விருத்தாசலத்துக்கு மத்தியஸ்தானம். தத்வராயசுவாமிகள் சமாதி சிதம்பரத்துக்கும், விருத்தாசலத்துக்கு மத்தியஸ்தானம். இந்தச்சரித்திரம் மேற்படி சுவாமிகளுடைய பரம்பரை மாணுக்கர்கள் வைத்திருந்த பிரதிகளின்படி பதிப்பிக்கப்பட்டது. சேந்தை நகரத்திலே "சொரூபானந்த சுவாமிகள்" அவதரித்த தாகவும், வீரைநகரத்திலே தத்வராயசுவாமிகள் அவதரித்ததாகவும், வழங்கிவருகின்றார்கள். இந்த இரண்டூரும் மதுரைக்குத் தெற்காகவும் வழங்கிவருகின்றார்கள்.

சொரூபானந்தசுவாமிகள், தத்வராயசுவாமிகள்;
சரித்திரச்சுருக்கம் முற்றுப்பெற்றது.

திரட்டியருளிய நூல்களின் பெயர்.

மூலசித்தி.
பிரமகீதை.
சுருபானந்தசித்தி.
பகவற்கீதை.
சித்தாந்த[illegible]பிகை.
மெய்ஞ்ஞானவிளக்கம்
தத்துவபோதம்.
போதாமிர்தம்.
அருள்நெறிவிளக்கம்.
சனற்குமாரம்.
சசிவர்ணபோதம்.
ஈசுரகீதை.
ஞானசூளாமணி.
மெய்மொழிச்சரிதை.
போதரத்தினாகரம்.
சத்தம்.
அநுபவசித்தி.
ஞானானந்தசித்தி.
நித்தியானந்ததரிசனம்.
சிவஞ்ஞானநிலயம்.
ஞானசித்தி.
ஞானசாரம்.
திருவாய்மொழி.
திருமந்திரம்.
தொன்றி.
தத்துவசூளாமணி.
திருவாசகம்.
ஞானயோகசமாதி.
தத்துவசித்தி.
மவுனமுத்திரை.

ஏட்டுப்பிரதியிற்கண்டபெயர் தான் இங்குகாட்டியது, அதில் பெயர்காட்டாமல் இன்னம் அனேகம் நூல்கள் இருக்கின்றன; அவைகளின்பெயரை இங்கு காட்டவில்லை.

இந்நூல்களி னின்றுந் திரட்டியருளிய இந்நூலாசிரியரெவ்விடத் தெவ்விடத் தெந்தெந்த நியாயத்திற் கெந்தெந்தவிடத்தி லெந்தெந்தப்பாடல் வேண்டுமோ; ஆண்டாண்டனந்த மடங்கு ஒவ்வொரு நூலினு மெடுத்துத்திரட்டி இருக்கின்றமையாலவைகளை இங்கு காட்டலாயிற்று.

உ

கணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்.

குருவேநம:

குறுந்திரட்டு.

பொழிப்பு.

எண்ணியவெண்ணியாங்கெய் துவகண்ணுதற்
பவளமால்வரைபயந்த
கவளயானைதன்கழல்பணிவோர்க்கே.

தவளத்தாமரைதாதார்கோயி
லவனைப்போற்றுதுமருந்தமிழ்குறித்தே.

தந்தைதாயுமெய்த்தகைவுடையுறவுஞ்சாலுங்கல்வியுந்தகுமுயிர்த்துணையுஞ், சிந்தையாருநற் சீலமும்வலியுந் திருவுமின்பமுஞ் சிதைவிலாவறிவு, முந்தையாமுளத் துவகையுமுயிரு மூலமுத்தியு மொழிவருஞ்சமைவு, மெந்தையாகிவந்தேழையேனையுமா ளிறைவனார்கழலாகுமென் றனக்கே. (க)

அருட்டிறந்திகழவந் தானடியிணை மலர்களேத்தி
மருட்டிறமாயைநீக்கிமனவுரையிறந்தவின்பப்
பொருட்டிறந்திகழ்த்திமாளாப்போதவானந்தமாக்குந்
திரட்டினதியல்பையெல்லாந்தெளிதரச்செப்பலுற்றும். (உ)

வேதமேமுதற்கலைமுழுதினுமொழிமெய்ம்மையாம்பொருளெல்லாங், கோதிலாவகைமொழியுமித்திரட்டவைகூறுமொன்றொன்றைத்தா, ளுதலால்முழுதினையுமங்கைக்கனியெனவளித்திடலாலே, நாதனாருள்விழியிதுவெனிலலால்நவில்கலையெனலாமே.

எப்பொருள்களுமுண்டித்திவிதிலாதெதிலுமின்றாற்
பற்பலபனுவலாகும்பரப்பினிலலையவேண்டா
வொப்பரும்பரா நுபூதியுண்மையுமளிக்குமென்று
லிப்பரந்திரட்டிதீசனெழிலருள்விழியதன்றே. (ச)

பொழிப்பு-முற்றிற்று.

ஆ-திருவிருத்தம்-ச.

கடவுள் வணக்கம்.

—:o:—

உளவிருளொழிதரவொளிர்பவனெவனவ
னளவறுமறியநல்லறிவினனெவனவன்
வளமலியடியரைமதிநலனெவனவ
னளிதருமடிதொழுதனமனவரதமும். (க)

மூலசித்தி.

ஓங்குமுயிர்களொருகாலுமுணரும்வண்ணமுணராமற்
பாங்கிலுலகமுழுதினையுமறைத்தபடனப்பெருமாயை
யாங்குவேரோடழியும்வண்ணமகமும்புறமுமறநிறைந்து
தீங்கிலின்பந்திகழொளியாஞ்சிவப்பிரகாசத்தினைப்பணிவாம். (உ)

பிரமகீதை.

இரவியுமதியும்வானும்வாயுவுமனலுமப்பு
மூரவியமண்ணுமற்றவுணர்பவன்றானுமாகிப்
பரவிடுங்கரணம்பன்னான்காயுமன்றாயுநின்றே
யுரைமனமிறந்துளோங்குமொளியினைவணங்கல்செய்வாம். (ங)

சுருபானந்தசித்தி.

உலகமாமுருவுந்தானுமுணர்பவன்றானுமாகி
யலகிலாப்பரமுமாகியவைமிகுகண்ணதாகி
யுலைவிலாவாதிகட்குமொத்தவையாகியன்றாஞ்
சலமிலாச்சங்கரன்றன்றாளினைவணங்கலுற்றாம். (ச)

ஆதியாயனாதியாகியந்தமாயனந்தமாகிச்
சோதியாயிருளுமாகித்தொந்தமாய்த்தொந்தமில்லா
நீதியாய்நினைந்ததாகிநினைவரிதென்றுவேத
மோதியபரமானந்தவொளியினையுளத்துள்வைப்பாம். (ரு)

பகவற்கீதை.

ஐவகைப்பொருளுநான்குகரணமுங்குணங்கண்மூன்றுஞ்
செய்வினையிரண்டுமொன்றியாவருந்திகைப்பநின்ற
பொய்யிருளகலஞானப்பொருட்கதிர்விரித்தபுத்தேள்
கைவளராழிச்செங்கட்கண்ணனைக்கருத்துள்வைப்பாம். (சு)

என்றுமோர்தன்மையாகுமெழிலறிவுருவதாகிப்
பொன்றுபூதாதியுந்தானாகியேபுரையொன்றின்றி

னின் றபேரின்பநாதனிலவுநாமகடன்கேள்வன்
பொன்றிகழ்தாமரைத்தாள்பொலிவுறச்சென்னிவைப்பாம். (எ)

கடவுள்வணக்கம் - முற்றிற்று.
ஆ திருவிருத்தம்-கக.

அருளிறைவணக்கம்.

பிரமகீதை.

நித்தனிர்க்குணனின்மலனீடொளி
சுத்தனேகன்சுருதிதொடர்பிலா
னத்தனென்னையுமாண்டவருளினன்
றத்துவன்றிருத்தாளை வணங்குவாம். (க)

முன்னைநற்சுருதியோதிமுடிவுறற்கரியதாக
வின்னமத்தேவர்மூவரெய்துதற்கிடரேமேவத்
தன்னையிப்படியேகாணத்தாளளித்தெனக்கோர்வார்த்தை
சொன்னநற்சொரூபானந்தச்சோதியைத்தொழுதல்செய்வாம். ()

அறுநாலதுவும்புருடனொடுபரமும்வியோமமானதுமங்
கிறவேகழனற்கண்ணெனுநல்வியோமாதீதமெனுநாது
மறவேநினைந்துநிகழ்குரவனருளாலடியேன்கண்காணப் [ம்.
பெறவேயுருவாய்வந்தாண்டபெருமான்செம்பொற்றுள்பணிவா

உயிருமியாக்கையுமுளவுறவுளவணமுரைத்துச்
செயிரறுப்புலன்வழியினிலுழல்வறத்திரித்திங்
கயர்வுமூக்கமுமறுமறிவுருவெனவளித்தென்
றுயரைநீக்கியசொரூபனதடியிணைதொழுவாம். (ச)

அந்தமாதியிலாததுமண்டர்தஞ்
சிந்தையாலுந்தெரிதற்கரியது
மிந்தமேனியெனும்படிகண்டிட
வந்தநாதன்மலரடிவாழ்த்துவாம். (ரு)

இரைத்தவேழ்பிறவியாழியேமிட
வரைத்தபல்சமயமாலுருவகைக்
குரைத்தல்தீர்வொர்கணத்தின்மெய்ப்பொரு
ளுரைத்தகொண்டலடியுச்சிவைத்துமே. (சு)

ஆனதாகியழிந்தொழியாவண
மூனொனென்தென் றுணராவகை
தானதாகியதன்மையளித்திடும்
ஞானவானைதன்னுமம்நவிற்றுவாம். (எ)

மறையீரறியாகமங்களுடன்மகாமுனிவர்மற்றெவரு
முறையோவெனநின்றினமயரமூடனேனைப்பொருளாக
வறைதான்கூவிவந்தாட்கொண்டடியனேனைத்தாளுக்கிச்
செறிவாய்நிறைந்துதித்திக்குஞ்சிவப்பிரகாசன்றாள்பணிவாம். (அ)

எண்ணரும்பிறப்பிறப்போடியைந்தபல்யோனியெய்திக்
கண்ணெதிர்கண்டதின்றிக்காண்கிலாவறிவிலேனைத்
தண்ணளிதந்துதன்றாளளித்தருள்செய்தஞானப்
புண்ணியனவனையேத்திப்போக்கினம்பிறவியெல்லாம். (கூ)

அருளிறைவணக்கம் - முற்றிற்று.

ஆகூ திருவிருத்தம் - உ௦.

வேதச்சிறப்பு.

ஓதியகர்ல்மூன்றுமுணர்ந்துரைசெய்தலானு
நீதியாலெல்லாநூலினினைவுந்தானிகழ்த்தலானுங்
காதுநூலியாவுமித்தின்கருத்தறியாமையாலும்
வேதமேநூல்கட்கெல்லாமிக்கதுவேறுமுண்டோ (க)

சித்தாந்ததீபிகை.

பேதமுமபேதந்தானும்பெருகியவுபயமற்று
மோதியயாவும்வேதமுரைத்திடுமல்லாநூல்க
ளேதமாமோரொன்றைத்தானிசைத்தலதறியாதென்றால்
வேதமேயெல்லாங்காட்டும்விளக்கெனப்படுவதையா (உ)

வேதமாநாமத்தாலும்வேதமாத்மாவிலுண்மை
தீதறவுரைத்தலானுஞ்செற்றமோடார்வமில்லாப்
போதமாமூர்த்திதேசிற்புரித்தநூலாதலானும்
வேதமாநூலின்றேசுவிளம்பலாமளவதன்றே. (ஙு)

வேதத்தின்பெருமைவேதன்றன்னாலுமுரைக்கொணுதா
லோதத்தான்வேறுவல்லாருலகினிலொருவருண்டோ

கோதற்றவமுதஞானங்குலவுமாமறையினல்லால்
மீதுற்றநூலிற்காண்டல்மின்மினிவிளக்கமையா (ச)

மெய்ஞ்ஞானவிளக்கம்.

விளங்கியகலைகட்கெல்லாமிறையதுவேதநன்னூல்
களங்கமில்பொருளாம்ஞானக்கண்ணதும்வேதநன்னூ
லளந்தறிவொண்ணுவின்பமளிப்பதும்வேதநன்னூ
லுளந்தெளிபவனேவேதத்தொப்புமற்றெங்கேயெங்கே. (ரு)

தத்துவபோதம்.

கேதங்கூடும்பிறவிகெடுக்கும்படிகேட்க
வாதங்கூடாவாய்மனமெய்தாவடிவெய்தும்
போதங்கூறிப்புந்தியிலையங்கெடுமெய்யே
வேதங்கூறிற்றென்றுமொழிந்தான்விடையோனும். (சு)

பிரமகீதை.

காதலாற்றத்தங்கடவுளரருளாற் காலபாகத்தினுலறத்தாற், போதராதலினல் வேதவாதத்தைப் பொருந்துவர் புகன்றவவ்வடைவே, வேதவாதத்தைமேவுநல்வினையால் விருப்பினலன்றிமேவினருஞ், சாதலானதுவும்பிறத்தலுமில்லாத் தற்பதந்தன்னையே சார்வார். (எ)

வான்கருதியமறைவழியைவிட்டுமேற்
றான்கருதுதல்சதுரன்றுதன்கையிற்
றேன்கமழ்திரளையைச்சிந்திச்சந்தியாக்
கூன்கையில்விழுந்துளிகொண்டதன்மையே. (அ)

சிறையுடல்விடத்தனதுசெம்மையைநிகழ்த்து
மிறையுடனிகர்க்கவலவீசருளரென்னி
னிறைவுடனைத்தையுநெறிப்படநிகழ்த்து
மறையுடனிகர்ப்பதொருமாகமுளதாமால். (க)

வேதச்சிறப்பு - முற்றிற்று.

ஆ திருவிருத்தம்-உக.

ஆகமச்சிறப்பு.

:o:

ஆரணப்பொருளர்மையனருளினன்மூர்த்தஞ்சாத்திக்
காரணப்பொருளாந்தன்னைக்காணுமாறருளிச்செய்த

சிரணிசிவாகமத்தின்றேசினைப்புகழமுன்னை
யாரணத்தாலுமொன்றாததனையாம்புகல்வதென்னே. (க)

புரையறநிறைந்துநின்றபூரணன்சகளஞ்சாத்தி
வரைவிலாப்பிறவிப்பௌவங்கடத்துமன்னுயிர்களெல்லாங்
கரையில்பேரின்பந்தானுங்கரையினைச்சேரும்வண்ண
முரைசெய்நற்சிவாகமத்துக்கொப்பொருநூலுமுண்டோ. (உ)

அருமறைநூலதென்றுமாகமமன்னூல்தன்னிற்
கருதரும்பொருளைக்காட்டுங்காரணவிறையாமென்றும்
பெரிதுணர்ஞானத்தோர்கள்பீடுறுமதமீதென்றாற்
றெருளுறுசிவாகமந்தான்றேசிகனுருவதென்றே. (ங)

நிலையாததுநிலைப்பநெஞ்சறியச்செய்யப்
புலையாமவாவறுப்பப்புன்மையெலாந்திர்ப்ப
தலையாயசாந்திமுதனுன்குந்தருப
வுலையாதவீட்டின்பத்துள்ளத்தையுய்ப்ப. (ச)

அறவித்துதவுவனவராமிர்தமனனத்
துறவித்துணையாவதுன்பந்துடைப்ப
மறவிப்படாதமதிதருவமாயப்
பிறவிப்பகைதணிப்பப்பேரின்பத்துய்ப்ப. (ரு)

அழியாவறமுமரும்பொருளுமின்பு
மொழியாதவீடுமொருநிலையேயாகப்
பொழியாமகிழ்விப்பபோதகனமாவ
மொழியாமொழியானருளான்மொழிந்த. (சு)

ஆகமச்சிறப்பு - முற்றிற்று.

ஆ திருவிருத்தம்-ஙடு.

அறிஞருரைச்சிறப்பு.

:o:

சொற்பதமானஞ்சொல்லுந்தன்மதம்பிறர்மதங்க
ளற்படவுணர்த்தலவர்க்குக்கருணைசீரெழில்கொள்வாய்மை
நற்பதஞானம்பத்திநல்வையிராக்கியந்தா
னற்புதமாகவுள்ளோரவர்கணல் * லார்த்தராவார். (க)

* ஆத்தரெனவும் பாடம்.

போதாமிர்தம்.

அளவிலாரணமரனெடுமாலயனறைதருபொருளாகித்
தளர்விலாவகையநுபவமதனிலுங்காணலாந்தகவாய்மற் [ய்யு
றளவெலாப்பொருள்முடிதருபொருளுமாமுண்மையைத்துதிசெ
மளவின்ஞானநற்றுறவினையுடையனல்லவர்களார்த்தர்களையா.()

ஓதுநீதியுமொழுக்கமும்விழுப்பமுமுடலழிதருபொழுது
மேதுமொன்றசைவின்றியநிலைமையும்யானெனதினையெல்லா
மோதுஞானமுமமுதசீலமுமொழிவிரகதுமுடையோ
ராதியாகுநல்லவர்களார்த்தர்களெனவறைகுவர்பெரியோரே. ()

அருள்நெறிவிளக்கம்.

உடலையொண்பொருளினையுலகியல்பினையுயர்குலநெறிதன்னை
யடையுமைந்தர்தாய்தந்தைநன்மனையெனவறைதருமவர்தம்மை
விடவிகழ்ந்திறைகழலிணைமேவியவிமலர்தங்களையெல்லா [றே.
முடையநன்குறுமொளிமறைமுனிவர்களுரைப்பராத்தர்களென்

தோன்றும்யாவும்நிலையாதெனத்தலிற்
கான்றசோறெனயாவையுங்கைவிட்டுச்
சான்றதாந்தமைக்கண்டவர்தம்முரை
யான்றவாய்மையருமறையாவதே. (ரு)

பார்த்தபார்த்ததெல்லாம்பரமாகிய
தீர்த்தன்மேனியெனத்தெளிவுற்றவர்க்
கார்த்தரானவவரருளிச்செய்யும்
வார்த்தையேநல்லமாமறையாவதே. (சா)

சோகப்பந்தந்துறவுசெயாதேலறமின்றே
லாகத்தந்தக்கரணந்தன்னையடக்காதேற்
பாகச்செஞ்சொற்பனுவல்களேனும்பழுதாகுங்
காகத்தின்கத்தென்பர்கள்கல்விக்கரைகண்டோர். (எ)

வரும்பரநெறிதேர்விலரேனுமாயவாழ்க்கைநிலையாக
விரும்பாதிறைவன்பதநோக்கிவிருப்புற்றோதுமெய்மொழிக
ளிரும்பாமுள்ளத்தவருங்கேட்டின்புற்றென்பெல்லாமுருகி
யரும்பாவங்கங்கண்பனிவந்திடுமேலார்த்தர்வாக்கியமாம். (அ)

அறிஞருரைச்சிறப்பு - முற்றிற்று.

ஆ திருவிருத்தம்-சங.

நூற்பெயர்.

———:o:———

நாலுமாமறையாகமப்பொருளதாய்ஞானநூல்பலவாய்ந்து
சீலமார்தருதேசிகன்றிரட்டியசிவப்பிரகாசத்தைத்
தூலமாவென்மதிகோட்பெயரிணூற்சுருக்கியான்சொல்வேனென்
போலுமாந்தர்களறிதலும்புரையிலோர்நகுதலும்பொருட்டாக.

நூற்பெயர்-முற்றிற்று.

ஆ திருவிருத்தம்-சச.

இதோபதேசம்.

———:o:———

உடம்புடையோர்கட்குளதாவதென்று
மிடும்பையேயின்பமிலதென்றுணர்க
மடம்படுஞ்செனனமரணநோய்தீர
திடம்படுமுத்தியேசேரச்சிந்திக்க. (க)

பகவனைப்பேணுகபல்லுயிர்க்கெல்லா
மகவெனப்பரிகல்வாய்மையோம்புக
தகவெனப்பெரியவர்ச்சார்கசந்ததம்
மிகவினைக்கஞ்சுகவெகுளியாறுக. (உ)

உலையாவவாவொழிக்கவோதிமம்போலக்
கலையாப்பொருடெரிந்துகைக்கொள்கவொன்று
மலையாதொழிகமறவற்கயாது
நிலையாததுநன்னெறியொழுகிவாழ்க. (ங)

பொன்றினும்வெஃகாதொழிகப்பிறர்பொருளை
நன்றிமறவற்கநன்றல்லவைமறக்க
வன்றினற்குமாவதேசெய்கவகிலத்தி
லொன்றினுமூன்றுதொழிகவுளதுணர்க. (ச)

காயத்தாலுபகாரமாம்பயன்
வாயத்தாற்பயன்வாய்மையுள்ளவா
ருயத்தம்மனத்தாற்பயனற்றவர்க்
கீயத்தம்பொருளாற்பயனென்பதே. (ரு)

வந்திக்ககுரவர்தம்மைவாய்மொழிவிரும்பிக்கேட்க
சிந்திக்கவநுபவத்திற்றெளிகவிப்பொருளேதீய
பந்தித்தபிறவிதீரப்பரமஞானிகளும்பண்ணு
முந்தித்தமறையுந்தேவர்மூவருமொழிந்ததன்றே. (௬)

இதோபதேசம் - முற்றிற்று.
ஆ திருவிருத்தம்-௰.

அருமையுரைத்தல்.

நிற்பனவாம்பவநீங்கியேநடக்
கிற்பனவாம்பவங்கிட்டிக்கேழ்வியா
லற்புதமாமறிவறியுமாநுடத்
தற்பவவருமையிங்குரைக்கலாகுமோ. (௧)

ஒளிமணியெறிதிரையுவரியொன்றிட
வளையெறியுவரிமற்றொன்றில்வானுகத்
தொளைவழிகழிசெறிவென்னத்துல்லபம்
வளமிகுமாநுடப்பிறப்புவாய்த்தலே. (௨)

தின்னலாதியேசிந்தைசெய்விலங்கெனத்திரிவா
ரின்னலாகியதேயம்விட்டிலங்குநீர்நாட்டுச்
செந்நெலார்வயற்பதியினிற்செல்வநற்குலத்துப்
பன்னலாளரிற்பிறக்கையிப்பாரிடத்தரிதால். (௩)

சாதியந்தணர்குலத்தினிற்பிறப்பினுஞ்சடங்கே
யோதியங்கிருந்தொழிற்படாதுபநிடத்தோது
மாதியந்தமிலரும்பொருள்விருப்பரிதருளும்
வேதியன்றனைவிரும்புதலதில்மிகவரிதே. (௪)

சீரியகுருவினைச்சேர்தல்துல்லபங்
கூரியவறிவவன்கொடுத்தல்துல்லபம்
நேரியபொருணிகழ்த்திடினுநெஞ்சிலே
யாரியனிலைவரலதுவுந்துல்லபம். (௫)

அருமையுரைத்தல் - முற்றிற்று.
ஆ திருவிருத்தம்-௰௫.

வன்ணாச்சிரமம்.

:o:

சாதப்படுபூதங்களிலுயிருள்ளவைதலையா
வோதப்படுமுயிருள்ளதிலுணர்வுள்ளனவெல்லா
மேதக்கனவுணர்வுள்ளதில்மேலானவர்நரரே
கோதற்றவர்நரரிற்றிகழ்குலநாலிலுதித்தார். (க)

குலங்களனைத்தினும்பெரியர்வேதியர்களக்குலத்தி
லிலங்குவார்கள்கற்றவர்கண்மற்றவர்களிற்பெரியார்
நலங்கொள்கல்வியின்பயன்கொள்வாரவரினுநல்லார்
புலன்கொளப்பிறர்பொருண்மையைப்பனுவலிற்புனைவார். (உ)

கலைவலாளரிற்கசடறத்துறந்தவர்பெரியர்
குலவுமத்துறவரிற்றலைக்குடீசகரவரிற்
றலைவராகுவர்பகூதகர்பகர்ந்தவம்முறையே
தலைவராகுவரமிசரும்பரமமிசருமே. (ங)

வன்ணாச்சிரமம் - முற்றிற்று.

ஆ திருவிருத்தம்-ருஅ.

அதிவன்ணாச்சிரமம்.

:o:

எதிகள்யாரினும்பெரியராவியம்புமாமறைக
ளதிவன்ணாச்சிரமத்தவர்தங்களையவரி
லதிகராமவரொருவருமில்லையீங்கிவரே
துதிசெயாச்சுரர்நரர்கள்யாவருந்தொழப்படுவார். (க)

அத்தியாச்சிரமத்துறையற்புத
ரெத்திறத்தவர்க்கும்மிவரேகுரு
வெத்தவத்தவராயினுமிங்கிவற்
குத்தமத்தரென்றுலுமின்றுகுமால். (உ)

பூதபௌதிகமாப்பொலிபேதமு
மேதமின்றியிருஞ்சிவமாயிடப்
போதமாமநுபூதியிற்கண்டவ
ராதியாமதிவன்ணாச்சிரமரே. (ங)

மையலாகியவையத்தினைவெறும்
பொய்யதாய்விடவேபரிபூரண
மெய்யதாமநுபூதியிற்கண்டவ
ரையகேளதிவன்ணுச்சிரமரே. (ச)

வன்னமாச்சிரமமவற்றின்குறி
யென்னலாமொழுக்கத்தியலானவை
யின்னதென்றிவனுக்கொன்றிலாமையா
லன்னவன்னதிவன்ணுச்சிரமியே. (ரு)

மதிசெய்மாமறைவன்ணுச்சிரமிகள்
விதிசெயாவிடில்வெஞ்நரகென்றது
துதிசெய்துற்றதிவன்ணுச்சிரமியொ
ரெதுசெய்தாரதுவேதவமென்றதே. (சு)

வாரணஞ்செயுடலிந்தியாதியெனவந்தகாரியவுபாதிபோய்க்
காரணஞ்சகலவத்துவுக்குமறையென்றகாரணவுபாதிபோய்ப்
பூரணஞ்சுகமெய்ப்போதநம்வடிவெனத்தெளிந்தவநுபூதியா
ராரணம்பகரும்யாவரும்பரவுமதிவன்ணுச்சிரமராகவே. (எ)

அதிவன்ணுச்சிரமம் - முற்றிற்று.

ஆ திருவிருத்தம்-சுரு.

ஞானிகளிலட்சணம்.

மயலாகியபுலனும்வழிமறியாமனமுதலின்
செயல்மாள்வுறுதெரியாமையையுருவித்திகழறிவும்
வியன்மாள்வுறவொழியாமிகுவிழியாலுலகழியா
வயன்மாள்வுறவுரையாநிகழறிவானறிவறிவான். (க)

தோன்றுமெப்பொருளும்பொய்மையேபோதச்சொருபமெய் யெனவநுபவத்திற், றோன்றுமேல்ஞானியவனிலுத்தமன்சிற்சொ ரூபமேயாகவெப்பொருளும், தோன்றுமேற்றோற்றந்தோற்றமில் லாமைதோன்றிடாவின்பமாஞ்சொரூபத், தோன்றலையானென்று ரைக்குமாஞ்சுருதிப்பொருளெனச்சொல்லுவதல்லால். (உ)

உலகெலாமுணர்ந்தவிடத்திலேயுறங்கியுறங்கியவிடத்திலேயு ணர்வ, ருலகிலெப்பொருளுந்தம்மினுந்தம்மை யுலகினெப்பொரு

ளினுங்காண்ப, ருலகிலெப்பொருளுமன்றியேதம்மையன்றியொ
ன்றின்றியேயிருப்ப, ருலகமுமுயிரும்பரமுமாய்நிகழ்ந்த வொரு
பொருளுணர்ந்தவுத்தமரே. (௩)

இனமுறுபுலன்பொறியியங்குறுபிராணன்
மனமுதன்முதற்பகுதிமன்னுமுயிர்மாயை
யுனவருபரம்பகரவுற்றமுழுதுஞ்சிற்
கனநிகழ்வெனும்பரிசுகண்டவர்கள்கண்டார். (௪)

இருமையுலகுமிடருமின்பமுமிலங்கும்
பரமுமுயிருந்துயர்செய்பந்தமொடுவீடுங்
குருவுமுலகுமினையகூறுபடுமெல்லா
மொருபிரமமாமியல்புணர்ந்தவருணர்ந்தார். (௫)

பிள்ளையாமுணச்சிந்தைசெயாமையிற்பித்தன்
கொள்ளுமார்வமுங்கோபமுமறுதலிற்கூளி
யுள்ளதன்னுருவொளித்தலினுளதுணர்முனிக்குப்
பிள்ளைபித்தன்வன்பேய்நிகருரைத்தனர்பெரியோர். (௬)

தாதாவாகுமடைந்தவர்க்குத்தன்னையீதலாற்பஞ்ச
பூதாகாரமிமைப்பொழுதில்விழுங்கலாலேபோத்தாவாம்
யாதானுந்தான்யாவரையுமிரவாமையினல்யாசகனுந்
தாதாபோத்தாயாசகனென்றுரைத்தார்ஞானியைச்சான்றோர். ()

செயலிலோர்செயலின்மையுமொன்றையுஞ்
செயலிலாமையிலேயெச்செயலையு
மயலிலாவகைகண்டவர்வைகலுஞ்
செயலிலேபயின்றுஞ்செயல்செய்கிலார். (அ)

சுத்தமாகவுள்ளதன்சொருபமேதெளிந்தவன்
முத்தனகுமுத்தனுமலனிவன்மொழிந்திடிற்
சத்துஞானவின்பமானதற்சொருபமன்றியோர்
வத்துவின்மையிற்பிணிக்கமாயைதானுமில்லையே. (௯)

கண்டவன்கண்படைக்கனவுணர்ந்தபின்
கண்டதன்னெழியவக்கனவுகண்டில
னுண்டுபோற்கண்டவனுலகுணர்ந்தபின்
கண்டதன்னெழியவேயுலகுகண்டிலன். (௧௦)

சாதியந்தகர்தாமெனக்காணினுஞ்சகத்தினைக்காணாராய்
வாதுசொல்லுமிடத்திலுஞ்செவிடராய்மற்றவர்தமையுண்மை
யோதுமென்றுரைசெய்பொழுதூமராயுண்மையாயொழிவில்லா
போதருபராய்ச்சுதந்தரராகியேயிருப்பர்கள்புரையற்றோர். [ப்

ஞானிகளிலட்சணம் - முற்றிற்று.

ஆ திருவிருத்தம்-எசு.

ஞானிகள்பெருமை.

---:o:---

பிரமகீதை.

அத்துவிதந்தானுமவிகற்பத்தையடைந்தபோதே
புத்தியிலிளைப்பும்போகும்போகுமிப்பிறப்புநேரா
வெத்திகழ்வாலும்பேதமின்மையாலிறையேயெண்ணுந்
தத்துவவித்தேயென்றன்றலையினால்வணங்கத்தக்கான். (க)

எல்லாமுஞ்சிவரூபமாகித்தோன்றும்யாவனுக்குத்தன்னுடை
த்தாயவனேமிக்க, சொல்லாலுமளப்பரியானவன்றனிச்சைசுருதி
யினூற்றுணிந்துரைத்தசரிதைதானும், பல்லோருமிவனையருச்சனை
செய்தேத்தப்பரரூபந்தனக்கேநற்பூசையாகு, நில்லாதவவிச்சையி
னைநீங்கியுள்ளநிர்க்குணனுமிவனுகுநினையுங்காலே. (உ)

பரப்பினுனிந்தியங்களைப்பராக்குறப்பரம்பரனுள்ளாகி
யிருத்தலாலறிவொண்கிலன்புறம்புளவிதரமேகாண்கின்றான்
திருப்பிஞானநாட்டத்தினுலப்பொருடெரியவேபெறுந்தீர
னொருத்தனேயவிநாசியாம்பரவொளியாயவனொளிர்கின்றான். ()

பலன்கள்வேண்டியபரிசெலாம்பலித்திடும்பரமதத்துவஞானி
நலங்கொளுமமாமந்திரஞ்செபித்திடநயந்தவனீராடுஞ்
சலங்கடீர்த்தமாமவன்றிருமேனியேசகலதெய்வமுஞ்செவ்வாய்
மலர்ந்தவாசகமறுபிறப்பெனவருமயற்பிணிமருந்தாகும். (ச)

யாவனிங்குமெய்யுணர்ந்தவனிவனையேயிமையப்
பாவைதன்னையோர்பாகம்வைத்தவன்பரவுவதும்
நாவின்மங்கையைநயந்தவனவில்வதுமவனைப்
பூவின்மங்கையைப்புணர்ந்தவன்புகழ்வதுமவனே. (ரு)

பண்டைநான்மறைபகருதற்கரியவன்பரந்த
வண்டநாடருமனந்தகோடிகளுமாரமுதா
யுண்டநாயகனுருவுதன்னுளத்துளேயடக்கிக்
கொண்டஞானிதன்பெருமையைக்கூறுவாரெவரே. (கூ)

ஞானிகள்பெருமை - முற்றிற்று.

ஆ திருவிருத்தம்-அ௨.

ஞானிகள்சீலம்.

வீங்குபுண்ணரிந்தழலெழவெதுப்பவென்வேதனையெல்லாந்தீர்த்
தீங்கெனவிதந்தனனெனப்போற்றினுவிருவினைதருநன்றுந்
தீங்குமூட்டியவுடற்பிணியறுத்தவர்திறத்தினிற்கைமாறே
தாங்குவென்பதற்றனைவரோயவர்செயல்வினைவினையறிந்தாரே.

குணங்களுன்குமுண்டெனினுமுக்குற்றமன்னுளத்தி
னுணர்ந்தஞானிகளுள்ளம்வெருகுமென்றுணர்க
மணந்தமாதினைத்தழீஇமனமயக்கமுற்றவளே
யணைந்ததன்மகட்டழீஇயின்றவன்னையென்றுணர்ந்தான். (௨)

நிவந்தவெங்கதிர்க்குளாவுறச்சிலர்நெஞ்சுமகிழத்
திவந்தனூடுபோமின்னவைசித்தியானவன்போற்
றுவந்தநீக்கினுன்றுதிப்பவரிகழ்பவர்திறத்தி
னுவந்திடேன்முனியேனெனுமுள்ளமுமிலனல். (௩)

துகளறுஞானிகள்துதியில்நிந்தையி
லிகழ்விலாமகிழ்விலரெனல்வினைப்பய
னுகர்தலின்மகிழுவர்நோவர்மேற்றமை
யிகழ்பவருநரகெய்தலெண்ணியே. (௪)

அருந்துயர்ச்சிறைபிட்டாரிலச்சிறைவிடுவித்தாரை
பரிந்துயிரளித்தாரென்றுபகரவேண்டுவதுமுண்டோ
விருந்துயர்க்கிடமாம்யாக்கையின்றவரின்னுரென்று
மரிந்தவர்நட்டாரென்றுமறிந்திலருயர்ந்தோரன்றே. (௫)

ஞானிகள்சீலம் - முற்றிற்று.

ஆ திருவிருத்தம்-அஎ.

ஞானிகள் சரிதை.

சரிதங்குணம்விரதஞ்செயல்தவம்வேதனமுழுதும்
பெரிதுமுளனெனவுமிலனெனவும்பிறரறிவால்
தெரிதந்திடவரிதாம்வகைதிரியுந்தெரிவுறுதற்
கரிதென்றருமறையோதியவறிவாசறவறிவான். (க)

ஒழிகவுடம்புநிலையதாயுறமலர்மங்கையொழிகவே
பழியைவிளம்பவினியவேபகர்கவரகந்தைமகிழ்வுறார்
மொழியினுளங்கண்மகிழவேமொழிவரீங்கிசைமொழிகளே
யழியுமுடம்பிலழிவிலாவறிவையறிந்தவறிஞரே. (உ)

மல்லன்ஞாலமுடிமன்னர்தம்மையும்வழுத்துமாறிலாமனத்தின
நல்லர்தீயரெனநாடிடார்பிறரைநாகமேல்விழினும்வேகமாய்க்[ல்
கொல்லவேலர்புடைசூழினுஞ்சிறிதுகூசிடார்மெலிவுகூறிடா
ரல்லவாமெனவிகற்பியார்சமயவாதரோடுமறிவாளரே. (ந)

புண்ணியபாவபலன்களுங்கருதார் பூசியார் புனலினைத்தீர்த்த
ம், பண்ணியபதிமந்தெய்வமென்றுணரா பட்டினிவிடார்மகம்பண்
ணார், மண்ணியமணிமந்திரவவிழ்தமதியார் வடிவிலோர் குறிகொ
ளாமற்று,மெண்ணியகருமமியாவையுஞ்செய்யாரிம்மையுமறுமை
யுமிகழ்ந்தார். (ச)

தண்ணிதானசண்டாளர்கள்சாதிவேதியரென்
றெண்ணுமாறிலன்ஞானியிச்சகத்தியாவையுந்தா
னுண்ணுமோதனமாதலி லுண்டியாதியிலுந்
திண்ணிதானலந்தீங்குசிந்தித்திடான்சிறிதும். (ரு)

ஓசைகெட்டிடவெச்செவியறுசுவையுமுண்ணநாவுடன்முற்றறிய
வாசமூக்குயிர்ப்பவுருவுகண்காணமற்றுமெக்கருமமுஞ்செய்ய
வாசுடைப்புலன்களநுபவித்திடினுமப்பின்மூழ்கிடினுமம்புயத்தின்
பாசடைநீரிற்பற்றுறாததுபோற்பற்றிலாப்பரமயோகிகளும். (சு)

ஒழுக்கமேவினரொழிந்தவரும்பர்மாமுனிவ
ரிழுக்குநீசர்களென்றுநான்மறையவர்யாரும்
பழிக்குமூர்க்கர்நற்பண்டிதர்பாவியரறவோர்
புழுக்கள்யாவையும்போதமென்றிகழ்வுறார்புகழார். (எ)

லோகாசாரந்தன்னையுமுன்னூரொன்றுந்தா
மாகாதாமென்பதுநினையாரிவ்வவனிக்கே

யேகாதிபமன்னவனெப்படியப்படிவாழ்வர்
தேகாதியைவிட்டின்பவெள்ளச்சற்சித்தானோர். (அ)

ஞானிகள்சரிதை - முற்றிற்று.

ஆ திருவிருத்தம்-கரு.

ஞானிகளேவற்சிறப்பு.

ஆவதாவதிலதற்றவன்னர்தம்
பாவம்யாருமறியப்படாதவர்க்
கேவல்செய்துதிரிவார்களெய்துவார்
மூவர்தேவர்மொழிந்தருண்முத்தியே. (க)

ஞாலமுண்டவன்றலையினற்சுமப்பன்மெய்ஞ்ஞானிவேண்டிய தென்று, ஞாலமுண்டவனவன்பினேதிரிகுவ னவன்பதப் பொடிக் கென்றான், சீலமொன்றையுந்தெரிவருஞானிதன் சேவடிபணிசெய்வான், காவிரண்டுமென்றலையவேயென்றனன் கமலநான்முகத்தோனும். (உ)

ஞானிகளேவற்சிறப்பு - முற்றிற்று.

ஆ திருவிருத்தம்-கஎ.

ஞானிகள்பூசை.

மலகடாதியில்வைத்தமனத்தினை
விலகிமெய்மையுணர்ந்திடும்வித்தக
ரிலகும்யாவரும்யாவையுமாதலா
லுலகெலாமுண்டதாமிவனுண்டதே. (க)

படித்தமறையோர்கள்பலகோடிபலகால
மிடித்தல்கெடவைத்தவர்கள்வேதமுடிவோதி
முடித்தபரமுத்தியுணர்வுற்றமுனிவன்கைப்
பிடித்தொருகையிட்டவர்கள்பெற்றதுபெறாரே. (உ)

வையமாமணியாதியாகவழங்கினார்மகமேறினார்
தூய்யமாநதியாடினார்துணியார்தவங்கள்தொகுத்துளார்

மெய்யமாதிகளெட்டுமேவியமெய்யுணர்ந்தவர்கையிலே
யையமாத்திரையிட்டவர்க்குளதானபேறடையார்களே. (௩)

ஞானிகள்பூசை - முற்றிற்று.

ஆ திருவிருத்தம்-க00.

ஞானிகளையிகழ்ந்தோர்கேடு.

:o:

என்றுமுள்ளவறிவுமெய்யின்பமா
மொன்றுமின்றியுணர்வதிலார்தமை
நன்றுதீங்குணர்நாட்டமிலாதவ
ரென்றுஞானமிலாரிகழ்கிற்பரே. (க)

முன்னையிறந்தமுதற்றனிவித்தா
முன்னையிறந்துளவொன்றையுணர்ந்தோன்
றன்னையிகழ்ந்தவர்சங்கையறத்தா
மென்னையிகழ்ந்தனரென்றனனீசன். (உ)

கண்டகடவுளக்கடவுளெனக்காணாதே
பண்டைநிலைநினைவார்பாதகரேயானக்கா
லண்டமுழுதுமகத்துணர்ந்தவற்புதரைப்
பண்டைநிலையைநினைந்திகழ்வார்பாவிகளே. (௩)

செய்யவினையிற்சிறிதுதப்புமவர்சேர்வார்
வெய்யநரகென்னுமறைமெய்யினையுணர்ந்தார்
செய்யுமதுவேதவமெனத்தெளிவுறாதே
வெய்யவுரைசெய்துசிலர்வெந்நரகில்வீழ்வார். (ச)

நயம்பெருகுவீடுதவுஞானியையிகழ்ந்தே
யியம்புமதிகேடனெறிவாய்நிரையமெய்தி
வயங்குகதிரோனுமொளிர்மாமதியும்வான்மே
லியங்குவர்களெவ்வளவுமவ்வளவுமேறார். (ரு)

எழில்ஞானியையிகழ்வானிகழ்கெட்டானிகழ்கெட்டுள்
ளழலாதவனிசையுற்றவனெனநால்வருமவரைக்
கழலாதுடனுறைவானிவர்கான்மேலுறவாறாத்
தழலாகியநிரயத்திடைதலைகீழுறவீழ்வார். (சு)

ஞானிகளையிகழ்ந்தோர்கேடு-முற்றிற்று.

ஆ திருவிருத்தம்-க0சு.

* கூடா ஒழுக்கம்.

—:o:—

சச்சிதானந்தமாந்தன்னையெய்தினு
னிச்சியானொருபொருளிச்சைசெய்யுமேல்
வைச்சபாலடிசிலைமறுத்திடாமலே
நச்சுநாயல்லதுஞானியல்லனே. (க)

சகத்தவரிகழ்தொழிறற்பரந்தனை
யகத்தினிலுணர்ந்திடுமவர்கள்செய்வரோ
மிகப்பசியாளனும்விரும்பிடார்விட
முகப்பனநிறையவுண்டவனுமுண்ணுமோ. (உ)

ஞானமுள்ளவர்போலநடித்துமுன்
பானவன்னவறமுநழுவினு
ரூனையன்றியடைவதுயர்ந்தவீ
டேனையின்பமிரண்டுமிழப்பரே. (ஙு)

தூமங்காட்டுஞ்சுடுதழலுண்டென்பதுதுய்ப்பார்க்
காமங்காட்டுமயினியுவர்ப்பப்படியேநல்
லேமங்காட்டுஞானிகளென்றுலிவர்நெஞ்சிற்
காமங்காட்டும்பெற்றிலர்கற்றூர்கலையென்றே. (ச)

கூடாஒழுக்கம் - முற்றிற்று.
ஆகூ திருவிருத்தம்-ககo.

கனவிதி.

—:o:—

வாலறிவரானவர்மரித்தலெனமரித்தால்
மேலிவுடல்செய்குவதென்னெனின்மிகுஞானத்
தாலழியுநுண்ணுடலமர்ந்தவைநுகர்ந்தாற்
றூலவுடல்போமிவர்க்கடுஞ்சினமையின்றே. (க)

நண்ணியகாயஞ்சுத்தஞானியைநழுவும்போது
விண்ணியல்வடக்கேபோயென்வெய்யவன்தெற்கேபோயென்
புண்ணியபூமியாயென்புலையர்தம்மிடத்தேயாயென்
தண்ணியவழியாற்போயென்றலையினூலுயிர்ப்புப்போயென். (உ)

* கூடாவாசாரம்என்றும்பாடம்.

பரம்பரமுணர்ந்திடுஞானிபாரவர்
விரும்பியவகைபெறவிளங்குமேனிதா
னரும்பரம்பரமும்வந்தமர்ந்ததாதலாற்
குரம்பையென்றிகழனற்கோயிலென்பவே. (௩)

முன்னமேபாகமாமூரல்செய்புநாட்
பின்னதுவேவவேண்டிடுமோபேசிடா
யன்னதேயிவ்வுடலறிவாலட்டது
பின்னினிச்சுடுவதுபிழையேயாகுமால். (௪)

அந்தமில்ஞானிதன்னுடறீயினால்
வெந்திடினுடெலாம்வெப்பிற்றீயினில்
நொந்திடும்நாய்நரிநுகரில்நொண்செரு
வந்துநாய்நரிக்குணவாகும்வையமே. (௫)

யாதுசெய்வதிக்கோசமென்றுரைசெய்யிலிலங்கியமூவர்க்கு
மாதிசொல்லியபரிசிலேயருச்சனைசெய்ததுகணித்தங்கோர்
போதிற்பீடமாலையமியன்றதுசெய்துபூசைசெய்தடிபோற்றி
யீதுசெய்வதல்லாதுபிண்டோதகக்கிரியைசெய்திடவேண்டா. (௬)

அர்ச்சிக்கும்படியேதெள்ளிலாங்குமஞ்சனநீராட்டி
வைச்சுத்தானோங்காரத்தால்வந்தனுதியெலாஞ்செய்து
மெச்சித்தான்சுண்ணங்கூத்துப்பாட்டுமேவலங்காரத்தா.
லர்ச்சிப்பாரரசரில்லொரறத்தினல்லோர்களையா.. (௭)

மஞ்சனஞ்செய்துமணியணையிருத்திமன்னவன்மருமத்தாகிக்.
கஞ்சநற்பதங்காசினிகதிரவன்கண்டிசைக்கிறைக்கன்ன
மஞ்சுடர்க்கனலவர்க்கிருபுருவநடுவரியானுதலென்றே
யெஞ்சலில்லவர்நாமமோங்காரமுன்னியம்பியர்ச்சனைசெய்க.

பாடியாடிடப்பாவையர்பல்லியம்பலமுழங்கிடமஞ்சட், கோடியாடைபூமாலைசூழரலினிற்கொம்பனூரிடித்தெண்ணெ, யாடல்செய்துசென்னியின்மிசைச்சுண்ணமுமப்பிநின்றவர்க்கியக்கச், சேடவெண்ணெய்சுண்ணங்கள்தாம்பூலமுஞ்செழுமலருடன்சாந்தும்

ஆங்குமற்றரசில்லோரறநெறியறியாராகி
லோங்குநல்யோகிசெய்வானுலகறமோங்கற்காகப்
பாங்கினுலிவணஞ்செய்தாற்பயன்மழைநல்கிமென்மேற்
றீங்கிலாவளஞ்சிறந்துதிகழுமத்தேசமென்றும். (௧௦)

சயசயவெனுஞ்சுருதிசங்கமுடனேபல்
லியமுழவமேவவுடனேகினவர்வேரு
ரயமகபயந்தஇதரிக்கிலடிதோறும்
பயனதுதரும்பிரமபாதகனுமுத்தன். (கக)

பிரசஞ்சிந்தும்பிரமதருக்கீழேயாதலா
லரசின்கீழேயாகுதல்செய்யப்படுமாதி
திரிவன்னத்தோணுகிற்காயத்திரியோடே
யரிதனசூத்தமுமத்தியானஞ்செய்தபிஷேகம். (கஉ)

படியினிருமூன்றுமுழமட்டகலம்வெட்டிப் பழிப்பினவரத்தி ணமணிப் பீடமதிலிட்டுக், குடதிசையிலாமலரில் வைத்திலவணத் தைக் கொண்டுபொடிமஞ்சண்மிசைமண்கொடுநிறைத்தங், கிடமு டையபீடமதுபண்ணிவிழவங்கையிரண்டுதிவதஞ்செய்தரைசாதியி லியன்ற, படிசெய்ததிலாண்டுதொறுநல்விழவுசெய்யப்படுமெனவி தித்ததுபழிப்பின்மறையென்றே. (கங)

கனனவிதி - முற்றிற்று.

ஆ திருவிருத்தம் - கஉங.

காரணம்.

ஆதியிலுள்ளதறிவனந்தசிற்சுகப்
பேதமில்பிரமமேபேதமில்லென
வோதியமுடிவினுமுள்ளதப்பொரு
ளாதவிலகிலகாரணமதாகுமால். (க)

காதும்வாதியர்கள்கற்றகற்றளவிறைலுலகுக்
கேதுவாகவிங்கியம்பியபொருட்கெலாமேது
வேதமோதியபிரமமேயென்றுமெய்யுணர்ந்த
போதுமாறுடன்பொன்றுமிப்பிறவியிற்புகுதான். (உ)

சகலசமயத்தவர்கடத்தமதனூலிவ்
வகிலமுதல்சொல்லுவதுமாகிமறையந்தம்
புகலுபரிசும்புரையிலப்பொருள்விரித்தே
யிகலிலாணுகமமிசைப்பதுமிசைப்பாம். (ங)

ஓர்த்துநாலுமதம்புத்தத்தியோகாசாரனுணர்வென்றான்
மாத்துமிகன்றான்சதுர்கோடிமாண்டதென்றான்வைபாடி

யாத்தவணுவேயெனவுரைத்தானகிலோற்பத்தியறிவின்றிச்
சௌத்திராந்திகனுமணுவின்புணர்வேயென்றுசாற்றினான். (௪)

கன்மநின்மதமாயிடுமூலகதுகுணபரிகன்மத்தா
னின்மதநிலையாமைநித்தமிலவுளபலவொன்றென்னப்
பன்னநின்றிடவருவதிவ்வுலகியல்பார்க்கிலமூலமும்வேறொன்
றுன்னநின்றதிலெனவகிலோற்பவமருகர்தாமுரைசெய்தார். ()

என்றுமுளஞானபரனில்லையுயிரில்லை
நன்றியொடுதீவினையுமில்லையகன்ஞாலம்
பொன்றிவரனாலுரைசெய்பூதவியல்பொன்றே
யொன்றுமறியாதவுலகாயுதனுரைத்தான். (௬)

போதமேவடிவாம்புருடனனவரால்
காதனுகியிஞ்ஞாலஞ்செய்வானிலை
யாதலாலவனுற்பத்தியாமென
வேதவாதரில்மீமாஞ்சன்சொன்னான். (எ)

சுகதிதேடும்புருடன்சுரேசனும்
பகுதிதானப்பரமன்றன்முன்னரே
விகுதிமுற்றும்விரித்தநொடுக்கிடுந்
தகுதிவித்தெனச்சாங்கியன்கூறினான். (அ)

கணிகபுத்தவைபாடியன்கழறியபரிசே
யணுவினிற்பிரளுலகசத்தணுவசத்தல்ல
வினையிறற்பரன்குணங்கொடுசெயுமணுவென்றிவ்
வணமுரைத்தனனியாயவைசேடிகமார்க்கம்.. (௯)

சத்தவாதிகள்சத்தமேயென்றனர்சைவர்
சித்தமாயையென்றுரைத்தனர்நிகிலவுற்பத்தி
சித்ததேபரிணாமமெனச்சிவாத்துவிதிகளு
மத்தராகியசாத்தருஞ்சிவமெனமதித்தார். (௧௦)

சாற்றியபிரமமென்றுமவிகாரி * சன்னதிக்கே
போற்றியவவனிருபப்பொய்யதாமாயையிந்த
வேற்றியவுலகுக்கெல்லாமூலமாயாவுஞ்செய்து
மாற்றிடுந்தானேயென்றுமதித்தனன்மாயாவாதி. (௧௧)

---

* சந்நிதிக்கேஎன்றும்பாடம்.

ஒப்பறவிப்படியுற்பவஞ்செய்ததை
தப்பறவொருவரோடொருவர்தர்க்கமுஞ்
செப்புவர் நூலினுஞ்செவ்விதாவிவை
மெய்ப்பொருளன்றெனும்வேதமந்தமே. (கஉ)

பிதையாகிவிளைந்தபெருந்தருவோர்
விதையாலுளதேவியனாதிகளுக்
குதையாதியிலாவொளியேமுதலிற்
சிதையாவிதையென்றமறைச்சிரமே. (கங)

கறையதாகியதமத்துடன்கலந்தசித்ததிலே
யறைவதாகியவகிலவுற்பவமெனவாய்ந்த
மறையினீறதுதொகுத்துரைசெய்பொருள்வகுத்திங்
கிறைவனாகமமியம்பியபரிசினையிசைப்பாம். (கச)

தமத்தொடுகலந்தசித்ததுசிவன்சிற்சத்தியாந்தமஞ்சடமாயை, யமைத்தநாள்கூறவில்லையாமிறைவற் கபின்னபின்னங்களாயிருக் குஞ், சமத்தசத்திக்குமடியிவைமாயாசத்திதான்சகத்தினுக்கெல் லா, நிமித்தமாஞான சத்திமுத்திக்கு நிமித்தமாநிமலன் சன்னதி யில். (கரு)

சேதனமல்லாமாயையிச்சகத்தை செய்யமாட்டாதுசிற்சத்தி, வேதனவுருவமாதலாற்செய்யாவிண்முதல்விளைக்குமாறெங்ஙனா தபகிரணப்புணர்ச்சியாற்காந்த மனல்செய்யுஞ் சேட்டையாமென வே, சாதமாமிறைசிற்சத்தியின்புணர்ப்பாற்சடமதாமாயையிற்சக த்தே. (கசு)

மாயையோனியான்வையக்கருச்செய்வான்
றாயனாகிலுமென்றனன் றாயவ
னும்ஞானிகளுமவர்தந்தையுந்
தாயுமிச்சகத்துக்கென்றுசாற்றினன். (கள)

காரணம் - முற்றிற்று.

ஆ திருவிருத்தம் - கசo.

காரணகாரியவேறின்மை.

:o:

யாதுமறியலாமொன்றறியவென்றுமறை
யோதுபொருளையுணரினுலகெல்லா

மாதியாமே துவறியவறிந்ததாம்
வேதுவாமண்காணவெக்கடமுங்கண்டாற்போல். (க)

ஈசனையொழியவேறில்லையிச்சகம்
பேசினவணிகலம்பொன்னிற்பின்னமோ
காசினியல்லவோகடாதிநூலலாற்
றாசினையுண்டெனச்சொல்லலாகுமோ. (உ)

பேர்வேறுபாட்டாலேபேதமுளதென்னிற்
பார்வேறுபட்டதிலைப்பண்ணுகின்றபேரொழிய
வார்வேறுகண்டார்கடங்களிலமெனும்
பேர்வேறொழியப்பிரமமலதில்லையால். (ங)

உண்டானதொன்றேயுரைப்பதனிலுண்டாமோ
வண்டார்குழன்மலடிமைந்தனெனும்வார்த்தையாற்
கண்டோமெனிலுளதுபோலேகனவத்தூர்
வெண்டேர்முதலெத்தனைதோன்றுமெய்யேபோல். (ச)

தற்பரபோதசற்பாவத்திறற்சகத்தின்றோற்றங்
கற்பிதமானமாயாகாரியம்பரிணமந்தான்
புற்புதவாகாரத்தாற்றோன்றினும்புனலில்வேறு
சிற்பரம்பொருளேயன்றித்திகழ்வதுபிறிதொன்றில்லை. (ரு)

மண்ணுதிகடாதிக்குவருங்காரணமுழுதும்
பண்ணுதுகுலாலாதியொழித்தென்றுரைபகர
வொண்ணுபரமவைபோற்சடமன்றேயுணர்வன்றோ
விண்ணுதியவுலகுஞ்செயவேறோர்பரன்வேண்டா. (சா)

இடஞ்செயுங்கருவிகாலமண்வினையெல்லாங்கூடிக்
கடஞ்செயுங்குலாலன்போலக்கடவுலகங்கள்செய்யச்
சடஞ்செயுமுதவிவேண்டுஞ்சடங்கடகத்தாக்கொண்டு
மடஞ்செயுமுள்ளத்தார்க்குவாசகஞ்செய்வதென்னே. (எ)

சரமசரமானவுலகுசெயவேறுதலைவரிலையானசகலமும்
பிரமவிகாரமிலையில்வழுவாதுபெறுவதெனவேதமறையவே
பரமனரணுகுமெனவரியையாதிபகவனெனஞாலமுதவினுன்
பிரமனெனமாதர்சனமுதலதேவர்பிறிதுமெனவாதரறைவரால்.

காரியமதனைச்செய்வான்செய்வினைகருவிகாலஞ்
சீரியபொருளனைத்துஞ்சிறந்தசிற்சொருபமாக

வாரியரறிவர்வெவ்வேறுகவேயறிவிலாத
பூரியரறிவரென்றுபுகன்றனமறைகளன்றே. (௬)

காரணகாரியவேறின்மை - முற்றிற்று.

ஆ_ திருவிருத்தம்-௧௪௧.

படைப்பு.

இருக்கினின்முடிவொரெலையறநானுவிதமோதுஞ்
சுருக்கமிலுலகின்றோற்றமுரைக்கத்தொலையாவாந்
திருக்கியமனனைத்தேசிகன்மீட்டுச்சிற்சத்தா
வொருக்கியவகையேயுதையமுழுலகிற்குரைசெய்வாம். (௧)

வாசகஞ்செயவொணுதசத்திபரவத்துவின்கண்வரவத்திலே
யீசன்வந்தவிறைவன்கணேபரவியோமம்வந்ததிலவேதுவாய்ப்
பேசுகாலபரம்வந்துடன்புருடன்வந்துபின்பகுதிவந்துபின்
மாசின்மானதனில்வந்தகங்காரமாகிமுக்குணமளித்தலால். (௨)

சத்துவவாங்காரத்தேதகுமனஞானேந்திரியஞ்சனனமாகுஞ்
சத்தமுதற்பூதமெலாந்தாமதவாங்காரத்தேசனனமாகு
மத்திமமாமிராசதவாங்காரத்தேவருங்கன்மேந்திரியமென்றிட்
டுத்தமமாமறையுரைக்குமுலகமெலாமாங்காரத்துதித்ததன்றே.

சாற்றப்படும்பூததன்மாத்திரத்தைத் தனித்துத்தனித்தொன்றிரண்டாக்கியோரோர், கூற்றைப்பகுத்தொன்று நாலாக்கியேதன்கூறல்லவானுலினுங் கூட்டவானங், காற்றுக்கனற்றோய மண்ணென்றுதூலி கரித்தண்டமாய்முன்செய் கருமத்தின்வகையே, தோற்றப்படுந்தேவர்நராதியென்றேசொல்லப்படுந்தூய சுருதித்தலைக்கே. (௪)

முந்துசத்திமுதலாமுடிவென
வந்தமண்ணளவாகவரம்பிலாப்
பந்தமானதெலாமுண்மைபார்த்திடி
னந்தமாதியிலானன்றியில்லையே. (௫)

படைப்பு - முற்றிற்று.

ஆ_ திருவிருத்தம் - ௧௫௪.

நிலைபேறு.

———:o:———

முத்தராகுவர்முன்னவர்யோனியெண்
பத்துநான்குநூறுயிரம்பண்ணியே
வொற்றவற்றினுயிர்க்குயிராய்நின்ற
வித்தகம்மறிவார்பிறர்வீடுறுர். (க)

வானதுகடந்தொறுநின்றவண்ணமே
யோனிகடொறுமிறையுள்கலந்தவா
ருனதிலானதுமிலனழிந்துதான்
போனதுமிலனவைபொன்றும்போதுமே. (உ)

நிலைபேறு - முற்றிற்று.

ஆ திருவிருத்தம் – கருசு.

———

அழிப்பு.

———:o:———

எழுதருமுழுதுமவனியிலழியவெழுபுவிபுனலினிலழிய
முழுதுறுபுனலுமனலிடையழியமுறுகெரிவளியினிலழிய
விழிவறுவளியதுடைவளிவெளியிலிறவெளிதெரிவருமிருளி
லழிதரவிருளுமறிவினிலழியவழிவறுநிலையறிவதுவாம். (க)

உருவமாமெவையுமாளுமுலகங்களதிலேயுலகமண்டமதில் மாளுமுறுமண்டமெவையு, மருவமாளுமிகுபூதமதின்மாளுமவை யாங்காரமேவியகமாளவுறுமகானிடைமகான், மருளதாகிவருமூ லவுடலாமிருளிலே மாளுமாளுமதுமேலுயருசோதியொளியாற், றிரியமாளும்வகையே யெழுமிவ்வாறழியு மிச்செயலுநாயக்ன் வி ஞேதமலதேதுமிலையால். (உ)

ஆகமாதியாமுபாதியவைகள்தேகியதிலே
தேகிகாலமதிலுஞ்செறிவியோமமதிலே
மாகமாசில்போதமீதுமற்றதுஞ்சிற்சத்திபா
லேகசத்திசச்சிதானந்தத்திலேயிறக்கும். (ங)

அழிப்பு - முற்றிற்று.

ஆ திருவிருத்தம் - கருகூ.

———

பெந்தகாரணம்.

அனுதியகிலோற்பவமுமானநிலைபேறும்
வினுசமுமெனுந்தொழில்கண்மேவுபுருடன்றன்
பினுனவவைதானடைதல்பெத்தமுறுமாறு
முனுனவவைதானடைதன்முத்திபுகுமாறும். (க)

அறிவிலாமையையடைந்தவன்றூனலாவாகமாதியைத்தாஞகக்
குறியுருவவற்றின்செயறன்செயலாகவேகுறிக்கொள்ளுஞ்
செறிவதாமவனையதனிஞல்வினையினுற்றேகமாந்தேகத்தா
லுறுவதாகுமூழ்முறைமுறையிடைவிடாதுடம்பெடுத்திடுமன்றே.

பெந்தகாரணம்-முற்றிற்று.

ஆ திருவிருத்தம்-கசுக.

பிறவிக்கடல்.

சாதல்வாழ்தலெனமேவியசலத்தையுளதாய்க்
கோதைமாதரொடுகோண்முதலையாகவுளதாய்
நோதலாகவருநோய்நுரையதாகவுளதாய்க்
காதலானிலைகலங்கவருகாலுமுளதாய். (க)

வதமிகுத்துவருகோபவடவன்னியுளதாய்
விதமளப்பரும்விரோதநதிவீழவுளதாய்ச்
சுதமுறப்படுசுகத்திவலைவீசியுளதாய்
மதமெனப்படுமகாமகரம்வாழ்வதுளதாய். (உ)

திவாவிராவிடயசிந்தைதிரையாகவுளதாய்த்
தவாதவாறுதொழின்மேவிவருசங்கமுளதா
யவாவெனயாவருமளப்பரியவாழமுளதாய்
விவாதமாமலையெறிந்தவொலிவிஞ்சியுளதாய். (ங)

இடும்பையாமளவிலாதமலையெங்குமுளதாய்க்
குடும்பமாகியதுரால்கள்பலகூடியுளதா
யுடம்பதாகியபுலாலொழிவிலாமையுளதாய்
விடங்கள்சேர்விவிதமானவினைமீனமுளதாய். (ச)

அவசமாகவிடுகாமமெனுமாலமுளதாய்
நவைசெய்போகமெனும்வேகவிடநாகமுளதாய்ச்
சுவைசெய்துண்டுவிடுசுற்றமெனுமட்டையுளதாய்
பவமகோததிபகுப்பெவர்பகர்ந்துமுடிவார். (ரு)

வெருவாருமெழிற்பிறவிவேலையில்வீழ்ந்தழியாமே
திருவாருமுத்தியெனுந்தீரத்தைச்சேர்வுறுதற்
கொருஞானநாவாய்கொண்டோங்கருளாலேயுய்க்குங்
குருவாகுமீகாமற்கூடுநர்க்குங்கூடுமால். (சு)

பிறவிக்கடல் - முற்றிற்று.

ஆ திருவிருத்தம்-கசுஎ.

செனனவிருட்சம்.

:o:

மானமலைநாடரியமாயவிதையாகி
யானவதனங்குரமவிச்சையதுவாகி
மேனியதியாமையதுவீழவிடும்வேராய்த்
தானலதுதானெனநினைக்கமுதருணுய். (க)

உணக்கருமகங்கரணமோங்கிவளர்வாய்முக்
குணக்கவடுபோகியவைதோறுமுதுகோடாய்ப்
பணைக்குமனனுதிசெவியாதிபடியாகித்
தணக்குதலிலாவினைகடண்பணைகளாகி. (உ)

சாகைபலயோனிகடழைத்ததளிரிச்சை
மோகமுகிழ்போகமுகைசோகமொளிர்மொட்டா
யாகமதுவாகிமலரல்லல்பலமாகிக்
காகமுணவீழுமரணங்கனியதாகி. (ங)

கலங்கவருகாமமுதல்கட்செவிகளேயாஞ்
சலங்கொள்பறவைத்திரடமக்கோர்முடிவின்றி
யிலங்குமறிவெல்லிருளாயவிதுகெட்டார்
மலங்குகிலரிப்பிறவிமாமரவகுப்பே. (ச)

ஆரியனருட்கவசமிட்டறிவதாகுங்
கூரியகுடாரமதுகொண்டளவுகூறு

மூரியபெருந்தருவைமூலமொடெறிந்தா
ரேரியையுமுத்தியுலகத்தினிலிருப்பார். (ரு)

செனனவிருட்சம் - முற்றிற்று.

ஆகூ திருவிருத்தம்-கஎஉ.

தேகோற்பத்தி.

மோகசிந்தைமுதனடுவீறிது
சோகமென்றுதுணிந்துதுறந்திடு
பாகம்வந்திடுமாறுபழிப்புறுந்
தேகம்வந்தபரிசினைச்செப்புவாம். (க)

பண்ணுமாகுதியாற்பகலவன்விளங்கும்பகலவன்மழையினைப் பலிக்கும்,விண்ணினாலுளதாமோடதியதனால்விளைந்திடுமன்னமன்னத்தை, யுண்ணுமாம்புருடனுண்டதுகிட்டமசாரமென்றோரிருவகையாங், தண்ணியகிட்டம்புருடனீர்மேதந்தானரம்பெலும்பெனச் சமையும். (உ)

புல்லியவுவர்நீர்மலங்களையநிலம்போக்கிடும்புகன்றசாரந்தான்
சொல்லுவர்தூலசூக்குமமென்னத்துவிதமாந்தூலபாகந்தா
னெல்லையில்பஞ்சபூதத்தின்கூறாயிவற்றினாலியம்புமவ்வடைவே
மல்கியவளர்வுவலியொடுமச்சையிரத்தமுந்தசையுமாய்வளரும்.()

சத்துவமிரசதமெனவிருகுணத்தாற்சாரநுண்கூறிரண்டாகிச், சத்துவகுணத்திற்றரணியின்கூறுதான்மனமபானமூக்கினையுஞ்,சுத்தமாஞ்சலக்கூறுபத்தநற்பிராணன்சுவையறிநாவையும்வளர்க்குஞ், சத்தம்வாக்கொடுகண்டழலினாற்காலாற்சன்மவத்தங்கடான்றமைக்கும். (ச)

வரையறுவானாற்பாதகன்னங்கள்வளர்ந்திடுமற்றராசதஞ்சே
ரிரதமாங்காலகன்மகமானகூறுதானிரத்தமுண்டாக்கும்
விரவுதிரத்தாலிறைச்சிமற்றதனான்மேதமாமேதத்தினரம்பா
முரவியநரம்பாலெலும்பதின்மச்சைமச்சையால்வீரியமுளதாம். ()

இருதுகாலத்தில்யோனிசேர்பெலத்தையியங்குகாலேழை சோணிதத்தை, மருவுமாசெய்யுமற்றைநாள்கலங்கல்வந்துபுற்புதமதாமைந்தி, லுருவுபிண்டமதாமேழிலெழிலுரக்குமங்குரிக்குமை

யைந்திற், சிரமொடுகிரியந்தோள்முதுகுதரஞ்செனித்திடுந்திங்க
ளொன்றளவில். (சு)

கால்கைகடிபக்கமுறுகாத்திரமிரண்டிற்
சாலுமொருமூன்றினுளசந்தளவிரற்க
ணூலின்முகநாசிசெவிநண்ணியிடுமைந்திற்
கால்கைநகதந்தநிரைகன்னதுளையாறில். (எ)

உந்தியுழல்சந்துகளுபத்தமொடுபாயு
தந்திடுவதேழ்மதிசமத்தமும்நிரம்பி
வந்துசிரகேசமுறுமாதமிருநாலி
னுந்திவழிதாயுணவினுலுடல்தடிக்கும் (அ)

ஒன்பதிலுதித்துணர்வுயோனிநிரையத்திற்
றுன்பமிகநொந்துதுயர்தீரும்வகையீசற்
கன்புசெய்தவன்றனருளாலரியவீடுற்
றின்புறுவதென்றுநினைவுற்றதிலிருக்கும் (கூ)

மலைமேல்நின்றுவீழ்வார்போன்மாதம்பத்தில்வாயுவினுற்
றலைகீழாகவிழுமந்தத்தாபத்தோடேவேகத்து
நிலமேல்விழுவதன்முன்னேநெடியோன்மாயக்கால்வீசி
மலமேவுடலாய்நினைவெல்லாமறக்குமுன்னைவல்வினையால். (க0)

தக்கணத்துறிற்றந்தைகால்வீரிய
மிக்கிருக்கிலாண்வீரியந்தாழ்ந்திடப்
பக்கமேவுறிற்கான்மடப்பாவையா
மொக்கிற்சண்டமாமூதையுநீருமே. (கக)

வாயுவைந்துநாழிகைவலத்தியங்கின்மைந்தனுக்
காயநூறதற்றவெல்லையாகிலாயுவில்லையாம்
வாயுவெங்குமொக்கவோடிலவையவங்கண்மைந்தனுக்
கேயுமஃதியங்கிடாவிடத்துறப்பதேய்ந்திடா. (கஉ)

தந்தைக்கெந்தக்குணமுதிக்குஞ்சனிக்கும்பொழுதின்மைந்தற்கு
மந்தக்குணமாமெப்பூதத்தவன்றனுடலிற்காலியங்கு
மைந்தற்கதுவேநிறமாகுமாதாபிதாக்கள்சத்துவத்தை
யந்தப்பொழுதிலடைகுவரேலறிந்துபிறக்குமம்மகவே. (கங)

சந்தமலாகவீழ்தல்புழுத்தானுகர்தல்தீமிகுதல்
வந்தநிலமதுவீழக்கலக்கல்செயில்வந்தியையா

வந்தவனலேமிகுக்கிலாடவன்வந்தியனரு
மைந்தர்பலராயுதிப்பர்வளியெறிந்துகருச்சிதறில். (கச)

தேகோற்பத்தி - முற்றிற்று.

ஆ திருவிருத்தம்-கஅசு.

பிண்டகோசம்.

---:o:---

அத்திநற்றூனேடுத்தரந்துலாங்கொண்டழகுறுசட்டமாவமைத்து, வித்தகமாகப்பழுக்கழிநிரைத்துவிவிதமாஞ்சிறையினற்கட்டி,மெத்தநீருதிரந்தசையெனுமண்ணன்மெல்லவேசுவர்செய்துமேலங், குய்த்ததோல்கேசவுரோமத்தால்மேய்ந்தவுரோக்காயத்தினையுரைப்பாம். (க)

உரைத்தவாய்வாய்தல்செவிமுதலெட்டுமோங்குசாளரங்களாயதாங், திருத்துநற்கபாடம்பற்கள்தாளாகித்திகழுநாமோக்கரமலாதி, பெருத்தபண்டமதாய்ப்பேதநாடிகளாற்பெருகையும்பித்துமேமிகுத்து, வஃரப்பில்சோகாதிமுப்பினற்பரந்தமனைவிதமார்வகுத்துரைப்பார். (உ)

அறுபதிற்றுருமென்பதுதசையின்பேதமைஞ்ஞூறுகேசரோம
முறுவமுக்கோடியுடனரைநாடியுறுபேதமவணமாந்தந்தம்
பெறுவமேற்றெண்ணன்கீரிருபானும்பிண்டமாயிரப்பலமிரத்த
முறுவமற்றொருநூறும்பலமலாதிக்கோரளவிலையுரைத்திடவே.

ஓதியவிதற்குள்நிணமிருபானுமொழுகிடும்வழும்பதன்பாதி
மேதமற்றவணமற்புதமைந்தாம்விளம்பியமச்சைநாற்பலமாந்
தாதுவிற்பாதான்விரத்தமுப்பலமாந்தயங்குபித்துழக்கதைந்நாழி
மீதுசுக்கிலமாழாக்கிதிவாருமைந்தர்மேவுபிண்டத்தியல்பறியே.

இப்பரிசுரைத்தவிழுக்குடைப்பிண்ட மெமக்குருவெனநினைந்துயிர்கள், தப்பறநானென்றெழுமகங்காரச்சழக்கினர்பெத்தமதுளதா, மொப்பமைவில்லாவுறுதுயர்ப்பிறவிக்கடலுளேயுறவிழுந்தழுந்திச், செப்பருமனந்தயோனிகடோறுஞ்சேர்வதுவிடுவதாய்ச்செல்லும். (ரு)

பிண்டகோசம் - முற்றிற்று.

ஆ திருவிருத்தம்-ககக.

அண்டகோசம்.

:o:

வானவளிதீநீர்மண்ணாய்வந்தவைம்பூதந்தன்னி
லானபேரண்டமெண்ணிலனந்தமாம்பிண்டம்போலுந்
தானதிலொன்றின்றன்மைதனைச்சுருங்கிடவுரைக்க
வூனமிலுணர்வின்மிக்கவொளிதிகழுரவனீகேள். (௧)

அண்டவித்தாத்தைக்கூறவாயிரங்கோடிவாணா
ளுண்டெனுமவற்குமொண்ணாதுலகவருணரும்வண்ணம்
பண்டையோர்தொகுத்துச்சொன்னாரதுபெரும்பரப்பெனக்குட்
கொண்டபல்விதங்கள்கூறெனக்கூறுவனண்டகூடம். (௨)

பாதலமேழுகீழ்மேற்பரவைசூழ்தீபேழ்நாவற்
பூதலநடுவுமேருப்பொருப்பதநடுவுத்தீவுக்
கேதளவொன்றுக்கொன்றதிருமடங்கிருமடங்கா
வோதுதீபேழினெல்லையுடுத்தவேலைகளினெல்லை. (௩)

எலையிலக்கநாவற்றீவிவவுயர்மேரு
நிலைபதினாறாயிரங்கீழ்நின்றதுபார்மேலே
தலையகல்முப்பத்தீராயிரந்தற்பாதி
நிலையகலந்தற்சூழநிற்பனவெண்குன்றம். (௪)

வடதிசையுந்தென்றிசையுமன்னுபமும்மூன்றாங்
குடதிசையிலொன்றாங்குணதிசையிலொன்றா
யிடையிடையிற்பட்டவிடமேழுதீவுக்கு
நடுவுபடுநாவனவகண்டமாகும். (௫)

இசைதீபேழ்நாவலிறளியிலவங்
குசைகௌஞ்சஞ்சாகமுடன்புட்கரமாக்கூறுங்
கசியுமுப்புகன்னலுடனெய்தயிர்பா
லுசிதமாந்தண்ணீருததியேழாகும். (௬)

இனியநீர்கடற்கிரட்டியயங்குமாருயிரொன்றில்லாத்
தனியதாந்தமனியப்பூதலமதுலோகாலோக
மெனுமலைசூழுமெல்லையியம்பிலோரயுதமாம்யோ
சனையகலமுயர்நூறுசதமடங்கதனுக்காகும். (௭)

ஆரிருள்சூழுமந்தப்பொருப்பினைத்தெரிக்கவொண்ணாக்
காரிருளதனையண்டகடாகந்தான்சூழுமாக

வாரியாவர்த்தந்தானுமைம்பதுகோடியென்ப
ரேரியல்பூமிக்கெல்லையியம்புபாதலங்கட்கெல்லை. (அ)

பாரின்றிடைவெளிபதினாயிரம்யோசனையாங்கீ
ழாரும்புகல்தலாதிக்கிடைவெளியவ்வாறு
மோரொன்றுளகனமாயிரம்யோசனையொன்றாகச்
சீரொன்றியபணிசேடன்றனதுசிகாமாலை. (௯)

கோரமனனகொடுவினையாளர்சே
ரௌரவாதிநரகிவற்கிழதாம்
பாரின்மேலுலகங்களைப்பாருளோர்
சீரிதாவறியும்படிசெப்புவாம். (௰)

காசினிக்குநூறாயிரம்யோசனைகதிரோன்
மாசிலவர்க்குநூறாயிரமேன்மாமதியா
மாசிலுடுயோசனையவற்கப்படிமே
லேசில்புதனிரண்டுநூறாயிரமிதற்கே. (௧௧)

உசநாவுஞ்செவ்வாயுமும்பர்குருவு
மசையாதசௌரியுமப்படிமேன்மேலா
மிசையார்சனிக்கிலக்கத்தேழ்முனிவர்மேலே
யசையாத்துருவனவற்கப்பரிசேயாகும். (௧௨)

பூமிசைவெய்யோன்போமளவாகப்புவலோகந்
தோமிலதன்மேற்றுருவனளவாகச்சுவலோகங்
காமுறுமியாகாதியிலுறுபெறுமிதுகற்றோர்
தாமுரைசெய்பூமுதலிவையாகுந்திரைலோக்கியம். (௧௩)

கூசலில்துருவனுக்குக்கோடியோசனையிற்கற்ப
வாசிகண்மகலுலோகமற்றதற்கிரட்டிமேலே
தேசுறுசனந்தனதிசேர்செனலோகமெட்டு
யோசனைகோடிமேலேயுடம்பிலார்தவவுலோகம். (௧௪)

அருந்தவவுலகினும்பராறிருகோடிமெய்யென்
றிருந்தவாவிளம்புலோகமிதுமுடிபிரமலோகம்
பரந்தபூவாதியேழும்பாதலமேழுமாக
விருந்ததுபிரமாண்டமேமகோளஃகயான்மூடி. (௧௫)

கோழியண்டத்தையொத்துக்கோடிநூறியோசனைத்தாம்
பாழியண்டங்கள்பிண்டப்பன்மைபோலெல்லையில்லைச்

சூழுமாவண்டத்துள்ளோர்தோயத்தேசுருங்கிமாநீர்த்
தாழைனயயவியேபோலச்சகலமுமிதக்குமன்றே. (௧௬)

பன்னுபேரண்டங்கீழ்மேல்பக்கநீர்பதின்மடங்காம்
வன்னிகால்வான்பூதாதிமகானிவையொன்றையொன்று
சொன்னவம்முறையேசூழுஞ்சூழ்ந்திடும்பகுதிமானே
மின்னியவிறகிற்றீப்போல்வியாபிக்கும்புருடனத்தை. (௧௭)

பகுதியென்றுரைக்கப்பட்டபதானமும்புருடன்றானுந்
தகுதியாம்பரமீசன்றன்சத்தியிலடங்குஞ்சத்தி
மிகுதியம்பரமீசன்பாலடங்கிடுமெய்மைபார்த்தாற்
சுகதியாம்பரமீசன்றன்சொரூபமேயன்றியில்லை. (௧௮)

அண்டகோசம் - முற்றிற்று.

ஆ திருவிருத்தம்-௨0௧.

அண்டபிண்டவேறின்மை.

---:o:---

அண்டத்திலுளதுபிண்டத்திலுளதெனவறியக்கூறி
லண்டத்தையனந்தங்கோடிவிதங்களாலறைந்தக்காலு
பண்டுற்றவைந்துபூதமல்லதுபகரவில்லை
பிண்டத்துமைம்பூதங்களல்லதுபிறிதொன்றில்லை. (௧)

திங்களாமனஞ்செவிகளெண்டிசைகளாந்திகழு
மங்கியாகும்வாக்குப்பிராணதியாமகில
மங்கணுயருமசலமாமெலும்புடலதனிற்
பங்கமாமுவர்நீர்முதனெகிழ்வெலாம்பாணி. (௨)

. கேசரோமமாங்கிளர்வனப்பதியுமோடதியு
மேசுமிவ்வுடம்பாகுலதிருநிலமிதிலா
காசமாம்வெளிகற்பகோடிகளிலுமுடியா
பேசவண்டத்திலுளதுபிண்டத்திலுமுளதே. (௩)

அண்டபிண்டவேறின்மை - முற்றிற்று.

ஆ திருவிருத்தம் - ௨௧௨.

---

*வீடுபத்து.

—:o:—

விட்டுடலெடுக்குமாறுவிற்புழுவிற்றபேராமள்ள
ரிட்டடியெடுக்குமாறுமிலக்கரிட்டுவைத்துவேறோர்
புட்டகம்புனையுமாறும்பொருந்துகண்படையிலொன்னார்
கட்டரணழித்துவேழக்கழுத்தினிலிருக்குமாறும். (க)

சிறந்தகைமணியிலண்மைசிந்தைமேற்கீழுஞ்சூழு
மிறந்ததாரமும்போமாறுமிமைப்பினிற்சராசரத்தைத்
துறந்துபல்லவமிலக்கைத்துளைத்தலுந்தோன்றுவண்ண
முறங்கினுனுணர்ந்தவாறுமுணர்ந்தவனுறங்குமாறும். (உ)

காயம்விட்டுயிர்பற்றிடுங்கான்கொடுகாற்றுப்
போயவாறெனப்போய்ப்புரியட்டகத்துடனே
தாயுந்தந்தையுந்தானுமங்கறிவுருவகையிம்
மாயைவல்லபமிறையலான்மற்றறிபவரார். (ங)

குலைதல்செய்வினையாலுடல்கொள்ளுதல்செய்யு
மெலையிலிவ்வுயிரியங்குவதெவ்வழியென்னி
லுலைவிறன்னினைவாதலிலுடல்வழிவேண்டாச்
சிலையின்மண்டுகஞ்செனித்ததெவ்வழியினுற்சென்றே. (ச)

வடிவிறன்னையோர்வடிவமாமனனஞ்செய்வகையாற்
படியதெல்லையம்பரம்பரிணமித்தவாபோ
லுடலமாய்ப்பரிணமித்ததன்னுளதனையுணர்ந்தால்
விடுதல்பற்றுதலிலனலன்வியாபியாய்விளங்கும். (ரு)

வீடுபத்து-முற்றிற்று.

ஆ திருவிருத்தம்-உகஎ.

உடலிழிவு.

—:o:—

விழுமிதாமதிப்பதெனமெய்விளைந்திடும்
புழுமலங்கண்டுகண்புதைத்துப்புன்மல
மொழுகுவாய்கழுவுகையுருஞ்சிமண்கொடு
கழுவுவாரழிவுறுங்காயந்தன்னையே. (க)

* வீடுபற்று என்றும் பாடம்.

மலத்தினுற்பொதிந்தவிந்தக்குரம்பைமண்ணினுற்
சலத்தினுற்றன்மலந்தவிர்க்கலாகுமோ
பெலத்தினுலிருந்தையைப்பிசைந்துபாலிலே
யுலத்தினலதனிறமொள்ளிதாகுமோ. (௨)

பீறிநாய்கள்பிணங்கிக்கொளுமலக்
கூறியைப்புறக்கோலங்கள்செய்வரா
லூறியூத்தைநீரொன்பதுவாயினு
மாறுபாயினுமங்தோவறிகிலா. (௩)

உடலிழிவு - முற்றிற்று.

ஆகதிருவிருத்தம்-௨௨0.

சமுசாரநிந்தை.

:0:

இன்சொலேமொழிபொழுதுமின்னுதன்மொழிவார்
பின்செல்வேமெனும்பேதைமைகடும்பசிப்பிணியா
முன்செய்தானையைப்பிடித்தழுமகவினையைமுகங்கண்
டென்செய்வேனெனுமில்லவளில்லவற்கிலதே. (க)

அயலாரிடாதற்கொளலேயறனுக்
கியல்பாமெனவோதியநூலெவையுந்
துயராகியசுற்றமொடுற்றவர்கட்
குயலாநெறியில்லெனவோதுபவே. (௨)

இடும்பைக்கிலக்காமுடம்பென்றுமெல்லாவிடும்பையுந்திரு,
முடம்பித்துவக்கைவிடிலென்றுமுணர்ந்தோரெல்லா முரைத்திட
வுங், குடும்பத்திடும்பையுந்தனதாக்கோலிக்கொள்ளும்படியுள்ள,
மடம்பட்டதுவென்னென்னின்முன்னைவினையின்செயலாமதிக்கின்
றேன். (௩)

சமுசாரநிந்தை - முற்றிற்று.

ஆகதிருவிருத்தம்-௨௨௩.

போகநிந்தை.

:0:

நல்லவாமறுசுவைநாவினமட்டல
இல்லவாமிலங்கிழையார்களின்பமு

மல்லவாமக்கணத்தருவருக்கவே
வல்லவாவிவற்றினின்மயக்கமாந்தரே. (௧)

மருந்தெனுரருந்துவர்பசிக்குமாதரைப்
பொருந்துவார்மலக்கழிவெனப்புலன்கொளா
ரருந்தலும்பொருந்தலுமல்லதில்லையென்
றிருந்துவாழ்பவர்வெளிறியம்பலாகுமோ. (௨)

நாவார்சுவையின்மீனுற்றத்திலேயளிகைம்
மாவூறுகன்னிவனத்தசுணமோசையினி
லோவாதுவிட்டிலுருவில்விழுமொன்றன்றி
யாவாவிம்மாநுடவரைந்தாலுமேன்பட்டார். (௩)

போகநிந்தை-முற்றிற்று.

ஆஉ திருவிருத்தம்-௨௨௬.

பெண்நிந்தை.

மாதியானத்தின்மந்திரத்தாலிடும்
பூதியால்விடப்போக்கப்படாதநா
லோதியாதுமுணர்ந்தவருள்ளமும்
பேதியாநிற்கும்பெண்ணெனும்பேயரோ. (௧)

கூடிற்கைப்பொருளியாவையுங்கொள்ளுவர்
வீடிலாருயிர்தன்னையும்வீட்டுவ
ராடவர்க்கிவ்வரிவையரொப்பதோர்
கேடுமுண்டோமுழுதுங்கெடுப்பதே. (௨)

பெண்நிந்தை - முற்றிற்று.

ஆஉ திருவிருத்தம்-௨௨௮.

அருத்தநிந்தை.

ஆக்கறுன்பமரும்பொருளப்பொரு
ளாக்கறுன்பநுகரினுந்துன்பமே
போக்கறுன்பமாம்போதத்துலையினிற்
றாக்கினுலதில்வேறில்லைத்துன்பமே. (௧)

துப்புறுபொருளினைத்தேடறுன்பமாங்
கைப்பொருளுண்டெனிற்கருத்துமோகமா
மப்பொருளழிந்திடும்பொழுதுமல்லலா
மெப்பொழுதோபொருளின்பமாவதே. (௨)

விறல்கொண்மன்னரிற்சோரனில்விரும்பியமகவி
லறவிலங்கியிற்கிளைஞரிலரும்பொருளழிவா
யுறவினெஞ்சினுக்கொழிவறவெருவுதலுளதா
மறலியாற்பிறப்பவர்க்கெலாம்வரும்பயம்போல. (௩)

அருத்தநிந்தை-முற்றிற்று.
ஆ. திருவிருத்தம் - ௨௩௧.

அரசநிந்தை.

:o:

மாதவத்தினல்வானவர்க்கரசனுய்மதத்தாற்
பாதலத்திலேகுடனோர்பாந்தளாய்விழுந்தான்
மாதனத்தினல்வருவதுமதமெனிலதுசிங்
காதனத்தின்மேலிருந்தவற்கன்றிவேறுளதோ. (௧)

மத்தியமுண்டவன்மத்தனகுவா
னத்தனைபொழுதுமேயவனெற்பாதகன்
மத்தனுமிடையறமகிழுமன்னவ
னெத்தனைபாதகனியம்பலாவதோ. (௨)

மருவலாரைமகவைவரைந்துகொள்
குரவவார்குழலாரைக்குணத்தொடும்
பரவுவாரையுந்தன்பயத்தாற்பட
வரவுபெரன்மன்னனையாருமஞ்சுமால். (௩)

அரசநிந்தை-முற்றிற்று.
ஆ. திருவிருத்தம-௨௩௪.

சுவர்க்கநிந்தை.

:o:

குருடன்புகராமார்த்தாண்டன்குட்டரோகியாமெஞ்ஞ
புருடன்றலைநோய்புரந்தரற்குப்புயத்தில்வாதந்தக்கற்குச்
சுரநோயுண்டுகயரோகஞ்சோமனுக்குநீரிழிவு
வருணற்கிவ்வாறமரர்க்குநோயுண்டுண்டேமருத்துவரும். (௧)

கார்த்திகேயனைத்தந்தனன்கண்ணுதல்
பெற்றியான்மயக்குற்றான்பிதாமகன்
ஆர்த்தன்மால்சுறவக்கொடியான்வலி
மூர்த்தமானவரியாரேமுருக்கினார். (௨)

விழுப்பமானவினையின்றிமேலோர்பதத்தினாலோகத்
தழுக்காறெய்தியதனாலேயமரர்தாமுமறிவில்லாப்
புழுக்களாகியேறாதபொல்லாநரகம்போய்ப்புகுது
மிழுக்குண்டானால்விண்ணுலகிலின்னாநிரயமினிதன்றே. (௩)

தீயவசுரர்பகையுண்டுசெற்றமார்வமிகவுண்டு
நோயுண்டனங்கனாருண்டுநோய்கட்கெல்லாந்தாயான
காயமுண்டுகைதொழவேண்டினருமுண்டுகற்பத்தே
மாயுந்தன்மையுண்டானால்வானோர்க்கென்னவளனுண்டே. (௪)

பொருளற்றவரைத்தள்ளிவிடும்பொதுமாதரைப்போற்போகங்
டருளற்றுருளத்தள்ளுவர்களரம்பைமாதரறநற்றார் [கொண்
சரளற்றருவேர்தறித்ததெனத்தலைகீழாகத்தாம்வீழ
வெருளற்றவர்களுண்டாகில்விண்ணோருலகம்விரும்புகவே. (௫)

சுவர்க்கநிந்தை - முற்றிற்று.

ஆகு திருவிருத்தம்-௨௩௧.

நிலையாமை.

---:o:---

பிறந்தவரிறத்தல்பிழையாதெனவறிந்தா
ருறந்துயரொழிந்தினியதுண்ணநினைவாரோ
மறந்துவிடயத்தின்மயலுற்றிடுதல்வான்மீ
திறந்தவரையுச்சிவிழுவோனிடைகொளின்பம். (௧)

பாலனும்பருவமாயும்பன்னியகுமாரமாயுங்
கோலயவ்வனமுமாயுங்குலவியநலனுமாயும்
வாலியசெல்வமாயும்வலியுடனனைத்துமாயுஞ்
சாலவேநிலைஞாலத்துத்தானிலையாமையன்றே. (௨)

தேடியபொருளுமாயுந்திகழ்ந்திடுங்கல்விமாயு
நாடியவீரமாயுநலந்திகழ்குணமுமாயுங்
கூடியசுற்றமாயுங்கொண்டாடுமனைத்துமாயு
நீடியஞாலமெல்லாநிலையாமைமயமேயன்றோ. (௩)

இந்திரன்செல்வமாயுமிமையவர்பதங்கண்மாயு
மந்தரம்பொடியதாகுமறிகடல்வறள்வதாகுஞ்
சந்திரனிரவிமாண்டுதரையதுமழியுமென்று
லிந்தநீர்க்குமிழியாக்கையியல்பினையிசைத்தற்குண்டோ. (௪)

கலைமதிதாரகைக்கணம்பதங்கன்மூ
வுலகமுமிறுமயனொருதினத்திலவ்
வுலைவறுமயற்குமாற்குருத்திரர்க்குமுண்
டிலையமதெனிலிருப்பவர்கள்யாவர்தாம். (௫)

ஒருபாதியிலேயுலவாதுறைதற்
கொருபாயமுமிலவெனுமுண்மையுணர்ந்
தொருபாதியிலாவுணர்வானவனே
நிருபாதிகனாய்நிலையாய்நிகழ்வான். (௬)

பரணமாகியபெண்டிருஞ்சுற்றமும்பண்டுதங்கையிற்றந்த
விரணமானவைகொண்டிடவிவரைவிட்டியம்பிடாதிவனேகு
மரணவேதனையாவராலறியலாமயங்கியைம்புலனந்தக்
கரணமியாவையுங்கலங்கிடவருந்துயர்கடவுளேயறிகிற்பான். (௭)

பேணுடம்பினைவினைப்பயனுகர்ந்திடப்பிணித்த
நாணினைந்துதன்பெருமதமுக்கியருமனைக்
காணிலியாவரோகாரியங்கருதுவார்கருத்தா
லூணும்வேண்டலரொழிவறவுளநடுக்குறலால். (௮)

வில்விளங்கியவிண்ணவர்மிகுத்தவாழ்நாளு
மல்லரும்பகலென்னுமீர்வாளினாலரிந்து
கொல்லும்வெங்கொடுங்கூற்றையார்குலைவுறார்குறகி
னல்விருந்தெனவுவந்தெதிர்கொள்ளுவான்ஞானி. (௯)

நிலையாமை-முற்றிற்று.

ஆக திருவிருத்தம் - ௨௪௮.

துக்கத்தொகுதி.

:O:

கருப்பமென்னுமக்காரிருட்சிறையினிற்கதுவு
நெருப்பின்வெந்துளநிலைகெடத்தலைதகர்ந்திடவே
பொருப்பினின்றுவீழ்பவரெனப்போந்தமைநினையா
விருப்புநெஞ்சினர்க்கென்னையாமினியியம்புவதே. (௧)

குழவியிலறியாத்துன்பங்குரவாற்குமாரந்துன்பங்
கழிதருகாமநோயாற்காளையாம்பருவந்துன்பம்
விழைவுறுபோகஞ்சுட்டிவெறுக்கையைவிரும்பிமேவுந்
தொழிலினாற்றுன்பமந்தத்தொழிலிடையுறாததுன்பம். (உ)

கோடையில்வெப்பாற்றுன்பங்குளிரினாற்றுன்பங்கூதிர்
வாடையிலேற்றாற்றுன்பம்வார்பனிநோயாற்றுன்பம்
நீடியதாகமோகநித்திரைமலாதிதன்னா
னூடொறுந்துன்பமானனலமொருநாளுமின்றே. (௩)

அல்லலாற்செல்வந்துன்பமதினுநல்குரவுந்துன்பங்
கல்வியாங்காரந்துன்பங்கற்றிலனாயிற்றுன்ப
மல்லன்மாஞாலந்தன்னில்வலிமிகின்மதத்தாற்றுன்ப
மில்லையேவலியோர்தம்மாலீடழிவுறலாற்றுன்பம். (௪)

சிறப்புறுநோயாற்றுன்பஞ்செடிகொண்மூப்பதனாற்றுன்ப
மறப்புறத்தியக்கஞ்செய்யுமரணவேதனையாற்றுன்பம்
பிறப்பவரெக்காலத்தும்பெறுவதுதன்பமானாற்
றுறப்பதேகருமந்துன்பம்பிறவியாந்துயரநீங்க. (௫)

துக்கத்தொகுதி - முற்றிற்று.

ஆகதிருவிருத்தம்-உ௫௩.

துறவு.

—:o:—

ஒன்னலாருமுற்றவருமென்செய்குவாரொருவர்க்
கின்னலாவினிதாவநுபவிப்பனவெல்லா
முன்னலாகியதன்வினைப்பயனதாய்முடிந்தாற்
றன்னலாவிலாதாக்கவுங்கெடுக்கவுஞ்சமைவார். (௧)

பெறுமாதுபிதாமனையாள்பிறரு
முறுமாகமுநாமுளதாமுறவே
புறமாவுடல்போகுமிவ்வாருயிருக்
குறவாமவர்வேறுளரோவுணர்கால். (உ)

கனைப்பருவெறிநீர்வேலைக்காசினியதனின்மாறி
யெனைப்பெறாதவருமில்லையான்பெறாதவருமில்லை
நினைப்புறிலயலாரென்றுநீக்கிடப்படுவார்யார்தான்
வனைப்புறுமுற்றாரென்றுவரைந்திடப்படுவார்யார்தான். (௩)

முண்டகமலரோனுடுமுதன்மொழிகின்றவெல்லா
வண்டமும்பெறினும்வேண்டானழிவுறுமாதலாலே
தெண்டிரைவேலைசூழ்மட்டிரஜையின்னுருவின்பாகங்
கொண்டரசாளுஞ்செல்வங்குறிக்குமோபிறப்புணர்ந்தான். (ச)

பாய்ந்துமாவேழமொற்றிப்பறக்குமத்தறுகண்யாளி
தேய்ந்தழிவுறினுந்தேரையிரையெனச்செல்லாதாற்போ
லாய்ந்துநன்முத்தியின்பமருந்திடவுற்றநீரார்
சார்துயர்வரினுமொன்றித்தளர்ந்தெழாதாகிவிட்டார். (ரு)

துறவு - முற்றிற்று.

ஆ திருவிருத்தம்-உருஅ.

பௌத்தம்.

:o:

ஒன்றுரைபஞ்சகந்தமுறுநவத்தானம்வாய்மை
யென்றுநாலளவையொன்றென்றிலக்கணமூன்றுறுப்பேழ்
சென்றுறுசார்பீராறுதேசபாரமங்கமெட்டும்
பொன்றுதன்முத்தியென்றபொருட்டிறம்புகலலுற்றும். (க)

மலைவறுமுன்பினின்றமறையிலாவுரையொன்றென்ற
லுலவியபஞ்சகந்தமுருவம்வேதனைசங்கொடகாரம்
பலவுறுசங்கைஞ்ஞானமுமெனப்பகரப்பண்டை
நலமலியாகமத்தினவினவத்தானமாவ. (உ)

அருவுருப்பிரமரும்பரமரரோடசுகர்நாகர்
நரருருப்பேய்விலங்குதானவத்தானமென்ப
வுரியவக்கொலைமுன்னைந்துமொழிந்தெலாயோனிதோறும்
புரையறப்பிறந்திறந்தபுத்தசர்வாக்கியர்வாய்மை. (ங)

என்றுநாலின்பமின்பக்காரணமெதிராமற்றைத்
துன்றிடுந்துன்பந்துன்பக்காரணமென்பதாகு
மென்றுமானந்தான்காண்டவனுமானமிலக்கணந்தா
னன்றியுமநித்தியந்துன்பமனுத்மிகமென்னமூன்றே. (ச)

உறுப்பதுபிரமரும்பரசுரர்மாநுடர்விலங்கு
சிறப்பில்பேய்நரகர்சார்புபேதைமைசெயலுணர்ச்சி
யுறைப்பருவுருவாபூருநுகர்வேட்கைபத்துக்கன்ம
மெறித்திடுந்தொகுதியென்னையித்தோற்றம்பிணிமூப்பென்றே. ()

என்றவம்முறைமையாலேயிசைந்தவுற்பவச்சார்பாகித்
துன்றிடுமுறுப்பில்வந்துசொன்னவத்தானத்தேயு
மன்றியச்சார்வுங்கெட்டங்காயசந்ததியுமாயச்
சென்றநற்சார்வுஞ்செப்பிற்றேசபாரமங்கமெட்டே. (சு)

தேசபாரமொழுக்கந்தானந்துறவன்புமுயற்சிஞான
மசையாமைபொறையும்வாய்மையறநெறிநிற்றலங்க
மிசையார்நற்காட்சியூக்கமெய்செய்கைமுயற்சிவாழ்க்கை
யசையாநற்கடைப்பாடான்றோர்தலைப்படன்முத்திபொன்றல். ()

போதமாங்கந்தமைந்திற்போதமும்பங்கமாகும்
பேதமையாதிச்சார்வாற்பிறந்துபின்பகித்தமாகு
மாதிநற்கன்மநோன்புண்டாகாயமீசனாத்மாச்
சாதமேயில்லையென்றுசாற்றுநற்சுகந்தநன்னூல். (அ)

தீமையாஞ்சார்பினாலேசெய்யுமுற்பவநற்சார்வா
லாமையாமுத்தியென்றுயாரதச்சார்வுந்தீர்வுந்
தூய்மையாஞ்சுத்தன்புத்தனென்றுகைதொழுதர்ச்சித்து
நீர்மையாற்கொண்டோரீசனில்லெனச்சிந்தித்தாயே. (கூ)

மிண்டெனகாணுமிப்புத்தன்வீடுமரணமேயென்றான்
கண்டங்குருவமின்மையினாகாயமிலதேயெனச்சொன்னா
னண்டன்றானென்பதுமில்லையென்றானந்தோவறநெறியை [தான்.
யுண்டெட்ன்பான்போலில்லையெனுமூலோகாயுதனையொத்தொழிந்

;பௌத்தம் - முற்றிற்று.

ஆ திருவிருத்தம் - உசுஅ-

---

* அருகம்.

:o:

உருவளவளவைதானூலுருவனுத்தொகைநாற்பூத
மிருவகைத்தாறைந்தாகப்பொருளணுவினையிரண்டு
முரியவத்தனையத்தட்டவினைமலம்பதினெட்டிங்கற்
றருகர்பாலறத்தாத்மாக்களடைவரெண்குணங்கள்கொண்டே. ()

இசைத்தவப்பொருள்கடம்மையிலங்கிடவடைவிற்கூறில்
வசித்துயிர்க்களவூன்காண்டல்கருதனூலுவமைமானந்
தசைத்துருவெட்டுக்காலதீர்தரையணுவப்பூத
மிசைத்திருவகையாமென்றவியல்பையுமிசைப்பன்மன்னே. (உ)

---

* அருகன் என்றும் பாடம்.

அருவுருநித்தியாநித்தியங்குணங்குணியதனிளுத்தி
தூரிசறுமேகானேகந் தூலசூக்குமமற்றைந் து
பொருளதுசீவதன்மம்புற்கலாகாசங்கால
முறைசெய்வத்தனைகாலங்கோத்திரம்பலம்யோனிபோகம். (௩)

செறிவினையெட்டுஞானந்தெரிசனம்பெந்தபோக
மறிவருமாயுக்கன்மமந்தரநாமகன்மங்
குறியுறுகோத்திரந்தானெனப்படுமலமதென்றங்
கறைதருமீரொன்பானுமறிவதாயஃறையலுற்றும். (௪)

பசிதாகம்பயம்வெறுப்புச்சிந்தனையிராகமோகங்
கசிவாயவெற்புக்கம்பமதம்பிணிமூப்புக்கேடு
நசையாரும்வியப்புறக்கம்நகலொடுகளிப்பிகழ்ச்சி
யசைவாயமலம்விட்டாத்மாவனையுமெண்குணங்களாவ. (௫)

அனந்தஞானமனந்ததரிசனமனந்தவீரிய
மனந்தநற்சுகநின்றுமங்கோத்திரம்நிராயுசியந்தா
னனந்தமில்சகலசங்கவிரசுபாவமென்றெண்குணங்கள்
புனைந்துநல்லருகர்தம்பாற்பொன்னெயில்வட்டத்துய்ப்பர். (௬)

பொன்னெயிலாம்வட்டத்துப்போய்ப்புக்கங்கருகருடன்
றன்மையுடைவீதராகந்தளர்வின்றித்தாம்பெற்றுத்
தொன்மையுடையததானுந்துகளறவேதானடித்துப்
புன்மையறப்போவதுவேபொருவருகன்புகன்முத்தி. (௭)

வெய்யோன்மதிசென்றறிந்தாலும்வியாபியல்லவுயிரென்றான்
கையைக்காலைக்குறைத்துமுயிர்சிறிதுங்கழியாவகைகண்டு
மெய்யினளவேயுயிரென்றான்வினைகளிரண்டும்பிறப்பேயென்
றையோமீண்டிங்கதிலொன்றான்முத்தியென்றானருகன். (௮)

ஏகமென்றான்பலவென்றானிலதேயென்றானுளதென்றா
னநித்தமென்றுரைத்தானதனையநித்தமாமென்றான்
மாகம்போலவருவாகுமென்றான்மறித்துமுருவென்றான்
யோகமில்லாவார்த்தைகளையுரைத்தானிவ்வாறுநியமணன். (௯)

அருகம் - முற்றிற்று.

ஆ_திருவிருத்தம்-உஎஎ.

* சாருவாகம்.

:o:

அம்பரமாத்மாவீசன் றம்பாவமுளதல்லச்
செம்பொனுமாதருமல்லாற்சிறந்தபொருட்பிறிதில்லை
நம்பளவைகாட்சியுடனுசமேவீடென்ன
வும்பர்குருவுரைத்தன்னலோகாயுதன். (க)

உடம்பினிலுணர்வாமென்னிலுதித்திடுங்காட்டத்தீபோ
லுடம்புளவளவுமாங்கேயுணர்வதுமுனையவேண்டு
முடம்பதுகிடக்கவிங்கேயுணர்வதுபோதலாலே
யுடம்பினிலுணர்வுவேறுமுணர்விலீருணருமன்றே. (உ)

ஓங்கியமரத்தின்மீண்டுமுதிர்ந்தவச்சருகெழாதே
யாங்கெனவிறந்தயாக்கையறிவுபின்பிறவாதென்னி
ளேங்கினமரமதன்றேவுதிர்ப்பதுதளிர்ப்பதையா
வாங்கதுபோலவாத்மாவாக்கைவிட்டெடுக்குமன்றே. (ந)

கோலமாங்கலைகள்கூடிக்குறைந்துதேய்ந்திறந்தபின்னும்
பாலனுய்ப்பிறந்துபையவளர்ந்திடுமதியேபோலத்
தூலமாமுடல்விட்டாத்மாச்சூக்கமாமுடலாய்நின்று
மேலுஞ்சென்றிருநீர்தோய்ந்துவினைவசத்துடலுட்டோன்றும். (ச)

வினைப்பயனில்லையாகில்விரும்பியேநீதானும்
நினைத்தெழுகருமமெல்லாநினைந்தவாமுடியாவாறெ
ணனைத்துமுன்வசமொன்றன்றியாக்கையுமழிவுங்கண்டாய்
முனைப்பவத்தளவாமென்றேமுயற்சியிற்பலமென்றோராய். (ரு)

இறந்தவர்பிறவாராகிலிருவினைலல்லையாகி
லறிந்தவர்பெறுவதென்னேயறியாதாரிழப்பதென்னே
சறங்குபோற்பிறந்திறந்துகடுவினைத்துயரமெல்லாஞ்
செறிந்தனைகெடுவாய்முத்தித்திறமுமைதுன்பென்பாயே. (சு)

சாருவாகம் - முற்றிற்று.

ஆ திருவிருத்தம் - உஅரு.

---

† மீமாம்ஷம்.

:o:

சத்தமெய்யாம்பிரமமனேகமாத்மாசகலமுந்தான்வியாபிகளா
மாத்மாவுக்குப், புத்திதான்குணமாகும்வினைகடானேபூதமீருட

---

* சார்வாகன் என்றும் பாடம். † மீமாஞ்சை என்றும் பாடம்.

லாக்கிப்பொருந்துவித்துத், துய்த்தலாஞ்சுவர்க்கநிரயத்திலின்பந் துன்பங்கள்பயன்கருதாக்கன்மத்தாலே, முத்திபாஷாணமென வுணர்வொன்றின்மையதுவேமீமாங்கிஷன்முன்மொழிவுற்றனே.

செய்தசடவினைதானேபலிக்குமென்றான்சேதனனாகியசீவன் செடமேயாகை,யுய்தருமெனவீடெனவுரைத்தானதுவுஞ்சொர்க்க லோகத்தேபோமென்றானுயிர்வானத்தின், மைதருமோர்குணம் பிரமமென்றான்மாசின் மறையோதிமன்னுபரம் பிரமமோரான், பைதலிவன்றனைமீமாங்கிஷனாகும்பாஷாண்டனெனவறிஞர் பகர் கின்றாரே. (உ)

மீமாம்ஷம் - முற்றிற்று.

ஆ திருவிருத்தம் - உஅரு.

நையாயிகம்.

திரவியமைந்துநான்குஞ்செறிகுணம்பத்தோடேழு
மிரவியகருமமைந்துநிகழிலக்கணங்கண்மூன்றும்
விரவியதகிலமாத்மாவியாபிகள்குணங்கள்புத்தி
கரவியல்கட்டும்வீடுங்கன்மமுங்கத்தாவாலும். (க)

செறிதிரவியமைம்பூததிசைகாலமனமோடாத்மா
வுறுகுணம்பரிசமாதிநாலொடெண்பரிமாணந்தான்
பிறிவொடுகூட்டம்பேசுஞ்சராசரம்புத்தியின்பங்
கிறிதருதுன்பம்வேண்டல்வேண்டாமைமுயற்சிகேடே. (உ)

ஏற்றியகருமமைந்துமிலங்கிடவறியக்கூறிற்
போற்றியபக்குவாபக்குவம்புகன்றிடும்விரிவொடுக்க
மேற்றியகன்மமொன்றுங்கைந்தினிலிலக்கணந்தான்
சாற்றியவிசேடஞ்சாமானியஞ்சமவாயமாமே. (ங)

சட்டமேயகிலமாத்மாசகலமும்வியாபிபுத்தி
யிட்டமாங்குணங்கள்கன்மமீசனுமெவ்வுயிர்க்குங்
கட்டுவீடிரண்டினுக்குங்காரணமென்றுகொண்டு
தட்டினையோரானையாயிகன்குறைசாற்றலுற்றாம். (ச)

புத்தியுமாத்மாப்போலவியாபியாங்குணமதென்னி
லொத்துறுபரிசமெல்லாமொருபொழுதுணரவேண்டுஞ்

சத்தமும்விடயமெல்லாந்தனித்தனியுணரக்கண்டு
மற்றவையேவியாபியாயவாத்மாவின் குணமென்பாயே. (௫)

வியாபகனுகுமாத்மாவிரிவுடனொடுக்கங்கூடா
வியாபகன்குணமுமங்ஙன்வெய்யதீக்குணம்போலன்றே
வியாபகஞ்சுழித்திக்கில்லைதிரியவும்விரியக்கண்டோம்
வியாபகக்குணங்கணீரேவிரிவொடுக்கஞ்சொல்லீரே. (௬)

கன்மமுங்கத்தாவாலுங்கட்டுவீடிரண்டுமென்றாய்
கன்மமோகத்தாத்தானேகட்டினைப்பண்ணுகின்றார்
கன்மத்தாற்கத்தாபண்ணிற்கன்மமேகத்தாவாகுங்
கன்மந்தான்செய்ததன்றாங்கத்தாவின்செயலதென்னில். (௭)

செய்வினைபுசிக்கக்கத்தாச்செய்திடுமென்னிற்கேளாய்
செய்வினைபுசிக்கக்கத்தாச்செய்திடாதொழியிலென்றுஞ்
செய்வினைபுசிக்கவேண்டாச்செறுதுயர்பிறப்புமில்லை
செய்வினைபுசிப்பிப்பான்போற்றீவினையாளருண்டோ. (௮)

முன்வினைப்பயன்புசிக்கமூர்த்தியாய்மூர்த்திதன்னாற்
பின்வினைபிறந்ததாலேபிறந்திறந்துழலுமென்றுங்
கன்மமுமாலயதானுங்காரணம்பிறப்புக்கன்றித்
தன்மமன்றருளாமீசன்றான்செய்வனென்னிலன்றே. (௯)

பிறக்குமவ்விடத்திற்றுன்பம்பிணிபலவுறுகைதுன்ப
முறக்கமுமுணர்வுந்துன்பமுண்பொருட்டேடறுன்ப
மிறக்குமவ்விடத்திற்றுன்பமிழுக்குடைப்பிறப்பையென்று
மறத்தனுமீசன்செய்யிலருளினுக்கானியையா. (௧௦)

ஓதுயிர்பெத்தநீங்கவுரைப்படியிறைவர்பாவித்
தேதமில்சடமேயென்னவிருப்பதுமுத்தியென்றாய்
போதமாவுயிரின்முத்திபொய்ச்சடமாவதென்னி
லீதையாவறிஞர்க்கேறுதிசையுமீமாங்கிஷற்கே. (௧௧)

நையாயிகம் - முற்றிற்று.

ஆ. திருவிருத்தம்-௨௬௬.

வைசேடிகம்.

:0:

மைவண்ணமில்லாதபொருள்கடம்மால்வாய்த்ததரிசனம்வை சேடிகமேயன்றே, வவ்வண்ணமிதனுடையமதமுங்கூறிலாத்மாக் கள்சடராகியனேகராகி, மெய்வண்ணங்குணகுணியாயவத்தைமே விவியன்பாசப்பெத்தர்களாய்பிறந்திறந்தே, யுய்வண்ணமதுவின் றியுழல்வர்தங்கட்குயர்வீடுபாவனையாலுளவாமன்றே. (க)

அரும்பாசத்தகப்பட்டப்பெத்தாத்மாக்களனேகபவந்தனின் முயன்றவறங்கடன்னுற்,றிரும்பாதபத்தியதுசிவன்பாலுண்டாய்ச் சிவனையேபாவித்தங்காராதிக்கப், பெரும்பாலுங்கருடனையேபா வித்தத்தாற்பெருவிடந்தீர்ந்ததுபோலப்பாசம்விட்டுப்,பரன்போல நிர்க்குணனாயவத்தைகெட்டுப்பரிணைத்தங்கிருப்பதுவேபகர்வீடா மே. (உ)

கூறறியவாத்மாக்கள்சடரேயென்றாய்குறித்துணரிற்சடங்க ளெல்லாம்னாத்மாவன்றே, வேறுகுணன்முத்தியினிர்க்குணனே யென்றாய்வெம்மைபோயனவிருக்கைமேவுமோதான், மாறறியவ வத்தையினிற்படுவரென்றாய்மையன்மனமாதிகளுன்னாத்மாவோ தான்,றேறுமுணர்வேதுமிலாத்தின்னற்கேற்றதெரிசனம்வைசே டிகமாய்ச்சிறந்ததன்றே. (ங)

பாவனையான்முத்தியதுவாகுமென்றாய்பாவித்ததக்கணம்வந் தழியாதோதான்,மேவரியகருடனையேபாவித்தத்தால்விடந்தீர்ந்த வாறுபோலென்னிற்கேளாய்,தாவரியகருடனைமுன்கண்டாற்போ லத்தற்பரனைக்கண்டோபாவித்தாயன்றே, யோவவிலாப்பாவகத் தாற்பரனீயாகாயொப்பாகாயப்பாசமுமங்கொழியாய்காணே. ()

வைசேடிகம்-முற்றிற்று.

ஆ திருவிருத்தம்-௩௦௦.

*சாங்கியம்.

:0:

இலங்கியபுருடன்மற்றுமேய்ந்தநற்பகுதியென்னத்
துலங்கியவிரண்டுமுண்மைசொல்லியபகுதியின்பான்
மலங்கெழுமானுங்காரம்வகுத்தனவிகுதியெல்லாஞ்
சலங்கெழுகட்டும்வீடுந்தனக்குத்தான்புருடன்செய்யும். (க)

* சாங்கியன் என்றும் பாடம்.

பகுதியில்விகுதியாகிப்பரந்தெழுமின்பதுன்பந்
தகுதிநற்சித்தாந்தன்மேலேற்றுதல்பெத்தமாகும்
விகுதிநற்பகுதியெல்லாமெனக்கில்லையென்றுபார்க்க
வகலுமற்றதுவேவீடாமருளமற்றிறைவேறின்றே. (உ)

பகுதியும்பரமன்றானுமுண்மையேற்பரமன்றன்னை
விகுதியாற்கட்டுபாதிமேலுநீங்காதுமிற்கப்
பகுதியான்மானங்காரம்படைத்தனமுழுதுமென்றாய்
பகுதிமானங்காரந்தானசேதனம்படைக்குமாறென். (ங)

அறிந்தருளீசன்வேண்டாவாத்மாவேகட்டுவீடுஞ்
செறிந்திடுமாகிற்றான்பப்பேதந்தான்செய்ததென்னோ
மறந்தனனகமத்தைவீடுதேர்ந்தறியாதெய்த்தங்
கறிந்தருள்குரவற்றேடியலமவர்பெறுமோசொல்லாய். (ச)

சாங்கியம்-முற்றிற்று.

ஆகூ திருவிருத்தம்-ஙоச.

சைவம்.

—:o:—

பதிபசுபாசமூன்றும்பார்த்திடில்வியாபிநித்தம்
பதியவன்சத்திமூன்றாம்பாசத்துக்கனந்தஞ்சத்தி
விதியினாற்பசுவனாதிமலனிறைவிமலனாகுங்
கதிபசுப்பதியையொத்துக்கண்டுகொண்டிருத்தலாமே. (க)

பதியாவனபொறிவன்பசுவாவனபதியன்றி
மதிதானுஞ்சிறிதாகிமறவியொடுமவிச்சையுளன்
கதிநாளுங்காட்டாதகார்மலமுஞ்செடமாகும்
பதிதானும்பசுமலமும்பார்க்கிலிவையனாதியாம். (உ)

பதிபசுபாசநித்தமனாதியாம்வியாபியென்றாய்
பதியினுக்கேற்றமென்பின்பார்க்கிலிங்கவைதானெக்கும்
பதியவன்சத்திமூன்றேற்பாசத்துக்கனந்தமாகிற்
பதியினிற்பாசமன்றேபரமதுவாவதையா. (ங)

பதியலார்ப்பசுவையார்த்தார்பாசமோபதிதானேயோ
பதியென்னிற்பாசம்வேண்டாபாசமுன்பிலையுமாகும்
பதியலபாசமென்னிற்பதிதனால்வீடுங்கூடா
மதியுடைச்சைவாவுன்றன்மதிநலமிருந்தவாறென். (ச)

சுபாவமேமலினுத்மாவின்மலங்கெடல்சுபவீடென்ருய்
சுபாவந்தான்கெடுமேயாகிற்பதிசுதந்தரனுங்கேடாஞ்
சுபாவம்போய்ச்செம்புபொன்னுமிரதத்தாலதுபோலென்னி
லபாவமாய்ப்பதியப்போதவ்விரதம்போலழியுங்காணே. (ரு)

சித்ததேவடிவதாகிச்சிவன்சிவன்முத்திதன்னி
லொத்துறவொருவன்காட்டவொருவன்கண்டிருக்குமென்ரு
யத்தகுமவர்கட்கப்போதுடலொடுகரணம்வேண்டும்
பித்துறுசைவாமுத்திபேரின்பத்திரண்டுண்டாமோ. (சு)

முத்தனேமுத்தியீவான்முத்தாத்மாவீயமாட்டா
னத்தகைச்சிவனேமுத்தன்குருமுத்தாத்மாவாமென்ருய்
மெய்த்தகுமுத்தியீவான்வியன்குருவொழிந்துமற்ருேர்
மத்தனேகெடுவாய்சைவாமலர்க்கழல்சூட்டினுரார். (எ)

சைவம் - முற்றிற்று.
ஆ திருவிருத்தம்-நுகக.

சமேளிதசைவம்.

நித்தமாம்பதியினெடுபசுபாசந்தானிகளமதாம்பசுவுக்குப்பா சந்தானு, முத்தனும்பதியவனுமனுதியாக முழுமலனும்பசுப்பெத் தமவணமேயாம், பத்திஞானத்திலுறுபாசங்கெட்டுப் பதியோடு மொளித்தொன்றும்பகருமுத்தி, சுத்தமாஞ்சமேளிதசைவமன்றி த்துரிசறுநற்பொருளுளதோசொல்லுங்காலே. (க)

அனுதியேபதிபசுக்கண்முத்திபெத்தமாமென்றேபசுவுக்குமு த்திசொன்னு, யனுதியாம்பசுப்பெத்தமொழியிலங்களவில்பதிய னுதிமுத்தியொழியாதோதா, னனுதியாம்பாசமதுநித்தமாகிலது கெடுமோவீட்டிலதன்சத்தியென்னிற், றனுதனலின்சுடுகையதாஞ் சத்திகெட்டுத்தான்குளிர்ந்தங்கிருக்குமெனச்சமைந்தாய்காணே.

பதிபசுக்களனுதியேபேதமென்றேபாராதேமுத்தியினிலொ ன்ருமென்ருய், பதியினுடனென்ருதல்பசுக்கெட்டேயோகேடின் றியோசொல்லாய்கெட்டேயென்னிற், கதிபெறுவான்பொன்று மெனிற்கதிதானுற்குக்கேடின்ருற் கருதிரண்டொன்ருகாதென்று, மதியுடைச்சமேளித சைவர்முன்பின் மலைவறவேமொழிந்ததற்கு மாறென்றுண்டோ. (ங)

சமேளிதசைவம்-முற்றிற்று.
ஆ திருவிருத்தம்-நுகச.

பாசுபதம்.

—:o:—

பரமாணுபரதானமாயவற்றின்புணர்ப்பதுகாரணமாகியுலகம்பண்ண, வரமாகவிறைநிமித்தமாகிநிற்குமலமூன்றின்பிணியாகும்பசுக்களெல்லாந், திரமாகவாகமத்தின்முறைமையாலேதிகழாவாகனமுதலாம்படியேயர்ச்சித், தூரமாகும்பாசமறவணுக்களெல்லாமொண்பதியொத்திருப்பதுவேயுயர்வீடாமே. (௧)

பரமாணுவுருமுதலாவவற்றின்கூட்டம்பாராதியினையிறைமுன்பண்ணுமென்றாய், பரமாணுவுருவதுவும்பூதமன்றோபார்க்கிலதுசடமுலகைப்பண்ணுமாறென், றுரமாகமேருமுதலணுவீருகவொன்றாகப்படைத்ததுதானெதுவென்றோராய், பரமாணுவுருத்தேடிப்பற்றிக்கொண்டபாசுபதாவுன்பெருமைபகரலாமோ. (௨)

மலமூன்றும்பாசத்தின்பிணிப்புப்போகமன்னுபசுபதியினையாவாகனாதி, நலமாகுமுபசாரமனைத்தினாலுமர்ச்சிக்கப்பாசம்போய்நல்வீடென்று, யுலவாதபாசமெனுங்கன்மந்தானுன்னுபசாரகன்மத்தாலொழியுமாகிற், குலவாதவிருளையிருள்போக்குமென்னக்குலவியநற்பாசுபதாகுற்றதானுண்டோ. (௩)

பாசுபதம்-முற்றிற்று.

ஆகதிருவிருத்தம்-௩௧.

வாமம்.

—:o:—

சக்கிரமதிலானந்தத்தலைவிசன்னிதியைப்பண்ணு
முக்கிரபாத்திரத்துமுடம்பினுமதனைப்பாவித்
தக்கரச்சரீரமாக்கியானந்தசத்திதானுய்த்
தக்கவொண்ணறவையுண்ணத்தலைவிதன்வடிவேதானும். (௧)

வாக்கொடுமனத்துக்கெட்டாமனோன்மணிதன்னையுன்னி
நீக்கிலாமதுவையுண்டானினவெலாமிறந்தொன்றேயா
யோர்க்கொணுவின்பவெள்ளவொளியதாய்புத்திமுத்தி
பாக்கியந்தானேதானும்பரமசாம்பவிமீதன்றே. (௨)

நித்தமாஞ்சத்திதன்னைநினைந்துமாமதுவையுண்ணச்
சித்தமுஞ்செயலுமாய்ந்துதெளிவதாயொளியாமென்றாய்

பித்தர்போற்செயலுமாகிப்பேச்சும்வேருய்ப்புல்ன்கண்
மத்தமாய்கைக்குத்தாயோமனேலயமிருப்பதையா. (ங)

அளியுண்டலாதியைந்தாமானந்தமுத்தியென்று
யளியுண்டுமைதனத்தாரனேகருமுத்தரன்றே
வொளியுண்டவுணர்வுதோன்றியுள்ளுணர்வொளிக்குமென்றார்
களியுண்டல்காமநல்லோர்கழித்தபாதகங்களன்றே. (ச)

அவிநாசியானபரமாமுதத்தையகமேநிறைந்தவவரைச்
சிவனுதலான்முனவனிக்கணின்றுவலிசெய்துதேசமறியப்
பவநாசமுத்தபரிசொராதுபாடலுணராதபோதபரனைச்
சவநாறவுண்ணவதுபுத்திமுத்திதருமோவிதென்னதவமே. (ரு)

வாமம் - முற்றிற்று.

ஆ திருவிருத்தம்-நஉஉ.

பயிரவம்.

:o:

ஆதியாம்பயிரவந்தானட்டதத்துவங்களாகிச்
சோதியாமவையேவந்தெட்டாகியகலையாய்த்தோன்றி
நீதியாங்கலைகடானேநிமலமாம்பெத்தமுத்தி
யாதியாம்பயிரவத்தினுய்க்கினையாலுயிர்கட்காமே. (க)

என்றவத்தத்துவங்களிசைத்தவவ்வடைவிற்கூறிற்
றன்றுநற்சுத்தந்தாந்தான்சுவேச்சையாலோகங்கால
நின்றவுக்கிரம்பிரச்சைநின்மாணபோடணந்தா
னென்றபயிரவமெட்டாகுமினிக்கலைவிதமுரைப்பாம். (உ)

வான்வளியங்கியப்புமண்ணெனவறைந்தவைந்தி
ருனுறு * வீசனுகுந்தகுகலையைந்துஞ்சாற்று
மூனமில்லமுதமோடுவிடகலைகாரணந்தா
னுனவெண்கலையாலிந்தவகிலமற்றுகினைகேள். (ங)

ஆபத்துவிக்கம்பயமந்தமறைந்தநான்கின்
சாபத்தினுத்தாரணபயிரவர்தாமோர்நால்வர்
சார்வுத்தகாலங்கருமமுணராமைசன்மஞ்
சோபத்தைநாசையாபயிரவர்செப்பினல்வர். (ச)

* வீசமாகும் என்றும் பாடம்.

ஆகியவாகினையெட்டிலாபத்துத்தாரணுதி
போகபயிரவர்களுலாற்பொலிந்திடும்போகமார்க்கம்
* யோகமுங்காலபயிரவாதியோர்நால்வராலே
சோகமிலணுக்கள்சேருஞ்சுத்தநிர்வாணமுத்தி. (ரு)

போகமார்க்கத்தவர்க்குப்பொலிந்திடும்பூசையாலும்
பாகுறுபலிகளாலும்பண்ணுமுத்திரைகளாலும்
வாகிடுவிசுவமெல்லாமன்றியோகந்திரண்டால்
வேகமாமனநிர்வாணவீடதுவிளையுமன்றே. (சு)

ஆதியாம்பயிரவத்தானட்டதத்துவமாய்த்தென்று
யாதிபோயட்டமாய்த்தேலப்பொழுதாதிகேடாஞ்
சோதியாமவையும்வந்துதுரிசறக்கலையாய்த்தென்று
யாதிபோய்ச்சடமாய்ச்சொல்லாயழிகலையாகுமோதான். (எ)

கலையதேயுலகமாய்த்தேற்கலையசத்தோசத்தோதான்
கலையதுசத்தேயாகிற்கல்வியாற்கழியுமோதான்
கலையசத்தேலசத்துக்காசினிமுதலாமாகி
னிலையுடைமலடிமைந்தனிகிலமுமாக்கவேண்டும். (அ)

இம்மையாம்போகநாலும்பயிரவரிசைப்பரென்று
யம்மானன்றுளதோவன்றிவில்லதோவுனக்களிப்பார்
செம்மையாலுளதேற்றுனேசெறிதருமிவர்கள்வேண்டாந்
தன்மைதானிலதேல்வான்பூமுயற்கொம்புந்தருவரேதான். (கூ)

முத்திதான்முதிர்ந்திரண்டான்முயன்றுளயோகாலென்றுய்
சுத்தபாவனையோபொய்யாத்துடரவேயழியுமற்றை
மத்தமாமதுவாலென்னின்மலமுவர்நீருஞ்சேர்ந்து
பித்தனுமுடைபோமீதோபேசுநிர்வாணமுத்தி. (க0)

பயிரவம்-முற்றிற்று.

ஆகு திருவிருத்தம்-ருகஉ.

காளாமுகமாவிரதம்.

:o:

காளாமுகமுமாவிரதந்தானுஞ்சருதிலாகமங்க
ணிளாறுகுஞ்சமையமெனவகுத்தவாறுளிவைநிமலற்

---

* போகமுமென்றும்பாடம்.

காளாம்வேடமடையாளமதுவேபொருளாக்கொண்டென்று
மீளாவிரதமிறைநூலின்விதித்தபடிசெய்வதுவேயாம். (க)

அத்தியக்கஞ்சடைமுதலாமடையாளங்கள்கொண்டன்பாற்
பத்தியோடும்வழிபட்டுப்பகருநியமங்குலையாமன்
மெய்த்தானரியவல்வினைமேல்வினையாலுடலம்விழும்பொழுதிற்
சித்தர்பரவுஞ்சிவலோகமடைவர்சிவன்பாற்சிவாக்கினையால். (உ)

புற்புதவுடலிற்கொண்டவேடம்புற்புதத்திற்குச்சங்
கற்பனைவிரதமெல்லாங்களேபரம்விழுந்தபின்போய்
யற்புதமுத்தியோருரடைவரேற்றிரியமீளு
முற்பவமொழியுமோதானுணருமெய்ஞ்ஞானத்தல்லால். (ங)

காளாமுகமாவிரதம் - முற்றிற்று.

ஆ திருவிருத்தம்-ஙஙடு.

சிவாத்துவிதம்.

தனிச்சிவன்றுணக்கித்தடுப்பரியவுலகமதாய்
முனித்தானேகத்தாவாய்முடியாதவிப்பிறப்பைப்
பினித்தானுஞ்சீவனையேபெந்தித்துவிரித்தெல்லா
மினித்தாயவின்பதுயரீவானுய்ப்பெறுவானும். (க)

முத்திதான்கொடுப்பானுய்முன்னைத்தானடையும்வண்ணஞ்
சத்தியாலிவைசெய்துதானிகழ்தலனுதியாம்
பத்தியாலிவர்பரவிப்பழையதனையிவனடைதல்
சித்தியாஞ்சிவாத்துவிதந்திகழ்த்தியவீடிதுவென்றே. (உ)

தன்னையேசகமாகப்பகுத்தானேற்றான்கூ
றுன்னிலோர்சடமாய்ப்போமுயிரதுவாய்ப்பகுத்ததுவுந்
துன்னியேபிறப்பிறப்பிற்றுயருறுமாறெழிந்துளது
பின்னையோர்பிலங்குறைந்துபீடின்றியழிந்திடுமோல். (ங)

தன்கண்ணைத்தான்கலக்கிமருந்ததற்குத்தேடுதல்போன்
முன்றன்னையுயிராக்கிப்பகுத்தந்தமோகம்விடப்
பின்றன்னைத்தான்பரவிமுத்திபெறுஞ்சிவம்போல
நன்கெண்ணிற்சிவாத்துவிதர்நலமறிவார்வேறுளரோ. (ச)

சிவாத்துவிதம் - முற்றிற்று.

ஆ திருவிருத்தம்-ஙஙக.

கேசவம்.

——:o:——

ஆதிமூலந்தனதாம்விட்டுமாயையதனலேயுலகுயிர்களனைத்துஞ்செய்ய, வோதுமாயையின்றன்வசமதாகியுயிர்களெல்லாம்பிறந்திறந்தேயுழலுங்கண்டாய், நீதியால்வாசுதேவர்முதலாநால்வர்நிகரில்சமராதனத்தாற்பெத்தம்விட்டுத், தீதிலாப்பரமபதத்திவரோடொன்றாய்ச்சீவரெலாம்பேரின்பந்திளைப்பரன்றே. (க)

கருதருமூலமதாகும்வாசுதேவர்கருஷ்ணராஞ்சீவரொடும்பிரத்தியாத்மாப், பொருவிலகங்காரவனிருத்தரென்னப்புகன்றவர்நால்வருஞ்சமராய்ப்பின்னராவர், தெரிவரியவிவர்கள்சமராதனத்தாற்சிகழுயிர்கள்பரமபதத்திவர்பாலெய்தி, விரவியபின்னருமாகிவீயாவின்பத்திருப்பதுவேமுத்தியெனவிதிக்கின்றேமே. (உ)

ஆதிபுருடன்றிருநாராயணன்று னறம்வளரமறமொழியவகிலந்தன்னிற், றீதிறசவவதாரஞ்செய்துதுட்ட நிக்கிரகத்தாற்சிட்டர்தமையும்பாவித்தே, யேதமறவிலங்கியதன்னுடைச்சோதிக்கேயெழுந்தருளுமெழிலவதாரங்கடன்னை, நீதியுறத்திருமகளோடாராதித்து நிகரில்பதத்தடைவுறுவர்நீங்கிடாரே. (ங)

ஓங்கியஸ்ரீவைணவர்தம்புருடாகாரமுயர்சேனைமுதலவர்திருவடியிலுய்ப்பப், பாங்குகொடுமற்றவாருணர்புருடாகாரம் பழுதறவேயுலகுடையான்பதத்திற்சேர்க்க, தீங்கறநற்றிருமகடன்புருடாகாரந்திருமாறன்றிருவடித்தாமரையிற்கூட்ட, வாங்கரியபரமபதத்தவரோடொன்றாயமைந்திருக்குமதுகாணுமமலவீடே. (ச)

சமராகிபின்னருமாய்வாசுதேவர்தரமுதலாமிறைவரவர்நால்வரொன்று, யமைவாகநால்வர்சுதந்தரமொத்தாருராள்பவரோவிறைவரவர்க்கிறையாரோரா, யிமையோர்பாதாளர்நரர்மற்றெவையுங்காணுயுண்டுமிழ்ந்தவிறையுணரிலொருவனென்றே, சமைவாகமறையறைதலறியாயேநஞ் சடகோபருட்டிருவாய் மொழியோராயோ. (ரு)

மூலமேவாசுதேவரென்றுயொன்றைமுன்னியதிற்சீவனென மொழிந்தாயொன்றைச், சாலவேமனமென்றுயொன்றுங்காரமெனக்குறித்தங்கவர்கடம்மிற்சமரேயென்று, யேலவேகரணமதாயழிவதன்றோ யிருண்மனமாங்காரமவற்றெப்பாமென்னுற், சால

வேவாசுதேவர்தாமுமங்ஙன் கரணமாயழிவதற்குத்தட்டுண்டோ தான். (சு)

திருமாறன்திருக்கரத்திலாழிசங்கைத் தரித்தவர்ஸ்ரீவைணவர்களேன் றுஞ்சொன்னாய், பெருமான்றனாழிமனந் தரிப்பதன்றிப் பெருநெருப்பிலிட்டவர்பேதைகளேயன்றோ, வுருநீறுகண்டவரை நிந்தித்தாய்நீயுருத்திரன்மால்வேறெனவேநிந்தித்தாற்குத், திருமாலேயிரவிவரைநரகமென்ற திருமொழியானீரகுக்கிரையானாயே. (எ)

ஓங்கியமாமறைதத்துவமொன்றதென்றே யொருகோடிசாகைகளாலோதாநிற்க, பாங்கறியாய்பலவொன்றதென்னநின்றுபமூதுறுபேதாபேதம்பகராநின்றாய், தீங்கறவாரணக்கருத்துத்தெரியாவிட்டாற்றெரிந்திடவேதந்தமிழ்செய்குருவைவள்ள, லோங்கு திருவாய்மொழிதா னுணரிலும்ப னொருவனேயென்றருணிச் சயமோராயே. (அ)

திருமானற்றிருமகளென் றுபயமொக்கச் சிந்திக்குஞ்செழுமிதுனப்புணர்ச்சிமெய்யே, வருமாசத்திடுமுத்திநல்குமார்க்கம் வைணவனென்றாய்மறையனந்தங்கோடி, திருமாலஸ்வப்பிரியத்தருணியனென்னச்செறிமிதுனங்கொடுவந்ததிணிமூடர்நற், றிருவாகத்தன்மரபிற்றானென்றோதுந்தெளிவறியாமையினீஸ்ரீவைட்டிணவனு மன்றே. (கூ)

பரம்பரனுமுகுந்தனவன்பரந்தாமந்தான்பரம்பிரமம்பரங்கருணைக்கடலாமையன், விரும்புமவருளத்துணர்வாம் விட்டுவின்றன்வியாத்தியினையுணர்ந்தவர்வைணவர்களாவார், திரும்பலறவவர்திறத்துக்கைங்கரியத்தாற் றிருமாறன்றிருவுருவாமுணர்வின்பத்தைப், பொருந்துமுளம்பரமபதமுணர்தன்முத்திப்புயல்வண்ணனருணூற்குப்பொருளென்றோராய். (கல)

கேசவம்-முற்றிற்று.

ஆ திருவிருத்தம்-நசக.

மாயாவாதம்.

சாற்றியபிரமமென் றுமவிகாரிசன்னதிக்கே
யேற்றியமாயைதானிவ்வுலகுயிரனைத்துமாகித்

தோற்றருமனந்தபேதமாய்ச்சுழன்றழியுந்தானே
வாற்றரும்பெத்தமுத்திபேறிழவமையுமித்தை. (க)

ஆதலாலிகமுமித்தைபரமதுதானுமித்தை
யேதமிலிதமுமித்தையகமெனுமதுவுமித்தை
யோதியமயல்பொய்போதமுதித்ததென்பதுவுமித்தை
சாதமேபிரமமுத்தந்தானவிகாரியென்றும். (உ)

அவிகாரம்பிரமமாயைவிகாரமாமெவையுமென்று
யவிகாரவிகாரங்கண்டிங்கறிந்துசாற்றியதேதையா
யவிகாரமென்னிற்றுன்பொய்விகாரியாய்மாயையேனுன்
னவிகாரந்தானும்பொய்யாமாயையாலழியுமன்றே. (ங)

உலகுடலுயிர்மற்றேதுமாகியேதான்விரித்தங்
கிலகிடுமாயைதானேயிறந்துபோமென்றுசொன்னுய்
நிலவியமறைநீயோதிநிமலமாங்குரவற்றேடி
யலகிலாப்பிரமானனென்றறியவேண்டியதென்சொல்லாய். (ச)

அறிந்ததும்பொய்யேயென்றுயறிவுனக்குபதேசித்த
சிறந்தநற்குருவுஞ்செய்யமறைகளுமதனுற்பொய்யா
மறைந்தவங்கவைதான்பொய்யாயிடவவிகாரமாமுன்
னிறைந்தவப்பிரமந்தானுநிகரிலாப்பொய்யேயன்றே. (ரு)

அத்துவிதஞ்சாதித்தற்கஙிலமுமாயையென்று
யத்துவிதத்தில்வேறுவல்லவோவந்தமாயை
யத்துவிதத்தில்வேறுமென்னிலத்துவிதமாகா
வத்துவிதந்தானுஙிலதுமருளாகுமன்றே. (சு)

பேதமதுபேசிநரைமாறுகோடபேத
மேதமெனமோதினருமேகவுணர்வான
போதமலர்பாலதுவதாய்நிகழ்தல்போலே
யாதுமலையாதமைதலேகமெனலாமோ. (எ)

மாயாவாதம் - முற்றிற்று.

ஆ திருவிருத்தம்-ஙருசு.

சவுரவம்.

—:o:—

அகிலமுணர்ந்திடவிவனுதையஞ்செயுமளவிலயன்பெயராம்
பகன்முழுதும்பணிசெயவுலகந்தெசைபடியையளந்தவனு

நிகிலமொடுங்கிடமறையயுறுந்தெசைநிலவைவயணிந்தவனும்
பகரவுறுந்திரிவிதவிறையென்றருமறைகள்பதங்களேயே. (க)

அருமறைமண்டலமளவில்சிரங்கதிரதன்முனெழுந்திடுபேர்
வருண்ணிலங்கியவருணபதங்கிரமம்மெனுமொளியெங்கணுமா
மிருளதகன்றிடவெழுசுரமும்பரியெனவிசவிஞ்சரதத்
தருளிலவருந்தினகரனேவணங்கிடுமவர்கள்பவங்கெடுமே. (உ)

அனலவனருக்கனிந்துவவேயவைசிவப்பதெல்லா
மனலதனுருவமாகுமருவெளுப்பப்பின்கூறுங்
கனநிறமன்றிவேறுங்கறுப்பதுபூமியாகு
மனல்முதலொளியதெல்லாமார்பூதவுருவமன்றே. (ந)

சவுரவம். - முற்றிற்று.
ஆக திருவிருத்தம் - ௩௫க.

சந்திரவாதம்.

:o:

இந்துவினிலெழுகோடிரேகையுண்டாமிரேகையொன்றிலெ
ழுகோடிகலைகடோன்றும், வந்துகலையொன்றுதனிலேழுகோடிம
தியாகுமதியொன்றிற்பிறையேழ்கோடி, யந்தமிலாப்பிறையொன்
றிலாங்கேயுண்டாயகிலத்தையாக்கியழித்திடுதற்காக, வந்துபிறை
பிறந்திறந்துமதியிற்கூடிவருவதுபோவதுவாமதியியல்புதானே.()

ஆதலான்முழுதுமாகியபரமுமமுதநற்கலையதாமதியை
யோதியவமுதகலையதாயுள்ளவொப்பிலாச்சக்கரமுணர்ந்து
தீதறுமமிர்தமந்திரமதனூற்றிகழருச்சனையினுன்மதியோ
டேதமதறவேயேகமாமதுவீடவனெலாமியற்றுமீசனுமாம். (உ)

திகழ்தருமமிர்தகலையுணர்பவர்க்குத்தெறுகனல்குளிருநீர்த்
தடமாந், தகுமிடமமுதாஞ்சார்பிணிபூதக்கோள்கள்பேய்தானெ
லாமகலு, மிகுதருபோகம்வீடதுமெளிதாம்வேலைநீர்தண்ணீராம்
விளம்பின், மகிழ்தருமறைகளறிகிலாதவர்கள்பெருமையைமதிக்க
வல்லவரார். (ந)

பகலினிற்புழுதிபூத்துப்பானுவினொளியான்மங்கி
யகமதிகளங்கமேவியாவதுண்டுமிழப்பட்டு
வகையறப்பிறந்துமாய்ந்துவளர்ந்துதேய்ந்திடுவதொன்று
புகலுதற்கரியவீசனுருகுமோபோதமில்லாய். (ச)

அளவிலாவுலகமெல்லாம்படைத்தளித்தழிப்பதென்று
முளமிலாய்மதியமென்றேயுரைத்தமீன்கணத்திலொன்றாய்
வளமிலாமாதத்தோர்கால்மாய்ந்துள துலகம்பண்ணிற்
றளர்விலாத்திகழ்மீனெல்லாந்தனித்தனியுலகம்பண்ணும். (ரு)

ஏழுகோடிகீற்றுடையதுபரமெனவிசைக்கிற்
றாழ்வுதாரைகள்வயல்கழிகரையவைதன்னி
லேழையேரலகிற்றெழுபதினுயிரகோடி
தாழ்விலாவகையுடைத்துன்பரத்திலும்பரமாம். (சு)

இந்துமாமதிபிறைகடானலையிலவென்றாய்
வந்துதோன்றியமதிபிறையொன்றுநேர்கண்டோ
நந்துமற்றுளவவையெலாநானிலமதனி
லுந்துமின்மினியானதோவுணர்விலாதுரையாய். (எ)

நின்றிவ்விச்சையாற்பிணிகெடும்வளியெலாநணுகு
மென்றுரைத்தனையிந்துவுக்கயந்திரா
சென்றுபரம்பொருதேரைபோற்றின்றுமீண்டுமிழுந்
தன்றன்விச்சையின்வலிகதிசாற்றவேண்டுவதோ. (அ)

சந்திரப்பதத்தன்கண்டிடக்கடனீர்தண்ணீராமென்ற னையந்த, விந்துவின்கிரணநாடொறுங்கடலிலேய்ந்துமூப்பானதே னியம்பாய், மந்திரமதனுன்மதியொடொன்றும்வீடென்றனமதி பரமாணு, லுந்துமந்திரத்தாலுரைத்தவீடாகாவொழியுமோவுரை த்தலைத்தவிர்நீ. (கூ)

சந்திரவாதம்-முற்றிற்று.

ஆ திருவிருத்தம்-௩கூஅ.

ஊழ்வாதம்.

---:o:---

வாழ்வினுன்மந்திரத்தாலியந்திரத்தான்மருந்தினல்
வேழ்வியால்விண்ணவரால்வேதனத்தான்மேதையாற்
கேழ்வியான்மாதவத்தாற்சாதகத்தாற்கீழ்ச்செய்த
வூழ்விடாசெய்தவனுலுண்டறுத்தேவிடவேண்டும். (க)

ஊழோதானூழ்செய்தவுடம்போதான்முன்னென்னி
லூழெனிலுடன்முன்னாமுடலென்னிலூழ்முன்னு

மூழ்செயலிங்கனுதியெனிலூழ்சடமாமூழ்செய்யா
ஆழ்முதலாமஞ்ஞானமொழிந்தூழின்முதலீதாம். (௨)

தான்செய்தவினையாயிற்றான்வெறுப்பவீடிலதே
தான்செய்தபோததனிற்றன்கருத்துத்தழும்பியதாற்
றான்செய்தவினைவீடத்தழும்புவனேல்வினையாகா
தான்செய்யாவினையுளதேற்றான்வீடவீடாதால். (௩)

ஊழ்வாதம்-முற்றிற்று.

ஆ_திருவிருத்தம்-௩௭௧.

காலவாதம்.

இழியுமைந்துபூதங்களீசரா
மொழியுமைவருமுடிவர்நாளிலே
யழிவதாவதாயாருமியாவையுங்
கழிவில்காலமேகடவுளாவதே. (௧)

காலந்தன்னின்முழுதுமுதித்திடுங்
காலந்தன்னின்முழுதுநிலைபெறுங்
காலந்தன்னிலழிவுறுமாதலின்
மூலங்காலமேயென்றனர்முன்னினோர். (௨)

படைத்தளித்தழித்தறன்னைப்பண்ணிடுங்காலமென்றாய்
படைப்பதற்குணர்வுமுண்டோபகர்காலஞ்செடமதன்றோ
படைத்தவக்காலமாவதொருபொருணிகழ்ச்சியேகா
ணிடைத்தலையறிவிலாதாயிகழ்காலமிறையதாமே. (௩)

அறைந்தனைபஞ்சமூர்த்தமுங்காலத்தழிதலாலதுபரமென்றே
யுறைந்தவக்காலலோககன்மத்தோடுயிர்மூர்த்தமாமெவையும் [ஞ்
நிறைந்திடப்படைத்துநிறுத்தியங்கழித்துநின்மலமாய்வினையாடு
சிறந்தசிற்பரனையறிந்திடாவுனக்குச்செடகாலந்தெய்வமாகாதோ

காண்பவனன்றியில்லைக்காண்பொருடோற்றமெல்லாங்
காண்பவனொழியத்தோன்றுங்காலமுஞ்செயலுமின்றாங்
காண்பவன்வேறதென்னிற்கண்டுவேறென்னவேண்டுங்
காண்பவன்காணுதுண்டேற்கருதுதருனுமின்றே. (௫)

காலவாதம்-முற்றிற்று.

ஆ_திருவிருத்தம்-௩௭௬.

மந்திரவாதம்.

மந்திரத்தாலழைத்திடவேவானவரும்வந்திடுவர்
மந்திரத்தால்வசிகரணமுதல்வலிகள்வந்தெய்து
மந்திரத்தாலாக்கியளித்தழித்திடலுமாகியிடு
மந்திரத்தில்வலியவர்காண்வானவருமானவர்தாம். (க)

மந்திரவானுகத்தேவான்முதலாம்பூதங்கண்
மந்திரவானுகத்தேமன்னுசராசரங்களெல்லா
மந்திரவானுகத்தேவரம்பில்லாஞானமது
மந்திரமில்லார்பெருமையாவர்களுமறியாரால். (உ)

மூலமாநாதத்துண்மையுணரலப்பொழுதேமுத்தி
யாலமுண்டானுமாலுமயனுமிப்படியுணர்ந்தே
சாலமாவிறைவராகிச்சமைந்ததுசகத்துக்கென்று
லேலுமந்திரவாதத்தேயிருமையும்பெறலாமன்றே. (ந)

மந்திரத்தழைக்கவுன்பால்வந்தவானவரார்சொல்லாய்
மந்திரமனத்திற்றேன்றிவார்த்தையாயழிவதேதான்
றந்திடுமாரணுதிவலியெனிற்சடமாநாத
மந்தமில்வலிகணல்கவறியுமோவறிவொன்றில்லாய். (ச)

நாதமாமோசைதன்னைக்கருதானுன்முத்தியென்று
யோதமாகடலிற்செக்கின்மரத்தில்வாச்சியத்திலோசை
யோதுமுன்முத்திதன்னிலொன்பதுகோடிமேலாம்
வேதகஞ்செய்யுமத்தைவிரையநீகருதிடாயே. (ரு)

மந்திரவாதம் - முற்றிற்று.
ஆ திருவிருத்தம்-நஅக.

அவிழ்தவாதம்.

கருதுநன்கல்வியெல்லாங்காயத்திலன்றியில்லை
யுரியசாதனையுமெல்லாமுடம்பினிலன்றியில்லை
விரிதருஞானமேவுமெய்யினிலன்றியில்லை
யரியநன்முத்திபேறுமாகத்திலன்றியுண்டோ. (க)

ஆதலாற்காயந்தானேயழியிலோர்பயனுமில்லை
யோதுநன்சீவன்முத்தியுடம்பினினறியதன்றே

போதமேயுடையமேலோர்போற்றுவருடம்பையல்லால்
வாதரேயன்றோர்காயமழிவதென்றறைகின்றூர்கள். (௨)

கோதுறுசெம்புதன்னைக்குலவியவிரதஞ்சேர்ந்து
வேதகஞ்செய்யுமாபோன்மெய்யெனுங்காயந்தன்னை
வேதகமருந்தாற்செய்துமேவுநன்முத்திசித்தி
நாதராயிருக்கநாதனுகமம்நவிலுமன்றே. (௩)

ஆகமமுறைமையாலேயடைத்தவம்மருந்துக்கேற்கத்
தாகமோகாதிகாற்றுத்தண்பனிமுதலைமாற்றி
யேகனுய்க்குகையிற்புக்கங்கிருந்திடவறைந்தநாளி
லாகம்வேதகமாயின்பத்தழகுறுநாதராவர். (௪)

வேதித்தகாயத்தோர்க்குவிளங்குமெய்ப்பொருளுஞானம்
போதித்துத்தானேதோன்றும்பொருவிலாக்காயந்தன்னிற்
போதுற்றமலநீர்வெற்பும்பொருந்திடும்பஞ்சலோகம்
வேதித்துப்பொன்னுங்கல்லும்விமலமாமணியதாமே. (௫)

பரவுவார்வேண்டிற்றெல்லாம்பெற்றிடப்பணிக்கலாகும்
விரவிடுஞ்சித்தியெட்டும்விளங்கிடுந்திரிகாலங்கள்
கருதருங்காயம்பின்னைக்காலவஞ்சகமாமாறு
லரியநன்மருந்தேயாவுமாம்பொருள்வேறுமுண்டோ. (௬)

கல்விசாதனைகடானேகாயத்திலுளவாமென்னிற்
சொல்லியவுடம்புண்டியார்க்குந்துகளறவுணர்விப்பானே
னல்லலாயொழியுங்காயமவிநாசியுணர்வதென்றே
நல்லவரெல்லாஞ்சொல்லுநன்குரையதனையோராய். (௭)

காயமதழிதலின்றியிருத்தலேகருதுஞானத்
தேயுநன்பொருளதென்றேயிழிவதாங்கவலைத்துன்பங்
காயமதொருகாலத்துங்கைவிடாஞானமுத்தி
யேயவிதெங்கேபெற்றுயுனக்கெனவிருந்ததோதான். (௮)

மருந்தினுற்காயம்வேதித்திருந்திடவாகமங்கள்
புரிந்துரைசெய்ததென்றூய்புற்புதக்கவலையாக்கை
யருந்துயரென்றுகோடிவிதங்களாலறைந்துமோரா
திருந்திடச்சலித்துநிச்சைக்கேயவேயறைந்ததன்றே. (௯)

காயவேதகர்தாங்காலமுன்றுங்கண்டிடுவரென்றூய்
நீயுமுன்குருவுங்காலமுணர்ந்தமைநீயேகண்டாய்

வேயவேலோகமெல்லாம்வெற்பில்வேதிக்குமென்றாய்
காயம்வேதித்தல்கண்டாலவையுங்கைகண்டதன்றோ. (௧0)

அவிழ்தவாதம் - முற்றிற்று.

ஆ_திருவிருத்தம்-ஙகக.

சாதிசங்கற்பம்.

நலமறையவர்முதனாலுசாதியுங்
குலவறம்வழுவறல்குலமுந்தன்மமு
நிலைகுலைவுறினு நிரயமேயலா
லுலகவர்புலையரென்றோதுங்கவும்படும். (௧)

பேதமாமுலகமெல்லாம்பெற்றவனொருவனேயைம்
பூதமேயெவ்வுயிர்க்கும்பொருந்தியவுடலமானாற்
பூதத்திற்சாதியில்லைபோதத்திற்சாதியில்லை
யேதுக்கோசாதிபேதமெனக்குநீயியம்பவேண்டும். (௨)

தானம்வேறாகத்தோன்றுந்தன்மையாற்சாதிபேத
மானதுண்டென்றாயின்றமப்படிப்பிறப்பதென்னே
மானிடராகியிந்தமண்ணினிற்பிறப்பாரெல்லாம் [ய்.
யோனியொன்றாலேதோன்றிற் றுணர்ந்திடாயுணர்வொன்றில்லா

சாதிசங்கற்பம் - முற்றிற்று.

ஆ_திருவிருத்தம்-ஙகச.

தீர்த்தசங்கற்பம்.

தீர்த்தத்தாற்சிதையாவினையொன்றிலை
தீர்த்தத்தாற்செறியாநலமொன்றிலை
தீர்த்தத்தொத்திடுஞ்சீர்சமமொன்றிலை
தீர்த்ததாறதேதிகழ்முத்தியுமென்பரால். (௧)

சித்ததாய்த்தானுந்தீர்த்தந்தன்னுளேதிகழாநிற்க
பித்ததாற்பிறம்போர்நீரைத்தீர்த்தமாய்பேணிச்செல்லல்
சுத்தமாய்த்தன்கையுற்றசுடர்மணியதனைவிட்டுக்
குத்திரக்குருவிஞ்சக்கற்குறித்துத்தேடிடுதலன்றே. (௨)

சேதப்படாதுதினகரனுற்றீயாற்காலாற்செந்துக்கள்
சாதப்படாதுவெண்ணுரையுஞ்சாராவானுந்தரவேண்டா [ப்
வோதப்படும்பூதங்களெல்லாமொளித்துமொளியாதொழிவில்லா
போதத்தீர்த்தமறிஞர்க்காமல்லாதவர்க்காம்புனற்றீர்த்தம். (௩)

தீர்த்தசங்கற்பம் - முற்றிற்று.

ஆ திருவிருத்தம் - ௩௬ள.

அர்ச்சனுசங்கற்பம்.

முயலுமர்ச்சனைதன்னைமொழிந்திடி
லியலுமெப்பொருளுமெழின்முத்தியும்
வயமதுற்றிடுமற்றுமெலாம்வரு
மயமதத்தகையாரறிவார்களே. (௧)

மூற்றுணர்ஞானத்தோர்கள்முழுதையுமிறையாய்க்காண்ப
ருற்றுணர்யோகத்தோர்களுளத்திலோரொளியாய்க்காண்பர்
கற்றுணர்மறையோர்தாங்கள்கைதொழுமனலிற்காண்பர்
மற்றறிவிலாதோர்வைத்தபதியைமுன்வணங்கிக்காண்பர். (௨)

அர்ச்சனுசங்கற்பம் - முற்றிற்று.

ஆ திருவிருத்தம்-௩௬௯.

அத்துவாசங்கற்பம்.

மந்திரம்பதம்வன்னம்புவனமே
சந்தமாகியதத்துவநற்கலை
யிந்தவாறுஞ்சிவகதியென்றுகொண்
டெந்தையாகமத்தேயிசைக்கின்றதே. (௧)

ஐந்துகதியென்னுமறைசொல்லுமவைதன்னு
ளய்ந்துமுறுகன்மகதியாவறையுநாலை
நந்தவறுவீடுபுகும்ஞானமெனுமொன்றை
யைந்துகதியுந்தெரியுமாறதறைகிற்பாம். (௨)

விரும்பாதமலஞானத்தைவிலங்கியோனியிற்றன்னை
யரும்பாவத்தானின்னையுமதியதமகதியாம்வினையொத்தால்

நரன்ருனுகமினையுமதிநடுவாங்கதிநல்வினைமிக்கார்
சுரன்ருனெனுமதியாமக்கதியுத்தமாய்ச்சொல்லுவரால். (௩)

துரியமானகதியற்சராதியாஞ்சுத்தையாமக்கதிசென்றமான வர், திரியமானவரவத்தைவந்துருர்தெய்வஞானமெனப்படுமக்க தி, புரிவிலக்கதிபோனவரியாவுமேபொன்றமூழியிற்பொன்றிப்பி றப்பரா, லுரியவக்கதிநாலும்பக்குவர்க்குத்தமர்க்கன்றெனமறை யோதுமால். (௪)

பாகசித்தன்வேதாந்தவேதனமெனும்பஞ்சமநெறியெய்தி
மோகமுற்றகாலந்திசைதேசமும்மொழிவுறுபொருண்முற்று
மேகமுற்றதன்பக்கலேலயித்திடவீசனதருளாலே
போகலுற்றுமீளுதலுமற்றிடுமவன்பெருமையைப்புகல்வாரார். ()

அத்துவாசங்கற்பம்-முற்றிற்று.

ஆ_திருவிருத்தம்-௪௦௪.

சாத்திரசங்கற்பம்.

:o:

சாத்திரம்பயிலாதவர்தாஞ்சாரா
சாத்திரந்தனிலேசகலாற்றமு
மேத்துமுத்தியதென்றுணருண்மையுஞ்
சாத்திரத்தொழியத்தருமோசொலாய். (௧)

சாத்திரத்தாலேயுண்மைதானறிவுறலாமென்னிற்
சாத்திரம்பயின்றேரெல்லாந்தம்மைத்தாமுணரக்காணேஞ்
சாத்திரச்சடலைவிட்டுத்தாமுண்மையுணர்வுற்றோர்க்கு
வார்த்தையொன்ருலேதீர்ந்தால்வரம்பினுல்செய்வதென்னே. ()

கதிக்கும்வாக்கியாதொன்றைப்பெற்ருற்கதிக்கவற்ருகு
மதிக்குமனமும்யாதொன்றைப்பெற்ருன்மதிக்கவற்ருகு
மதிக்கக்கதிக்கயாதொன்றில்வழியின்மாட்டாமனம்வாக்கப்
பதிக்குணர்ந்தவாக்குமனம்பகரும்பரிசேரினைவனகயென். (௩)

சாத்திரசங்கற்பம் - முற்றிற்று.

ஆ_திருவிருத்தம்-௪௦௭.

பிரமாணசங்கற்பம்.

---:o:---

அளவையாலகிலத்தெல்லாமறிந்திடப்படுதலானு
மளவைதானில்லாதெல்லாமருத்தமாக்கொள்கையாலு
முளரிலத்திரண்டுமோரிலளவையாலுணர்தலானு
மளவிலாவிறைவன்ருனுமளவையாற்றோன்றுமின்றே. (க)

காட்சியோடனுமானமெய்க்கடவுளாகமந்தா
னுட்சியாகியவுவமையத்தாபத்தியபாவஞ்
சேட்சியாகியமெய்ப்பொருடெளியவேண்டினர்க்கு
மாட்சியாமிவையாமெனமதித்தனர்மானம். (உ)

நாடிடிற்காட்சிநாலுவிதப்படுமயனமாதி
யோடுமைம்புலனுற்காட்சியுள்ளூறுமனனுற்காட்சி
யீடுறுமின்பத்துன்பத்தெய்தும்வேதனையாற்காட்சி
வீடுறுமியோகிதன்பால்விளங்குஞானத்தாற்காட்சி. (ங)

தோற்றியவனுமானந்தான்சுவாத்தமேபராத்தமென்ன
வாற்றியவிருவகைத்தாமவற்றினிற்சுவாத்தமாவ
தோற்றியவையமாதிதுகளறவேதுவாற்ருன்
பாற்றுகன்றுணருதல்சுவாத்தம்பருணர்த்திடல்பராத்தம். (ச)

ஆயவைதனக்குப்பெயராமன்னுவயவெதிரேகந்தா
னேயவைதனக்குமுன்சொல்லேதுவாமவற்றைச்சொல்லி
லாயுநற்சுபாவத்தோடுகாரியமனுபலத்தின்
மேயவத்திறத்தானூல்கள்விதித்தனனவனுமையா. (ரு)

காண்டலுங்கருதலானுங்காணொணுப்பொருளையெல்லா
மீண்டிடவுணர்த்தவல்லவிளங்குநூலளவைசெப்பிற்
பூண்டதந்திரமுமன்றிப்புகலுமந்திரமும்போதங்
காண்டிடுமுபாயமூன்றுமவைவறக்கரைத்தலாமே. (சு)

ஓங்கியவுவமானத்தையுரைத்திடிலிருவகைத்தா
மாங்கவையுருவந்தன்னேடருவமென்றறையுநூல்கள்
நீங்கறவுவமைதன்னைத்திட்டாந்தமென்றுசெப்பு
மாங்குறுபொருளினுண்மையனைத்துங்காட்டாமையாலே. (எ)

செப்புறிலத்தாபத்திதிறம்புறத்தில்லையென்று
லப்பொருளத்துண்டாகுமல்லினுக்குணவின்றென்றுற்

றப்பறப்பகலைக்குண்டாந்தன்மைபோற்பொருள்கடோறு
மொப்பறக்காட்டுமென்றேயுரைத்தனமறைகளன்றே. (அ)

பேசிடிற்பாவநான்காம்பிருக்குபிரத்துவம்ஷமோடு
தேசிதரிதரேதரந்தான்செப்புமத்தியந்தமாக
மாசிலுான்முன்பில்பின்பின்மறித்தொன்றில்விசேடமொன்றி
லாசில்சைதன்னியமுனக்கில்லசேதனமாதலாலே. (கூ)

பக்கம்போலிவிருத்தமுடனேதுப்போலிபகர்சித்த
மிக்கவனேகாந்திகத்தோடுமேவுமுவமைப்போலியதுந்
தொக்கவளவைதூடணமாஞ்சொல்லும்பொருட்குமழிவென்றே
மிக்கமறைகளறைந்திவற்றைமேவாவகையேவிளங்கிடுமால். (க0)

விளம்பிருபக்கத்தேதுவாம்விருத்தம்விளங்கநிச்சயித்திடாப்
பக்கத், துளங்கொளவேதுவுரைத்தவாஞ்சித்தமுரைத்தமூன்றினு
முறுமேது, வுளைந்திடுமனேதாந்திகமுதாரணம்போன்றுதாரண
மன்றியேயொழிதல், விளைந்ததிட்டாந்தாபாதமிங்கிவைதான்விட
விவகரிப்பர்வித்தகரே. (கக)

அளவைகளுளத்தினுலேயமைந்தனவளவைக்கெட்டா
வளவுறுபுராணன்றன்பாலவைசெலுமாறதெங்ஙன்
னுளமதிலளவைமாயுமவையுளத்தப்பாலானைத்
தளர்வறக்காட்டுமென்றுசாற்றியசழக்கதென்னே. (கஉ)

பிரமகீதை.

பிரமாணங்களானவைதான்பேதமில்லாவொருபொருளைத்
திரமாவிதுவென்றிடமாட்டாசெல்லாதாமிங்காதலினு
லுரைமாத்திரமாயாவையினுமூளவஞ்ஞானமதுதானும்
பரமாமொளியேயாகியிடும்பார்க்கிலுண்மைப்பரிசிதுவே. (கங)

முத்திசாதனமானுலோர்மொழிவுறுகாட்சியுத்தி
யுத்தியாமனுமைமுன்னேனேதுநாலுவமையத்தா
பத்திதானபாவமுற்றும்பாற்றறிபவன்பினன்றிச்
சித்தியாவவனைமானமெங்ஙனந்திகழ்த்துமாறு. (கச)

காதுமொருவற்கொருவர்காட்சிமுதலாகுஞ்
சாதனமதிட்டுரைசெய்சாதனமனைத்தின்
போதகனைமாற்றறிதுமென்றுபுகலுற்றோ
ராதபனனைச்சுடுவர்பாதவமதிட்டே. (கரு)

சாதனமிலாதுபரதத்துவமதென்றென்
றோதுவர்கள்வாதியர்களுள்ளமதொருக்குத்
தாதிமறைதேர்பொருளறிந்தவர்களானும்
பூதிவதுவேயளவையென்றுபுகலுற்றார். (கசு)

ஓதியவளவையெங்கேயுரையுடனுணர்வுக்கெட்டாப்
போதமாய்புரையற்றோங்கும்பூரணர்நிலையதெங்கே
வாதுடனளவைக்கெட்டாவள்ளலாரருளால்வாய்த்த
வேதமிலாதுபூதியளவைமற்றேதுமின்றே. (கஎ)

பிரமாணசங்கற்பம் - முற்றிற்று
ஆ திருவிருத்தம்-சஉச.

வாதசங்கற்பம்.

---:o:---

கழியக்கற்றோர்கற்றவாயாருங்கரியாகக்
குழுமித்தற்கங்கொற்றவன்முன்னர்க்கூறுங்கா
லொழியக்கூறுமவையென்முன்னோரோதுற்று
ரெழுமிக்குற்றந்தெரியவவற்றையிசைக்கின்றேன். (க)

துணிவினிலாணியந்தாம்விரோதஞ்சொல்லுந்தன்னியாதரமா நான்கும், புணியுமெதுவினிலந்தரம்பிறழத்தாந்தாமநிரத்தகம்பே சி, லணுவினிலஞ்ஞானவாச்சியமதனுபாடாணமறிவிலாவருத்த,மி ணையில்பிராரத்த காலமெய்ப்பார்த்தக மெழில்கொள்பிறதியை யோடின்னம். (உ)

பாற்புனருத்திபரியனுயோக்கியாவேட்சணம்பகருவீடசப, நீ ர்த்திடுநீரனுயோச்சியாயோகநிகழ்மதாஞ்ஞையோடதிக, மார்த் திடுங்குன்றையதன்றியுமவசித்தாந்தமென்றறிஞராலிழித்தங், கே ர்த்திடுமிருபத்தொன்றிவையிவற்றினுருவமுந்தெரிவுறவுரைப்பாம்

தன்பொருணிற்கப்பிறர்சொலுக்கிசைத்தருன்றுணிவாணி யென்பதுதான், முன்சொனற்பொருளையொழிந்தொருபொருளை மொழிந்திடல்துணிவிரைந்தாமாந், தன்சொனற்பொருளையழிவுற க்கொடுத்தருன்றுணிவிரோதமாமன்றித், தன்சொலுக்கழிவுவந்தி டத்ததனைவிடுதல்சந்நியாதமாமதுவே. (ஊ)

சொல்லுமப்பொருளுக்கன்னியவேது சொல்லுதலேதுவந்த ரமாம், நல்லதற்பொருளுக்கன்னியநூலைநவிலலத்தாந்தரமாகுஞ்,

சொல்லுறப்புகுந்தபொருளினுக்கிசையாப் பொருள்சொலனிர்த்த கமாகுஞ், சொல்லுமற்றியக்கியாவாச்சியம்பொருளைவிளங்கிடச் சொல்விடாததுவே. (ரு)

அதனுபாடாணம்பிறன்பொருளினையழியவங்கறைந்திடற்கு மாட்டாமை, யிதமுறுமவியாக்கியார்த்தமாமெதிரியிசைத்திடும் பொருளறியாமை,யுதவிடாதப்போதுத்தரம்பிறழ்வுரைத்தல்பிரா ரத்தகாலந்தான், மூதியவர்மொழிவர்மூன்றினுமலையுமொழியினை யபார்த்தகமென்றே. (௬)

எதிரிதன்வினவுக்குத்தரமறியாவிழுக்கதுவிறுதியென்பதுதா ன், முதன்மொழிந்ததனைப்பின்னையுமுரைத்தன்முறைபிறழ்புன ருத்தியாகு,மெதிரிதன்றேல்வித்தனமறியாமையிசைப்பருநீயோர் க்குற்றந்தா, னெதிரிநல்லுரையும்புரையெனவிசைத்தனீரனுயே ர்க்குறையாமே. (எ)

கதித்திடும்வினவுக்குத்தரமாய்ந்துகண்ணிழித்திடுதல்விட்டே ப, மதித்தொருகுற்றந்தனைச்சொலவுனக்கு மதுவுளதெனல்மதா னுஞ்ஞை, விதப்படவுரைக்கவேண்டுரையன்றிமிகலதிகங்குறைகு றையா,மதிப்படுமவசித்தாந்தமாமெதிரியுரைக்கும்வேறென்றினை யுரைத்தல். (அ)

என்றதூடணங்களியாவையும்வந்தங் கிரண்டிலேயடங்கிடு மவற்றி, லொன்றுதன்பொருளுக்காயசாதனங்க ளுரைக்கமாட் டாமையென்பதுவா, மன்றியொன்றுரைத்த வேதுசாதனங்கள வையுருவன்றியேயொழிதல், துன்றுகுற்றங்களினியாவையுமகல ச்சொல்லுகவின்னமுஞ்சொல்வ. (௯)

பிறந்தவன்சாமோவென்றிடிற்சாமென் றுரைத்திடல்பெருந் துணிவுடைமை, யிறந்தவர்முத்தியையவரோவென்று விரண்டுமு ண்டெனவகுத்துரைத்தல், சிறந்ததேதென்றுல்யாவையிலென்ன லெதிர்வினச்செயன்முயற்கோட்டி, னிறங்களேதென்றுலுரைத்தி டாதொழிதனிலவியமறைகணிச்சயமே. (௧௦)

தற்கவாதத்தாரெல்லாஞ்சதிர்பெறத்தெரிவதுந்தான்
றற்கவாதத்தின்மிக்கோர்தலைவரென்றிடப்பட்டோருந்
துற்குற்றங்கடீர்ந்ததூனெறிதற்கவாத
மிக்கான்மேன்மைவாதில்வென்றவர்க்கன்றியுண்டோ. (௧௧)

செப்பிடவெற்றிகொண்டுமிராகத்தாற்றெளிவதுண்டோ
மைப்படுமிராகவாதிற்பலிப்பதுமயக்கமேகாண்
பொய்ப்படுமிராகத்தற்கம்புகல்பதமெழுத்துமானஞ்
சொற்பதமெத்ததாழ்வேதோல்விவெற்றிமைதான்சொல்லாய். ()

தாங்கலிலுன்றன்வாதஞ்சாற்றுபோதங்குவேண்டும்
பாங்கறுசடலைபாராய்பார்த்திபனவதிதான்
மோங்குவிற்பன்னனுகுமொருகரியிருவர்சொல்வோ
ரீங்கிவையனைத்துங்கொண்டாலிசைக்கும்வாதிவணமேதான். ()

வாதசெற்பவிதண்டைவகுத்ததி
ரூதுவாதமுரைத்ததற்காகத்தின்
மீதுகத்தின்மிகச்சொலும்வெற்றிதான்
சாதமோரிற்றலைபறியல்லவோ. (௧௪)

ஓதுகெற்பத்துவந்திங்குறுபயன்
காதுதற்ககவலையின்வேகமாய்
வாதநீதிமயக்கமுற்றுங்கவ
ரேதமேசொலிழுக்குப்பிறக்குமே. (௧௫)

வேறதாகவிதண்டையின்மீக்குள
வூறுதேடியொருவர்க்கொருவர்தா
மேறுமாறுகொண்டேமுட்டியுத்தமாய்
பேறதின்றிப்பிதற்றிக்கழிதலே. (௧௬)

எண்டானமனங்கொண்டேயிதுவேயெல்லாவிகற்பங்களுமில தேற், கொண்டார்கொண்டகோள்களவையெல்லாமிலதேகொண் டுகொண்டு, மண்டானின்றமனமாண்டமாட்டார்வாதநூல்கற்று ப், பண்டேயாடும்பேயின்கைப்பறையுங்கொடுத்துப்பார்ப்பாரால்.

உற்றவாதுசெய்தொருவரையொருவர்தாம்வெல்லப்
பெற்றபோதுளங்களித்தலாற்பெருகியமயலே
செற்றமேயலசயமுறிற்செம்பொருள்கூடாக்
கற்றவாதினுற்பயன்மனங்கலுழுதல்களித்தல். (௧௮)

ஆதலால்விரோதபோதத்தவ
ரோதல்தற்கம்பொருளெனவோர்வராற்
சாதுவாதனம்பண்ணித்தம்மிற்புகழ்
வீதராகவாதத்தைவிளம்புவாம். (௧௯)

தம்மையேயுணர்ந்தவுண்மைத்தன்மையாமவர்கள்கூடி
யுண்மையாம்பொருள்பாராட்டியுவர்த்தலுமுயர்ந்தஞானச்
செம்மையாமாந்தர்வாய்மைத்திருமொழியமுதுமாய்ந்து
மெய்ம்மைகொண்டாடருனும்வீதராகத்தர்வாதம். (உ0)

பயனிலாதசொற்பாராட்டுமாந்தரை
மயமிலாப்பதரென்றுநன்மாதவ
ரயமிலாவிதராகவாதத்தினிற்
பயனதாமின்பவீடெனப்பார்ப்பரே. (உக)

வாதசங்கற்பம் - முற்றிற்று.
ஆ. திருவிருத்தம்-சசடு.

சமயாதித்தொகுதி.

:o:

பொன்றுமுடல்புந்தியுயிரென்றபுறமார்க்க
ரொன்றுபலவன்றுபயமென்றுமறைமார்க்க
ரன்றெனவுமாமெனவுமன்றிநிழல்கண்ட
குன்றுகுலேஞாளியினர்கூடுகிலர்வீடே. (க)

முத்திபேறில்லாதொன்றிமொழிவரேல்மோகமாமுளத்தாய், நித்தமாமொன்றுக்கென்பரேல்வேண்டாமுன்னமேநித்தமாதலின், லத்தினமாசகற்றவெனிலனுதியதேலகன்றிடாதாதியெனமீண்டுஞ்,சித்தமாமதனுலுபயகோடிக்குஞ்சித்திவேண்டுவதிலேத்தெரியில். (உ)

ஒன்றென்பதும்பலவென்பதுமுருவென்பதுமருவென்பது
நன்றென்பதுந்தீதென்பதுநானென்பதுநீயென்பது
மன்றென்பதுமாமென்பதுமாயாவையுமல்லா
வொன்ருென்றெனவகைசெய்திவருரையாடுமளவோ. (ந)

முறிசாகையதுறுதோல்துணர்முகைவேர்பலமுற்று
மறிவார்மரமிலோரவமவமானதையறிவா
ரறியாரலர்முதன்மாமரமறிவாரலரவர்போ
லறியார்களுமலர்வாதிகளறிவார்களுமலரால். (ச)

பிரமகீதை.

கனவிற்கற்பிதப்பொருள்போல்வாதக்கலக்கங்க
ணனவிற்கற்பிதப்பொருளைநவிலாரினியச்சிற்

கனவத்துவிதத்தினையென்கண்ணுற்றவர்கண்ணுற்
சொனவத்தகமுமெய்யேமெய்யிற்றேன்றுதே. (ரு)

சமயாதித்தொகுதி - முற்றிற்று.

ஆ திருவிருத்தம்-சஙரு.

கேடுகண்டிரங்கல்.

———:o:———

உண்டாகியமெய்ப்பொருளுள்ளமுறக்
கண்டார்கவலைக்கலைகற்றலுரர்
விண்டேயிகல்வாதினில்வீடுசொல்வார்
வெண்டேர்புனலென்றுவிரும்பினரால். (க)

சயம்பெறநினைகுவதன்றித்தற்கிறைற்
பயன்பிறிதிலதெனுமுண்மைபார்த்திடா
ரியம்புவரில்லினிற்குருவிபோலிங்ஙன்
மயங்குதன்முன்னைவல்வினையின்வண்ணமே. (உ)

பரத்தினைத்தேடியிப்பாரெலாந்திரிந்
திரத்தினைத்திடுவரீதென்னகேடுதான்
கரத்திலாமலகமதென்னக்காட்டிடுங்
குருத்தனைத்தேடிடார்கொத்தைமாந்தரே. (ங)

போந்தவாவிபுகுந்துடல்தல்லப
மேய்ந்தமற்றவற்றுற்பின்னையென்பயன்
றுன்றமைப்பெறத்தாம்விரையாதகோ
வேய்ந்திருப்பர்களீதென்னகேடரோ. (ச)

தேவதேவனுஞ்சிற்பரஞானியை
மேவவார்பெறுவார்பெற்றுவைத்தும்விட்
டாவகானனீரென்றதின்மூழ்கிடப்
போவதேசிலபுண்ணியகினரே. (ரு)

கழிபெருந்துன்பமாய்க்கருமஞ்செய்வுழி
வழுவின்மாநிரயமாய்மறுபிறப்பிலாய்
தொழிறரும்பயனதுசுருக்கமாயினும்
விழுவதேயதனின்மெய்யுணர்வைவிட்டவர். (சு)

இன்பம்வீடின்மையிலிடையுறில்
நன்பதந்தருஞானமுயற்சியிற்
றுன்பமில்லையெனமறைசொல்லினு
மன்புசெய்கிலரந்தோவறிவிலார். (எ)

கேடுகண்டிரங்கல் - முற்றிற்று.

ஆ திருவிருத்தம் - சஅுள.

நன்னெறி.

:o:

அறிபவன்குறையுஞானமறிவிப்போன்குறையுமார்க்கத்
தறிபவன்குறையும்வையத்தருந்தவக்குறையுமன்றே
வறிவறிவிப்போன்ஞானமறிகின்றேன்றவமினுன்கும்
குறைவிலாநெறியுளார்க்குக்கூடலாம்வீடதன்றே. (க)

ஒன்றொடொன்றெவ்வாவறிவுகடுணிந்தும்பொருடனியியல்பு வேறாகா, வொன்றவப்பொருளினியல்பினாலறியு மறிவுதானுண் மையாமறிவா, மின்றியபொருளையுளதெனுமுளத்தையிலதெனுமு ணருணர்வொழிந்து, முன்றிகழ்குருவோடளவைதன்றேர்ச்சிமுன் றினாலறிவதுமார்க்கம். (உ)

அறிந்தவெச்சமையக்கலையினுமெடுத்துக் காட்டலாமருமறை முடிவின், சிறந்தநற்பொருளாய்ச்சிவனரியயனுற்செப்பியவருத்த முமாகித், துறந்தமற்றவிரோதத்தையேதுணிந்தோர்சொல்லிடும் பொருளுமாமொன்றை, நிறைந்தகைத்தலத்துமணியெனக்காட்டு நீதிசன்மார்க்கத்தினியல்பே. (ங)

அரியவெட்டெட்டாங்கலைஞருமறியாதவருமொத்தறிவுறவரி தாய்த், தெரிவுறத்தரித்துத்தேசிகன்றிகழ்த்திற்றெள்ளிதாயெவற் குமொத்தெளிதாய்க், கருவறப்பிறவிக்கடலினைக்கடிந்துணைத்தி னிற்பரத்தினைக்காட்டற், குரியமற்றதுவேயமலபோதகமென் று ணர்ந்தவருரைத்திடுநெறியே. (ச)

பேதமென்பதுவுமபேதமென்பதும்பிறிதுளமதங்களுமவற் றி, னீதியென்பதுவுநிகழ்த்துதத்துவங்களவத்தைகணிரைத்தகோ ள்முழுது, மேதமொன்றறவேயெவற்றையுமிடங்கண்டிதுவிதுவெ

னவுணர்ந்திடலா, யோதுமொன்றுலுமுணர்ந்திடப்படாதவதுமு
த்திக்குண்மையாநெறியே. (ரு)

நன்னெறி-முற்றிற்று.

ஆ-திருவிருத்தம் - சசுஉ.

யோகம் இயமம்.

—:o:—

இயமநியமாதனம்பிராணுயாமம்பிரத்தியாகாரஞ்
சயமதறுதாரணை தியானஞ்சமாதியெனத்துவத்தை
யயமதறவேயறிவறிவுக்கங்கமாகவறிவோர்க
ளியையவுரைத்தயோகங்களிருநாலடைவேயியம்புவாம். (க)

கோரம்பெருகுகொலைபொய்கள்களவின்மை
சாரும்பிரமசரியந்தயாச்செவ்வை
யோரும்பொறைநிலைமையூண்சுருங்கலுாய்மையென
வீரைந்தியமமடைவேயியம்புவாம். (உ)

ஏமமுறுமியமமீரைந்திவைதன்னிற்
றுாய்மையருளூண்சுருங்கல்பொறைசெவ்வை
வாய்மைநிலையுடைமையேழும்வளர்விப்ப
காமங்களவுகொலைமூன்றுங்கைவிடுவ. (ங)

மிடையப்பண்ணுதோருயிர்க்குமெய்நாமனத்தாலுயிருள்ளத்
தடையத்தன்போற்காணுமதேயகிஞ்சையதிலுமறிவுடையோ
ரடையத்தானேயாய்விளங்குமாத்மாவனல்கால்தோயத்திற் [ல்.
படையிற்படாதென்றறிகைவதைபண்ணுமையெனப்பகர்வர்களா

ஓதுவர்கண்மெய்மையெனவுள்ளபடிசொல்லப்
பூதவிதமென்பரருளிற்புலன்மிகுத்தோ
ராதிமறைசொன்னபரமல்லதன்மையாலே
போதவடிவாமதுமெய்யென்பர்புரையற்றோர். (ரு)

மாயையால்வலியால்வவ்வலன்றியே
யடியொடுமுடிவிலீசற்கநுசிதமதுசெய்பாவித்
திடமுறுமுணர்வதாகத்தெளிந்திடஃதுவேயென்று
மொடிவறுமின்பவீசற்கொப்பினற்பூசைதானே. (௪)

ஓதுபேதம்பேய்த்தேரென்றுணர்தலதுமஞ்சனமாகுங்
காதலின்பமிடர்கனவென்றிடலேகமழும்புகையொளிதான்
வாதங்கழியமறித்துணர்தன்மலர்பூணுடைமகிழ்சாந்த
மேதமின்றியிருந்திடுதலிறைவர்க்கிசைந்தபூசையதே. (௫)

ஊனன்றுலைபுலனன்றுணர்மனமன்றுண்மதியா
மானன்றுயிரெனும்வாயுவுமன்றுமகமன்றுந்
தானென்றியதிரளன்றெனல்தலைவற்கெழுமலரா
மூனென்றுமிலுணர்வொன்றிடலொளிரெண்மலருறவே. (௬)

சகமென்றுரைதானற்றதோர்பொருளொன்றுமிலறிவே
மிகவின்றுளிர்தானின்றமைவிழியெங்கணுமருவா
வகமங்குடனிதமொன்றறவறிகின்றிடுமிதுவே
தகவொன்றியவிறைவின்புறுதகுபூசனைதானே. (௭)

சிற்பரந்தனைச்செடமுறுபொருள்களாற்றிகழ்தரவருச்சித்த
ற்புதமதன்றந்தகர்க்கடுப்பதென்றறைந்தனகலையெல்லாந்
தற்பரந்தனைத்தெளிதரவுணர்தலேசாற்றுபூசனையென்றே
யொப்பிலாரணகோடிகோடிகளுண்மையோதுதலொழியாதே.()

ஞானிபூசை - முற்றிற்று.

ஆக திருவிருத்தம்-எஉ௩.

சடபூசாநிந்தை.

சித்ததேசிவன்றிருமேனியென்பது
மெத்தவேதாகமம்விளம்பக்கேட்டுநற்
சித்தனைச்செடத்திலேவைத்தும்புமப்
பித்தரைப்பிறப்பிலேபிரமந்தள்ளுமால். (க)

அருவமாயகண்டமாம்பிரமமென்பது
சுருதியின்முடிவெலாந்தொகுத்துச்சொல்லவு
முருவமாஞ்சடத்திலேயுண்மைவைத்துழல்
பிரமரைப்பிரமமேபிறப்பில்வீழ்த்துமால். (உ)

தெளிவிலார்க்குநீர்தீர்த்தமண்ணேமுத
லளவில்கற்பனைதெய்வமாமப்படிக்
குளவகுப்பெலாமுண்மையென்றோதுமெய்
தெளிபவர்க்கவைசெப்பவும்பட்டதோ. (௩)

சடபூசாநிந்தை - முற்றிற்று.

ஆ திருவிருத்தம்-எஉ௬.

ஞானயோகம்.

ஈசுரகீதை.

ஒருகாலிருகான்முக்கான்மற்றுள்ளகாலமுள்ளத்தை
வருகாதலினுலியோகத்தேவைப்பார்மகேசரெனப்படுவா
ரரிதாமிதனைமாயோகமபாவயோகமெனவிரு
றிருபாலாகவியம்புவரவ்விரண்டுமிருக்கும்படிகேண்மோ. (க)

தானிணையுமாறரியதத்துவமியாதொன்
றுனிகழ்வதாகுமதபாவமெனுமியோகம்
வானியலதாகியொருவத்துவுமிலாதாஞ்
சூனியமதாகவறிகின்றனர்கடுயோர். (உ)

மயலிலாயாதிலொருமலமிலாதானசுகவடிவதாமாசிலொளி
யா, மயலிலாவேகவெனையயலெனுதேகமெனவறிகைமாயோகம
துவா,முயலுமாறுசையெனமுடிவிலாநூல்கள்பலமொழியுமியோ
காடவியெலா, மியலுறுதாமரியவிதனிலோர்சோடசியுமிசையுறு
தாகுமியல்பால். (௩)

பிரமகீதை.

யோகமனமொன்றியறிவாமுணர்விலானுக்
காகமுறுமைம்புலவயங்கள்வயமாகாப்
பாகனையறிந்தபரிபோலமனனத்தே
யாகுமதியாளனையறிந்துவயமாமால். (ச)

அங்கியைந்தினுளருந்தவமொருகான்மேனின்று
பங்கமில்பதினாயிரத்தாண்டுபண்ணுவதுந்
துங்கஞானயோகத்துணர்மாத்திரையதனி
லங்கொராயிரங்கூற்றிலொன்றதற்குநேரலவால். (ரு)

வாசபேயநூறுயிரமசுவமேதந்தான்
பேசிலாயிரங்குறைவறப்பேணியேசெயனு
மாசிலாதமெய்ஞ்ஞானயோகுறுமோர்மாத்திரையி
லாசிலாப்பதினறிலொன்றுக்குநேராகா. (சா)

ஞானயோகம் - முற்றிற்று.

ஆ திருவிருத்தம்-எ௬௨.

ஞானபலம்.

:o:

பிரமகீதை.

விழுமிதாமயமேதங்கள்செய்யினும்
பழிமிகும்பஞ்சபாதகம்பண்ணினு
மொழிவுறுமலொன்றேயென்றுணருவா
னழுவிநானந்தன்மையுந்தின்மையும். (க)

ஏறியகோடிமாமறையோரையீறுசெய்பாவமாமதனோடு
கூறியநூலதாயிரகோடிகோவதையாகுபாதகமோடு
வேறுளதாகுபாதககோடிமேவினுமேவுமோர்கணப்பொழுதி
னீறதுவாகுநீடியஞானநீள்வலியாலதாரறிவார்கள். (உ)

எட்டனவினைக்குறையதெய்திநரகென்னுஞ்
சிட்டமறையோகமுடியாதுசிதைவுற்று
விட்டபடைகற்படையதாயிவ்வுடல்விட்டு
விட்டகுறையோகடையும்வீடுபுகுமென்று. (௩)

ஞானபலம் - முற்றிற்று.

ஆ திருவிருத்தம்-எ௬ரு.

ஞானயோகநழுவல்.

—:o:—

படியிலாஞானயோகத்தைப்பயில்வோன்பயின்றவப்பரமயோ கந்தான், முடிவுபோகாதேயிடையிலேயிறந்தான்மொழிந்தநற்பத மெலாந்துய்த்துப், படியிலேயுயரப்பிறந்தெலாம்பெற்றுப்பரம யோகத்தவர்சார்வுற், ருெடிவிலாயோகான்முத்திகண்டிந்தவுடம் பொடேவுடம்பொழிந்திருக்கும். (க)

ஞானயோகநழுவல் - முற்றிற்று.

ஆ திருவிருத்தம்-எ௱௬.

பிராரத்தவிவேகம்.

—:o:—

அறிவாலேயறியாமையழிகையாலேயனற்றுதிசெய்வினைமே ல்வினைபோமானு, லிறவாமலிவ்வாக்கைமுன்புபோலேயிடரின்ப நுகருவதிங்கென்றுனென்னி, லுறவாகாக்காரணத்தைமீண்டொ ன்றுதேகாரியமாயொழிவனவுமீண்டுமென்றிப், பிறவாதேநிற்பன வுமுளவியாக்கைபிறந்தபடியேபிரியும்பின்புகூடா. (க)

காரியமாவதன்முன்னுமானபோதுமழிபொழுதுங்காரணரூப மாம்பித்தி, கூரியவேனிற்பதுவுங்குழம்புமானுற்கோமலமாகாசத் தின்குறடுமாகா, சீரியநெய்தயிர்வெண்ணைபாலுமாகாதெளியறி வாற்சிதையுமறியாமையாகா, காரியமாமுடலெடுத்தகருமந்துய் த்துக்கழிவதலாலறிவதனுற்கழிந்திடாதே. (உ)

கெட்டுமறியாமைகெடலின்றியதுபோல
பட்டவுடல்பாவகனைந்தபடமேலங்
கிட்டமணதேகலமியற்றியகுலாலன்
விட்டும்விசையத்திகிரிவீடுதகைவுண்டோ. (௩)

பிராரத்தவிவேகம் - முற்றிற்று.

ஆ திருவிருத்தம்-எ௱௯.

முத்திகாரணம்.

—:o:—

பிரமகீதை.

சுருதியுமிருதியுஞ்சொன்னவாறுமின்
றிருமையுமளித்தமென்றேதும்விட்டுநற்

குருவினைவழிபடிற்கோதிலாவவ
னருளிடுமழிவறநின்றவப்பொருள். (க)

முத்திகாரணம் - முற்றிற்று.
ஆ திருவிருத்தம்-எசo.

முத்திசாதனம்.

:o:

தேசிகன்பதநற்சேவையின்வலியுந்திகழ்பதத்தளவிலாவன்பு
மாசினன்முத்தியதில்விருப்பதுவுமமலவாரணத்தினில்விருப்பு
நாசமாமிந்தவுடலினில்வெறுப்புநசையறவிடயத்திலுவர்ப்பு [மே.
மீசனெப்பொருளுமென்னுநற்றுணிவுமிவையெழின்முத்திசாதன

திகழுநற்குரவன்றிருவுளம்பார்த்துச்செய்யுமேவற்சிறப்பது வு, மகிழுநற்குரவன்மருவுநற்பதியேமன்னிநீங்காதவாதனையும், புகழுநற்றமரும்பொன்முதற்பொருளும்பொருந்துநோயெனமதி த்திடலுந், தகைவுடைச்சமைவுஞ்சாந்தியுமுத்திசாதனமென்பர்த க்கோரே. (உ)

முடிகவித்துலகாள்திருவிகழ்ந்திறைவன்மொய்கழல்சூடுநற் றிருவும், படிதனக்கேவல்செய்பதமிகழ்ந்துபரமனுக்கேவல்செய் பதமு, மடையுநற்சுவைகளனைத்தையுமிகழ்ந்திங்கமலனற்சேடமா ருதலு,மிடையறத்திகழுமுத்திசாதனமென்றிசைத்திடுமெல்லையிலா ரணமே. (ங)

துரிசினற்பாரம்பரியமாமுறையிற்றுகளறவழிவிலாத்துணி வும், பரிவுறக்குரவன்பாதமேநோக்கிப்பழுதறப்புகழுபண்பதுவு, மரியநற்குரவனருளறம்பொருளோடின்பம்வீ டென்னுமாண்மை யதுந், தெரிவுறத்திகழுமுத்திசாதனமாய்ச்செப்புவர்தெய்வஞானி களே. (ச)

முத்திசாதனம் - முற்றிற்று.
ஆ திருவிருத்தம்-எசச.

ஆசிரியன்லட்சணம்.

:o:

பிரமகீதை.

உறவதுதனில்வேறுயுளதலவதுநேரே
பெறவருள்பெரியோனேபெருகியகுருவாவா

னெறியுடலுளனாவானிலைபெறவழிபாடே
செறிபவனருளாலேசிவகதியடைவானல். (க)

உண்டுபோற்றோன்றுமுலகெலாமுண்மை யன்றெனவுணர்த்தியெய்ப்பொருளுங், கண்டசான்றதனைக்காட்சியதறவேகண்டிடக்கரியெனக்காட்டும், பண்டைவேதாந்தவாக்கியஞ்சொன்னபடியிலேபரமனேடொன்றாய், விண்டிடாவண்ண முணர்த்துவான்றன்னைவியன்குருவென்றிடும்வேதம். (உ)

காட்சியையெல்லாங்கண்ணதாய்க்கரைத்துக் கண்ணொழிந்தொருபொருளில்லா, மாட்சியையளிக்கவல்லவன்குருவா மாரிபோன்மாறுவேண்டாதே, மீட்சியில்பதத்தைக்கருணையாலளிக்கும்வித்தகக்குரவனேயெவருந், தாழ்ச்சிசெய்தேத்தற்குரியதத்துவமாஞ்சங்கரனென்றிடத்தகுவான். (ங)

உடறனதுருவமென்றுணர்ந்துவந்தவன்
றிடவறிவெனதுருவென்றுசெப்பிட
வடியிணைமலர்கடந்தக்கணத்தருள்
கடனதுவுடையவன்கருணைநன்குரு. (ச)

கரையறபிறவிவெங்கடலுளேவிழுந்
தயர்வுறுதுயருழந்தவரையொவென
விரைவொடுவினைகெடநோக்கிவேதகக்
கரையிணையருள்பவன்கருணைநன்குரு. (ரு)

ஆய்வொடுகலைகள்மற்றறிவிலாதருங்
காயமதுருவெனக்கருதிடாவகை
யோய்வறுமுணர்வுளத்தொளிரவேயரு
ளுயகளவனைநற்குரவராவறி. (சு)

ஆசிரியன்லட்சணம் - முற்றிற்று.
ஆ திருவிருத்தம்-எ௰.

ஆசிரியன்பெருமை.

:o:

பிரமகீதை.

மருவிவருமாயவிடயமயலாவிம்மநுடர்மரணுதியிடாரு, வெருவுபவவேலைவிழுவரழியாதவிமலசிவஞானவிழிபெரு, ரொருபிரமஞானமொழியவொருகாலிவ்வுததிகரையேறவொணுமதோ,தெ

ருள்செய்சிவஞானம்வருவதிறைதாள்கள் செறியவருசேவைவலி
யினால். (க)

மேவுபாவம்வெல்லாதுமெய்ஞ்ஞானியைவென்றிடுமிவனெல்லாப்
பாவமானதுமாதலால்வேதனம்பண்ணவல்லவனான
தேவதேவனுந்தேசிகன்றனக்குமுன்செய்பொருளுடலாவி
யீவதேகடனிறைவவெம்பிரானெனவேத்திமெய்யிதயத்தால். (உ)

மாயவன்புலத்தெழாவகைதீர்ந்ததன்வாய்மையான்மயிர்க்காலா
பாயவின்னமுதிருசெவித்துணைவழிபாய்ச்சினான்பதுமத்தா [ற்
டாயுந்தந்தையுஞ்சுற்றமுமற்றுநற்றனமுமென்றடைவான்றன்
காயமுள்ளளவும்புகழ்ந்தேத்துவான்கற்றதோர்கலையாலே. (ங)

ஞானமாகியவிழியினாற்குருபரனயந்துநோக்கிடவுண்டா,மா
நுபூதியாதொன்றதுவேசிவனவதப்படியுள்ள, மேனிதான்வினை
யொத்தவப்பொழுதிலேவெளிப்படும்வெளிகாண, லானதேசிகன்
றன்னையப்பரம்பொருளென்னவாதரஞ்செய்வான். (ச)

தேசிகன்றன்றிருமேனிசிந்தைசெய்யச்சிவனைச்சிந்தித்தானுஞ்
செம்பொற்றாளிற், பூசனைசெய்திடவெங்குமாகிநின்றபூரணனையி
னிதாகப்பூசித்தானு, நாசமிலாச்சிவனுமநவின்றானுண்டநாயகன்ற
ன்றிருநாமநவின்றானுகி, வீசனையேயிகழ்ந்தானுங்கண்ணிற்காண
வெழுந்தருளுந்திருக்கோலமிகழ்ந்தானுகில். (ரு)

அழியாதபெருமையதாயறிவாகியளவிறந்த
வொழியாதபரம்பொருளுமுயர்குரவனருள்செய்ய
விழியாகிவந்துதித்துவிளங்குதலாலினிக்குரவன்
கழியாதபெருமையையாங்கட்டுரைப்பதெவனோதான். (சு)

ஓதரியகுருபரனுரைத்தலுமக்கணமொளிரு
மேதமறவுரைசெய்யாவிடத்தொளிக்குமருள்குறித்தே
யாதிசிவந்தேசிகனாருளேவலிவனென்ற
நீதியினாலிறைபெருமைநிகழ்த்திடலாமளவன்றே. (எ)

கழல்வைத்தவிடத்தினிலுங்கடைக்கண்பார்த்திடத்தினிலு
மொழிவுற்றவிடத்தினிலுமுழுதொழியாப்பரப்பிரமம்
விழியுற்றுமிகமுதலால்வேதகநற்றேசிகனை
ழிவற்றபெருமைசிவமல்லதுவேறறிவாரார். (அ)

பரன்பெரியரென்பர்பரன்றன்னையறிவிக்கும்
வரன்பெரியனென்னுமிதுமண்ணோரறியார்
பரன்சிந்தைமேவுமதுபாவிகளிந்த
வரன்றாணஞ்சென்னிமேல்வைத்தகாலன்றோ. (கூ)

ஆசிரியன்பெருமை - முற்றிற்று.

ஆ திருவிருத்தம்-எ௰௯.

அனுசிரியன்லட்சணம்.

சாதிமேலுறுதகைமையனுகிலென்சாத்திரவித்தாயென்
னோதுமாரணமுதல்வவிமுழுதையுமுறவுடையவனுயென்
போதமாமநுபூதியினிலையுறுபுரிவறியானென்னி
லாதிமாமறையோதிடுமவனனுசிரியனெனநின்றே. (க)

வெகுளிதங்கியவுளத்தினர்விகாரமேவிவிதரமொழிநாவா
முகளிதம்பொதிமுக்கதினர்மோகபோகத்தினின்மூழ்கிடுமூக
ரகளமொன்றியவறிவினிலநுபவமறுமவரறமோத
நிகளபெந்தனமெனவவரவர்தமைநீங்குகநெறிசேர்வார். (உ)

தாலமுமணலிற்குசையினிற்குளமுஞ்சசத்தினிற்கொம்பினுற்றனுவும், பாலுமானெற்றினுமையின்மயிராற்படமுங்கண்படையினிற்புணர்வாற், சூலுநீரெழுத்துமுமைசொல்வழியுஞ்சுடருமின்மினியினினெருப்பும், போலுமேபோதமின்றியேகுருவாற்புதல்வர்தாம்போதகப்படுதல். (௩)

அனுசிரியன்லட்சணம் - முற்றிற்று.

ஆ திருவிருத்தம்-எகூஉ.

பக்குவமகன்.

பிரமகீதை.

மிக்கசித்தராய்வன்னவாச்சிரமங்கள்விட்டுமேலாய்நின்ற
பக்குவர்க்கிதுபகரலாமல்லதுபகர்ந்திடப்படாதென்றுந்
தக்கதற்குரவன்றனைச்சிவனெனத்தானினைந்திடுவாருள் [க.
புக்கலாகுமிங்குரைத்தமெய்ப்பரம்பொருள்புரணமாய்வெளியா

காயவளவற்றதுயர்கண்டவனுளஞ்செந்
தீயினடுவுற்றவனுளஞ்சினவராவின்

வாயினுறுதேரையுளம்வாலுழுவைமுட்டித்
தாயவனுளத்தினனிதப்பும்வகைதேடும். (௨)

பக்குவமகன் - முற்றிற்று.
ஆக திருவிருத்தம்-௭௬௪.

அபக்குவரைவிடுதல்.

சித்தபாகம்வந்துருத்திமனத்தரைத்தேசிகன்கைக்கொளி
லத்தினாலவன்செய்தபாதகமெல்லாமருளிறைதனக்கேயாஞ்
சுத்தஞானமாம்வலியினான்மறுமைசேராவணந்துடைத்தாலு
மித்தராதலத்திகழுமாசதுதனையெத்தினாற்றீர்ப்பானே. (௧)

குலத்தினாலுறுபொருளினாலுறவினாற்கோதறும்வலிதன்னாற்
றலத்தினீறுதேர்தத்துவஞானநற்சத்துவர்தமக்கல்லா
னலத்தினான்மிகுகுருபரன்குணாகுணநாடினான்மூவாண்டு
சலித்திடாநிலையுடையபக்குவர்க்கலாற்றத்துவமருளாரே. (௨)

ஓரவினெஞ்சினர்க்கறிவருள்குரவனொளிமழுங்குமென்றிடும
ளவதுவோ, சோரமங்குறுமவனுளமதனாற்றானுமூரொடுநாடும
ங்கழியும், பார்புரந்திடுமரசனுங்கெடுமப்பாவிதன்குலம்பகர்வே
ண்டுவதோ, வாருநன்குடையருளினரவர்க்கங்கருளிடாரனைத்து
ங்கெடுமென்றே. (௩)

அபக்குவரைவிடுதல்-முற்றிற்று.
ஆக திருவிருத்தம்-௭௬௭.

புதல்வர்சரிதை.

போயாநல்லிளமைபுகுதமூப்பின்றி யிருக்கவெம்புலியொடுகா
டி, சீயமேல்கொள்ளச்செம்புபொன்னாகத்தேவர்கள்சொன்னவா
செய்யத், தோயமேனடக்கத்தீயிலேகுளிக்கத்தோன்றிடாதிருக்க
வேறொருவர், காயமேபாயவானமேபோகக் காணினும்விவேகி
னைக்கொள்ளான். (௧)

இச்சகமநித்தமெனவெண்ணியிதுபோலே
யச்சகமுமென்பதையறிந்தடையவிட்டு
ளச்சமதறக்கவலவாரியனடிக்கே
பிச்சுறவர்வீடதுபெறக்கருதலுற்றோர். (௨)

கண்முதற்புலன்களியாவையுமொடுக்கிக்காணவாகுலமுறக்கடிந்தங்,குண்மைகாணவிருப்பொடுயிர்க்கெலாம்பரிவுற்றுற்றசிற்றின்பத்திணையுவர்த்து,வண்மையாமுணவுவந்தவர்கண்டுவாட்டமுமகிழ்ச்சியின்றித், தன்மையாமுடம்புதான்றனதென்னுத்தன்மையன்றத்துவமுணர்வான். (௯)

புதல்வர்சரிதை - முற்றிற்று.
ஆ திருவிருத்தம்-எஎ௦.

சிஷ ஆசாரம்.

:o:

திறம்பெறநீராடாமுன்னீராடனின்றிடவிருத்தல்தான்கிடத்த, லுறங்குமுன் னுறங்க லுண்ணுமுன் னுண்டலுரையெனவுரையாமலுரைத்தல், அறம்பழியெவர்க்குங்கூறுதலருளாததுசெய்தலருளியபணியை, மறந்தனனென்றல்குருவலாற்றெய்வமதித்தல்செய்பவன்மகனல்லன். (க)

நேசநெஞ்சினுற்றனக்கதுநின்வலவாயினுநெறியென்றே
தேசிகன்திருவுள்ளமேசெய்குவான்செனித்திடுங்குலத்துக்கு
மாசதாகிலுமாச்சிரமத்திலேவமுவினுமுலகெல்லா
மேசிவீடினுமறம்புகழ்தனம்பிறவிழப்பினுமிடரேனும். (உ)

அருளறமங்கறைந்திடுதலறமலாதுரைத்தலறைபொழுதிலிடையுரைத்தலகங்கரித்தங்குரைத்தல், பொருளறிவுதானுரைத்தல்பொருளலாதுரைத்தல்புன்கோட்டிகொண்டுரைத்தல் பொடிவனவங்குரைத்த, விருளுறுமச்செவிசொல்லலேவவிஃசத்திடுதலிடமறியாதிறையருளிச்செயவுரைத்தல்வினவல்,தெருளுறுநற்குருகீர்த்தியல்லதுபாடிடுதல்தேசிகன்றன்சன்னதியிற்றீரவிடுமிவையே

ஆதனஞ்சயனம்வாகனமிதியடியத்திரங்குடையொடாபரண, மீதுவண்டயிலங்குளியொடுபூச்சந்தனமுதன்மேவியங்கிடுத, லோதுபல்லுருஞ்ச லொண்பதம்விளக்கல் லுரைத்தவெற்றிலேதினவிவைதா,ஞதிநன்குரவனரியசன்னதியிலடியவரறவிடுந்தொழிலே.

இறைவன்முன்பசிங்கிதமாகவந்திடுதலிட்டவேடத்திஞேடணைதல், கறையுறஞ்சாயைமிறைவன்மேற்படுதல்கடவுளினிழறன்மேற்படுத, லுறைதருதலத்தின்மேலிருந்திடுதலுளமுகமுகுளமாயிருத்த, லறைதருமமலனரியசன்னதியிலடியவரறவிடுந்தொழிலே. (௫)

போற்றுகைதவிர்தனுதன்பொருளினைப்புசித்தலீதல்
தூற்றுதரோடந்தன்னைச்சொன்னவைமறுத்தல்பொய்கள்
சாற்றுதல்குலமுங்கல்விதனத்தபிமானம்பண்ணல்
மாற்றுதல்கொடுத்தறன்னைமற்றிவைகுருவோடாகா. (சு)

நீரிடத்தினுங்கியிருளிடத்தினுநெறிகணிற்பயமுறுமிடத்துஞ், சேருட்குரவன்முன்புசேவிப்பான்றிகழ்ந்தமற்றுளநெறியவற்றிற்,பேரருட்குரவன்பின்புசெவிப்பான்பிறிதொருசிந்தையற்றிறைவ, னார்திருக்கழலிற்சாயைபோன்முன்பின்னுய்விடாரன்பினுத்தமரே. ()

தன்னுளத்தெழுதீங்குதனயகன்
முன்னுரைத்தினிமேன்முனையாவகை
சொன்னவப்பரிசேசுடவேண்டலா
லன்னவப்பதிவிட்டகல்வானலன். (அ)

எப்படிக்கிழாமவர்களேயெனினுமிறையுளத்தடைத்தவர்தம்மை, யப்பரம்பரமனென்றுளத்துணர்கவயன்முதன்மூவரேயெனினு, மெய்ப்படவிறைவன்றிருவுளமிலதேன்மீண்டுபாராதுகைவிடுக,செப்பிடவிறைவன்றிருவருணிறைந்தசீடராசாரனன்கிதுவே. (கு)

இப்பரிசிறைவன்றிருவுளம்பிழையாதிலங்கியவேவலின்வலியா, லெப்பரிசுள்ளசித்திகள்வலிகளிசைந்திடாவிற்குமங்கவர்பா, லப்பரிசெல்லாச்சித்தியும்வந்தாலகந்தையும்வியப்புமேவாமே, தப்பறவெனையாடம்பிரானேவற்றன்மையென்றருளினைப்பணிவாம். ()

கொல்லுநஞ்சமுதமாகுங்கொடியதீக்குளிருங்கட்டிக்
கல்லுடன்கடலிட்டாலுங்கல்லதேமிதவையாகுஞ்
சொல்விடப்பொழியுங்கொண்டலாயநன்குருமானுக்கு
நல்லவக்குருமான்சாலநானிலத்தரியானன்றே. (கக)

பரம்பரனேகுருமானேபழுதறவாரரியனெனி
லரும்பரமனெங்குமுளனெனுமதனுலரியனலன்
வரங்குருமானின்னவிடத்துளனென்னமறைமுடிவுந்
தெரிந்திடுமாறறிந்திலதாற்றிகழ்குருமானவனரியன். (கஉ)

பிரமகீதை.

தேசிகன்றிருவுள்ளமுண்டாகவச்சிவந்திகழ்ந்திடுகின்றுனீசனிங்கருள்செய்யவந்திருக்கிறவிடமிவன்றிருமேனி
மாசதொன்றிவனளவிலேசெயிலெரிவாய்நரகினிற்பூத
நாசமெவ்வளவவ்வளவுஞ்செலநண்ணுநன்னெறிநண்ணுன். (கங)

அருவெனுமமலன்றானருளிலனெனினுஞ்சார்
குருபரனருளுண்டேயெனிலொருகுறையுண்டோ
திருவடிதரவந்தார்திருவுளமிலரென்று
லொருவருமிலர்கண்டீருறுதுயர்களைகின்றார். (கசு)

இந்தவீடும்பையுடம்புறுமேது
தந்தையெனப்புகழ்கின்றிலர் தக்கோ
ரந்தமிலாதவகண்டமுநம்முட்
டந்தவர்தந்தையென்ச்சமைவுற்றார். (கரு)

வருபிறப்பறவேவேண்டினுன்மறையீறென்னுமம்புயத்தினை மலர்த்தற், கிரவியாய்நெஞ்சிற்கிசைந்தநற்குருவையாதொருவழியினுலிறைஞ்சி, யருள்சுரந்திடுதற்காவதேசெய்வானருமறைமுடிவெலாமறையும், பொருளைநேராகவுமக்கெனக்கீசன்புகன்றவப்படியிலேபுகன்றேன். (கசு)

சிஷ ஆசாரம் - முற்றிற்று.

ஆ திருவிருத்தம்-எ அசு.

சம்பிரதாயலட்சணம்.

அலைகடலெழுமன்பிற்கணுவெனமிகுத்தூக்கண்க
ளெலையிலாவாருயோடவெழுமயிர்ப்புளகம்வந்தங்
குலைவிலாதுருகவுள்ளமுரைதழுத்திறைஞ்சிநின்ற
நிலையனுமைந்தற்கீசனேயமுற்றிவணஞ்செய்தான். (ச)

திருவடிவிளக்குநீரார்சேயினைத்தீர்த்தமாட்டி
பரிவொடேயமுதுசெய்தபரிகலச்சேடநல்கி
பொருவில்சீர்க்கருணையாலேபுரையிலாவன்பன்றன்னை
வெருவுதீப்பிறவிமாளவேதகஞ்செய்யலுற்றான். (உ)

செங்கரத்தினைத்திகழ்செழுமலர்கொடுசிறுவனுக்குச்சியில்வைத்து
ப்பங்கயத்திருக்கண்களாலிறைமகன்பாசம்வெந்திடநோக்கி
யங்கையேற்றுதகத்தினுலுடல்பொருளாவிதான்கைக்கொண்டு
சங்கையற்றொழிவறநின்றதிருவடிதலையில்வைத்தருள்செய்தான்.

சம்பிரதாயலட்சணம் - முற்றிற்று.

ஆ திருவிருத்தம்-எ அக.

ஸ்ரீபாதத்துதி.

:c:

ஆதிமாமறைக்கரியதாகியே யமலவன்பருக்கெளியவார்கழ, லோதுவாதிகட்கிருளுமாயெனக் கொளியுமாயுளத்தொளிரும்வார்கழல், பூதபௌதிகப்பேதம்வாரியுண்புரணபூரணப்போதவார்கழ, லோதவாவிலாவென துசென்னியேயிடமதாவிருந்தருளும்வார்கழல். (க)

திருவுருவாய்வந்தருளைப்பொழியும்பாதந்திசைமுகன்மாலறிவரியசெய்யபாதங், கருவுறுமுற்பவங்கடியுங்கமலபாதங்கரையறுசிற்சுகவடிவாய்க்கமழும்பாத, முரையுணர்வைக்கழியமிகுத்துணரும்பாதமூலகுயிர்நற்பரமாகியொழிவில்பாதந், தெருள்புரிநற்றேசிகனூர்செய்யபாதந்தீவினையேன்சென்னியினிற்றிகழும்பாதம். (உ)

மாசற்றவர்தேடுந்திருவடிவாதற்றவர்கூடுந்திருவடி
தேசுற்றவர்காணுந்திருவடிசேர்வுற்றவரார்றுந்திருவடி
யாசற்றவர்பாடுந்திருவடியார்வுற்றவர்வாழுந்திருவடி
கூசற்றெனையாளுந்திருவடிகூறற்கருமீசன்றிருவடி. (௩)

உம்பர்மாமுனிவர்தேடியுணர்வரிதாயபாத
மிம்பராரின்றகற்றுங்கண்டிலாவெல்லையில்பாதம்
வம்பனேன்சென்னிமன்னுமாமலர்க்கமலபாதந்
தம்பிரான்சிவப்பிரகாசந்தாமரைசெய்யபாதம். (௪)

ஸ்ரீபாதத்துதி-முற்றிற்று.
ஆ திருவிருத்தம்-எகூ.

ஊனுயிர்வேறுபாடு.

:o:

நின்றிருக்கடைக்கண்பட்டார்நின்மலராகாதாரியா
ரென்றனைப்பொருளாவக்திங்கிணையடியளித்தகோவே
யுன்றிருக்கருணையாலேயூனுயிர்வேறுசெய்த
லென்றுநல்லோர்கூறுமிதனெறியியம்பிடாயே. (க)

ஞானமதுறவியல்பான்யாக்கையைத்
தானலதொன்றினைத்தானெனக்கொளு
மானிடர்மனதினின்மையறீர்வகை
யூனுயிர்வேறதாம்வகையுணர்த்துவாம். (உ)

பகவற்கீதை.

உடம்பெனவுரைப்பதுயிருண்பவைகளெல்லா
மிடம்படவிளைப்பதெதிர்காணலுறுமீதாற்
றிடம்படவுமற்றிவைதெரிந்துணருமெய்யைக்
கடம்படுமுயிர்ப்பொருளெனப்பகர்வர்கற்றோர். (௫)

அகவல்.

உழிதாலியைந்தபழிதாரகத்
தழியாவறிவன்கழியானுழியாச்
சேதனமின்மையிற்கடம்போலாதலி
னெய்யாவியற்றியதேவனவன்பொய்யாப்
புற்கலனென்பவொற்கமிலசேதன
மறிவுவறியாதசேதனமென்ன
நெறியறிபுலவரறிவறிவகையே. (௬)

பொன்னினுமணியினுங்குயிற்றிமனனுகு
மங்கதமகுடங்கடிப்பிணையென்ற
மகுடம்பாரமென்றறியாதார்
மென்றணிம்மமாமாந்தரின்மயங்கா
தம்மபூட்சியதலைநீகேட்டி
மொட்டத்தவனத்தகுந்தகுவைநேற்கொண்ட
முல்லைமுகையெனமெல்லென்றூர
லங்கைதாங்காதாற்றுபுமிசை
வுழியங்கத்தியாவதுமழியாதிங்
குயிர்விட்டதென்றுசட்டகம்புகழாக்
கட்டிலேற்றிக்கைதொழூஉப்பரவி
யிட்டிடைமகளிரெழுக்கச்சட்டென
வழல்வாய்ப்பல்பிணமருந்திமற்று
முருட்டணைப்பாயற்குருட்புகைமிளிரப்
பாவகத்தழுவிக்கொளனே
எதமிந்தினத்தியற்கையாக்கை
யென்றறிநீவிழித்தனை காணிவ்
வொழிப்பரும்பொறையெரிவிருந்தாய்
வீங்குநீண்டவரிதருகண்ணியர்
மதனனென்றுங்குவேற்றுமையுளதேற்
சாற்றுகமாற்றிரியாட்டிபாவையொ

டலாநிழற்பாவைகைகான்மெய்பிறி
தெவையும்பையத்தூக்கிற்றூக்கி
நெக்குயர்புயர்தலபொழியொடுசிவண
லென்னவறிவொடுநெறியுநெறிவருமுடலே. (நு)

தமனியந்தாளந்தாணையானை
மருமம்பாணிவதனநோக்கம்
பதமுதறமவெனவிசைத்தோரா
யமறவொருபுடையன்மைநோக்கி
யொருபுடைதாமெனமயங்கியேமுற்றோர்
மற்றறுவகையமைந்தவைவகை
யுண்டிமூவகைமுற்றியதனி
னிருவகைதாலாவுறுப்பிற்றங்கி
மேலாவிழித்தகுமலமாவெழித்தன
ரொன்றன்றிம்மலநீமற்றம்மல
நீயேலாகமாதியென்று
போகவறிவோர்க்கறிவன்வன்னிய
மென்பதறிவோயறிதியங்கம்
பிறிதுமிருகாலாழிக்கொளுமிடை
வீணுதன்டேனுரினவிண்டு
வன்னமருதகட்டின்மயிர்த்தோற்கிடு
கினசெகாக்கூவினர்த்திகிரியூர்வோன்
கொய்யுளைகொஞ்சிகுஞ்சாமையுக
யூருனர்செய்தியின்மதியே. (சா)

எற்புக்குப்பையைப்புக்குலத்துணைவை
நரப்புக்கருவியைதிரைப்பெருஞ்சேக்கையைப்
புன்புலவாரியைத்தன்புக்குறையுளை
யீருட்போர்வையைவேரின்விளைவைத்
தசைப்பெருந்திரளைநசைக்கினசெவிலியை
மூளைச்சேற்றைமுழுமலக்குழுவை
ஞாளிக்கிரையைப்பூளைப்பொதியை
யெண்ணினப்பெருமையைப்புண்ணின்பொற்பைக்
கொடுமைக்கோதையையடுசினத்தமலையை
மாசின்றேசைவழும்பின்வைப்பைத்
தோலின்வேலியைத்துகளின்றுப்பை

யெரிப்பெருங்கொள்ளையைநரிக்கிரையினியைப்
பெருநோயறையைக்கருநரைக்கமத்தை
குறும்பிக்கொண்டலையிறும்பற்குறவைப்
புழுப்பாசறையைவழுக்கார்திருவைப்
பஞ்சவிந்திரியப்பகர்க்காவஞ்சன
மதகரியடவியைவாஞ்சவாரணயை
நுரைவாயருவியைவாதவழுவைத்
தீதுகவணத்த
வெளிலைப்பித்தின்விளிவருங்குப்பைக்
குரைவிரியிருமற்றிரைவிரிபுரையைக்
காமச்சுமையைக்கவலைக்கொல்லையை
நாமத்தானைத்தீமைத்திறலை
யழுக்காறணையும்விழுப்பெருந்தேவை
யேமாப்பிரலைவிலங்கலைத்தீமை
யிருஞ்சுறவுகவித்ததிருந்திரும்பௌத்தை
மறத்தின்மன்னையழுக்கின்புக்கிலை
யிறப்பின்கேதனமிதனைமறப்பிற்
கொண்டனையானெனக்கொளலொழித்திண்டிறல்
மாயாவினையதாயேதேயாத்
தனுகரணபுவனபோகமெனும்வகை
யறிநனி துனியினிதுகவே. (எ)

சசிவர்ணபோதம்.

எனதாடைபொன்பூமகன்றையல்பாய்மா
விபங்கண்முகங்கால்கைமெய்யென்னவென்றந்
தனதாயுரைப்பான்வகுத்திந்தவூனத்
தானென்றயர்த்துஞ்சொலத்தக்கதன்றே. (அ)

கடக்குஞ்சரம்பண்ணியுண்ணின்றொருத்தன்
கைபாதகன்னங்கண்மெய்போலியக்குங்
கிடக்கும்நடத்தாவிடத்திவ்வுடம்புங்
கிடக்குமொருத்தனடத்தாவிடத்தே. (கூ)

நிலமாகும்வர்க்கென்றனெகிழ்கின்றநீரா
நெருப்பாமிதிற்சுட்டவெல்லாமுமனிலஞ்
சலமானபுரையானவானிந்தவுடலஞ்
சடமானவைம்பூதவுருவங்கடாமே. (கo)

ஒருகூறுமலமாகுமொருகூறுடம்பாகு
மொருகூறுமனமாகுமுண்டற்றவன்ன
மிருகூறுநீயாகிலொருகூறுநீயா
மிழிக்கும்மலஞ்சோரிடப்பட்டதுடலே. (கக)

தேயுமுடலுடல்போலப்புறம்புமாகிற் றெண்டுகொடுநாய் காக்கைகடியவேண்டு, நீயுமெனதென்றிருத்திசிலநாளித்தைநெற் றியிலேயடியிட்டுத்தின்னுநின்ற, நாயுமெனதென்றயலோர்நாயை க்காயுநடுவுரைத்தேனுதலானம்பியந்த, மாயுமுடறன்னேநானென் றுகொண்டுமதிக்கைபிழைமதியுடையையாதலாலே. (க௨)

என்றபின்நயனமோநானன்றுகாணெவ்விடத்து
நன்றுருவிளக்குந்தீபம்போ லுநன்னயனமைந்தா
வன்றியுநின்றநா லுமறிவிலிந்தியங்களுந்தா
னென்றுமுன்னுருவமாகாவுணர்ந்திடவ்விழிபோலென்றே. (க௩)

சசிவர்ணபோதம்.

அழலுண்பொருள்களி லுண்பவைமுக்கூறதின்முதற்கூ
றணியென்புநடுக்கூறதுமச்சைக்கணியாகு
மெழில்கொண்டகடைக்கூறதுவாக்காயெழுமென்றே
யியனுன்மறையந்தங்களிசைக்கின்றனதாமே. (கச)

ஆயுநன்மனமேயாதலறிந்திடும்புத்தியாத
லேயுமுன்னுருவோவல்லவிவையுன்னூற்காண்டலாலு
மோயுமுட்கரணமாகவுரைத்திடப்படுதலாலு
மாயுமற்றவையுந்தீபம்போலெனமதித்திடாயே. (கரு)

ஒடுங்கலும்விரிவுமின்றியுடலினுக்குறுதியாய
திடம்படுபிராணனோநானுவதுசெப்பதன்று
மடம்படுபிராணவாயுவுயிர்ப்புயிராகுமாறே
னடங்கியசுழுத்திதன்னிலறிவிலதன்றியுங்கேள். (கசு)

மேவமைச்சர்களுடனுலாவியவுயர்வேந்தனைத்தெரியாதோ, தாவுயிர்ப்புயிர்ச்சாக்கிரக்கனவினிற்சரித்தலாற்றகவேது, மோவி ன்மற்றுணர்வாரதென்றுணர்ந்திடவுனக்கொணுதொழிந்தாலும், பாவுயிர்ப்புணர்விலாமைநற்சுழுத்தியிற்பாருயிர்ப்புயிரன்றே. ()

உறுதியாமுயிர்ப்புணர்வின்மைகரணமொன்றுமங்கிலாதொடுங்கலானுயிர்ப்போ, யுறுதியாமுயிர்ப்பொருளெனிலதுதானங்குலாவிடவவையடங்கிடுமோ, செறிவதானகாவலஞ்செய்போதரசன்சேனைநீங்கிடாதெனிற்கரணங்கட், கிறையதாமியல்பிராணனுக்கிச்சையாவிதுவுமங்குயிர்க்கரணமென்றறியே. (கஅ)

உயிர்ப்புயிர்க்கரணமாயிடிலவைபோலுயிர்ப்பொடுங்காததென்வினையா, லயிர்ப்பின்முற்பயனைக்கனநனவயின்றங்கவற்றுளவருத்தமாறிடுதற், குயிர்ப்பதுமுயிர்க்கக்கரணமொடுங்கவுயிர்சுழுத்தியிலுறங்கிடுமே, லுயிர்ப்பதுசடமாமுணர்வுநல்லுருவாமுனக்குருவன்றெனக்கருதே. (கக)

ஒடுங்கிடாக்கரணமுறங்கிடும்பொழுதிலுயிர்ப்பினைநிறுத்தவேண்டியதென், றடர்ந்தமுற்கருமபயனுகர்வளவுந்தொக்குடர்க்காவலாநிறுத்தி, யுடம்பினைப்பரித்தவருத்தமாறிடுதற்குயிருறங்கிடுமுறக்கத்தி, லிடம்படவுயிர்ப்புமிதுவதெனேகநாடியாலியங்கலார்காணே. (உ0)

சசிவர்ணபோதம்.

உண்ணும்புனன்முக்கூறதின்முதற்கூறுவர்நீரா
முதிரநடுவிற்கூறுகடைக்கூறபிராண
னெண்ணுமிதிலிருகூறவைநீயாயிடினன்றோ
விறுகின்றபிராணனதுநீயாகுவையிசையே. (உக)

ஞானசூளாமணி.

கண்டிடுமதிமானுத்மகமாய்க்கரணமாங்காரமற்றதனு, லெண்டருமனமும்புத்தியும்போலவிதுவனதுருவமன்றதனு, லுண்டுமற்றெல்லாத்துயருமுற்பவத்துக்குற்றகாரணமுமாமென்றே, மண்டுமற்றதனினியல்பினையறிந்தோர்மன்னியவுயிரதாய்மதியார்.

மெய்மொழிச்சரிதை.

உயர்ந்துளேனுலகினுனென்றெப்பெனக்காரோவென்று
பயந்துநோக்ககங்காரம்போற்பாசமற்றென்றுமில்லை
யியம்பிலவ்வகங்காரந்தானென்றுண்டவ்வளவுஞ்செல்லச்
சயம்புமெய்ஞ்ஞானஞ்சாராவென்றுகொள்சாற்றிலன்றே. (உஉ)

போதரத்தினுகரம்.

சாற்றியதன்மையெல்லாங்கூடியசங்காதந்தா
னேற்றுயிராமோவென்னிலிதமெனச்சங்காதத்தை

வேற்றுமையாங்கடம்போற்கண்டுவேருகின்று
போற்றலாலுயிர்வேறென்றேபொருந்திடும்போதமிக்கோய். ()

சத்தம்.

காணலாந்திரளிதெல்லாங்கடம்போலப்பிறிதொன்றில்லை
காணலாங்கடம்போலாமாறெங்ஙனேகலந்துநிற்கப்
பூணலாங்கலங்களாடைப்பூமாலைசாந்தம்போலக்
காணலாமின்னில்வேருய்க்கண்டிவைகாட்டலாற்காண். (உரு)

பகவற்கீதை.

அன்னவகையாலுருவழிந்துவருமாங்கே
யென்னுருவமாமறிவிறந்துபிறவாதாற்
பின்னதறிவானுடலழிந்துபிரிபோதுந்
தன்னதெனவேதுமோர்சலிப்பதறியானல். (உசா)

இல்லாமையினியல்கேளெழுகழுதாழியினிடையே
யல்லாதெழுபுனல்போலறிவுறவேயழிகுவதா
யெல்லாவகையினுமாய்வதிவ்வுருவேயறிவதுதான்
கொல்லாதழிகொலையானதுகுறுகாததனெறிகேள். (உஎ)

பிரமகீதை.

உடம்போதானன்றுடம்பிதென்றுணரப்படுதலாலுடம்பிற்
றிடஞ்சேர்பிராணாதியுமன்றுசெடமாய்க்காணுஞ்செய்தியினாற்
கடம்போலியாவனிவையனைத்துங்காண்பானவனேகர்த்தாவாய்
நடஞ்சேருடம்பினுண்ணின்றுநடத்துகின்றநானுவான். (உஅ)

வினவுற்றகேள்விக்குக்கேட்பானாகி மேவியகாட்சியில்விழித்துக்காண்பானாகி, மனனத்தின்மந்தாவாய்ஞானந்தன்னின்மதித்திடுஞாதாவாகிமன்னுகின்முன், சொனவத்தற்பரனாகுமவனில்வேருந்தோற்றமெலாமெய்யாகுந்தோற்றமன்று, நினையிற்றற்பரனேயிங்கெல்லாமென்றுநினைவதுவேநினைவானநினைவுநேரே. (உகூ)

இந்தியங்களிற்பொருளெனும்பரமனமிவற்றினும்பரமத்திற்
புந்திநற்பரமதினுமான்பரமெலாம்பொன்றியதெரியாமை
யந்தமானினும்பரமவ்வியத்தமாமதிற்பரம்புருடன்ரு
னிந்தமெய்ப்பரம்புருடனிற்பரம்பிறிதில்லைமேலிவனேயாம். (ஙo)

பொன்றவுடலைத்துணிசெய்போதுமிறைபொன்றுன்
கொன்றிடுதலுங்கொலையுறுந்தொழிலுமில்லா

னின்றுபெருமைச்சிறுமையிற்பெருகிநுட்பா
யென்றுமிதையக்குகையிலேயிலகுகின்றான். (ருக)

அந்தப்பரமேயெப்பொருட்குமாலம்பனமாவதுவதனைச்
சிந்தைக்கேறத்தெளிவுற்றான்செனியான்மரியாதொருதிசையில்
வந்துற்றிலனோர்வடிவுமிலனதனல்வரவுபோக்காகு
மிந்தத்தொழில்களொன்றுமிலனெங்குந்தானாயிருக்கின்றான். ()

நின்றுமுடனாறுமுடலின்றிநிகழ்வானைப்
பொன்றுமதனோடுமொருபொன்றுதலுறாத
னென்றுநிலையாயுலகமெங்குமொருதான
மொன்றையறிவானிடர்களொன்றிலுழலானல். (ருரு)

ஊனுயிர்வேறுபாடு - முற்றிற்று.
ஆகு திருவிருத்தம் - அஉரு.

உயிருண்மைதரிசனம்.

அழியுமொன்றனையென்வடிவதேயெனவு மைம்பெரும்பூதமா
முலகைக், கழிவிலாவுண்மைப்பொருளதேயெனவுங் கண்ணிடுகண்
ணிழந் துழல்வேனுக், கழிவிலா வுண்மைப்பொருளுயிரொழிந்தரு
ஞ்செட்மென்னவேபகுத்து, மொழிதருங்கருணைமேகமேயடியே
ன்மொழியும்விண்ணப்பமுங்கேளே. (க)

ஊனில்வேறாகிநின்றேயுயிரெனப்படுவதாகித்
தானலாலேதுமில்லாத்தன்மையாமறிவுதன்னை
யானெனாவுறவேகாணவநுபவத்தென்னைக்காட்டி
யூனிலாவின்பமுத்தியுத்தமாதந்திடாயே. (உ)

நனவொடுகனவுநற்சுழுத்தியென்றுள
வினவலிலவத்தைமூன்றினையுமெய்மையே
நனவினினன்குணர்ந்தவைகழிந்திட
வுனவருமுணர்வுமங்குணரலாகுமால். (ரு)

கனவதுசெலவொடுகலவிநன்கழிப்
பெனவொருமூவிதமிதனிற்செல்லறன்
பனவதுவிறுவெனபரத்தலாங்கலப்
பனவதுவிறுவெனவாகித்தோன்றலே. (ச)

தினையெனவுணர்ந்ததிற்கலந்தபோதுமற்
றெனவொருபிறழ்விலைச்செல்லலெங்ஙனே

சொனவொருபொருளதுற்றுணர்கணமற்றதிற்
பினையெழுகடைக்கணுக்கதனிற்போதலால். (௫)

இதுவிதுவெனப்பகர்ந்தெழுந்துசெல்லலா
லதுவதாயலதழிவழிவதாகுமா
லிதுநனவிதுவறவிவண்மீண்டிருந்
தெதுவுனக்கிருந்தவாறியம்புமைந்தனே. (௬)

பொறிபுலன்விடயமாநனவுபோயிட
நெறியுறமீண்டிருந்தடத்துநின்மலா
பொறிபுலன்விடயமங்கொழிந்துபுந்திதா
னெறியுறுபந்தனையாகிநீடுமால். (௭)

பொறிபுலன்விடயமாய்ப்புரிந்தபுந்திதா
னறிவுறவிடயமற்றடத்தும்வாதனை
நெறியுறும்விகற்பமாய்நிகழும்பந்தனை
கறையுறுகனவெனக்கண்டுகொள்கநீ. (௮)

மனனதின்விகாரமாய்மன்னுபந்தனை
சொன்வணமிருந்திருந்தவாசொலாய்
நினைவ்துமிறந்துபின்னிகழ்வதொன்றுமற்
றினநிலாவின்மையாயிருந்ததண்ணலே. (௯)

விடையமாநனவதும்விடையவாதனை
யுடையதாங்கனவதுமொன்றுமின்றியே
செடிவிலாவிருளெனத்தெரிவதொன்றுமற்
றடைவிலாவின்மையாயிருந்ததண்ணலே. (௧௦)

கனாநனவிரண்டிலாக்கருதபாவமாஞ்
சொனதெரியாமைதற்சுழுத்தியென்றுணர்
மனமுதன்மற்றதில்விரிந்தடங்கலா
லினரிலாமாயையென்றிடவும்பட்டதால். (௧௧)

கனாநனவிரண்டினிற்கருதுபல்லுயிர்
வினவருபேதம்வெவ்வேறதாயிடுஞ்
சொனவருஞ்சுழுத்திவந்தொருமைத்தாலிது
பனுமுதற்பகுதியாம்பவாற்பீசமே. (௧௨)

எந்தையேயிந்தமூலப்பகுதிபோயென்னைக்காணத்
தந்திடாயமரர்காணுத்தாளிணைத்தந்தகோவே

யந்தனேனறிவொன்றில்லேனுதனென்றனையுமாள
வந்தவொண்கருணைவெள்ளவள்ளலேமதுரவாரி. (கந)

ஏதுமங்கிலாமையாகியிருளதாய்த்தெரியாதென்று
மீதுணர்பொருளேதுண்டோவில்லையோவிவணநீபார்
நாதனேயபாவமூலப்பகுதிநின்றுணரும்போத
மேதமதறவேயுண்டுண்டென்னையாளுடையகோவே. (கச)

சாற்றியபாவமூலப்பகுதிநின்றுணரும்போத
மாற்றவங்குளதேன்மூலப்பகுதிவிட்டதனைநீபா
ரேற்றியபோதமேயாயிறைவனேயீரொன்றின்றித்
தோற்றியேயறிவாய்நின்றுதுளக்கறவிளங்குமன்றே. (கரு)

இலங்கியவறிவேயாகியிருந்ததேனீமுன்கண்டு
மலங்கியமயலாமூலப்பகுதியைமதித்துநீபா
ரிலங்கியவறிவாற்பார்த்தவிடமெலாமிருத்தலன்றிக்
கலங்கியபகுதிகாணேன்கரந்தவாறறிகிலேனே. (கசு)

ஏற்றியதீபத்திட்டங்கிருளினைத்தேடலுற்றுற்
றேற்றருமொளியாயெங்குந்துகளிருள்தோற்றுதாற்போ
லாற்றியவறிவாயெங்குமறியாமைதோன்றுவண்ண
மாற்றியவந்தவிச்சைவளமிதுவிருந்தவாறென். (கஎ)

மையலோரிடத்துமின்றிமன்னியேதிகழும்போத
மையவிவ்வுடம்பின்மாட்டோவல்லவோவதனைநீபார்
பொய்யதாமுடலிற்றுக்கொன்றின்றியேபுறமுமுள்ளு
மையமதறவேயெங்குமாகியேநின்றதெந்தாய். (கஅ)

பின்பொடுமுன்புபக்கம்பெருகியநடுவுகீழ்மே
லென்பனவறிவுக்குண்டோவில்லையோவிசையநீபா
ரின்பமதுருவாயெங்குமுகமதாயொழிவற்றெங்கு
நன்குறுமறிவிற்காணேனவில்வுறமவைமற்றெந்தாய். (கக)

ஆதலாலெவையுந்தானேயறிந்தெங்குமாகியுள்ளா
யோதியவெவையுந்தோற்றியொழிவதுந்தன்னிலாகி
நீதியாலெவற்றுக்குந்தானீசனுய்நிகழும்போத
மேதமதறவெனக்குவடிவதாயிருந்ததெந்தாய். (உ0)

பண்டுநானெனதென்றெண்ணப்பண்ணியமாயக்கூட்டங்
கண்டிலேனென்னேயுன்றன்கண்வலியிருந்தவாறெ

னண்டனேயண்டர்கோவேயளவில்பேரறிவுதானே
யெண்டிசையேழுமேலுமெங்கணுநிறைந்ததன்றே. (உக)

பகைத்தெனைமிகையேபன்னாட்பண்ணியதொண்ணூற்றாறுந்
திகைத்தனமாயையார்செய்கிரியுந்தெண்பட்டதென்றே
நகைத்துநீபார்த்தபோதேநாதனேதுன்பநீங்கி
வகைப்பில்பேரின்பனானேன்மற்றுநானுரைப்பதென்னே. (உஉ)

மூப்பொறிபகைகளாறுமுக்குணங்குற்றமற்று
மெப்பொறிபுலன்களெல்லாமிரிந்தனவென்னைவிட்டே
கப்புறுங்கருத்துந்தீர்ந்தேன்கல்வியுமமைந்தநின்றே
யொப்புறும்வகையிலின்பத்துணர்வைநான்கண்டபோதே. (உங)

விரையுமாபூதம்விட்டுவேட்கைநோய்வெகுளியும்போய்த்
திரையிலாநீர்போலென்றன்சித்தசஞ்சலமுந்தீர்ந்தேன்
கரையிலாக்கருணைவெள்ளக்கடைக்கணீவைத்தபோதே
யுரையிலாவுணர்வதானேனுரைப்பதெனினிமற்றெந்தாய். (உச)

பொறிபுலன்கரணம்பூதம்புணர்ச்சிசெய்தளவில்காலம்
பிறியுமாவகுத்தமாயப்பேதைமையெல்லாந்தீர்த்துச்
செறியுமாறறியவின்பச்சீவனின்முத்திதந்தா
யறிவுமாயெவையுமாய்நின்றறிவுறுமண்ணலே நீ. (உரு)

ஆதனுய்க்காணுதன்னையளவிலாக்காலமெல்லாம்
பேதனுய்ப்பிறந்துழவந்தபேதைமையென்னேயென்னே
நாதனேஞானமூர்த்திநாதாந்தத்தலைவர்நின்றன்
பாதமாமறிவின்றன்மைபகருமாறறிகிலேனே. (உசா)

வஞ்சகம்பண்ணிமாயைவகுத்தபல்துன்பந்தீயிற்
பஞ்சிழையென்னப்பொன்றிப்பாறினபவங்கடானு
நெஞ்சகநிறையத்தந்தாய்நிகரில்போதானந்தத்தை
யுஞ்சனனடியேனுஞ்சேனுன்னருள்பெற்றின்றன்றே. (உஎ)

அறிவதுவடிவதாகியகமொடுபுறமுந்தானு
யுறுமுடல்கரணமாதியுலகினுக்கொழிவில்சான்று
யிறைவனேயிருந்ததென்னவிறைவனுமவனைநோக்கி
யறைவுறுதுரியமென்பதிதுவெனவருளிச்செய்தான். (உஅ)

உயிருண்மைதரிசனம்-முற்றிற்று.

ஆ திருவிருத்தம்-அருச.

துரியமகாத்மியம்.

---:o:---

தோற்றிநின்றொளிராநின்றதுரியநல்லுணர்வாஞ்சோதி
மேற்றிகழ்பொருளொன்றில்லாமெய்மையாம்வேதனத்தி
னேற்றியபெருமைதன்னையியம்புவராறிஞரெல்லாஞ்
சாற்றியவகையைநானுந்தகுவதாவறைகுவன்கேள். (க)

பிரமகீதை.

சத்தப்பரிசவுருவிரதங்கந்தாதிசமைந்தனமுதலா
யெத்தைக்கொண்டிங்கறிகின்றானதனையொழியவேதுளதா
மத்தற்பரத்தைக்கண்டிந்தவவத்தைமூன்றுங்காணுமை
சித்தித்திருக்குமவனலமூர்த்தீங்குமின்றித்திகழ்கின்றான். (உ)

அரியமாமறைவாக்கினாலுங்களுக்கறியவுமறைந்தேனன்,றெ
ரியுமாகின்மற்றவன்றெரியாமையைக் கடந்துபோய்ச்சிந்தைக்கு
ப்,பிரியமாகியபரப்பிரமத்தையேபெற்றுமேற்பிறவாமைக், குரிய
னாகுமென்றுரைத்தனனுணர்வினாலுலகெலாம்படைத்திட்டான்.

ஊனிலொருபற்றுமுளனன்றியுடனிற்கு
நானெனவிளம்புதனைநற்சிவமதாகத்
தானறியுமாகிலொருவன்றனுருவாகு
ஞானபரிபூரணநலந்தனையடைந்தான். (௩)

சாற்றியபிறவித்துன்பந்தந்திடுமவற்றைமூன்று
மாற்றவங்கவைதான்மாறியழிந்திடவ்வழிவொன்றின்றித்
தோற்றியவவற்றின்சான்றாய்த்துகளறுதுரியபோதம்
போற்றிமெய்கண்டோர்தங்கள்பெருமைநான்புகல்வதென்னே.

அருந்துயர்க்கிடமாயந்தகாரமேமூடியொன்றுந்
தெரிந்திடாதின்றிநின்றேதிகழுமாயைக்குமேலாய்
விரிந்தநற்போதமாகிவிளங்கிடுந்துரியமெய்யே
தெரிந்திடக்கண்டபோதேதிகழுநன்முத்தியன்றே. (௬)

மனத்தினிலொடுக்கம்விரிவாய்வருமவத்தை
யனைத்தையுமறந்தறிவதேவடிவுதானா
யினத்தையறநின்றதுரியத்தினையுணர்ந்தோ
ரனைத்தையுமறிந்தவர்களென்பதலதுண்டோ. (எ)

அவத்தையொருமூன்றையுமறிந்துகரியாயே
யிவத்தையுமறிந்தொளிருமின்பமறிவாகித்
துவக்கறவிளக்குதுரியத்தினையுணர்ந்தோர்
தவத்தலைவரென்றுமறைதானறையுமன்றே. (அ)

போதரத்தினாகரம்.

பொன்னைத்தான்கண்டவன்போற்புழுதியையரித்தெங்கண்ணு
மன்னித்தானுடன்மயக்கமாயைதத்துவங்களாய்ந்தே
யுன்னத்தானரியவிந்தவுருவுசைதன்யமாயுள்ள
தன்னைத்தான்கண்டவர்க்குத்தானென்றார்பிறப்புத்தானூர். (கூ)

மெய்மொழிச்சரிதை.

அறிகின்றிலாதவைஐயந்தேழுன்னு
மறிகின்றவென்னையறியாதிருந்தே
யறிகின்றநீயென்றருள்செய்தானந்தி
யறிகின்றநானென்றறிந்துகொண்டேனே. (கO)

தன்னையறியிற்றனக்கொருகேடில்லைத்
தன்னையறியாமற்றானேகெடுகின்றான்
றன்னையறியுமறிவையறிந்தபின்
றன்னையேயர்ச்சிக்கத்தானிருந்தானே. (கக)

என்னையறிந்திலேனித்தனைகாலமு
மென்னையறிந்தபின்னேதுமறிந்திலே
னென்னையறிந்தவறிவையறிந்தபின்
னென்னைவிட்டென்னையுசாவுகின்றேனே. (கஉ)

எல்லாமறிவதறிவுதனையிட்டே
யெல்லாமறிந்துமிலாபமங்கொன்றில்லை
யெல்லாமறியுமறிவினைநானென்னி
லெல்லாமறியுமிறையவனாமே. (கங)

துரியமகாத்மியம்-முற்றிற்று.

ஆ திருவிருத்தம் - அசுஎ.

துரிய தாடணம்.

—:o:—

உயருயிற்றூய்மைதன்னையுணர்ந்ததன்பெருமையாலே
மயலறப்பரமீதென்றேவாழுமற்றிடத்தைக்கண்டு

துயரதற்குளதுகாணத்துரியதூடணத்தையெல்லாஞ்
செயிரறுத்துயருமைந்தாய்ச்செப்புவன்றிகழக்கேளாய். (க)

மூன்றவத்தைகொள்பவன்றான்முழுதுணர்வங்கறியானு
லேன்றவத்தையுள்புக்கங்கிறந்துபிறந்தேயிடுமாற்
சான்றவத்தைத்துரியமதுந்தற்பரமன்றுதலினு
லான்றவத்தைப்பொருளெனிலுமாகியிடும்பிறப்பிறப்பே. (உ)

துரியமாமுணர்வதுதான்றனையுணர்போதுணர்வேயாம்
விரியவேயுலகுணரில்வீடாதசான்றதுவாம்
புரியவேபரமதனிற்போயுணர்வுஞ்சொருகிடுமித்
துரியமேபெரியதுரிதங்களெல்லாந்தோற்றிடுமால். (ங)

கரணங்களுடன்வந்துகாணியெனநின்றமையாற்
கரணங்களழிந்திடத்துங்கழியாதவாதனையா
லரணங்கொளறிவென்றன்வடிவென்றங்ககமிருத்திப்
புரணங்கொள்துரியமதுபொருளென்றல்புலரயென்றே. (ச)

போதரத்தினகரம்.

எதுக்குமுள்ளாமென்றுமேதுநின்றறியுமென்று
மேதுக்குமிறையதாகியெங்குமாயிருக்குமென்று
மேதுக்குந்தோற்றநிற்றலிறுதிதன்கண்ணதென்று
மோதுற்றவிகிர்தபாவமுணர்வுறிற்றுரியத்துண்டோ. (ரு)

சுத்தமாஞ்சிவனுண்மைதுகன்மனமுதலைவிட்டு
நித்தமாய்ச்சான்றும்போதமெனமறைநிகழ்த்தலாலுங்
கத்துருபாவமுற்றிங்கருத்தினிற்காண்டலாலு
மித்திறத்துரிசுநீங்கியிருப்பதுபரமென்றோராய். (சு)

போதாமிர்தம்.

செப்பருஞ்சிவாகமத்துச்சிவனருள்செய்தநீதி
யொப்பரும்பசுவினுண்மைவடிவமொண்டுரியமென்று
மப்படிபசுவினுண்மையகமுறக்கண்டக்காலு
மெய்ப்படுசிவத்தோடொன்றுவிடிற்பவமேவுமன்றே. (எ)

அநுபவசித்தி.

காய்ந்தவிரும்புகனலையகன்றாலும்
வாய்ந்தவளலெனவாதனைநின்றாப்போ
லேய்ந்தகரணமிறந்ததுரியத்துத்
தோய்ந்தகரணத்துரிசகலாதே. (அ)

தன்னிலையோராதுடலைமுன்றுனென்றுன்
தன்னிலைகண்டான்றுரியத்தனைக்கண்டா
னுன்னுதுரியமுமீசனொடொன்றுக்காற்
பின்னையும்வந்துபிறந்திடுந்தானே. (கூ)

துரியதூடணம் - முற்றிற்று.

ஆ திருவிருத்தம்-அளசு.

அதீததரிசனம்.

அண்டனேயமரரெல்லாமியாவனதென்னையாண்ட
கண்டனேதுரியத்துள்ளதுகளெல்லாங்கண்டுகொண்டே
னெண்டிகழிதற்குமேலாமெலையிலாப்பதத்தைநாயேன்
கண்டுகொண்டிடவேயங்கைக்கனியெனக்காட்டிடாயே. (க)

ஞானனந்தசித்தி.

அப்பரிசறிவருபொருளையங்கையி
லொப்பருமணியெனவுணரக்காட்டிடக்
கப்புறுகருத்தெலாந்தீரக்கண்டுகொ
ளொப்பமைவொன்றிலாவுணர்வினுத்தமர். (உ)

பிறிவகமென்றுநின்றபிறிவறவறிவஃனுற்போ
லறிவகமென்றுநின்றங்கறிவுறமிருதிவீட்டி
னெறியுறவிருந்துபார்த்துநிகழ்ந்தவாசெப்புகின்று
னறியுறவொருவராலுமரியதாளுடையவம்மான். (ங)

இருந்தவாறியம்பவென்னுலேதுமென்றறிதியாவுங்
கரந்துபோமிறந்துகாண்டல்காட்சிமற்றென்றுமின்றி
நிரந்தவானெனவிகாரநீத்தசிற்பெரியபாழா
யிருந்தவாறென்றருனுமியம்பிடற்கரிதேனெந்தாய். (ச)

அறிவறியாமையென்னுமிரண்டையுமொழிந்துதன்னிற்
பிறிவறியாதுநின்றபேச்சறுநிலையேயாகி
யிறுகலாயியம்பற்கங்கொன்றின்றியேயிருந்ததென்னும்
பிறிதுரைதானும்பேசுமிடத்தலாற்பிறிதங்குண்டோ. (ரு)

சுழுத்தியாம்புலனுணர்வடங்குந்தன்மைய
தொழித்துணர்துரியமாமுணர்வுந்தானறக்

கழித்தறிவுடனறியாமைகாணும்ப
பழிப்பிலாப்பதத்தையென்பகரும்வண்ணமே. (சு)

தானெறிவகமெனுந்தன்மையுங்கழன்
றேணுயபொருளவையேதுமின்றியே
தானின்வணமெனச்சாற்ெறுணுவிது
வூனமிலதிதமென்றுணருமைந்தநீ. (எ)

அதீததரிசனம் - முற்றிற்று.

ஆ திருவிருத்தம் - அஅரு.

வியோமமகாத்மியம்.

---:o:---

நித்தியானந்ததரிசனம்.

நனவிடைத்துரியாதீதம்புரிந்தநற்றவரன்றே
வினையிடைப்பிறவிதன்னைவேரொடுங்களைந்துபோக்கி
மனவினைக்கெட்டாவின்பவான்பரவமிழ்தாகின்ற
தனைமிகப்பருகியுய்யுந்தத்துவவித்தாகின்றார். (க)

ஊனமாமுடலந்தானுமொக்கவேயிருக்கமேலாந்
தானதாமுயிருந்தானேசாவாதுசெத்திருக்கு
மோனமாந்துரியாதீதமதுவினைமுழுந்தியார்ந்த
ஞானநாயகனேயீசனெனமறைநவிலுமன்றே. (உ)

சிவக்ஞானநிலையம்.

சாக்கிரத்தேயதீதத்தையுணர்ந்தவர்மற்றவரே சகலசங்கமுடனிருந்துஞ்சங்கமிலாதவர்தம், பாக்கியத்தைப்பகர்வதுவென்பண்டையுடலுடனே பார்தனிற்றுமிருந்தும்பாரொடுவிண்ணவரா, ஞேக்கியத்தையறிவரியவுணர்வு * முணர்வுடனேநுவல்வுறுபொருளவையுநொடிவரையிலிறந்தோர், வாக்கியத்தாலிதுவெனவுமரியபரம்பரமாமன்னியபாவனையுணர்ந்தமாதவராதலினே. (ந)

வியோமமகாத்மியம் - முற்றிற்று.

ஆ திருவிருத்தம் - அஅசு.

---

* உலகுடனே என்றும் பாடம்.

வியோமதூடணம்.

———:o:———

சுவாநுபவசித்தி.

நண்ணரும்பெருமையோனோநாதனுமதீதந்தன்னை
யெண்ணிடுமவத்தையோடைந்தெனப்படவெண்ணுவானேன்
கண்ணியமனத்தினாய்கனநனவொடுக்கம்போன்மற்
றெண்ணியவிரண்டும்போதவிகற்பமாவிசைத்தலாற்காண். (௧)

ஞானசித்தி.

அரும்பவநாசயோகாமவத்தையைந்தினுமேதெந்தாய்
திரிந்திடுமவத்தையைந்துஞ்செப்பிடிற்* பவயோகங்காண்
டெரிந்தவெவ்வகையாலென்னிற்சிறுவனேதிகழப்பார்நீ
புரிந்துயிர் துரியாதீதம்போய்ப்பிறந்திடுதறன்னை. (௨)

துரியாதீதஞ்சிவமென்னிற்சொல்லுமதீதத்துணர்வில்லைப்
பிரியாநிலையைப்பேர்ந்திடுமப்போதேபிறழுந்துரியமுமாந்
திரியாவுணர்வென்றுணர்வுற்றிருந்துசான்றுசாக்கியமாந்
துரியாதீதமிவனென்னாற்றுரிசில்சிவமாயிடுமோதான். (௩)

போதரத்தினாகரம்.

சொல்லுமதீதத்துணர்வில்லைசுவரிலெறிபந்தெனப்பெயரு
மில்லையொருமைத்தாமியல்பத்தாலேயிதுவும்பாவனையாம்
நல்லபரந்தானொருமைத்தேநலமாமதீதஞ்சிவமாமோ
வல்லலதீதந்தனின்முடிவோர்க்காகுபவத்துக்களவுண்டோ. (௪)

சிவனற்கரணந்தேகேந்தியாதிதிகழ்ந்தடங்கிடமதாய்விடயப்
பாவமற்றபாவகாரியவுபாதிபகர்வருஞ்சுழுத்தியேபோல
வீவினற்பரத்தின்விகிர்தபாவங்கள்விரிந்தடங்கேதுமற்றதுவாந்
தாவிநற்பரமாபாவமாமதீதம்பர†தனைமறைவுடலெனுமால். (௫)

ஞானசாரம்.

நனவொடுகனவேநன்கெழுமொடுக்கம்ஞானமாந்துரியமற்ற
தீத, மெனவிவையைந்துமவத்தையாமாறியழிதலாலிவைபரமன்
று, லுனவருசிவந்தானவத்தையோர்காலுமின்றியேயொருமை
யாய்நிகழுந், தனதியல்பரன்றனாகமமெல்லாந்தானெழில்பெறவ
றைந்திடுமால். (௬)

---

* பாவயோகம் என்றும் பாடம்.

† தனைமறைத்ததுபரவுடல் என்றும் பாடம்.

துரியாதீதமாயோனிதுகடீரிறுகல்மாமாயை
யிரியாவரனம்பரவுடன்மற்றெழிலார்சத்தியெல்லையில்பாழ்
திரியாவறிவன்சிற்கனனற்செகவித்தீசன்சீவனிடைப்
பிரியாவிடையீடெனவிதற்குப்பேசும்பரியாயப்பெயரே. (எ)

திருவாய்மொழி.

குறுகமிகு * முணர்வொத்துடனேக்கியெல்லாம்விட்ட
விறுகலிற்பென்னும்ஞானிக்குமப்பயனில்லையே
சிறுகநினைவதோர்பாசமுண்டாம்பின்னும்வீடில்லை
மறுகலிலீசனைப்பற்றிவிடாவிடில்வீடிலதே. (அ)

திருமந்திரம்.

துரியமடங்கியசொல்லறும்பாழை
யரியபரம்பரமென்பர்களாத
ரரியபரம்பரமன்றதுதிக்கு
மருநிலமென்பதையாரறிவாரே. (கூ)

வியோமதூடணம் - முற்றிற்று.
ஆ திருவிருத்தம் - அகரு.

பரசொரூபலட்சணம்.

—:o:—

மெய்ஞ்ஞானவிளக்கம்.

பொறியுறுகரணமெல்லாம்பொன்றிடஞ்சுழுத்திபோத
நெறியுறுதுரியமந்தநிகழ்வுமங்கிறந்தநேர்மை
யறைவுறுமதீதந்தானுமருத்தமன்றுகின்மேலாங்
குறியறிபொருளின்றன்மைகுரவனேகூறிடாயே. (க)

அறிகின்றவறிவுதன்னையளக்கின்றபுலனென்றஞ்சிச்
செறிகின்றகாரணத்திற்றெளிகின்றபோதமொன்றிக்
குறிதன்னைக்கடந்துநின்றகுறைவிலாவமுதந்தன்னைப்
பெறுதவஞ்செய்தார்க்கன்றிப்பேசிடலாவதொன்றே. (உ)

வேதமோடாகமங்கள்விரிஞ்சன்மாலாதியெல்லா
மீதெனவுணர்தற்கெட்டாவெல்லையிலாவானந்தத்தை
யேதுதான்மொழிவதின்றத்திலக்கணமெனக்குன்றன்மேற்
காதலான்மொழியலுற்றேனதனைநீகேருதுமைந்தா. (ங)

---

* உணர்வொத்திடநோக்கி என்றும் பாடம்.

பிறியப்படுமிவ்வவத்தையெல்லாம்பிறகிட்டெவைக்குமுன்னுகி
யறியப்படுவதொன்றின்றியறிவாந்தன்னைத்தானறிந்து
குறியுற்றிதுவென்றிடலதனைக்கடந்துகுறையாநிறைவாகி
நெறியுற்றெல்லாந்தானுகிநிகழும்பரமனுநிமலன். (ச)

குறியன்றுநெறியன்றுகுணமன்றுகுணியன்று
பிறிதொன்றுமதுவன்றுபெரிதன்றுசிறிதன்று
புறமன்றதகமன்றுபுதிதன்றுபழைதன்று
வறிவென்றுமறிகின்றபொருளென்றதறிவொன்று. (ரு)

படியொன்றுமதுவின்றியடைகின்றபதமின்றி
யடியின்றிமுடியின்றியருகின்றிநடுவின்றி
வடிவொன்றுமதுவின்றிமனமின்றியுரையின்றி
யுடனென்றுமதுவின்றியுணர்கின்றபொருளொன்று. (சூ)

போக்கற்றதுவரவற்றதுபுரையற்றதுவரையற்றது
வாக்கற்றதுமனமற்றதுவடிவற்றதுபடியற்றது
நோக்கற்றதுநுணுக்கப்படுபொருண்மற்றொருபொருளின்
றூக்கற்றதுதனையற்றதுவெதுமெய்ப்பொருளதுதற்பரம். (எ)

தோன்றி.

ஒன்றெனிலொன்றாய்ப்பலவெனிற்பலவாயுளதெனினுளதென லாகி, நன்றெனினன்றாய்த்தீதெனிற்றீதாய்ஞானமுஞேயமுமென லா, யன்றெனிலன்றாயாமெனிலாமாயதுவிதுவதுமெனுமதுவாய், நின்றொருபொருளிற்பிறிதெனினதுவாய்ப் பிறிதற்றபெருமையே பெருமை. (அ)

சத்தம்.

நித்தநிர்க்குணநிரஞ்சனமனந்தநிரவயவம்பரமநிருபமரூபஞ் சுத்தமேகமானந்தநற்சோதிசாந்தஞ்சூக்கமக்கரம்தர்க்க, புத்தம் புராணமெய்ப்பொருவீநீர் பொருளாம்புலன்கடாமறியாப் போத நிரூப, மித்தனைத்திறமும்வேதத்தின்விளம்பும் விமலமாகியபரம மங்கிதுவே. (கூ)

திருவாய்மொழி.

நின்றவொன்றையுணர்ந்தேனுக்கதனுணேர்மையதுவிதுவென் [ச்
றென்றுமொருவர்க்குணரலாகா வுணர்ந்துமேலுங்காண்பரிதாய்

சென்றுசென்றுபரம்பரமாயாதுமின்றித்தேய்ந்தற்று
நன்றுதீதென்றறிவரிதாய்நன்ருய்ஞானங்கடந்ததே. (௧௦)

பரசொரூபலட்சணம்-முற்றிற்று.

ஆ திருவிருத்தம்-௧௦௫.

பரசொரூப அபேட்சை.

:o:

தத்துவசூளாமணி.

கைமாறென்றின்றியென்னைக்கண்டிருந்தருளியாண்ட
வம்மானேமுதலீறில்லாவகண்டசிற்சொரூபமாமுன்
செம்மார்பாதத்தைக்கண்டுதிளைத்திடவடியனேனுக்
கெம்மானேயருளியென்றனிருளினையறுத்திடாயே. (௧)

ஓவிலாதொருமைத்தாகுமுன்றிருப்பாதந்தன்னைப்
பாவியேன்கண்டுவாரிப்பருகுநாளென்ருேவென்ருே
வாவியேயமுதேதேனேயத்தனேயடியனேற்குத்
தாவில்சீரருளாலுன்னைச்சம்புவேகாட்டிடாயே. (௨)

அளவிலாப்பரமானந்தமாகுநற்பாதத்தேனை
யுளமெலாநிறையத்தேக்கியுய்ந்துநான்வாழ்வதென்ருே
தளர்விலாமறைகடேடத்தரணியிலுருவாய்வந்து
பளகனேன்றன்னையாண்டபரமகாருணியமூர்த்தி. (௩)

நீக்கொருபொருளுமில்லாநிமலவானந்தத்தேனைத்
தேக்கியென்னுள்ளமாரத்திளைத்துநான்வாழ்வதென்ருே
வாக்கமுமழிவுமில்லாவடியவர்களியாநின்று
ரேக்கறுகின்றநாயேனென்செய்கேனியம்பிடாயே. (௪)

வாக்கொடுமனமிறந்தமதுரநற்கனியேயென்றன்
பாக்கியபரிணுமத்தின்பழுதறுபயனேயுன்ற
னீக்கமிலடியாரெல்லாநின்னருள்திளைத்துவாழ
வேக்கறவைத்தகாலமெனக்கினிமுடியாதோதான். (௫)

திருவாசகம்.

மேவுமுன்றனடியாருள்விரும்பியானுமெய்ம்மையே
காவிசேருங்கயற்கண்ணாள்பங்காவுன்றன்கருணையினுற்
பாவியேற்குமுண்டாமோபரமானந்தப்பழங்கடல்சேர்ந்
தாவியாக்கையானெனதென்றியாதுமின்றியறுதலே. (௬)

அரைசேபொன்னம்பலத்தாடுமமுதேயென் றுன்னருணோக்கி
யிரைதேர்கொக்கொத்திரவுபகலேசற்றிருந்தேவேசற்றேன்
கரைசேரடியார்களிசிறப்பக்காட்சிகொடுத்துன்னடியேன்பாற்
பிரைசேர்பாலினெய்போலப்பேசாதிருந்தாலேசாரோ. (எ)

அறவேபெற்றார்நின்னன்பரந்தமின்றியகநெகவும்
புறமேகிடந்துபுலைநாயேன்புலம்புகின்றேனுடையானே
பிறவேவேண்டுமெய்யன்புபெயராவொழியாப்பிரிவில்லா
மறவாநினையாவளவில்லாமாளாவின்பமாகடலே. (அ)

கடலேயனையவானந்தங்கண்டாரெல்லாங்கவர்ந்துண்ண, வி
டரேபெருக்கியேசற்றிங்கிருத்தலழகோவடிநாயே, னுடையாய்நீ
யேயருளுதியென் றுணர்த்தாதொழிந்தேகழிந்தொழிந்தேன், சுட
ராரருளாலிருணீங்கச்சோதியினித்தான் றுணியாயே. (கூ)

பரசொரூபஅபேட்சை-முற்றிற்று.
ஆ திருவிருத்தம்-கககச.

பரசொரூபதரிசனம்.

:o:

மெய்மொழிச்சரிதை.

உம்பனேபரன்றனுண்மையொளிதருநிலைமைதன்னை
வம்பனேன்கண்டுவாழமலர்க்கையாமலகமென்ன
நம்பனேகாட்டிடென்னநலமிகுமன்பர்கண்ண
லம்பரநிலைமைதன்னையழகுறகாட்டலுற்றான். (க)

சொல்லியவியோமமர்யதுகளிலாப்பரமாபர்வ
வெல்லையுங்கழன்றமிக்கங்கெலையிலாப்பெருங்கணுகித்
தொல்லைநற்பரமதாநற்சோதியைப்பாராயென்று
மெல்லவேயுரைத்தானீசன்மிளிர்ந்ததுபரமதேயாய். (உ)

அறிவறியாமையென்னுமிருமையுமறவடங்கி
யிறுகலாம்பரமாபாவவிருளையுங்கழன்றமிக்குச்
செறிவுறுமறிவதாநற்பரத்தினைத்திகழும்வண்ண
மிறையொருமொழியளித்தானெறித்ததுபரமதேயாய். (ங)

நித்தியானந்ததரிசனம்.

சீவனுந்துரியம்போதந்திகழுநற்பரமும்போதந்
தேவனேயிரண்டுமுண்மைதெரிந்திடத்திருந்தவண்ண

மாவலூனதற்குப்போதமெங்ஙனேயிருந்தநேர்மை
சிவபோதத்துக்கின்பந்தெரிவரும்பரமுமஃதே. (ச)

ஆக்கமுமழிவுமில்லாவரியநற்பரத்தையங்கை
நீக்கிலாமணியேயென்னநிகழ்த்தினைமுன்னிகழ்ந்த
போக்கருமவத்தையொன்றும்புக்கவாகாணேனுன்றன்
வாக்கெனும்வேதகத்தின்வல்லபமிருந்தவாறென். (ரு)

இரண்டெனவிடைக்கிடைந்தவிருண்மாயக்கரையழிந்து
புரண்டதேயின்பமெங்கும்புறவெள்ளப்பட்டின்றன்றே
முரண்டுவண்டறைதார்மார்பாமுத்தனேமுத்தியெல்லாந்
திரண்டதோருருவேயுன்றன்றிருக்கடைக்கண்பட்டன்றே. (சு)

போதரத்தினகரம்.

பரந்தவப்பரிசுகாட்டிப்பரப்பறத்திரித்தல்காட்டித்
திரிந்திடத்தநுபவங்கள்கண்டுநான்செப்பக்காட்டிப்
புரிந்தவத்தன்மையெல்லாம்பொய்யெனவிழுங்கித்தானு
யிருந்தவித்தகத்தைநாயேனியம்புமாறறிகிலேனே. (எ)

வாரிக்கொண்டுன்னைவிழுங்குவன்காணிலென்
றார்வுற்றவென்னையொழியலெனின்முன்னம்
பாரித்துத்தானென்னைமுற்றப்பருகினான்
காரொக்குங்கார்க்கரையப்பன்கடியனே. (அ)

ஊன்றியுயிர்த்தடம்புருடனாகு
மூன்றுதுணர்ந்தடம்போதமாகுந்
தோன்றியபோதனுமென்றகண்ணுஞ்
சொருகவிருந்தடந்தொல்வியோமம். (கூ)

தொல்லைவியோமமேயாகியொன்றுந் தோன்றுதிருந்தவிருப்பைக்
வெல்லைகடந்தவியோமாதீதவிறையாமிறைவனருளினாலே. [காண
இறைவனருளால்வியோமாதீதவிறையாயிலகவிருக்குமாகி
னிறைவுகுறைவுநிகழ்வுநீக்கிநின்மிதமில்லாநிலையாங்காணே. (க0)

பரசொருபதரிசனம்-முற்றிற்று.

ஆ திருவிருத்தம்-கூஉரு.

விசுவக்கிராசம்.

———:o:———

போதரத்தினகரம்.

நற்சிவபரத்தையேகண்டுளமகிழ்தருஞானநன்முடிமன்னு
முற்சகத்தெனுந்தோற்றமென்செய்ததுமொழிகுவாயெனவீச
னச்சமுற்றுளங்குலேகுலேந்தஞ்சலித்தங்கணுவிண்ணப்ப
மிச்சகத்தெனிலிலேயிதமெனினும்வேறெறித்தமையுளதெந்தாய். ()

போதாமிர்தம்.

ஆதிமூலமேயடியவர்க்கமுதமேயகமிதமறநின்ற
போதருபமேபொய்யருட்பொய்யதாய்மெய்யருள்வெளிநிற்பா
யோதினுய்முனஞ்சகமநுபவத்தினிலொழியுமென்பதுவென்ற
நாதனேயதன்றிறமறிவுறும்வகைநல்குநானுய்யும்வண்ணம். (உ)

பிரமகீதை.

ஓதலுற்றபரனுலகனைத்துமுளதாவதப்பரமனென்றிடு
லாதலுற்றிலனனுதிமுற்றுமவனுலெறிப்பததிரேகமா
வேதனத்தவரனைத்துமத்துவிதமாய்விழிப்பர்விவிதத்திலே [ர்.
போதமற்றவர்விழிப்பர்மற்றவர்கள்போதமற்றவர்கள்புல்லியோ

இதுசகந்தானெனமுன்னிகழ்தலுண்டேலிவிதமெவர்களுங்கா
ணுமறிவே, யதுபரந்தானெனமுனநுபவந்தானடையுமதுபவந்தி
ருமறிவா, முதியசந்தோகவுபநிடதநின்றேதுபொருண்முழுதுமி
ங்கீசன்மொழியா, லதிசயந்தானமாரனைவருங்கூடவழகுறவறை
ந்தேனருளினல். (ச)

விடிலாவினைகள்கலேகண்முவைந்தாம்விடயவிந்தியவதிபதிகள்
நாடுசேதனனுஞ்சீவன்மற்றனைத்துநாதனுராலயநண்ணிப்
பாடுபேருருவமொன்றுமற்றந்தப்பரமனேயாய்விடும்பார்மே
லோடுமாறெல்லாமுததிபுக்கொன்றுயுருவுபேரொழியுமாபோல.

செறிவாயெங்குந்திகழ்ந்துள்ளசிவனுனென்னுந்திகழ்வுற்று
னெறியானிகழுநிகழ்வெல்லாநிமலமாயேநிகழ்ச்சிதரு
மறிவாயறியாமையுமாகியறிவிப்பவனுயறிவானுய்ப்
பிறிவாயுளதாயிலதாகிப்பிரமமொன்றுமேபிறழும். (சு)

போதரத்தினகரம்.

ஓதருமவத்தையோடங்குதையமத்தமனமில்லா
வேதமில்சிவமேயாகியெறித்ததுவிதமாம்வைய

மோதரும்வியோமத்தோடு துரியநன்கிறந்தாற்போலத்
தீதறச்சிவமேயாகத்திருமாறருள்செய்வாயே. (எ)

தெசையது பெத்தமுத்தஞ்சித்தமுன் றடைவேசெப்பில்
வசையுறுகாயந்தானுய்வையமெய்யாகும்பெத்த
மசைவிறுவறிவுதானுயகிலம்வேருகுமுத்தந்
தெசைமுடிவுலகுந்தானுந்தேசிகனருளிணையா. (அ)

என்சிரமிருந் துசெய்தவிருந்தவப்பயனேயென்றன்
கண்செய்பாக்கியமேமுன்னீகதித்தவத்தெசைகண்மூன்றின்
முன்றெசையிரண்டுஞ்சாலமொழிந்தவாறெக்குங்கண்டேன்
பின்றெசைமுடிவுகாணும்பெருநலமருளிடாயே. (க)

சத்தாதிகந்தமீருய்ச்சமைத்தாவிதமேதெல்லா
மெத்தாயவதீதமென்றற்றதீதமாய்விளங்கியோங்கி
யுய்த்தாயவுலகமுண்டங்கொளிதருசிவமேயாகும்
வித்தாரங்காட்டமைந்தன்வியந் துளமகிழ்ந் துவீழ்ந்தான். (க௦)

வியந் துளமகிழ்ந் துமென்மேன்மெய்மயிர்ப்புளகமெய்தி
நயந் துகண்மலக்கைநாண்மலர்தலைமிசையவாகப்
பயந் துநானுவிதத் துப்பிரபஞ்சமுமிறந் துபோய்மற்
றியைந்தபோததுவுங்காணுதிருந்தவாறியம்பலுற்றான். (கக)

ஞானஞேயமுஞாதுருவறிவதுமுழுது
மானபேருருவுகொண்டெனதுளமமரும்
ஞானநாயகனலமிகுதிருவுருவதுவே
யானவாரதுவதிசெயமதிசெயமிகவே. (கஉ)

ஓலிகளாயெழுமுலகெனும்விர்த்திகண்முழுது
மலகிலாவருளுருவுகொடெனதுளமமரு
நலவெனுயகனுருவலதுலகமதெனவே
யிலகுபோதுமிலையிலையதிசெயமிதுவே. (கங)

பரிசமாயெழும்விர்த்திசெய்பகருலகெவையு
மரசனுருயிரறிவுறுமெனதுளமமரும்
புரிசனர்புகழுருவலதுலகமதெனவே
வரைசெய்போதுமிலையிலையிதுவெனவளமே. (கச)

உருவமாயெழும்விர்த்திகளுலகெவைமுழுது
மரியவாரருளுருவுகொண்டெனதுளமமரு

முரியதேசிகனுருவலதுலகமதென்வே
யுரைசெய்போதுமிலையிலையதிசெயமுறவே. (கரு)

இரதமாயெழும்விர்த்திசெயுலகெவைமுழுதும்
வரதமார்திருவுருவுகொண்டெனதுளமருவுங்
குரவனூர்குரைகழலலதுலகமதெனவே
யுரைசெய்போதுமிலையிலையிதுவதிசெயமே. (கசு)

மணமதாயெழுவிர்த்திசெய்மருவுலகெவையும்
வணமிலாதொருவடிவுகொண்டெனதுளமருவுங்
குணமிலாதொருகுணகிரியுருவலதுலகென்
றணவுபோதுமிலையிலையதிசெயமிதுவே. (கஎ)

இதமுமீள்வுறுமகிதமெனிருமையுமறவே
யுதவுநாயகனருளிணையுனியுனிவியவா
வெதுசெய்தாயெனவறைவதுமறிகிலனிறைவர்
பதமதாகியபதுமவல்லபமெதுபகர்வேன். (கஅ)

உதையவத்தமனமின்றியொளிருநற்சொருபமாய
நிதியினைக்கண்டபோதேநின்மலாவிதுநாளெல்லை
யிதுவெனக்கண்டுவந்தயாவுமங்கொழிந்ததந்தோ
சதுமறைக்கெட்டாவுன்றன்சரணவல்லபமிதென்னே. (கக)

உணர்ந்திடாத்திசையிலெந்தாயுளதுலகெனமுன்கண்டே
னுணர்ந்திடத்துணர்வாய்நின்றேயுலகுசாக்கியமாய்க்கண்டேன்
புணர்ந்தவச்சகமுந்தானுய்ப்புரையறநிறைந்திப்போது
மிணைந்தமெய்க்கழலேயாகியிலங்குமாலென்னேயென்னே. (உ0)

விசுவக்கிராசம் - முற்றிற்று.

ஆ திருவிருத்தம்-கூசரு.

உபசாந்தம்.

:o:

ஞானயோகசமாதி.

இதமனிதந்தானின்றியிதமெனற்றதீதமாயே
பொதுவறப்புரியாநின்றபொருவிலாச்சிவத்தைக்கண்டு
விதிர்விதிர்த்தங்கமெல்லாம்வியந்துவாழ்மகனுக்கைய
ரதனிறக்கிரியையுந்தீர்வருட்சமைவளிக்கலுற்றான். (க)

பிறிவாமூலப்பகுதிபுமான்பிரமம்பெருகும்வியோமமெனச்
செறிவாமிருபத்தேழினையுஞ்சேரவிழுங்கித்திகழ்சிவமா
யெறிவாயுலகுந்தானேயாயெழில்கொள்செயலுமிறந்தவரு[வாம்.
ணிறைவாஞ்சமைவையளித்திடவன்னெறியின்விதத்தைநிகழ்த்திடு

செவியாதிசத்தாதியோரீரைந்துந்திகழ்ந்தவாக்காதிவசனுதி பத்துங், குவியாதமனமுதனுலெனநாலாறுங்குறித்தபுருடனுமவ னைவியோமந்தன்னிற், றவிராதுபிரிப்பதுகூட்டுவதாகுந்தற்பரசெ யலாங்காலபரத்தொடுவியோமம், நவைதீரமற்றவைகழறன்ஞால முண்டனவிலெவையுமிறந்திடநற்சமைவென்றூரே. (௩)

அறந்திகழ்மனத்தினுனேயறுநாலும்வெறுநாலென்னச்
சிறந்திடுமிருபத்தெட்டுந்தீர்ந்தநற்சமைவதாகி
நிறந்திகழுலகுந்தானுய்நிகழ்தருபுரணந்தானு
மிறந்தநற்பரத்தைக்கண்டுகொள்கெனவிறையளித்தான். (௪)

அறுநாலதுவும்வெறுநாலுமாகுநாலேழ்பதமதுவுங்
குறையாபோதப்புகநிறையாக்குறியின்பத்திருக்குரவ
னிறைவாய்நின்றபடிநின்றகழற்கேவியோமாதீதமதாஞ்
செறிவாயிதருமதீதமதாஞ்செயலுந்தீரத்தினைத்திருநீ. (௫)

இவ்வண்ணமருளிமேலொன்றியம்புதலிலாமையாலே
செவ்வண்ணவானமேனிக்கருணையேதிகழ்ந்துதோன்றக்
கைவண்ணவனலும்வேணிக்கங்கையுந்தரித்தகாமர்
மைவண்ணகண்டத்தோனும்மவுனமேகாட்டினனே. (௬)

தத்துவசித்தி.

வானமாதிமயக்கறவாய்மன
மானகோசரியாமலகண்டமாய்த்
தானிறைந்தொளிருஞ்சதிர்காட்டினன்
மோனமாமொழியான்முனிபுங்கவன். (௭)

செப்பருமுலகந்தானுத்திகழ்தரநிகழுகின்ற
வப்பெரும்பதமுந்தூலனனவெனவரியதானுந்
தற்பரானந்தவெள்ளச்சமைவதாநிறைவைத்தானே
யிப்பரிசிறைவன்மோனமொழியினுலியம்பினனே. (௮)

காச்சினையிறந்தபொன்போற்கருதுலகழித்துத்தானு
மாச்சறுபார்வையென்னுமதனையுமறநினைந்து

பேச்சினையிறந்தவின்பப்பேருபதேசந்தன்னை
வாச்சிடவிறைவன்மோனமொழியினுல்வழங்கினுனே. (க)

நித்தியானந்ததரிசனம்.

ஊனிறந்துயிரிறந்துளமிறந்துணர்வதான
தானிறந்ததகுபாவமுழுதும்பரமோடே
லானிறந்துமிகலொன்றிவயமுண்டபுரணந்
தானிறந்தபரமம்பதமிருந்தபடியே. (கo)

உபசாந்தம்-முற்றிற்று.

ஆ திருவிருத்தம்-கருரு.

சொச்சொரூபஅபேட்சை.

என்றவிண்ணப்பஞ்செய்தங்கிருகையுந்தலைமேலேற்றி
நின்றவன்பனுக்குநாதனிகழ்த்திடுநிமலமைந்தா
கன்றுகாரியமுமற்றைக்கருதுகாரணமுமன்றித்
துன்றுவாதனையுந்தீர்த்தாற்சுத்தநற்சொரூபமாமே. (க)

அருளுநாயகனுருயிர்வெளிப்படுமொருபாழ்
பொருளதாம்பரன்பொருளறவெளிப்படுமொருபாழ்
தெருளதாகியகுருபரன்றிகழுநற்சமைவா
மிருளிலாதசூழ்கீழ்மேலுமெலையிவிப்பெரும்பாழ். (உ)

என்றலாற்கரும்பாவமிறந்தநிருவாணம்போலத்
துன்றுகாரணபாவந்தான்றுடைத்தநிருவாணம்போல
நின்றவாதனையுந்தீரச்சமைவென நிருவாணந்தானு
மன்றியேநிகழுமென்னையாண்டவனரியகோலம். (ங)

ஒன்றொடொன்றொன்றுபாழாயொன்றின்மும்மூன்றதென்னக்
கன்றியமாயாபேதங்கண்டநுபவத்திற்றீர்ந்தாற்
றன்றியசுயம்பிரகாசத்தொலைவிலானந்தமாகி
யென்றுமோர்படியதாகியிருந்திடலாகுமென்றே. (ச)

உன்றனக்குவமைநீயாமுத்தமாவுன்றனுண்மை
நின்றவப்பரமசூக்கமேதுதானீசனுகு
மென்றெனைத்தேடியாண்டவியல்புதானேதியாவு
மொன்றுமற்றுன்வினோதமோருமாறறிகிலேனே. (ரு)

உன்னுமெல்லையுமொளிமறையாகமமுதல்கலையவையெல்லாம்
பன்னுமெல்லையுங்கடந்ததிதூரநற்பழுதறுசமைவாய்த்
தன்னையுங்கடந்தொளிர்வதுகுருபரன்றகுநிலைமையதென்ற
நன்னலந்திகழவல்லபநினைந்துளநடுநடுங்கிடுமெந்தாய். (சு)

ஒவிலாதொருமைத்தாகுமுன்றிருப்பாதந்தன்னைப்
பாவியேன்கண்டுவாரிப்பருகுநாளென்றோவென்றோ
வாவியேயமுதேதேனேயத்தனேயடியனேற்குத்
தாவில்சீரருளாலுன்னைச்சம்புவேதந்திடாயே. (எ)

அளவிலாப்பரமானந்தமாகுநற்பாதத்தேனை
யுளமெலாநிறையத்தேக்கியுய்ந்துநான்வாழ்வதென்றோ
தளர்விலாமறைகடேடத்தரணியிலுருவாய்வந்து
பளகனேன்றன்னையாண்டபரமகாருணிகமூர்த்தி. (அ)

நீக்கொருபொருளுமில்லாநிமலவானந்தத்தேனைத்
தேக்கியேயுள்ளமாரத்தினைத்துநான்வாழ்வதென்றோ
வாக்கமுமழிவுமில்லாவடியவர்களியாநின்று
ரேக்கறுகின்றநாயேனென்செய்கேனியம்பிடாயே. (கூ)

வாக்கொடுமனமிறந்தமதுரநற்கனியேயென்றன்
பாக்கியபரிணாமத்தின்பழுதறுபயனேயுன்ற
னீக்கமிலடியாரெல்லாமின்னருள்திளைத்துவாழ
வேக்கறவைத்தகாலமெனக்கினிமுடியாதோதான். (க0)

சொச்சொரூபஅபேட்சை - முற்றிற்று.

ஆ திருவிருத்தம்-கூசுரு.

சொச்சொரூபதரிசனம்.

———:o:———

மைந்தமுன்புகலிருவகைப்பாழியல்பெனலாய்
வந்தவெல்லைகண்முடிந்தவிம்மதிப்பரும்யாழை
சந்தமொன்றறவிமூங்கியசயம்பிரகாச
மிந்தகண்டிடென்றிறையொருமொழியினிலளித்தான். (க)

நனவொடுங்கனவொடுங்குதலிறந்துணர்வது நாடிமேலுறுப
ரங்கமழ்திறந்தநிவிறந், தூனவருஞ்சகமுமுண்டதுமிறந்துசமைவு
ண்டொப்பிலாதொளிருலப்பில்சுகசாகரமளித், தினமறும்பரமவி

ன்பவெளிநல்கியினிமேல்வினவறும்படிமுடிந்தநிலமிங்கிதுவெனு, வணையவங்கண்ணியம்புகலிறந்துபுதல்வனார் வங்குனர்நன்கினிதிருந்தருளினன். (உ)

காரணத்தினைவிழுங்கிவயமுண்ட பூரணக்கண்ணுமற்றிவண மென்றுகருதற்கரியவச், சீரணச்சமைவிறந்துதிகழ்நற்சவைவதாய்ப்பிரகாசவொளியுண்மையதளித், தேரணத்திகழுலப்பில்சுகசாகரமதாமியல்பளித்தினியியம்புதலிறந்தமுடிவைக், காரணத்தரொளிகாட்டினரிருந்தபடியெனுங் கண்டுகொண்டுறவிருந்தனனிருந்தபடியே. (ங)

சொச்சுரூபதரிசனம் - முற்றிற்று.

ஆ திருவிருத்தம்-கசுஅ.

அநுபூதி.

——:o:——

கண்டுகொண்டனன்முடிந்தபதநின்கருணையான்
மொண்டுகொண்டுமுடியாதமிகுபேரமுதமே
மண்டியுண்டுகளியமதுரவாரியேனை நீ
தொண்டுகொண்டவியல்சொல்லும்விரகேதறிகிலேன். (க)

அண்டமுன்றிகழ்பதங்களுமவத்தைகளுமா
யெண்டரும்படியிசைந்திடவிசைந்திடவினே
கண்டுகொண்டிடவுநீசெய்தவினோதமதெலாம்
விண்டொழிந்திடவுநீசெய்விரகேதறிகிலேன். (உ)

சொல்லிறந்தபரோட்சமுத்திரையிலினிதிருந்து
நல்லதன்முடிவினைநடித்தேயிறைகாட்டச்
சொல்லிறந்தநற்சுயம்பிரகாசவானந்த
மல்கியேயுளநிறைந்தெதிர்த்துக்கடைவிடுமால். (ங)

மவுனமுத்திரை.

பூரணந்திகழமுதமாய்ப்பொருவில்சிற்பிரகாச
மேரணந்திகழ்சுவையின்பஞ்சுவையினிற்பயனாய்ச்
சீரணந்திகழ்சிவப்பிரகாசவாரமுதன்
டார்வதன்றியப்பூரணத்தினையெப்பரிசறைகுவனன். (ச)

முப்பதங்களின்மொழிந்துறமுடிந்தபொருளா
மிப்பரம்பதமிருந்தபடியின்றறையுமா

றப்பவொன்றுமவிர்கின்றிலதந்தோவதிசய
முய்த்திருந்துவிடலன்றியினியொன்றுமறியேன். (ரு)

அநுபூதி - முற்றிற்று.
ஆ திருவிருத்தம்-கஎரு.

சுவாநுபூதி.

செப்பொணாதென்னுலத்தைச்சிரசாதிபாதமந்தங்
கப்பெலாவிட்டுரோமங்கம்பித்துவிதிர்விதிர்த்து
வப்படியளிசீதத்தாயங்கங்களனைத்துநெக்கே
யொப்பில்பேரின்பமாமுன்னெண்கழலிருந்தவாறென். (க)

பரிந்திதமுகமதாகும்படாறுத்தருளிமீளத்
திரிந்தகமுகத்ததீதத்துடனெலாச்செயலுந்தீர்த்தே
யிருந்தபின்னுலகுந்தானுமிருந்துளபுரணந்தன்னைக்
கரந்துளநிறைந்திருந்தகள்வனையறிகிலேனே. (உ)

பண்டுநானெனதென்றெண்ணப்பண்ணியமாயம்போல
வண்டனேமீளென்றென்னையாட்டியதெல்லாமென்னே
தொண்டனேனுய்ந்தேனுய்ந்தேதுளக்கறநிறைந்தபாத
மொண்டுநான்பருகிமென்மேன்மொழியுமாறறிகிலேனே. (ங)

என்றுமெக்காலமெங்குமியாருளுமிறைவனீயே
துன்றிமற்றொன்றுமின்றியிருந்தவாறிருக்கவிங்ஙன்
பின்றுமற்றுளவாப்பேணியிதமகப்பேயதேறிச்
சென்றிடச்செய்ததெய்வவிச்சையென்செப்பிடாயே. (ச)

கள்ளத்தேனளவாய்வந்தகள்வனேகமலத்தோனும்
வெள்ளத்தேதுயிலுமாலும்விரும்புமற்றெவருநிற்க
வுள்ளத்தேபுகுந்தென்றன்னையுண்டுநீயிருந்தவண்ணம்
விள்ளத்தான்விரகுகாணேன்விளம்புமாவிளம்பிடாயே. (ரு)

உம்பர்தாமுணரும்வாறென்னெளிமறையுரைக்குமாறெ
னிம்பர்தாமென்னேயுன்னையியற்றியாற்காணுமாறெ
னெம்பிரானிங்ஙனேவந்திப்பரிசிருக்கிலல்லாற்
றம்பிரானுட்டுந்தன்மைதவிர்ப்பவரெவர்மற்றந்தோ. (சா)

எத்தனையெண்ணிலூழிபிறந்திறந்தேதுமோரா
மத்தனுமென்னையோர்கான்மாத்திரையினில்வேதித்துச்

சுத்தமாமின்பரூபத்தூ ரநற்றூரமாக்கி
வித்தகாநீதான்செய்தவிச்சையதிருந்தவாறென். (எ)

நனவெனவுலகந்தன்னினடக்குமவ்விடயமெல்லாங்
கனவெனக்கழிந்ததுன்றன்கருணைநான்கண்டபோதே
மனவினைக்கெட்டாவின்பவடிவதேவடிவதானல்
வினவிடப்படுவதுண்டோவேறுமற்றளவைகொண்டே. (அ)

அன்னையுமாயமுங்கேண்மின்களோவெனதாருயிராயசிவபெருமா, னென்னுதியானென்னுமிவ்விரண்டுமென்னுன்னுயிர்தேகவர்ந்தான், முன்னையுறவும்பிறவுங்காணேன்மூவுலகும்பாந்தெங்குந்தானு, யின்னதளவென்றியம்பவொண்ணுவின்பவெள்ளத்தெனையிட்டனனே. (கூ)

சுவாநுபூதி - முற்றிற்று.
ஆகதிருவிருத்தம்-கூஅஉ.

இருதகிருத்தியன்லட்சணம்.

:o:

மெய்மொழிச்சரிதை.

தன்னநுபூதியாலேதான்வியந்துருகாநின்ற
வன்னவன்றுனுநம்பாலமலனைமுழுந்தநோக்கி
யின்னதுசெய்தானென்னவியம்பொணுதந்தோவந்த
நன்னலங்காண்பதல்லானுவினுல்நவிலலாமோ. (க)

என்னையுமெனதாகவிசைந்தபோ
தன்னையுமறியாதசழக்கனே
னுன்னையேயனையாயுனதன்பரு
ளென்னையாண்டதுவென்னைகொலீசனே. (உ)

முன்பிறப்பதிறப்பதேமுயன்
றென்பிறைச்சியிலிட்டெனைவிட்டுளென்
வன்பிறப்பையறுத்ததுவள்ளலே
யென்பெறப்பயனென்றனிநாயகா. (ங)

எல்லாருங்காணப்பொல்லாவிரும்பைப்பொன்னுக்கியத்தைப்
பல்லாருந்தொழுந்தேவாகப்பண்ணிவைத்தாங்கனுதி
பொல்லாவன்பிறவித்துன்பம்போக்கியாண்டின்பந்தாய்
சொல்லாய்கைமாறென்செய்கேன்றேற்றியாவுளதுமுன்னே. (ச)

தத்துவசித்தி.

ஆதியேதிகழ்நீதியேயளவற்றசிற்பரமாகிநீள்
சோதியேமிகுபோதமேயெழுசொற்றொடைக்கதிதூரமே
நீதனேனுடையநாதனேநிகள்நித்தசுத்தவிமுக்தமே
வேதநூல்கிளர்மேதையேவினவற்றசிற்பரயோகமே. (ரு)

அய்யனேயெனதன்னையேயறிவாகியேயறிவித்துளாய்
பொய்யனேனுடைமெய்யனேபொதுவெங்குநின்றபுராணனே
செய்யதாமரையன்னதன்மைநிகழ்ந்தபாதயுகங்கண்முன்
கையனேவினைகொய்யநல்கியகாரணகருணாகரா. (சு)

பகவற்கீதை.

உண்டாயவுலகனைத்துமீன்றாய்நீயேயெவராலுமுன்னுண்மை யுணர்ந்துகூறிக், கொண்டாடப்படுவாய்நீமெய்ம்மைநல்கிக்குருவா கிக்குற்றங்கடீர்க்கின்றாய்நீ, யென்றாலுமறையனைத்துமுன்னின்மி க்காரில்லையெனநின்றேதுவெடுத்துக்காட்டக்,கண்டாலுநின்பெரு மைகாணமாட்டார்கண்ணிலாதவர்வேறுகாண்பதுண்டோ. (எ)

ஏயும்பரிசிவ்வுலகெல்லாமென்றும்பிறப்பித்திடுகின்ற
தாயும்பிதாவுமாவாய்நீதாய்தாய்தந்தைதாதையுநீ
யாயும்படியேயல்லாதவையாவுன்னையடியேனென்
மாயும்பிறவித்துயர்தீரநூறாயிரக்கால்வணங்கினேன். (அ)

மெய்மொழிச்சரிதை.

உணங்கிடாதனைத்துமீயாய்நின்றுமொன்றல்லாய்போற்றி
யிணங்கிடுஞ்சகத்தாமிந்தவியந்திரத்தலைவாபோற்றி
பிறங்கிடுஞ்சமையதர்க்கப்பிணக்கறுத்தாண்டாய்போற்றி
வணங்குமென்பவநோய்தீர்த்தவைதிகப்பெருமான்போற்றி. (கூ)

சத்தம்.

இல்லையீருலகெங்குங்கனவொக்குமென்றுவிட்டே
னல்லவுன்னருணாவாற்பிறவிமாக்கடல்கடந்தேன்
சொல்லொணாநித்தசுத்தமுத்தரூபத்தனானே
னெல்லைதீரடிமையேயுமிதுவலால்வல்லதில்லை. (கo)

தத்துவசித்தி.

என்றுபன்னிவிழுந்துமண்ணிலெழுந்தனேகவிதங்கள்பால்
வென்றுகன்றுகலம்புமாரிவிரைந்துரோமமரும்புமுன்
சென்றுநின்றபவங்களோடொருசேர்விலாவகைசெய்தநா
ளொன்றவந்துவிழுந்துகூர்மையொடுங்கவன்பினுறங்கினன். (கக)

ஊனெங்கேயுயிரெங்கேயுணர்வெங்கேதானுயர்பெங்கேயிழி பெங்கேயூர்பேரெங்கே,நானெங்கேயெனதெங்கோனுவெங்கே நலந்தீங்காமமவையெங்கோசமெங்கே, வானங்கேவளிதீநீர்மண் ணதெங்கேமாசெங்கேதேசெங்கேவாராதேவந், தானிங்கேயளித் தமலற்ருளேயாகிச்சமைந்திருத்தலலதேதுமறியோமொன்றும்.

என்றுரைசெய்துமென்மேலெழுதருமுவகைவெள்ளந்
துன்றிடவுததியேழ்போற்றுளக்கமில்லன்பான்மிக்கு
நின்றிறையருளேநோக்கிநெக்குநெக்குருகிநேசத்
தொன்றியவுளந்தழுத்தங்குரைத்தனனின்னசெய்தான். (கங)

தொழுதெழும்பணியுநின்றுபுகழுஞ்சுழல்வுறுஞ்சொல்லும்வா ய்குழறுமெல்லையறவன்புபெருகுமழுங்குங், குழையுமென்புருகும் நன்புளகம்வந்தாகம்விண்டுவிதிர்கொண்டயரும்நின்றுதெளியுமழ லதொன்று, மெழுகுசிலையெனும்படிகரைந்தமார்கண்டிடவருந்து பதமின்றுவெளிகண், பழுதறும்படிமுகந்திடவிருந்தவருளின்பரி சுகண்டலமும்வந்திருகைகுஞ்சிமிசையாய். (கச)

கிருதகிருத்தியன்லட்சணம் - முற்றிற்று.

ஆ திருவிருத்தம்-ககசு.

அநுபூதி அருட்டிறம்விளைதல்.

:o:

பத்தராவியேபரமகாரணபாவியேனையுன்பழையவன்பரொ, டொத்தியாளவந்தருளுங் கோலமேயெல்லையிலாத நற்கருணைவாரி யே, சித்தியாததோர்சித்தியாகுமெய்த்திகழுநல்லருட்கழலதுற்றி டு, நித்தபாலுமுன்னருளிரண்டதோ நிமலநாயகா வருளவேண்டு மே. (க)

சென்னிமீதுநற்கழல்கள்வைத்தலுந்திரிவுசெய்துபோதகமதா வருட், டன்னிலேதுமோர்குறைவிலாமையுஞ்சாலவொத்துமெட் டனையுமொத்திலா, வன்னிமீதுசேர்மெழுகதாகுவார்வலியகல்லி ரும்பனையராகுவா, ரென்னமாயமீதெனவுநாயினேனறிகிலேனெ னக்கருணநாயகா. (உ)

கனவிலுமமரர்கண்டுங்கேட்டுமற்றறியாவின்பம்
நனவினில்வினவவந்துநயந்துருகாமைகேளாய்
மனவினையிறந்தவின்பவார்கழலுளத்துமன்னி
நனிமிகச்சுவைதாராமையென்றுகொள்ஞானவேந்தே. (ங)

உண்ணுநெஞ்சுருகாதென்ப துலகினிலெவருமாய்ந்த
வெண்ணுருமொழியதன்றேவென்றபின்னீசன்பொற்றாள்
கண்ணுவினெடுமனந்தான் களிதரச்சுவைதராதே
லண்ணுவங்கவருளந்தானதிசயித்துருகுமாறென். (ச)

அழிவுறுமுடலில்வந்தங்கழிந்திடுஞ்சிற்றின்பங்கட்
குழிதரவுருகுகின்றானுலப்பிலாப்பேரின்பத்தைக்
கழிவறமுகந்துகொண்டாற்கரையிறந்துருகுந்தன்மை
யழலுறுமெழுகுமொப்பன்றையமிலறிஞர்கோவே. (ரு)

தாமமதுவெங்குளதுவங்கனலதாமா
றேமமுறவேயிறைவனாருமவர்பாலுந்
தாமமைவிலாதுருகுதன்மையருளத்தே
யாமிறைவனாரரியதாளுமெனவோரே. (சு)

திரித்தபின்வைத்தவைத்தபதமதேதிடமாய்முற்றும்
* மரித்தநற்சமைவாய்நின்றவருட்கடலமுதைமாந்தித்
தரித்திடாதுருகிநையுந்தன்மையருளத்தானீசன்
பிரித்தவாறடைவுபேணிப்பேசிலென்பேசாக்காலென். (எ)

பொருத்தமாம்பொறிபுலன்கள்பொருந்திடுஞ்சிற்றின்பத்தி
லருத்திதான்செல்லலுண்டேயாயிடினிறைவனார்பாற்
கருத்ததுபொலியாதாகுங்கழல்சுவைதாராதாகும்
விருத்தமாமன்பதொன்றின்மேவலாவிரண்டின்மேவா. (அ)

உரைமனமொன்றியன்பாலொண்கழல்கூடாதாருட்
குரைகழல்விருந்தாப்போலுமற்றதுகுடிகொளாதால்
விரைவொடுகூடுங்காலைவிமலனாருளின்செவ்வி
கரையறமுழுநோக்கன்றேற்கரத்தினுலலர்த்தும்பூவாம். (கு)

வருத்தமாங்கரணமெல்லாமாளவவ்வியத்தந்தன்னி
லிருத்தினலாறியின்பமெழில்கொளவிருந்துதீர்ந்தாற்
புரிப்பதாந்துரியமென்றேற்புரிந்தபோதக்கனுவாந்
திருத்திலும்பின்னையெல்லாந்திகழ்ந்ததுசுவைதாராதால். (கO)

சொல்லுகற்றுரியமுற்றாற்றுகளறுமறிவின்மீண்டே
யெல்லையதிறந்தபோதங்கிருப்பினுமிருந்தபோதுட்
சொல்லியவறிவிலேதுங்கருத்துருத்தெழாமற்றீர்ந்தா
லல்லதுதுரியாதீதம்புரியினுமதுபோய்க்கீழாம். (கக)

* இரித்த என்றும் பாடம்.

புரிந்தவத்துரியாதீதம்புகன்றிடிற்சுழுத்திதானுய்த்
திரிந்ததிலெழும்போதந்தத்திகழும்போதக்கனுவா
யிருந்திடுமாதலாலேமிசைந்தவப்பதங்கடோறந்
திருந்துநற்கழல்தானின்றுதிகழ்ந்துநற்சுவைதாராதால். (கஉ)

ஓதியபரிசின்மேலுமுள்ளனவளவதன்று
மேதுமோராதனைத்துங்கேட்டிடவிரையாநிற்ப
ராதலாலிறைவனுனதாகவென்றருளினத்தா
லோதியபரிசுண்டாகுமொண்கழல்சுவைதராதால். (கஙு)

ஒப்பிலாப்பாதத்தேனுண்டொளியழன்மெழுகாநின்ற
தப்பிலாவன்பர்தம்மைச்சதுர்மறைக்கரியபாத
மொப்பறவுருக்குமாறமுருக்கிடாவேதுத்தானு
மிப்படியென்னமைந்தனிறைதிருக்கழலில்வீழ்ந்தான். (கச)

அநுபூதி அருட்டிறம்வினுதல் - முற்றிற்று.

ஆ திருவிருத்தம்-கoகo.

அநுபூதியுரைத்தற்கருமை.

:o:

ஊனிறந்துயிரிறந்தங்குளமிறந்துணர்விறந்து
தானுயர்பரமிறந்துதகுமதன்முதலிறந்து
வான்முதல்முழுதிறந்துவளரொளியாகிநின்ற
தானிறந்திருந்தவின்பந்தனையுரைசெய்யலாமோ. (க)

பார்த்திடமெங்குந்தானுய்ப்பார்ப்பிறந்துளநிறைந்தங்
கோர்ப்பொடோராமையின்றியுதையவத்தமனமின்றி
யேத்துமாமறைக்குமெட்டாவின்பவெள்ளத்தைமாந்தி
யார்த்துவாழ்ந்திருப்பதல்லாலறைந்திடலாவதன்றே. (உ)

ஐம்புலன்களுக்குமுன்னுயருவுருவறநிறைந்தே
யும்பருமறையுமோர்தற்களவிறந்தொழிவதின்றி
யென்பினையுருக்குகின்றவெலையிலாவின்பவெள்ள
மன்புறநுகர்வதல்லாலறைந்திடவிரகுமுண்டோ. (ஙு)

வானநாட்டுமாலுமயனுமிந்திரனுமற்று
மேனையவெவருமேத்துமிறைவனாரரியதம்மை
யானவாறெல்லாம்பேசியமலமாயின்பந்தன்னின்
மோனமாயிருந்ததல்லான்முடிந்ததோமொழியவையா. (ச)

பிரமகீதை.

ஒழிவிலாப்பரமயோகியரநுபவமுள்ளவாறுரைத்திடவெனக்கோர், வழிபெறேனெடுமான்மகேசன்மாமுனிவர்வானவருரைத்திடமாட்டார், விழிமிகுஞ்சிவனல்விஞ்சையாஞ்சிவையால்விளம்பவும்பீடாதநுவிளம்பு, மொழியெலாம்வந்துமோனபாவத்தேமுடியுமந்நிலமதேமுடிவு. (ரு)

அப்படியிருந்தயோகியநுபவத்தன்மைதானு
மெப்படியென்றுகாணனீசன்மானுனுங்காணேன்
செப்பிடவறியாவேதாகமங்களுஞ்சிவனர்மேனி
யெப்படியென்னின்மற்றப்படியிலேயிருந்ததென்னும். (சு)

ஞானஞேயஞாதாவேகாமமு
மீனமாகியேயெல்லையிலின்பமே
யானதானதாமாநுபூதிதான்
மோனமேயலான்மொழியலாவதோ. (எ)

அநுபூதியுரைத்தற்கருமை-முற்றிற்று.
ஆகதிருவிருத்தம் - க0கஎ.

அநுபூதிநிலைமை.

——:o:——

ஊனுமாயுயிருமாகியுருவுமாயருவுமாகி
வானுமாய்மறையுமாகிமதியுமாய்மதிகடோறுந்
தேனுமாயமுதுமாகித்திகழுசொச்சொரூபமேயா
யேனையமுழுதுமுண்டவிறைவனெனுளத்துளானே. (க)

தானலதேதுமின்றித்தன்மையீதென்னவொண்ணு
ஞானமாய்ஞானஞேயஞாதுருவிறந்தநன்கா
யூனெலாமுருகுமன்பில்வெளிப்படுமொழிவிலின்ப
மானவொண்பரமனுரையகத்துளேயிருத்தினேனே. (உ)

அறைதருமறைகளாலுமாகமவிதங்களாலுஞ்
செறிதருமிருதியாலுந்திகழ்புராணங்களாலு
மிறவிலாவறிஞராலுமெழுதியங்கறுத்துமேலாய்
முறிவருமின்பவெள்ளமுழுதுமெனுளத்தினுள்ளே. (ங)

பிண்டகோசமேபேணியானெனக்
கொண்டகோளறக்கூறியானெனைக்

கண்டகோவெனக்காட்டுமுற்றுமிங்
குண்டகோலமெனுளத்தினுள்ளதே. (ச)

இனிமறையறைவதெங்ஙனிமையவருணர்வதெங்ங
னனிமிகுமுனிவரிம்பர்நணுகிடமுயல்வதெங்ங
னினைவருமொழியிலின்பநிமலனைமுழுதுமாய
புனிதனையெனதுளன்பிற்பொதிந்துகொண்டநித்தேனே. (ரு)

அநுபூதிநிலைமை - முற்றிற்று.

ஆ திருவிருத்தம்-க0௨௨.

அநுபூதிவியப்பு.

---:o:---

மூலமாமறைநாலுமுணர்ந்திலமுன்னமாகியமூவருணர்ந்திலர், கோலுமாகர்கனவிலுங்கண்டிலர் கூறுமாறினியென்னைகொலின்பரை, யாலமார்பவமேவிழுவேனுயவறிவிலாவறிவாயழகார்தரு, சீலமாரநுபூதிவியப்புறல் தெளிவிலேனுக்கெவ்வாறிதுவாய்த்ததே. (க)

ஊனுகிப்பொறிபுலனுய்மனமுமாகியுறுமகமாய்மதியாயொண்சித்தமாகி, தானுகும்விடயமுமாய் நுகர்ச்சியாகித்தாநுகருபவனுகிச்சான்றுமாகி, மேனடுங்காரணபாவங்களாகிவிரிந்தொடுங்குபரமாகிவியோமமாகி,யானுதவிழியதுவாயகிலந்தானுயளவிறந்தெனுளநிறைந்திட்டிருந்தவாறே. (உ)

நனவாகிக்கனவாகிஞாலமாகிநானுவாம்பொருளாகி நலந்தீங்காகி, வினையாகிப்பயனுகிவினைவுமாகி வினைந்ததெலாமடங்குமுதற்பகுதியாகி, யுளவாகும்பகுதியினில்வேறதாகியுணர்வாகியுறுவிகற்பமுழுதுமாகி, வினவாதவியனுய்மிக்குலகாயன்றிவிளங்கியெனுள்நிறைந்திருந்தவியப்பீதென்னே. (ங)

அல்லொடுபகலுமின்றியகமுடனிதமுமின்றிச்
செல்வதுதிரிவதின்றித்திசையொடுகாலமின்றிச்
சொல்லொடுபொருளுமின்றித்துரிசறமுழுதுமாயே
யெல்லையதிறந்தெனுள்ளத்திறைவனுரிருந்தவாறே. (ச)

குறியாவகண்டவொளியேதுருவாகிவந்துமறையா
னெறியாவியம்புதுறையாநிகழ்வாகியெங்குநிகழ்வா

யறிவாய்நிறைந்தவறிவாயளவாவனந்தசுகமாய்
பிறிவானதின்றியிங்ஙனேபெருமானிருந்தபடியே. (ரு)

அநுபூதிவியப்பு - முற்றிற்று.
ஆ திருவிருத்தம்-கoஉஎ.

அநுபூதியாராமை.

போக்கொடுவரவதின்றிப்புரணபூரணமதாகி
யாக்கமுமழிவுமின்றியகமிதமறநிறைந்து
நீக்கமிலறிவானந்தநிகரிலாவெள்ளமுள்ளந்
தேக்கியுமாராமென்மேற்றித்தியாநிற்குமன்றே. (க)

ஒளியினுக்கொளியதாகியுவமையற்றொழிவதின்றி
யளியினுக்களியதாகியமலமுற்றளவிறந்து
தெளிதரத்திகழுமின்பத்தேறலைப்பருகிமென்மேற்
களியதுற்றிடினுமாராக்காதன்மீதூருமந்தோ. (உ)

திரையொடுகரையிறந்துதிகழுசிற்சொரூபமாய
வுரையறுமின்பவெள்ளத்தொடிவறமுழுந்தியார்ந்து
வரையறத்தினைத்துமாரேன்மகிழுபோதைக்குப்போதும்
புரையறப்புதிதாயின்பம்பொற்புமிக்கிடுமிதென்னே. (ங)

முடிவொடுமுதலுமின்றிமுழுதுமாய்மூலமாகி
யொடிவறுமின்பவெள்ளத்தொப்பிலாவமுதமாய
கடலினுட்டினைத்தும்வாரிப்பருகியுங்களித்துமாரா
தொடிவிலாதாகிமேலுமோங்கிடாநிற்குமன்றே. (ச)

முழுதருமதுரவாரிமோனமாமொழியினுலே
யெழுதருமின்பவெள்ளத்தெலையிலாவமுதந்தன்னைக்
கழிவறமுகந்துகொண்டுகளித்திடாநின்றுமாரே
னொழிவருமார்வமென்மேலோங்கியேதழைக்குமன்றே. (ரு)

கலைகளுக்கதிதூரமதாய்மிகுகரை யறத்தெளிவாயெனுள மேவிய, நிலைதனைத்தெளியாமனமேயிருணிறைவினைப்பரிபூரண மாகிய, மலையினைச்சதோதிதமாகியமதுவை மற்றயராமினையா தே, புலமையுற்றுமீதராவிலதாலிதுபுதுமைநற்சுவைபோதைக்கு ப்போதுமே. (சு)

ஒப்பின்மெய்ஞ்ஞானவின்பப்பிரமமாமுத்தியென்னுஞ்
செப்பருமமுதமாய்த்தெளிவினுட்டினைத்துமூழ்கி

யெப்பொழுதினுமெக்காலுமிடையறமுகந்துகொண்டு
மப்பொழுதைக்கப்போழ்துமாராமலினியவாறே. (எ)

அந்தமோடாதியில்லாவமலநற்சிவமதாய
நந்தலிலுணர்வதாகுநலமிகுமமுதமாந்திப்
புந்தியூன்மயிர்க்காலெங்கும்பொழிந்துதேக்கிடாநின்றுலு
மெந்தமக்காராதார்வமெலையறவிருக்குமன்றே. (அ)

விளித்தழுன்றவத்தைக்குமேலாமுணர்
வொளித்தமெய்யுணர்வாகியுலப்பிலா
தளித்தவானந்தவாரித்திளைத்துளங்
களித்துமார்கின்றதில்லையெங்காதலே. (கூ)

அநுபூதியாராமை - முற்றிற்று.
ஆ திருவிருத்தம்-கoஙசு.

அருட்டிறம்வியத்தல்.

ஆதனுமெனையுமாளவவனியிலுருவாய்வந்தே
யேதமிலின்பரோடேயிசைந்தெனையாள்வதேநற்
காதலான்மறைகடேடுங்கழலெனக்களிப்பதேதா
னேதகாவொருவன்செய்தவொப்பிலாவருளிதென்னே. (க)

மூவருந்தேடுமூலமுழுமுதலுருவதாகிப்
பாவியேன்றன்னையாளப்பாரின்மானுடனுமாகி
யோவிலாவுணர்வின்பத்தையொருமொழியதனினல்கி
யாவதேசிகனூர்செய்தவருணலமிருந்தவாறே. (உ)

ஆரணமளவில்கோடியங்கமாறெடுபுராண
மேரணமிருதிநூல்களிசைத்தினமுடிந்ததில்லைப்
பூரணனுரையதென்றூற்புகன்றங்கைக்கனியதாக்கு
மாரணனருளின்றன்மையதிசயமதிசயந்தான். (ங)

ஆதிவான்முதலாங்காலமன்றதொட்டளவிலாத
வேதமிலூழியூழிவந்தவென்பவபாசத்தைச்
சாதமோர்கணத்தில்வேவவத்தங்கடைக்கண்கள்வைத்த
வாதியாரருளின்றன்மையதிசயமதிசயந்தான். (ச)

குறிநெறிகுணமதில்லாக்கோதிலாவமுதமாய
வறிவினையளவதில்லாவாரிவாரமுதந்தன்னை

வெறுமொருமொழியானல்கும்விமலனாருளோநம்மா
லறைதரவிரதுமுண்டோவதிசயமதிசயந்தான். (ரு)

வானந்தருகாறீபுனன்மண்ணுமுலகம்மே
லூனெனென்றியவுயிரைம்புலன்மனமோடுளவெவையுந்
தானன்றியபொருளாய்முழுதாய்நின்றமையருளுந்
தேனெனென்றியமொழியன்றிருவருளின்றிறமென்னே. (சு)

மறைநூல்பயில்வருசாதனமவைநாலுடையவரோ
டறைபாதகமலதேதுமிலறியாதவரொடுதா
னிறைவாசியதறவேயெழிலறிவாகவனிலையே
யறியாவருள்செயுமாதவனருள்வல்லபமறியேன். (௭)

அன்பாலுயர்தாயாயறிவருளநதலிலயனு
லின்பாய்மணியிசைவான்மகவெழிலாவிருநிதியாய்
வன்பேதுமில்துணையாலுயிர்மகிழ்தோழனுமாயே
யென்பாலமுதானனருளென்னேயிதுவென்னே. (அ)

விண்ணின்மீதுறையமரரும்விரும்பவும்வெருவினர்மறைநாலு
மெண்ணுநீதியன்றன்றெனவேழையேற்கெளிதில்வந்திறையெங்
வண்ணமீதெனக்காட்டவுமுருகிடாமனமிரும்பினும்வன்பாங் [தை
கண்ணுநீர்சொரிகின்றதுமிலனுனென்செயக்கடவேனே. (கூ)

அறியேனருள்குறியேனறமறியேனமைவறவே
சிறியேன்மிகவறியேன்சிறியார்தம்மினமல்லாற்
செறியேன்மயல்கண்டுன்றிருவுள்ளஞ்செய்தெனுளமே
யறிவாகியநிறைவேசெய்தவமலன்றிருவருளே. (க0)

துளவன்மாலுறக்கண்டுகண்டுமெய்த்தொண்டர்வாழ்துணைக் கழலிருந்தவா,களவென்மாவினைக்கருவறுத்திடுங்கருணைவாழ்திருக்கண்ணிருந்தவா, வுளவொணுதவொன்றுபரிடங்கணின்றேறுமொன்றுதானுருவமாகியென், னுளவதாகவந்திங்கனிருந்தவாவருளிருந்தவாவருளிருந்தவா. (கக)

அருட்டிறம் * வியத்தல்-முற்றிற்று.

ஆ_திருவிருத்தம் - க0சஎ.

---

* வியப்பு என்றும், வியப்பல் என்றும், பாடம்.

அருணிலைநந் * தழிதல்.

———:o:———

உடம்பதாயழியுமென்னையுன்றிருமேனியாக்க
வுடம்பதாய்வந்தவுன்றனைப்பிலாவருளைநோக்கி
யுடம்பெலாமுள்ளமாகியுடைந்துநைந்துருகிடாதே
யுடம்புளமுழுதுங்கல்லொத்திருப்பதேயுடையகோவே. (க)

ஏதுமொன்றில்லாவென்னைப்பொருளெனவிமையவர்க்கு
மீதெனவரியவின்பமெளிதின்மாநுடனாய்வந்து
காதலாலருளவுந்தான்கருத்தொடுகண்ணீர்சோர
வோதருமுததியேழ்போலுலறிடேனலறிடேனே. (உ)

அன்பதுநின்கழற்கயர்ந்துமில்லாதவென்னை
நன்குறுமன்பரோடேஞானவானந்தமாக
வின்புறவாண்டதன்மையென்பெலாமுருகிக்கண்கள்
வன்பெரும்வாரியாகமதியிலேன்வலியவாறே. (ஙு)

உழிதருமியல்பிற்றுமுறுபவவுததிக்கே
கழிதருமெனைமிக்கார்கருணையின்வடிவுற்றே
யொழிவறுமுணர்விற்றொருமொழியினிலுய்த்தா
னழிவறுமருளைத்தானதிவிலனயர்வுற்றே. (ச)

இருவினைதனின்மிக்கேயெரிநிகர்பிறவிக்கே
வரவொடுசெலவுற்றேமடிதருமெனைமிக்கார்
திருவடிசெனிவைத்தேசிவமெனநிகழ்வித்தா
னருணலநினைவற்றேயழிகுவனவலத்தே. (ரு)

அளவறுசமையத்தேயறிவினையறிதற்கே
சளமுறுதவமுற்றேதவறிடுமெனைமெய்ப்பா
றெளிதருகழல்வைத்தேசிவமெனநிகழ்வித்தான்
வளமிகுமருளைத்தானினைவிலன்மயலுற்றே. (சு)

வாசாமகோசரமாமீசனென்றுமறைகளெலர்மலறியிடமனித
னாகிக், கூசாமலைம்புலனுமாரவந்தென்குடிமுழுதுமாட்கொண்டு
குறியிலின்பம், பேசாதுபேசியெனதருவமாக்கிப்பெருங்கருணைத்
திறங்காட்டிப்பிழைகணிக்கி, நேசாருமன்னையிலுமினியனருநிமல
னருடனைநினையேனிசனேனே. (எ)

---

* அழுதல் என்றும் பாடம்.

விண்ணுளார்களும்விரும்பவும்வெருவநால்வேதவந்தமுமீதென், றெண்ணலாவதொன்றலவெனநாயினேற்கெளிதில்வந்திறையொன்றன், வண்ணமீதெனக்காட்டவுமுருகிடாமனமிரும்பினும்வன்பாய், கண்ணுநீர்செறிகின்றதுமில்லைநானென்செயக்கடவேனே. (அ)

அருணினைந்தழிதல் - முற்றிற்று.

ஆ திருவிருத்தம்-க௦௫௫.

அருளிரந்துரைத்தல்.

:o:

அறம்பொருளின்பவேண்டேனருங்கலைக்கல்விவேண்டே
னிறந்திகழிளமைவீரநிலைவலிமுழுதும்வேண்டே
னிறந்தவீடதுவும்வேண்டேனிறைவனேயென்றுமுன்றன்
சிறந்தபேரருளேவேண்டிச்செறிவுறவருந்துவேனே. (க)

பிறக்கவிப்பிறப்புப்போகப்பிணிபசிமூப்பதாகத்
துறக்கமற்றெவையுமின்றித்துவந்துவமுடியநிற்க
விறக்கமற்றிருக்கவென்றுமெய்தலெய்தாமைவேண்டேன்
சிறக்குநற்குரவவுன்றன்றிருவருளிரக்கின்றேனே. (உ)

இரப்பதோர்பொருளுமில்லையிடருடனின்பமெல்லா
முரக்கமாவுடற்கமைந்தவூழ்முறைவந்துபோமால்
புரக்கும்வீடதுவும்வேண்டேன்புனிதனாருளேவேண்டி
யிரப்பனெக்காலுமென்றுமெங்குமெவ்வகையினுந்தான். (ங)

விரும்புவாறம்பொருள்வீடியாவையு
மரும்பிடுமிறையருளல்லதில்லையாற்
றிரும்பவையருள்பெறுத்திண்ணநற்கன்பர்கள்
விரும்புவாருளைமென்மேலும்வேண்டியே. (ச)

பொருளின்பமறம்புகழ்கல்வியுடன்
வெருளின்றியவீடும்விரும்பலநான்
மருளொன்றியவென்னைவணக்கியநின்
னருளொன்றையும்வேண்டுவனத்தனையே. (ரு)

அருளிரந்துரைத்தல் - முற்றிற்று.

ஆ திருவிருத்தம்-க௦சு௦.

அருள்விரும்பதனுலச்சம்.

:o:

தஞ்சமாமுன் றன் றனியருண்மறந் துசழக்குடைப் புலன்வழி யொழுகும், வஞ்சனுய்மடவார்மயக்கமேமருவுமதியிலேனுனதரு ட்காரென், றஞ்சினேனடியேனங்கணுவமலாவயர்வறிவுடனளவி றந்தெ, னெஞ்சமாரமுதேநீசனேநாயே னின்னருண்மருவுமாநி னையே. (க)

உம்பராரிறையுமோங்குமாலயனுமுயர்ந்துள வெவருமின்ற ளவும், வம்பதாய்மலர்தூய்வழிபடமுயன்றுமருவுமாறின்றியேவ ருந்தச், செம்பொனேதெளிவேதேசிகாசிறியேன் றிருவருள்பெறு வதற்காரென், றம்பொனேயடியேனஞ்சினேனழகா ரருளினைம ருவுமாறருளே. (உ)

மறையெலாமறைந்துங்கலையெலாநவின்று மதிஞராமறுவ கைச்சமயத், திறைவராமெவருமிருந்தவமுயன்று மிறையருள றிவுறுரென்றுற், குறைவிலாநிறைவேயெனதுளத்தமுதே குறியி லேனுனதருட்காரென், றறையுமாறறியேனஞ்சினேனுயேனஞ்சி டாவருளை நீயருளே. (ங)

அன்பிலேனிறைவனுக்கன்புறுமவரோ டணையிலேனறநெறி யணுகே, னின்பமேநினைந்துதுன்பமேமருவியிவ்வயிற்றினைவளர்த் திடற்காகத், தின்பவேகருதித்திரிவதேபொருளாஞ்சிகடனேன் றிருவருட்காரென், றம்பொனேயடியேனஞ்சினேனறியேனின்ன ருளிசையலாநெறியே. (ச)

அன்பர்பாலணைந்துமறிவினைக்கேட்டு மறைந்நூல்லருளதே முழுதா, மின்பமென்றுணர்ந்துமிகத்துளபோகமிறுதியாநஞ்சதெ ன்றிசைந்தும், வன்பதாமுகர்தொழில்களேமருவிவயிறதுவளர்த் தலேதொழிலாய்த், துன்பனேனினியாருன்றனுரருட்குச்சொரூப வென்செய்யுமாசொல்லே. (ரு)

சாவறச்சதோதீதமாகியசற்சிறச்சுகமாய்மலஃறயிறவை, யோ வறத்துதியாவுமீதென்றிறையொருதற்கிய, லாவணகீடியதேவுநற் சிவமாயெனுளமேவியசீருட்கடியேனள, வேதெனவராவமற்ற யார்மிகவஞ்சினேனுரருட்கனியேயருள்செய்திடே. (சு)

ஓராயிரமாமறையுச்சியினு
னாராயணனுன்முகனுடரியா

யாராலுமளப்பருநின்னருளுக்
கார்தானடியனெனவஞ்சுவனே. (எ)

அருள்விரும்பதனுலச்சம் - முற்றிற்று.

ஆ திருவிருத்தம்-கoசுஎ.

பவநடத்திலைத்துப்பரமனுக்குரைத்தல்.

:o:

அருந்துயர்ப்பெருகுருவமாய்ப்பவனடமளவிலாயவூழியூழி [ன்
பொருந்திடப்புகுந்தாடியேபோக்கொடுவரவதாய்ப்புலையனேனு
வருந்துமித்துயராற்றிடேன்முறைமுறைவந்தநாளமையாதோ
பரிந்துனன்பருக்கருளிடும்பரமனேபார்த்தமைத்தருளாயே. (க)

என்றுநீயுனையன்றதேமுதலெதிரின்றளவதுவாக [டமாட
வொன்றொடொன்றெவ்வாக்கோப்பெலாங்கொண்டுநானுற்பவந
வின்றுகண்டிடுபவர்போலிருப்பதேதிலைத்தொழிந்தனனீசாநின்றி
டென்றினியாகிலுங்கையமைத்தருள்நீநினையாயே. (உ)

ஒத்தொவ்வாததொப்பென்னயில்லோநான்கொண்டனவூழியூழி
கத்தமானவெனுளத்திருந்தெத்தனைகரணநாடகங்கண்டாய்
சித்தமாடியகூத்துமின்றுதெனநினைந்திலைநெடியோனை
யத்தநானினைதரும்பரிசில்கூத்தமையுமென்பதுகாணே. (ங)

நானுவிதம்பயின்மாயப்பெருநடமாடியழிந்
தூனுயுழலுமுணர்விலியேனையுத்தரித்தறிவாந்
தானுகவின்னருள்செய்தவனேதலைவாதளர்ந்தே
னுனுவிதன்னையினியென்னையொழித்தானெனக்குள்ளவனே. (ச)

பவநடத்திலைத்துப்பரமனுக்குரைத்தல்-முற்றிற்று.

ஆ திருவிருத்தம்-கoஎக.

அருட்டிறம்நோக்கிப் பிறவிவிரும்பல்.

:o:

வானவராலுமுலப்பறைகளிறவைதன்னாலுந்
தானிதுவென்னவொண்ணுத்தம்பிரானுடலஞ்சாத்தி
யானநல்லன்பர்தங்கட்கருளிடும்விரகுகாண
மானிடப்பிறவிமென்மேல்வாய்க்கநங்கட்குமன்றே. (க)

மூலமாமுனிவரோடுமயன்றமாமூவர்தேவர்
கோலுமாவூழியூழிதவஞ்செய்துங்குறுகவொண்ணு
மேலதாம்பொருளையன்பர்க்கிறையருள்விரகுகாண
மேலுமேலும்பிறவிமேவவிரும்பவேவேண்டுமன்றே. (உ)

சாதியந்தணர்களாகத்தகவில்சண்டாளராகப்
பாதகர்மூகராகப்பழுதறுந்துறவராகப்
பாதம்வந்தடையிலந்தக்கணத்திலேபரமமாக்கு
நாதனுரருள்கண்டேத்தநமக்கினிப்பிறவிவேண்டும். (ங)

அருளுருவாகிவந்தவமலனுரரியகோல
மருவுமைம்புலன்களாகக்கண்டுவாழ்ந்திடவேபெற்று
லுரியவீடென்னுநின்றவொப்பிலாவின்பந்தானு
மருவுமாநினையாரிந்தப்பிறவிபோல்வளமின்றென்றே. (ச)

தன்னையேயருளவந்ததம்பிரானரியகோல
முன்னுமைம்புலனுமாரக்கண்டுவாழ்ந்திடலாமாகி
லன்னியமேதுமில்லாவமலவீட்டின்பந்தானு
முன்னிடவிரும்பாரிந்தப்பிறப்பினுக்கொவ்வாதென்றே. (ரு)

விழியினுலன்பராவிழுங்கும்வித்தகனுர்கோலங்
கழிவறமுகந்துகொண்டுகளித்துவாழ்ந்திடலாமாகி
லழிவிலாமுத்தியின்பமயர்த்தும்வேண்டிடுவரோதா
னிழிவிலிப்பிறப்புவாய்ப்புக்கேதுமொவ்வாததென்றே. (சு)

கருக்கெடப்பாசமெல்லாங்கருணையானுருவாய்வந்து
திருக்கடைக்கண்கள்வைத்தசெல்வனுர்திருவோலக்கம்
விருப்புறமேவிவாழவிசையுமென்முத்தியின்பஞ்
சிரிப்புடைத்தன்றேசீசீதிகழுமிப்பிறவிக்கெங்கே. (எ)

சகமுயிர்பரமிறந்தசச்சிதானந்தன்னை
யகமுறவிருத்திக்காட்டுமமலனுர்திருவோலக்க
மகிழ்தரமருவிவாழவாய்க்குமேன்முத்தியின்ப
நகுதரப்படுவதன்றோநாடினிப்பிறவிக்கெங்கே. (அ)

போக்கொடுவரவதில்லாப்பூரணபோதமேநா
மாக்கியாண்டருளுமாராவழகனுர்திருவோலக்க
நீக்கறமருவிவாழவிலவுமேன்முத்தியின்ப
மேக்கறவுடைத்தேயிந்தப்பிறப்பினுக்கெங்கேயெங்கே. (க)

மாசற்றுளவன்பருள்வாழ்வுவிடா
நீசற்குருகுத்திடநெஞ்சிருகண்
வீசப்புனல்பித்தெனமேதினியோ
ரேசப்பெறிலிப்பவமேயினிதே. (க0)

௯. அருட்டிறம்நோக்கிப்பிறவிவிரும்பல் - முற்றிற்று.
ஆ திருவிருத்தம்-க0அக.

அருள்வியந்தாற்றுமை.

முழுதுடல்விதிர்விதிர்த்துமுகிழ்ந்திடவுரோமமெங்கு
மழுதகண்ணருவியாகவலைகடலெனவுமார்த்துப்
பொழிதருகருணையீசன்பொன்னருள்வியந்துநல்லோ
ரழிதரவுருகியாற்றுதறைதருபரிசையுங்கேள். (க)

இதமகமிறந்தியாவுமாகியவிணையிலின்ப
மதுவெனதுருவமாகவங்கையாமலகமாக்கிப்
பொதுவறுமன்மரோடேபுலைஈந்தெனையாண்டுகொண்ட
வதிசயமதனையாற்றேனங்கநெக்குருகுமாலோ. (உ)

மூர்த்திகள்மூவர்தேவர்முப்பத்துமும்மைக்கோடி
யேத்திடுமுனிவரிம்பரெய்துமாறரியான்வந்து
வார்த்தையொன்றாலேதன்னைமதியிலேற்கருளியாண்ட
வார்த்தமாமருளுக்காற்றேனுவிரீராகுமாலோ. (௩)

பொறிபுலன்கரணமாயைபுரையறுமுயிர்தன்மூல
மறைபவையனைத்துமேலாயகிலமும்விழுங்கியோங்குஞ்
செறிதருபுரணமாண்டுதிகழுமாரமுதைநாயேற்
கறிவுறவருள்வதேதாறாற்றுமாறறிகிலேனே. (௪)

தன்பெருந்தன்மையேதுதமியனேன்சிறுமையேதங்
கும்பரும்மறையுங்காணாதுணங்கியோலிடுமாறேது
வன்பரோடறிவிலேனையாள்வதேயாற்றகில்லே
னென்பொனாருளின்றன்மைக்கென்செய்கேனென்செய்கேனே.

பாரொடுவிண்ணுந்தேடப்பாவியேனுள்வாய்வந்து
காரணகாரியங்கள்கழன்றெலையறநிறைந்த
பூரணமளிக்கப்பொல்லாப்புலையனேன்றகுவனோதா
னாரணனருளுக்கந்தோவாற்றிடேனாற்றிடேனே. (௬)

தேற்றமறுமென்னுளமுந்தெளிய
தோற்றமுழுதுஞ்சொரூபமெனவோர்
மாற்றந்தரும்வல்லபமுள்ளுதோறு
மாற்றும்படியொன்றறிகின்றிலனே. (எ)

தன்னையனையான்றனதுதன்மைநினையாதே
யென்னையனையேன்சிறுமையேநினையுமென்னுற்
றன்னையெனவந்தெனையுமாண்டவருளாற்றே
னென்னையினியான்செயுமதேதுமறியேனே. (அ)

அருள்வியந்தாற்றுமை - முற்றிற்று.

ஆ திருவிருத்தம்-கoஅக.

இறையியலுரைத்தல்.

:o:

அளவிலாதநல்லருள்வகைதனையுனியழலுறுமெழுகேபோ
லுளமெலாமுமிகவுருகிடுபவரிறையுறுமியல்பினையெல்லாங்
களவிலாவகைக்கரதலமணியெனநிகழ்தருமதனாலே
வளமெலாமிகமகிழ்தரவறைகுவர்மதிநலமுடையோய்கேள். (க)

அணுவினைமேருவாக்கிமேருவையணுவதாக்கி
யணுகுநஞ்சமுதமாக்கியமுதநஞ்சதுவுமாக்கி
நணுகருமமரர்வாடநாயனையேனையாண்ட
வினையிலியிறைவனுர்தமெழில்மிகுமியல்புதானே. (உ)

உயிரினுக்குயிரதாகுமுடலினுக்குணர்வதாகு
மயலினுக்கறிவதாகுமல்லிருட்கிரவியாகுங்
கயவருக்கிருளதாகுங்காதலர்க்கருளுகண்ணு
முயர்வெனக்கருளுநாதனேக்கியலிருக்கும்வாறே. (ந)

வயமுயக்கருணையீசன்மாசிலாவானில்வந்து
புயலெனப்பொழியு * முனும்பொருள்களாய்வினையின்பொற்பி
னயில்வுறச்சுவையதாருமறுத்திடுமனலாமாக்கைக்
குயிரெனத்திகழுநாதனேக்கியலிருக்கும்வாறே. (ச)

கருதருவினைகளாய்ச்செய்கருத்ததாய்க்கருத்துட்டங்கி
விரிதருமுழதாகிவிளைந்திடரின்பதாகி

* முன்னம் பொருள்களாய் வினையும் பொற்பி, னியல்வுற, என்றும் பாடம்.

யெரிநிகர்ப்பிறவியாகியிப்பவந்தீர்க்குஞான
மூரைதருபவனுமீசனேக்கியலிருந்தவாறே. (ரு)

சகமெனுமோவியத்தைத்தானெனும்படத்திற்றனு
மிகுதருதூலிகத்தால்விளங்கிடவெழுதித்தானே
மகிழ்நூரக்கண்டின்புற்றுமாசிலாவறிவாய்நின்றே
யிகமொடுபரமுமாகுமிறைவனதியல்புதானே. (சு)

அலகிலெக்கலையுமாகியறையுநற்பொருளுமாகி
யெலையில்சித்தாந்தபேதத்தொன்றேடொன்றெவ்வாவண்ண
மலேவுறப்பிணங்கியென்றுமலைவுறுமன்பருள்ளத்
தெலையில்சிற்சுகமதாகுமிறையவனியல்புதானே. (எ)

எட்டுமூர்த்தியாயேழிரண்டுலகாயெலையில்மேருவாயெழுகடலதுவாய், முட்டுமாமதிடச்சக்கரகிரியாய்மூவர்தேவர்முப்பத்துமூவருமாய்க், கட்டுவீடதாய்க்காயமாய்ப்புலனய்க்கரணநான்குமாய்க்கண்டிடுங்கரியா, யிட்டமாமடியவருளத்தறிவாயின்பமாமிறையிருந்திடுமியல்பே. (அ)

குற்றமாய்க்குணமாய்க்குறைவொடுநிறைவாய்க்குருகுமாய்வயிரமாய்க்கோளாய், முற்றுநாள்பக்கந்திங்களாண்டேழிமூன்றுகாலங்களாய்முகுட்டு, ஞற்றநாதமதாயொன்றதாய்மூன்றுயொருபதைம்பானெடெக்கலையா, யற்றவான்பொருளாயகண்டமாயன்பற்கமுதமாமமலனதியல்பே. (கூ)

பூவியன்மாருதம்பொங்குதீப்புன
லாவியுமாக்கையுமனந்தமாத்தினி
லோவியங்கண்டுகண்டுவக்கும்பரான்
மேவியல்பொருவரால்விளம்பலாவதோ. (க0)

இறையியலுரைத்தல் - முற்றிற்று.

ஆ திருவிருத்தம்-க0கக.

இறையொடுதுணிதல்.

:o:

அன்னையத்தனேடயனுசனுக்காதலியன்புறுமைந்த, ரின்னுயிர்ப்பெருந்தோழன்மற்றேவ லிசைந்துசெய்பவரின்னு மற்றுள்ளோர், பொன்னுமிக்குளபோகமும்புகழும்பொருந்துகல்வியும்போகமும்வீடுந், தன்னிணைக்கழல்வைத்தெனையாண்டதம்பிரானெனைத்தான்றுணிந்தனமே. (க)

ஐம்புலன்களுங்கண்டினிதா ரவருளின்மா நுடனுகிவந்தென்னை த், தன்பெருங்கருணைத்திறங்காட்டித்தாவில்சீரடியாருடனுண்ட, வெம்பிரானெனக்குடம்பு கரணமேவுமாவியுமெனநுதோள்வலியு, மின்பமாருயிருமுயிர்க்குயிருவென்பதேதமொன்றறத்துணிந்தனமே. (உ)

அண்டமெண்டிசையாவையுந்தானேயாயவைந்தொழிலவருந்தானே,யெண்டருமுலகத்திருவகையாயியல்சராசரமெவைகளுந்தானே, யண்டர்தந்தொலையாநிதிதானேயழிவிலாச்சுகசாகரந்தானே, தொண்டரோடுயவந்தெனையாண்டசொரூபவாரமுதென்பதென்றுணிவே. (௩)

ஒங்குபரமயனென்பர்நெடுமாலென்பருருத்திரனுஞ்சிவனென்பர்சத்தியென்ப, ராங்கருகன்சுகதனெனமொழியாநிற்பாருவாகுஞ்சிவம்பிரமங்காலமென்பர், நாங்களிவையனைத்துமாய்நின்றசோதிஞாலமதின்மா நுடனுய்வந்தாட்கொண்டு, தேங்கமழ்செந்தாமரைத்தாள்சென்னிசூட்டுஞ்செழுங்குருவென் றறிந்தோமற்றறியோமொன்றும். (ச)

ஒன்றென்பர்பலவென்பருபயமென்பருருவென்பரருவென்பர்யோகமென்ப, ரன்றென்பர்சூனியமேயென்பரன்றியறிவென்பரறிவிறந்தபொருளொன்றென்ப, ரொன்ருென்றையொவ்வாமலேர்தாநிற்பருலகரிவையனைத்துமாய்நின்றசோதி, யின்றெம்மையாளமா நுடனுய்வந்தவிறையென்றேயறிந்தோமற் றறியோமொன்றும். (ரு)

ஆரணமெய்ப்பொருளுரைத்ததறிந்தோமென்பராகமங்களவையென்பரங்கமென்ப, ரேரணமாமிகுதிபுராணங்கள்மற்றுமியல்புடைநூல்பலவுலகரியம்பாநிற்பக், காரணமாமிவையனைத்துங்கண்டசோதிகருணையினுல்மா நுடனுய்வந்தாட்கொண்ட, பூரணனுரொருமொழியாற்பொருளுமாய்நம்புரையறவேயறிந்தோமற்றறியோமொன்றும். (சு)

மேவரும்வீடதுசுவர்க்கம்பிரமலோகம்விளங்கியபொன்னெயில்வட்டமுலோகாலோகந், தாவருநற்சிவபுரம்வைகுந்தமற்றுந்தகவுலகர்பலபலவுஞ்சாற்றுநிற்ப, ராவவிவையனைத்துமாயன் றிநின்றேயருளதனுன் மா நுடனுய்வந்தாட்கொண்ட, தேவனடித்தாமரையேசிதையாவீடாந்தெளிதரவேயறிந்தோமற்றறியோமொன்றும். (எ)

வன்னநாலாச்சிரமஞ்சமயமாறாய் வகுத்தவற்றினுசாரங்கு றிகண்மற்றும், பின்னமாயிடவுலகர்மொழியவென்றும்பெருகாத குறையாதபெரியசோதி, மன்னவேகருணையினால்மனிதனாய்வந் தாண்டவன்றனடியதெமக்கடையாளந்தான், சொன்னவாசாரம வனடியாரேவற்றொழிலெனவேயறிந்தோமற்றறியோமொன்றும்

ஆகாயகமனுதிவிபவமென்பரணுமாதிசித்தியடைதலென்பர் செய்யப், போகாதகருமமெலாம்புணர்க்குஞ்சத்திமானுகைசெல்வ மெனப்புகலாநிற்பர், பாகாயவுணர்வின்பன்பாரில்வந்தாள்பரமக ருணாகரன்றன்பதத்தேனுண்டு, சோகாதிகெடுஞ்செல்வமல்லாச் செல்வந்துரிசெனவேயறிந்தோமற்றறியோமொன்றும். (௯)

அல்லென்பர்பகலென்பரிரண்டுமென்பரயர்வென்பரறிவென் பர்மானமேயஞ், சொல்லென்பர்பொருளென்பர்தொலையாவைய த்தவர்நின்றுதுவந்துவமாச்சொல்லாநிற்பர்,கல்லொன்றுமெனம னதைக்கனிசெய்தாண்டகடவுண்மலர்க் கழலென்னுங் கருணைவெ ள்ளத், தில்லொன்றியிருந்திடுதலல்லான்மற்றோரிதமகமொன்றி லதென்பதறியோமொன்றும். (௧௦)

ஈசனெடுமால்பிரமனென்பர்சிலர்தெய்வ
மாசிலருகன்சுகதனென்பர்சிலர்மற்றும்
பேசுவர்கள்தேவதைப்பிறப்பினையறுக்குந்
தேசிகனையல்லதொருதெய்வமறியோமே. (௧௧)

இறையொடுதுணிதல் - முற்றிற்று.

ஆ திருவிருத்தம்-௧௧௧௦.

இறைவலிநோக்கிமகிழ்தல்.

பார்வையாலுலகமெல்லாம்படைத்திடும்பரமனார்வந்
தோர்விலெனுள்புகுந்தாரொருகணமதவுநீங்கார்
சார்வதாம்வினையென்செய்ததகவிலாக்கலியென்செய்ய
கூருநாட்கோளென்செய்யக்குலந்தவையுடைந்துபோமால். (௧)

அந்தமோடாதியில்லாவாதியாமூலமாய
வெந்தைவந்துள்புகுந்தானெனதுளத்திறையுநீங்கான்
றெந்தமாங்குணங்களோடுதொடர்பிணிசோகமோக
மந்தகன்பாசமூழ்கொளக்கணக்கழிந்ததன்றே. (௨)

உழிதருபந்தபாசவொலிவில்பாதகங்கள்கோடி
குழுமியவுடல்மலங்கள்குணம்பொறிகரணமாயை
யெழுதருமவத்தையேயுமிடர்பவமிமைப்பில்வெந்து
கழிதரவிழித்தானென்றன்கருத்துளான்காணுமெம்மான். (ரு)

நதிதங்கியசடிலன்றிசைமுகனாரணனுடு
நிதியன்பொடுவந்தென்றனிநெஞ்சங்குடிகொண்டொன்
றுதியுங்கொளவூற்றூனுறு துயரென்செயவலிதா
விதியென்செயநமனென்செயவினையென்செயவினியே. (சு)

ஞானவானந்தமானநாதன்வந்துள்புகுந்து
தேனுமின்னமுதுமாயென்சிந்தையுட்டிகழ்ந்திருந்தான்
போனதுபிறவியெல்லாம்புலையனேர்குலங்கள்கோடி
யீனமின்முத்தியுற்றாரிறைவலியிருந்தவாறே. (ரு)

ஆவவென்றெம்பிரான்றனழகுறவலியின்றன்மை
மேவுதன்கடைக்கணென்மேல்வைத்ததோவில்லையோதான்
பாவியேனுடனுய்வந்தபவமெலாம்பொடிபட்டென்ற
ஞேவிலாக்கோடிகோடிகுலங்களுமுய்ந்ததன்றே. (அ)

உனவருமிறைவந்தெனுளமதுகுடிகொண்டா
னெனதுற்பவம்வெந்தின்றிடிதரல்பொருளன்றூன்
முனமுறுகுலமூவேழ்களுமவர்குலமூவே
ழனபவர்குலமூவேழ்பவமுழுதழிவன்றே. (எ)

இறைவலிநோக்கிமகிழ்தல் - முற்றிற்று.

ஆ_திருவிருத்தம்-ககக.

இறைவன்குறியுணர்த்தல்.

அலையெலாமறவேயகமுகமாகுமன்பருளறிவாதாயிருப்ப
ரொலைவிலாமயலாவுலகமாமுகத்தாற்கொன்றியபூதமாயிருப்பர்
கலைகளாலலையுஞ்சமயவாதிகடங்கருத்தினுட்கவலையாயிருப்பர்
நிலைவிலாவினையேதேடிவந்தாளுநிமலனார்நிகழ்குறியிதுவே. (க)

உருவிலாமையிலேயுடமையுமிலரேயொருபொருளுந்தமை
யொழியத், தெரிவிலாமையிலேதிகழ்வும்வேறிலரேதிகழந்தவை
தெரிந்துநின்றெவையு, மருவிலாமையிலேமாசதுவிலரேமறவியு

நினைவதுமிலரே, புரிவிலாமறையீறறையுமேயவரேபுகழ்மிகும்பு
னிதநாயகரே. (௨)

அறிவதேசுரப்பதளவதுமிலரேயகிலபூதங்களுக்கெல்லா, மு
றுவதேசெய்வதொழிப்பதேயல்லாலொழுக்கமும் பழிப்பவைமு
ழுதுஞ், செறுவதேயடியார்தீவினையகலச்சிவப்பிரகாசரேநாம, மு
றிவதேயில்லாவின்பரேயாகின்முனிகளெம்மடிகளாமவரே. (௩)

கனவிலுமிமையோர்கண்டிடவரியவரேதா
னினைவுரைசெயலன்றுய்நிகழ்தருபவரேதான்
முனைவருமுலகேழாய்முடிவறுபவரேதா
னனையவரெனையாளன்பினரெனவறிவாயே. (௪)

அடியொடுமுடிவின்றுமழகுடையவரேதா
னிடையொருபொருளின்றுயிலகிடுமவரேதான்
வடிவொடுகுணமின்றுய்மகிழ்வுசெய்பவரேதா
னெடிவறவெனைவந்தாளுடையவரவர்தாமே. (௫)

அண்டமெண்டிசையுமாவரேயாகாவமலரேயன்பர்தங்கண்
ணுன், மொண்டுகொண்டயிலுமின்பவாரமுதேமூவர்தேடரியமா
முதலே,கண்டுநின்றுணருங்கண்ணரேகருணைக்கடலரேகவலையா
ம்பவநோய்க், குண்டிடுங்கடவாமொருவரேயாகிலவரெனையுடை
யநாயகரே. (௬)

அரியயன்றேடவரியராயிருப்ப ரடியவற்கெளியராயிருப்ப
ருரியமூவுலகுமுழுதுமாயிருப்பரொன்றுந்தாமன்றியேயிருப்ப
ரரியநான்மறையின்முடிவிலேயிருப்பராருயிர்க்குயிருமாயிருப்பர்
தெரிவிலாவெனையேதேடிவந்தாள்வர்திகழ்தருகுறிகடேசிகற்கே.

செய்ததேதவமால்விரதமுமிலரேசேர்ந்தவர்க்கருள்வதுதெ
ளிவே,பெய்வதேகருணைதிருமுகமுழுதும்பிறப்பறவெறிக்குமெய்
க்கிரண, மெய்வதேயிதமோடகமறவிழிதாளிணையடிசொரியுமே
யின்ப,கைவதேயடியார்நாணிழந்தழிந்தேநம்முடைநாயனாரவரே.

பொறையதேமலையும்புணியமேகொடியும்பொய்யிலாநல்லொ
ழுக்காறே, பறையதேநாதம்பகடுபோதகமேபடையதுபரிவதாம
ன்பே, குறைவிலானந்தநாடேயன்புகூருளமூரதேகுறையா, வ
றிவதேயலர்தாரருணிதியவர்பேராகிலெம்மடிகளாமவரே. (௧)

மோனமேயமுதமொழிய தூமுனியாக்கருணையே திருமுகமலர்தான், ஞானமேவிளுேதனடியதேபோலஞானமூமாவரேயடியா, ரூனமேயொழிப்பதுண்பதுபலியே யுடுப்பதுதிசைகளேயொளிப்ப, தீனமாநெறிசேருள்மதுதனிலேயெனிலவரெங்கணுயகரே. ()

ஆதியாமரனேயயனெடுமாலேயருகனே சுகதனேயெனவுஞ்
சாதியாகின் றசமயமாறெனவுந்தகுமதன் விகற்பங்கள் பல்வும் [ச்
பேதியாகின் றபிணங்குவித்தெவையும்பிணக்கிலையிறந்தபேரின்ப
சோதியாமறிவேயாகிநாம்வணங்கித்துதிசெயுந்தொல்லைநாயகரே

தெள்ளுமாமறையுஞ்செப்புதற்கரியதேவரேதேவர்தேவர்க்கு, முள்ளுமாறரியவொருவரேயொருபேரோருருவொன்றுமில்லவரே, வெள்ளமாயொழுகவிழிதொழுதெழுந்துவிரும்பிடுமடியவர்தம்மை, யுள்ளவாறறியவருள்வரேயாகிலவரெம்மையாண்ட நாயகரே. (கஉ)

இறைவன் குறியுணர்த்தல்-முற்றிற்று.

ஆஉ திருவிருத்தம் கக௨க.

இறைவற்சுதந்திரம்.

:o:

சந்திரசூரியர்தாங்கலில்வானிற்சரிப்பதுவு
மந்திரமாமொழியால்விடந்தீர்வதுமாமுகில்தா
னந்தரம்வந்துவித்தின்றிப்பொழிவதுமாயிலென்று
நந்தமையாளுடையானலமாகுஞ்சுதந்தரமே. (க)

தாங்கலிலம்பரத்தண்டமெலாந்தலைநிற்பதுவு
மோங்கியதம்பத்துணின்றழலோங்காதொளிப்பதுவும்
வாங்குதிரைக்கடன்மண்மிசைத்தான்மிகையாததுவு
மீங்கெனையாளுடையானெழிலாகுஞ்சுதந்தரமே. (உ)

பூதமும்பௌதிகந்தானும்பொறிபுலனுள்ளமற்று
நாதமுங்காலமுமுவதுநடத்தல்செய்யாச்சடமா
லோதருஞ்சிவன்பரந்தன்னுணர்வுள்ளவெச்செயலு
மேதமுண்டோகெடுவீரிறைவன்றன்சுதந்தரமே. (௩)

உண்டனகல்லிரும்புட்படவோங்குதராக்கியிலே
மண்டிவெந்தேயிடமன்னுங்கருவங்கிமீதுவைத்துக்

கொண்டுடம்பாக்கிக்குடத்தினுட்பூசணிக்காயெனவே
விண்டிடலின்றிப்பிறத்தல்மெய்த்தேவன்சுதந்தரமே. (ச)

நீடுமிரவிமதியங்கிநிகழ்மீன்றேகைநாளொடுகோ
ளோடுசரித்திடவுற்றனர்மதத்திலேதுமொன்றும்
வாடுங்குறையுமிகலுமறவருகின்றதெந்தை
நாடுஞ்சுதந்தரமேநாடிடாதவர்நன்கிலரே. (ரு)

வானினிற்புரைத்தல்வாயுவிற்சலனம்வன்னிவெப்பப்பினிற்சுவைதான்,பூனிகழ்திட்பமதியினிற்றட்பம்புயலினீர்புகல்பகற்கொளிதா, னூனினுக்குணர்வுடற்பொறையாற்றற்குறக்கமுமுயிர்களின்பொருட்டா,ருனமைத்தவையாய்நின்றநற்றலைவன்றன்சுதந்தரத்தையாரறிவார். (சு)

ஊனுமெய்ப்பொறியுமுறுபுலனெவையுமுட்கரணங்களுமுயிர்ப்பு, மானமுற்பகுதியிருவினைகால மாயவூழ்மாயையைம்பூதந், தானெனிற்சடமாமவைதனித்தனியே தான்பொருள்போனடந்திடுதன், ஞானநற்றலைவனுயினேனெனையுமாள்நாயகன்றன்சுதந்தரமே. (எ)

பூண்டிடுங்காயநன்றென்றுபுன்போகம்பொருந்துமென்னை
யாண்டிடுங்காரணமியாதுகொன்மற்றழலைந்துநின்று
மாண்டிடுந்தாபதர்மாண்டேவிடமருளேற்களித்தல்
தூண்டிடுஞ்சோதியிற்சோதிச்சொரூபன்சுதந்தரமே. (அ)

பண்டேசெய்நற்றவத்தின்பரிணமம்பலிப்பதென்று
கொண்டேசுருதிகள்கூப்பிடுங்கோதுறுமென் * குணத்தாற்
கண்டேகழமுனந்தவநான்கருதாமைகடைப்பிடிநற்
றொண்டேகொளவீடளித்தான்சொரூபன்றன்சுதந்தரமே. (கூ)

மரத்தனலோனுமடவார்வயிற்றிடைவன்னியுமந்
திரத்தில்விடமுஞ்செழுங்கார்மதிமீன்றினகானம்
பரத்தில்வரலும்பரவைநிலையும்பரமர்சுதந்
தரத்தினைக்காட்டவறிகின்றதில்லையித்தரணியே. (கo)

இறைவற்சுதந்தரம் - முற்றிற்று.

ஆ திருவிருத்தம்-ககடக.

---

* குணத்தார், கண்டேன் முன்னந்தவனுன் என்றும் பாடம்.

இறைதிருவிளையாட்டு.

—:o:—

நாதமாயுரையொன்றாகிமூன்றெழுத்தாய்நான்குளவருணமாய்நனிமிக், கோதருமைம்பத்தோரெழுத்தாகியுலைவில்வேதாகமங்களுமா, யேதமில்கலைகளெவையுமாய்ப்பொருளாயிசைத்தவைமுழுதுமாயன்றி, நாதனார்நிகழுநலமிகுவிநோதநாடிடாதவர்கணன்கிலரே. (௧)

எறும்பதுகடைகுஞ்சரமுதலானயோனிகளவன்விளையாட்டாங், குறும்புலுமுதல்கற்பகமுடிவாகக்கூறுதாபரமவன்விளையாட், டறங்களுமறங்களமரரோடசுரரடையவுமவன்விளையாட்டா, முறும்பொருண்முழுதுமெனையுயவருளுன்மொழிவறுபரன்விளையாட்டே. (௨)

பத்தியும்பத்திப்பரிசதுமுயலும்பண்பதுமவன்விளையாட்டாஞ்
சித்தியுஞ்சித்தித்திறங்களின்பிறவுஞ்செல்வமுமவன்விளையாட்டா
முத்தியுமுத்திப்பயனுறமொழியும்விரகதுமவன்விளையாட்டா
மெத்திறமதுவுமொழிவறநிகழுமிறையவன்றிருவிளையாட்டே. ()

வையமுமாருயிருந்திரிகாலமும்வல்வினையு
மெய்யிடரின்பமுடன்விரும்பாநிரயமுஞ்சுவர்க்க
முய்யுமுபாயமெனுமுயர்முத்தியுமுத்தமனார்
செய்யும்விநோதமல்லாற்றிருவாணைமற்றொன்றில்லையே. (௪)

துன்பவின்பங்களாய்த்தொல்லுலகமா
யன்பிலிபவனாயயில்வானுமாய்
முன்பினன்றியமுத்தனுமாகியே
யின்பமாய்விளையாடுமிறைவனே. (௫)

உளத்தினினைவாயுதித்துரையாகியுரையின்றிச்செயலதாயுருத்துக், களித்திடுஞ்செயலாற்கருதிருவினையாய்க்காயகன்மங்களாய்மாறித், திளைத்திடுபவமாய்ச்சிவனாய்ப்பரமாய்த்திகழ்ந்தவைமுழுதுமாய்நிகழு, மொளிதிகழுணர்வாயிறைவனார்விநோதமோர்விலாதவர்களுமர்களே. (௬)

தானலதிலதாற்றனிலெழுநினைவாற்றன்னிலாமாயையாற்றடித்து, வான்முதல்பூதமுழுதமாயுலகாய்மன்னுமண்டலங்களாய்மருவு, மூனமில்சுவர்க்கநிரயமாய்ப்பயனாயுரைதருமுழுதுமா

யொளிரு, மீனமின்ஞானவிறைதிருவிளேதத்தின்புருதவர்களே ழைகளே. (எ)

மாலுமாயயனுமாயரனுமாய்வானோர்முழுதுமாய்வானவரி றையாய்ச், சீலமாமுனிவரியக்கர்கந்தருவர்சித்தர்கிம்புருடர்கின் னரரா, யேனுமாபூதகணங்களாயியலுமெண்ணிலசிலதெய்வங்க ளவையாம், மூலமாய்த்திகழுமுதல்வனுர்விளேதமொழிவுருதவர் கள்மூகர்களே. (அ)

கொன்றிடுபவனுய்க்கொலையுணுமவனுய்க் குணமிலியாய்க்கு ணிதானுய், வென்றிடுபவனுய்த்தோற்பவனுகி விரைபவனுய்த்தணி பவனுய், நன்றுடையவனுய்த்தீயவனுகிநடுவொரு பொருளிலதா கச், சென்றறுமுணர்வாய்த்திகழ்தரநிகழுந்தேசிகன்றிருவிளையா ட்டே. (கூ)

பழுதிலாவண்டமுற்றும்பண்ணியுமளித்தழித்து
முழுதையுமறைத்துமூடமறைத்ததைவெளிப்படுத்து
மெழுதருமுழுதுமாகியிலகிடுமிறைவனுர்தங்
கழிவறும்விளையாட்டென்றன்கண்ணினின்றகலாவாறே. (க0)

உலகவன்விளையாட்டுடலவன்விளையாட்டுறுபொறிபுலனவன் விளையாட், டிலகியநனவுகனவவன்விளையாட்டிருளுறுமயலவன் விளையாட், டலர்தருதுரியமதுவவன்விளையாட்டதுகழலதுவவன் விளையாட் , டெலையுறுமுழுதுமெனையுடையமலனிலகியதிருவிளை யாட்டே. (கக)

பிறப்பவன்விளையாட்டிறப்பொடுபிணியும் பேறிழவவன்விளை யாட்டா, மறப்பொடுநினைப்புமகிழ்ச்சியுங்கலுழ்ச்சி மயக்கமுந்தெ ளிவவன்விளையாட், டுறக்கமொடுணர்ச்சியொடுக்கமும்விரிவுமுண் டலுமவன்விளையாட்டா, மிறத்தலையொழிவதறமுழுதெனையாளி றையவன்றிருவிளையாட்டே. (கஉ)

கல்வியுங்கல்விப்பயனதும் பயனுங் கதிகளுமவன்விளையாட் டாஞ், செல்வமுந்திருவுந்திகழ்தருமழகுஞ்சீலமுமவன்விளையாட் டா, மல்லலுந்துயருமழிபடுபிணியுமடைதருமிடியவன்விளையாட், டெல்லையிலகிலத்தெழுதருமெவையு மிறையவன்றிருவிளையாட் டே. (கங)

இறைதிருவிளையாட்டு - முற்றிற்று.

ஆகதிருவிருத்தம்-ககடுஉ.

இறைதிருவிழியாட்சி.

———:o:———

உடம்பதேவடிவதென்றுமூலக்மெய்ப்பொருளதென்று
மடம்படுமதியினுலேமயங்கியேகழியுமென்னை
யுடம்பெலாங்கருணையாயவுத்தமன்பார்த்தபோதே
யடங்கலுநானேயானவருள்விழியாண்டவாறே. (க)

முட்டியகுரம்பையுமுனைக்குமவையாவும்
பட்டுவிழவேகொடியபார்வைகொடுபார்த்தார்
திட்டிவிடமோகொடிதுதேசிகர்தன்னேக்கோ
வட்டவிரிநீருலகில்வாழ்பவர்தமக்கே. (உ)

பொறிபுலன்கரணங்காணேன்புணர்தருவிடயங்காணே
னறிவுடனியாவுங்காணேனகமிதமெவையுங்காணேன்
மறவியுநினைவுங்காணேன்வள்ளலார்பார்த்தபோதே
யறிவருமறிவேயானதருள்விழியாண்டவாறே. (ங)

ஆரியனார்திருமேனியையங்கணணைந்திடுமாகாதே
யண்டமுமியாவையுமங்கறியாவறிவாயெழுமாகாதே
காரியகாரணமானவுபாதிகழிந்திடுமாகாதே
கற்பனைமுற்றுமிறந்தபெருங்கனிகைப்படுமாகாதே
பாரியல்பாகியபந்தவினங்கள்பறிந்திடுமாகாதே
பாதகனேனையுயக்கொள்பரன்புகழ்பாடுதுமாகாதே
யேரியல்பாகியவின்பவெளம்பெரிதெய்திடுமாகாதே
யெந்தைசிவப்பிரகாசனருட்கணெழிற்கடைபட்டிடிலே. (ச)

அன்றெனவாமெனநின்றிடுசங்கையழிந்திடுமாகாதே
யாசையினங்களடங்கமடிந்தழியாவிடுமாகாதே
சென்றுபரந்தெழுசிந்தைதிரிந்துதெளிந்திடுமாகாதே
தேவர்களுமறையுந்தெளியாதமைதிண்ணமதாகாதே
துன்றிவரும்புல்னும்பொறியுந்துகளாய்விடுமாகாதே
துன்பமுமின்பமுமாகுபவங்கடொலைந்தனவாகாதே
யென்றுநிரந்தரவின்பமதிங்ஙனமெய்திடுமாகாதே
யெந்தைசிவப்பிரகாசனருட்கணெழிற்கடைபட்டிடிலே. (ரு)

கன்றிவருஞ்சமயங்கள்பொய்மாயைசெய்கற்பிதமாகாதே
கல்வியெனுமவலக்கவலைக்கடல்கைவிடுமாகாதே

நன்றியுமன்றியுமாமயனுசமடைந்திடுமாகாதே
நாமுமெய்யென்பர்தமக்கடிமைத்தொழினண்ணுமதாகாதே
வென்றுபகைத்திறமாறையும்வேரறவீசுதுமாகாதே
வேண்டியவாவிளையாடியுமுத்திவிளைந்திடுமாகாதே
யின்றிருமுமகமுமறிவாகியிலங்கிடுமாகாதே
யெங்ஙைசிவப்பிரகாசனருட்கணெழிற்கடைபட்டிடிலே. (சு)

அருக்கருருத்திரரிந்திரமாலயனுமவராகாதே
யலக்கணறக்கொடியேனையுமாளதருட்கழகாகாதே
திருக்கறினுமுறினுஞ்சிவமாய்விடறிண்ணமதாகாதே
தேசிகனுரருளின்பெருமைத்திறமாவதிதாகாதே
யுருக்கியுருக்கியுளத்தையழித்தமுதூறிடுமாகாதே
யோதரியேனுடையாய்முறையோவெனவோதுதுமாகாதே
யிருக்கைதனக்கியலிப்படியாகியிருக்குமிதாகாதே
யெங்தைசிவப்பிரகாசனருட்கணெழிற்கடைபட்டிடிலே. (எ)

இறைதிருவிழியாட்சி - முற்றிற்று.

ஆ திருவிருத்தம்-ககருக.

இறைமொழியாட்சி.

:o:

திரும்பிடாவருட்டேசிகன்றிருமொழித்தேறலின்சுவைகண்டாற்
கரும்புகன்னல்பால்சர்க்கரையமுதுதேமாங்கனிமுதலாக
விரும்புநற்சுவையவையெலாம்வேம்பொடுவீழிகாஞ்சிரைசீசீ
யரும்புமுற்பவமறுத்துவீடளித்தலாலமுதுமம்மொழியன்றே. (க)

சொல்லுமொன்றதுசுருதியின்முடிவெலாந்துணியுமொன்றி
னைநல்குங், கல்லுமன்றதுவலிதெனுமுளமெலாங்கனியவேதகஞ்
செய்யு, நல்லவன்பருள்ஞானவாரமுதமாகனிமிகுசுவைநல்கு,மெ
ல்லையின்றியவிறைதிகழ்திருமொழியினியவாகண்டீரே. (உ)

ஆராதமாயப்பொறிபுலனந்தக்கரணமுன்னும்
பேராதசுற்றத்துடன்பிறப்பாகும்பெரும்பதியி
லோராதுடனணைந்தொப்பின்றிவாழ்கின்றவாழ்வொருகாற்
சீரார்திருநடன்றன்றிருவாய்மொழிசெய்வளவே. (ங.)

மைம்மையுண்டாவதுமாயையுண்டாவதுமாயைசெய்யுங்
கைம்மையுண்டாவதுங்காலமுண்டாவதுங்காதம்விணைப்

பொய்மையுண்டாவதூரணபோதபுகட்சொரூப
னிம்மைவந்தஞ்சலெலன்றிங்கொருவார்த்தையிசைப்பனவே. (சு)

கருவார்பவமுங்கடும்பிணிமீட்டமுங்காலன்செய்யும்
வெருவார்மரணமுமேவுங்கதிகளும்வேறென்னவெ
மருவாரும்வையமுமார்க்கப்பிணக்குமெல்லாமிறைவ
னொருவாசகஞ்செய்வளவிலெங்கேபுக்கொளித்தனவே. (ரு)

ஓதுங்கலைகளுமோவ்வாவுவலைச்சமயப்பின்ன
பேதங்களுமற்றுப்பேசுபயாவையும்பேர்த்திதென்ன
வேதும்பினை நின்றதில்லையென்றன்னைக்கடைக்கண்வைத்து
நாதனுரைத்தருள்வானகைதாளத்தனைசெய்ததே. (சு)

இறைமொழியாட்சி-முற்றிற்று.

ஆகூ திருவிருத்தம்-ககசுரு.

ஆட்சியதருமை.

அன்றயனமரர்கோனுக்கருளிடவறிவொண்ணமைச்
சென்றடவிசைகடோறுஞ்செய்தவமென்னச்செய்து
மொன்றுமங்குணரவொன்றுவுண்மையையொழிவிலீச
னின்றெனக்கருளியாண்டவியல்பினிலரியதுண்டோ. (க)

ஓதுசாமத்திலீறுமுணர்வுறவொன்பதின்காற்
றீதறவுபதேசித்துந்தெரிந்திடவொண்ணுதொன்றைக்
காதலாயடியேன்காணக்கரத்திலாமலகமாக்கி
யாதனென்றன்னையாண்டவதுதனிலரியதுண்டோ. (உ)

நான்முகனமரர்க்கன்ஞுண்ஞானமங்குபதேசிக்க
வ்வானவர்க்கையமாகமழுவேந்தத்தேறுமென்றங்
கானவரறியாவொன்றையங்கையிநெல்லிபோல
நானெனுலுணரவாண்டநலத்திலுமரியதுண்டோ. (ங)

தெரித்தறிவிசையற்கன்றுதேரிலீரொன்பதின்காற்
கருத்துறவுப்தேசித்துங்காணுமாறறியவொன்றைத்
திரித்தொருமொழியினுலேசிறியனேற்குணரக்காட்டி
யருத்திசெய்திறையின்றென்னையாண்டதிலரியதுண்டோ. (ச)

அன்றரன்முனிவர்க்காலநிழலிலேயறிவினை யளிக்கவென்றிருந்து, மொன்றியவவரினுல்வருக்குரைத்தங்கலாதவர்க்குரைக்கொ

ணுவொன்றை,யின்றிகபரத்துக் * காளலாவெனேயுமென்போனு
தகரையுமிறைபார்த், தன்றினப்பொழுதினக்கணத்துணரவாண்ட
லிவ்வருமையோவரிதே. (ரு)

வடமால்வரைவில்லுவளைக்கலுமாம்
விடமுண்ரலுமாம்விடவாளரவி
னடமாடலுமாம்நயவாவெனநெஞ்
சிடமாவெனையாண்டதிறைக்கரிதே. (சு)

ஆட்சியதருமை-முற்றிற்று.
ஆக திருவிருத்தம்-கஎக.

இறையுடன்மகிழ்தல்.

கண்ணதாய்மணியாய்ப்பார்வையாய்க்கழியாவொளியதாயொ
ளியினிற்றெளிவா, யெண்ணதாயெழுத்தாயியலதாயிசையாவிசை
ப்பயனுயதிற்சுவையாய், மண்ணுமாய்நீராய்வாயுவாயனலாய்வா
னமாய்வாதிலாவறிவா, யெண்ணமாய்முழுதுமாகியவிறைவனெ
ன்னுளத்தினிதிருந்தானே. (க)

வானநாடவரோடிந்திரனயன்மான்மயக்கறவினந்தெரிந்தில
ரால், வானமாமறையினீறுதானெவையுமறிவுறுதலறியேவிடுமா,
லேனைநாடவருந்தெரிவுறுமயங்கவிதமகமிறந்தபேரின்பத், தேனு
மாயமுதாய்த்திகழ்தருமிறையென்சிந்தையுட்டிகழ்ந்திருந்தானே.

ஓதுமாறரியானென்னையேகருதியருளினனுருவமாய்வந்து,
பாததாமரையென்சென்னியிற்பதித்துப்பங்கையக்கண்களாலுேக்
கிப், போதமாவென்றன் புந்தியிற்புகுந்துபுரணபூரணமதாய்நின்
றே, யேதுமாயிலங்குமெம்பிரானென்றென்றிறைவனுருடன் மகி
ழ்ந்தேனே. (ந.)

ஒன்றதோபலவோவுருவதோவருவோவுபயமோயோகமோ
வுணர்வோ, வன்றதோவாமோவென்றுநின்றெவருமமலனையறிவு
ருவயர,வென்றுமோர்படியாய்நின்றவானவனுரிங்குமாறுடமதா
யெனையாள், நன்றியேயுடையநம்பநாரென்றேநாயனுருடன்மகிழ்
ந்தேனே. (ச)

வினைகளின்சமமேவீடதுவென்பார் வினைகளிலொன்றதேயெ
ன்பார், சொனவிருவினையும்போவதேயென்பார்சொருபனையறியு

---

* காளலேனையும் என்றும் பாடம்.

ருர்சுழல, நினைவரும்பொருளாநிமலன்மாநுடனாய்நீசனேனுளம் புகுந்திருந்த, கனிதனைாமுதேகண்டுகண்டுருகிக்கரையறமகிழுகின் றேனே. (ரு)

அருளதேபொழியுங்கருணைமேனியனென் னுகமேகோயில் கொண்டருளி, மருளதேதுறந்துமனவுரையிறந்தவடியருள் மருவு மாறருளிப், பொருளலாவெனையாள்புரணபூரணனார்புகழ்மிகுபு னிதனைரென்றென்,றிருளதார்பவம்வேரொடுமழிவுறவேயெம்பிரா னுடன்மகிழ்ந்தேனே. (சு)

அருள்பொழிமேனியுமாராவழகுமமைத்தகையுந்
தெருள்புரிநோக்குந்திருப்புன்முறுவலுஞ்சென்றுறுவோர்
வெருளுறுவெம்பவம்வேரறவாளும்விரகுங்கண்டு
மருளறவந்தெனையாள்வள்ளலோடுமகிழுவனே. (எ)

சுருதிபுராணமிருதிதொல்லாகமச்சூழலெல்லாங்
கருதியுன்மேனியைக்கண்டறியாதின்றென்கண்ணெதிரே
வருதிசிவப்பிரகாசவந்தன்றன்மலர்க்கழலைத்
தருதியிவ்வற்புதத்தாலேமிக்காருந்தாமல்லரே. (அ)

உள்ளலோதலொணாதென்றுபநிடம்
தெள்ளவுற்றவன்றேசிகனாகிவந்
தள்ளலாம்பவவாழிநின்றேத்திய
வள்ளலோடுமகிழுமென்னுள்ளமே. (கூ)

இறையுடன்மகிழ்தல் - முற்றிற்று.

ஆ திருவிருத்தம்-ககஅ௦.

கடவுள்வந்தருளுங்காலம்புகழ்தல்.

:o:

முக்காலந்தலைப்புகழ்வர்முகரெல்லாமுத்தியருளிடுவான்வந் திருந்துவைத்து, மிக்காருநால்வரொழிந்தவர்க்குஞானம்விளம்பரி தாய்விட்டிலனேவந்தக்காலத், தக்காரும்பாதகருமெனவொன்றி ன்றிச்சரண்புகுந்தோரடங்கலுநற்சிவமேயாக, விக்காலத்திறைய ருளக்கண்டோமானுலிதுவன்றோவுவமையிலாவினியகாலம். (க)

சாலவுநற்பரமாகமுற்காலத்தைச்சளருரைப்பர்சதுமுகன்வா னவர்கோனுக்கு மூலமருளிடவிழுந்துமுடிந்திடாமைமுயறவமெ ன்றுழத்திவித்தான்முன்னைக்காலங், கோலமருட்கழலடைந்தோ

ரெவருமந்தக்குணத்தினின் றபரமாகக்குர வனூர்தா,மோலமென வந்ததுவிக்காலமானுலிதுவன்றேவுவமையிலாவினியகாலம். (உ)

கருத்தைய றத்திரித்தருளிக்கண்ணேயாகக்காட்டியிடத்தெரி யாமைகமலத்தோனும்,வருத்தமுறும்வானவர்க்குஞானஞ்சொன் னவனிகமழுவேந் தவனுனீர்தெளிமினென்றான், சிரித்திடுமத்தனே யன்றியக்காலத்தைச்செப்புவதேனிக்காலத்திறைவனூர்தா, மிருத் தியிமைத்தனைப்பொழுதிற்காட்டக்கண்டோமிதுவன்றேவுவமை யிலாவினியகாலம். (௩)

ஒருதலற்றுணர்விலிகள்முற்காலத்தையொன்றென்றுமுணர் கிலாப்பார்த்தனுக்குமாய, ஞருபரம்பொருள்பதினெண்காலறை ந்துமவனையந்தீர்த்திடலாயத்திலதேயன்னூட், சேருமவரெவர்க ளையுமடைந்தபோதேசிற்பரமேயாக்கியிடுமச்செய்யகோல, மேர் பெறவந்தருளியதிக்காலமென்றலீதன்றேவுவமையிலாவினியகா லம். (ச)

சித்தந்தெளிவாகியகாலந்திசைதேசமிறந்திடுகால
மெத்தன்மையருஞ்சிவமாயேயிறவாவளமெய்திடுகால
மெத்தன்மையார்மடியார்தாமிகவுங்களிகூர்தருகால
மூய்த்தென்னையுமாளவுவந்தேயும்பன்புவிவந்தருள்காலம். (ரு)

அருளேதிகழ்மேகமெழுந்திங்கறிவேபொழிகின்றிடுகாலம்
பொருளேதிகழ்மாமறைஞானப்பொலிவேவிளைகின்றிடுகால
மிருளேசெறியும்பவம்வென்றிங்கெல்லாருமகிழ்ந்திடுகால
மருளேனையுமாளவுவந்திம்மண்மேலிறைவந்தருள்காலம். (சு)

கருணைதிகளோடறமேவுங்கமைதானமிகவேவிளைகால
மருளான்மிகவானுலகந்தான்மண்ணுடைவர்வாழ்தருகாலம்
பெருநான்மறையீறுகள்தேடப்பேயேனையுமாளவுவந்தே
யொருமாநடனுய்வருகாலமுவமாதீதமாகியகாலம். (எ)

மருவுமாசொடுதேசதுவில்லாமன்னுவேதகம்வாய்த்திடுகாலம்
வெருவிமாயையும்வீடியகாலம்வேறெலாமறிவேவிளைகாலங்
கழியுமார்தருசாக்கியமுற்றுங்கண்ணிலேகரைவாகியகாலஞ்
சொருபனாரடியாரடிசூடித்தொண்டனேன்மிகவாழ்தருகாலம். ()

ஞாங்கரும்பர்நாடரியநளினமலர்ப்பதமென்னுய்த்தலைமேல் வீற்றிருக்கவல்கிவருகால, நீங்கரும்பொற்பதமெங்குநிறந்தொளி ருங்காலநினைதோறுஞ்சொலுந்தோறுங்கண்ணீர்சொரியுங்காலங்,

கோங்கரும்புமுலைமடவார் துயர்தீருங்காலங்கோதிலன் பருளப்பு லத்துக்கொழும்பிரசச்சுவையாரத், தீங்கரும்புகண்களிலேதித்தி க்குங்காலஞ்செய்யசொரூபன்கருணை திகழவருங்காலம். (கூ)

கடவுள்வந்தருளுங்காலம்புகழ்தல் - முற்றிற்று.

ஆ திருவிருத்தம் - ககஅ௯.

கழிந்தநாட்கிரங்கல்.

——:o:——

அறுதொழிலதனையணையுநாளதுவுமதில்விரகுரைசெய்நாள்துவு
முறுதருவிடயமிசையுநாளதுவுமுலதியலொழுகுநாளதுவு
மறிவிலர்கடையிலணுகுநாளதுவுமமமானைப்பிரியுநாளதுவுங்
கறையறுமறிஞரவமெனநினைந்துகவலையிற்கழியுநாளதுவே. (க)

குரவனர்புகழைக்கூறிடாநாளுங்கோலமேகண்டுகண்டுருகிப்
பெருகிடாநாளுமன்பருட்சேர்ந்துபேசியேவாழிடாநாளு
மருளுறுதவரைப்பிரிவுறுநாளுமடியிணைக்கேவலைத்தலையான்
மருவிடாநாளுமதிஞருக்கவமேமாயையிற்கழிந்தநாளவையே. ()

எனக்கினியபரம்பரனையென்னுவிக்கின்னமுதையெனதுவைப் பைக், கனத்தபரஞ்சுடரினையென்கண்ணிணையென்மணியினையென் காதற்றேனை, யனைத்துயிர்க்குமுயிரினையாரணப்பொருளையருட் சொரூபானந்தன்றன்னை, நினைத்தவலநீங்காதேநெடுங்காலமவமே யாய்நின்றற்றேனே. (ங)

தன்னையேயருளத்தானொர்மாநுடனாய்த்தமியனேற்கெளிதி ன்வந்தருளி, யன்னையேயனையவன்புசெய்தழகாரடியருளறிவிலே னையுமாள், பொன்னையேபாவிப்புகழ்ந்திடாதவமேபோக்கினேன் போனவின்னெடுநா, ளென்னையேயனையேயெனென்செய்கேனுயே னேழையேனேழையேனென்னே. (ச)

ஒருகாலருளாயுரவாவெனுமுன்
வருகாதல்செய்தாள்வளமார்குரவ
னருடானறியாதவமேயிதுநாள்
வெருளார்பவமேவுவதோவிதியே. (ரு)

ஐம்புலன்றுனுமார்வந்தென்னையன்னையிலன்புசெய்தருளித், தன்பெருந்தன்மைதனையெனக்களித்தாள் தம்பிரானடிபரவாதே,

வம்பதேகழிந்தென் வரம்பில்காலங்கள் வல்வினைமயக்கமுற்றந்தோ, வெம்பிரானருளையிழிந்திருந்தின்று ளென்செய்தேனேழையேனென்னே. (சு)

கன்றினைநினைந்துகாதல்செய்தெழுகற்றாவினுங்கடிதுறவிரைந்து
நன்றியொன்றறியாவென்றனையுவந்துஞானவாரமுதினையளித்த
குன்றலொன்றின்றியென்றுமொன்றாயகுருபரனருளறியாதே
சென்றுபொன்றியநாள்வம்பனாயவமேதீவினைசெய்தழிந்தேனே. ()

காவிநேர்தடங்கண்ணியர்மையலைமெய்யெனக் கருதுற்றே, றுவியேயமுதேயெனவுவந்தருநரகிடையாழாமே, கூவியேதனைத்தந்தெனைக்கொண்டவன்குரைகழல்பரவாதே, பாவியேனிகழ்ந்தின்னெடுநாளெலாம்பாழினுக்கிறைத்தேனே. (அ)

கழிந்தநாட்கிரங்கல் - முற்றிற்று.

ஆ திருவிருத்தம்-ககசுஎ.

கேடுநினைந்திரங்கல்.

:o:

வானநாடருமறிவதற்கரியவன்மண்ணின்மாநுடனாகித், தானலாதொருபொருளறபெருந்தன்மை தனையெனக்கருள்செய்துதேனுமாரமுதமுமெனத்திகழ்சிற்சுருபனைநினையாதே, வீனஞானிகளுடனிடர்க்கடலில்வீழ்ந்தென்செய்தேனானென்னே. (க)

ஆனைகாண்குருடர்போலறுவகைவாதப்பேத
வூனதேபொருளதென்றங்குழைத்தனனுவமையில்லா
மாநுடனாகிவந்தவள்ளலைமருவிடாதே
கானநீரயின்றுதாகந்தீர்வுறக்கருதினேனே. (உ)

கற்பிதப்பொறிகடன்னைக்கடவுளர்க்கருதித்தொல்லை
யுற்பவந்தன்னுணின்றேயுழைத்தனனென்னுளென்றுந்
தற்பதப்பொருளாய்நின்றநம்பிரான்றாடொழாதே
புற்புதக்கனவிற்பொன்னாற்புண்செயக்கருதினேனே. (ங)

ஒப்பிலாவுணர்வதாயவோதருமிறைவனென்னு
ளிப்படியென்றுமெய்யேயிருந்திடவிகலுவாதக்
கற்பனைக்கடலுள்வீழ்ந்துகருதருமீசன்பாத
வற்புதவமுதுணாதேயருவிடமருந்தினேனே. (ச)

உரைத்தொறுமுள்ளுந்தோறுமுணர்ந்தோறுந்தித்தித்துள்ளே
* திரித்துறுமமிழ்தாமீசன்றிகழ்ந்தினிதிருக்கவென்று
மிரைத்துறுசமயவாதவிடர்க்கடல்வீழ்ந்துதேமாங்
கரத்துறுகனியிருக்கக்கற்கடித்தெயிறிற்றேனே. (ரு)

என்னுளேயீறிலாதவின்பமாமிறைவனென்று
மன்னியேயிருக்கமூடர்மொழிகளேமருவிக்கேட்டுப்
பின்னமாமிருளிற்றூங்கிப்பிரிதறவுளத்திருந்த
கன்னலையருந்திடாதேகாஞ்சிரைவிரும்பினேனே. (சு)

ஆவவின்பமாமமுதசாகரத்துணின்றருந்திடவறியாதே, நாவ றண்டெனதுண்மையாஞானநன்னயனமின்மையினாலே, யாவருந் தொழுமிறைவனென்னுளத்துளேயென்றும் வீற்றிருக்கப்பொய்த், தேவுவந்துவெண்டேரைநீரென்றுநான் சிந்தைசெய்தழிந்தேனே.

கேடுநினைந்திரங்கல் - முற்றிற்று.

ஆகதிருவிருத்தம்-கஉ0ச.

இறைவற்பிரிந்தழுங்கல்.

---:o:---

நித்தனேயொளிகட்கொளியதாய்நிகழுநிட்களாநினைவுரையிறந்த, சித்தனேயென்றன்சிந்தையுட்டெளிவேசெய்யநற்சிவப்பிரகாசா, மத்தனேனுய்யமனிதனாய்வந்தவள்ளலேயுனைப்பிரிந்தழுங்கி, யெத்திறனுய்வேனெங்குநான்புகுவேனென்செய்கேனெந்தை நீயிசையே. (க)

ஐம்புலன்களுமாரவந்துருவாயன்னை தன்னிலுமன்புசெய்தருளித், துன்பவெள்ளந்துடைத்தெனையாண்டதோழனென்றுணை வனென்சொருபன்ற, வின்பவார்கழல்பிரிந்திறைப்பொழுதுமே ழையேனெங்கனுற்றுவனறியே, னென்பொலாமணியேயெனதமுதேயீசனேமுறையோதரியேனே. (உ)

அருமறைத்துதிசெயுமமலன்மாநுட
வுருவுகொண்டுணர்வறுமூமனேனையாள்
குருபரன்குரைகழல்பிரிந்துகோளுறு
மொருகணமளவிலாவூழியூழியே. (ங)

---

* திருத்துறு என்றும் பாடம்.

அரியயன்புரந்தரனவர்கள்வாடிட
வுரியவன்பதுகொடுமுணர்விலேனையாள்
பெரியவச்சொரூபனைப்பிரிந்துதன்புற
மொருகணமொன்பதுகோடியூழியே. (ச)

உடலந்தன்னொடுமுண்டுடுத்துழிதருமுள்ளவிக்குறைகாலம்
முடிவொன்றின்றியகருணைநற்குருபரன்முழுதருட்டிருக்கோல
மொடிலங்கொன்றறவொண்புலனூரமொண்டுண்டுநான்களியாதே
யடுவென்றுன்புறவரியவன்கழல்பிரிந்தாற்றுமாறறியேனே. (ரு)

தேனார்கழல்சென்னியில்வைத்தெனையே
நானுவிதமின்றியஞானகனந்
தானுவருள்செய்தலைவற்பிரிவூற்
றானுவியையோம்பியிருந்தனனே. (சு)

நறவேபதநாண்மலர்நான்பிரிவுற்
றுறுவேதனையொன்றுமுணர்ந்திலனே
யிறவேனடியேனினியேதுசெய்தும்
பிறவேனெனவாண்டபெருந்தகையே. (எ)

தொண்டேசெயுமன்பருடன்சொரூபன்
கண்டேயெனையாண்டதுகைவிடவோ
வண்டோகுழன்மாதர்மயக்குறநான்
பண்டேவலனென்பதுபார்த்திலனே. (அ)

இறைவற்பிரிந்தழுங்கல் - முற்றிற்று.

ஆகதிருவிருத்தம்-கஉகஉ.

இறைநினைந்தழிதல்.

---:o:---

வானவர்க்கரியானென்போன்மனிதனாய்வந்தவாறு
மூனமற்றிடுநல்லன்பருடனெனையாண்டவாறு
மானநற்கழலேநங்கைக்கனியெனவளித்தவாறு
மீனமுற்றுழலுநாயேனேதுதானறிகிலேனே. (க)

அரியவாகமகோடிகளோதியுமறிவரும்பொருடன்னை, யொருசொலாலுளங்கையினிற்கனியெனவுணர்த்தியவியல்தானு, முரியவூனுறுபொறிபுலனுளமுயிருண்டவாறததானும், தெரிகிலேனினைறைதனைநினைந்தழிந்துநான்செய்வதொன்றறியேனே. (உ)

எம்பிரானியல்பினையுநிலைடையறவுகுமெனதுயிராவி
யென்பெலாமழன்மெழுகெனவுருகிடுமெழிலுறவெறமோர்காற்
றம்பிரானெனவுரைசெயிலெனதுயிர்தளர்ந்திடிந்துறவேமா
லும்பரானெனுமளவினிலழிகுவனெழியவுமறியேனே. (௩)

ஊன்றுண்டனனுறுபொறியுண்டனனெண்புலன்மனமுண்டான்
ஞானமோடுயிர்தனைமிகவுண்டனன்ஞாலமும்முழுதுண்டா
னனகோள்களுமாவியுமுறுமெனையனவரதமுமுண்டா
னானிலாவிறைதனைநினைவுறவழிந்தொழுகுமென்னுயிர்தானே. ()

நினையுநெஞ்சமுநிலைதளர்ந்தழிந்துறநெக்குகீராமன்றி
முனைவனன்புகழுரைசெயிற்கூறுவாய்மோனமாமுரைமாளும்[ளு
புனைசெய்காயமு மவன்பணிபொருந்திடிற் பொறிபுலச்செயன்மா
மனையநீதியிலழிகுவனிறைதிறமணைவுறவறியேனே. (௫)

இறைநினைந்தழிதல் - முற்றிற்று.

ஆ_ திருவிருத்தம்-கஉகஎ.

. பரமார்த்தம்.

—:o:—

ஆரணமாங்குயிலினங்காளரியசிவப்பிரகாசன்
பூரணமாந்திருவடிக்கேபொறியிலியேனுறுதுயர
மேரணமாம்விண்ணப்பஞ்செய்தெனையுமெம்பெருமான்
சீரணமாந்திருவுள்ளம்பற்றியிடச்செப்பீரே. (க)

நான்மறையினிறுகளாஞானநவில்குறுகினங்கா
டேனையதிருமொழியன்சிவப்பிரகாசப்பெருமான்
வானவருமறியாதமலரடிக்கென்வல்வினையே
னனவருட்காதலுமென்னூர்வமுனீருரையீரே. (உ)

வண்ணங்காரேரிவெண்மைமரகதம்பொன்னென்னவொண்ணாப்
பெண்ணங்காணலியல்லாப்பெற்றியனைப்பிரானேயென்
றன்னங்காள்குருகினங்காளறவழிந்தானருட்கழல்க
ளின்னங்காட்டுதியாகிலீடேறுமென்னீரே. (௩)

தாராவேமடநாராய்தாளிணைகைதொழுதேனுக்
காராதபெருங்காதலளித்தருளியடியேனை
நேராகக்கொண்டார்க்குநின்மலமாநிலைபிறழ்ந்து
வாராதுவந்தாற்கென்வருத்தஞ்சென்றுரையீரே. (ச)

தாதாவேநாரணனேசங்கரனேசகத்தினினீ
யேதாவாயேதாகாயென்றென்றங்கினிதேத்திப்
போதாவேபொன்னடிபூண்டுன்னடியாள்பொலிவழிந்தா
ளீதாமேதாமென்றாலென்செய்யுமியம்பாயே. (௫)

பூவைகாள்பைங்கிளிகாள்புத்தேளிர்மூவர்முதல்
யாவராலுந்தெரியாவெம்பெருமானெனினல்லா
லாவிகாத்தற்குரியாராரோவென்றடிவணங்கிப்
பாவியேனடிகூடும்பரிசதுநீர்பகரீரே. (௬)

வரியாரும்பூங்குயில்காள்மாமயில்காள்மலர்ப்பாத
மரியாலுந்திருமுடிபண்டயனாலுமளப்பரிய
பெரியானைப்பெறவிரும்பும்பெற்றியிவளெனவென்னைச்
சிரியாதென்சிந்தைநோய்தீரும்வகைசெப்பீரே. (௭)

புணர்ப்பிரியாவன்றில்காள்புத்தேளிர்போற்றரிய
வுணர்வுணராமையைக்கடந்தவுணர்வெனிஞெண்மலர்த்தா
ளிணைபிரியாதிருக்கமுனமிட்டிலளென்செய்வாளென்
றிணையிலியாகியவெந்தைபெருமானுக்கிசையீரே. (௮)

புறவினவாழ்புறவினங்காள்புள்ளினங்காள்புண்ணியர்க
ளுறவிலேயகப்படுத்திக்கொளவுரியவொண்சுடரை
பெறவினேகாதலித்தபேதையைநின்பேரருளா
லிறவிலேயெடுத்துக்கொண்டருளாயென்றியம்பீரே. (௯)

நவ்வியிநங்காள்கலைகாண்ஞானமனஞ்சேர்நளினச்
செவ்விதருதிருமுகத்தன்செய்யசொரூபானந்தன்
வவ்வியெனைமனங்கலந்தவள்ளன்மலர்த்தாளிணைக்கே
வெவ்வினையேனுள்ளூறுநோய்விண்ணப்பஞ்செய்யீரே. (௧௦)

தும்பிகாள்வண்டுகாள்தொழுதாரையெழுநரகக்
கும்பிகாணாதவகைதனைக்கொடுக்குங்குருபரனை
யும்பர்நாடற்கரியவொண்சுடரைக்கண்டும்மை
நம்பினான்மிகநொந்தானென்றொருகானவில்வீரே. (௧௧)

கொண்டல்காறொண்டருணுங்கோற்றேன்முன்வருவதுகாண்
மொண்டுநான்பருகவெனவிரும்புமெனைமுற்பட்டுப்
பண்டைநானெனதொன்றுஞ்சோராமேபவளவாய்
கொண்டநாதற்கடியேன்கூறுவதென்கூறீரே. (௧௨)

அள்ளல்மிகும்பவக்குழியிலருவினைமீன்கவர்ந்துவருந்
தெள்ளுகலைப்புள்ளினங்காள்செழுஞ்சுருதிக்குயிலினங்காள்
வள்ளல்சிவப்பிரகாசன்மலரடிக்கேவருகாத
துள்ளமிகுதெனதுறுநோயொருகாற்சென்றுரையீரே. (௧௩)

பரமார்த்தம்-முற்றிற்று.

ஆ திருவிருத்தம்-௧௨௩௦.

இறைவற்காணவிரும்பல்.

:o:

நாரணனிடந்துதேடநான்முகன்பரந்துதேடத்
தாரணிவந்துநாயேன்றன்னையேதேடியாண்ட
சீரணந்திகழுங்கோலஞ்சிறியனேன்கவலைதீரக்
காரணப்பரனேயின்னங்காணுமாறருளிடாயே. (௧)

ஒன்றலாநாயினேனைத்தேடிவந்தாண்டுகொண்ட
வென்றனுருயிரேயென்றனின்பமேயினியதேனே
யுன்றனுரரியகோலமுமனேன்கவலைதீர
வின்றுநான்கண்டுவாழவேழையேற்கருளிடாயே. (௨)

அங்கியைந்ததனுனின்றங்கயன்முதலமரருன்னை
யெங்குவந்துறுவதன்றேயின்னமுமயரவென்னை
யிங்குவந்தாண்டுகொண்டவிறைவனேயிலங்குகின்ற
பங்கயப்பாதங்காணப்பாவியேற்கருளிடாயே. (௩)

நற்பதங்களொன்றுநானயந்திடேனுயர்ந்துளோர்
நிற்பதென்றுரைக்குநிட்களத்துவந்துநெஞ்சுறேன்
சொற்பதங்கடந்தமெய்ச்சொருபவென்றுனைந்துநின்
பொற்பதங்கள்கண்டுகண்களிக்கநல்குபோதமே. (௪)

இறைவற்காணவிரும்பல் - முற்றிற்று.

ஆ திருவிருத்தம்-௧௨௩௪.

இறைவற்கூடவிரும்பல்.

:o:

அருளதேதிகழுமேனியாரியனவனிவந்து
மருளதேவடிவாமென்னைமலர்க்கழல்சூடியாண்டெ
னிருளதேகடிந்துளென்றுமீறிலாவின்பமாய
தெருளதேயருளுகோனைச்சென்றுகூடிடுநாளென்றோ. (௧)

கருவுறுபவத்தினின்றுகலங்கியேகழிவேன்றன்னைப்
பொருவதுபோகமாகப்பொற்கழல்சூட்டியாண்ட
மருவுறுமினியசெய்யவமுதினைமணியையென்றன்
குருவினைநிகழவேத்திக்கூடுநாளென்றுகொல்லோ. (உ)

மத்தனென்மதியிலேனைவலிந்துவந்தாண்டுகொண்ட
பித்தனையிருவர்தேடும்பிறப்பிலியையமூலச்
சித்தனைய்ழிவாச்செல்வச்சிவப்பிரகாசத்தேனை
யத்தனையடியேன்கூடியாளுநாளென்றோவென்றோ. (ங)

பேயனையேனையாளப்பேதைமாநிலத்தில்வந்து
தாயனையானையென்றன்றந்தையைச்சயம்புதன்னை
காயனைச்சொரூபானந்தக்கனியினைக்கன்னறன்னை
மாயனைக்கூடிநாயேன்வாழுநாளென்றோவென்றோ. (ச)

ஒன்றாயவியனுசியுமாநுடனே
யென்னாவியையாவெமையாளருளென்
றன்னுவியவாவமுவாருடனே
யென்னுவினையென்றுகொலெய்துவதே. (ரு)

இறைவற்கூடவிரும்பல் - முற்றிற்று.
ஆ. திருவிருத்தம்-கஉஙக.

திருக்குறிப்பாட்சி.

—:o:—

வாதிலாததோர்மதிநலப்பயனேமருவுமன்பர்தம்மனத்தினு ட்டெளிவே, வேதநாலுமின்றுரைசெயும்பொருளேவேறிலாவரு ள்வித்தகக்கனியே, நாதனேதிருமுகமலர்ந்தெனக்குநல்கிடாவிடி னன்றுமினன்ப, ரேதிலானெனவெனையிகழ்ந்திடுவரெம்பிரான்கு றிப்பாட்சிசெய்தருளே. (க)

செய்யதாமரைக்கண்களாலென்னைத்திகழநோக்கிநின்றிருமு கமலர்த்தங், கையநீயெனையிங்குவாவென்றங்கன்புசெய்யிலுனன் பருமென்னைப், பைதலாமெனைப்பரிந்துகாத்திடுவர்பரமனின்ன ருளிலதெனிற்பாரார், செய்யனேதிகழ்திருவுளத்தடைத்துன்சீர ருட்குறிப்பாட்சிசெய்தருளே. (உ)

மண்ணுளோர்பெருவாழ்வுமதித்திடேன்
விண்ணுளோர்மிகுமின்பமும்வேண்டிடே

னெண்ணமாவதெல்லாமெனக்கெம்பிரான்
றிண்ணமாகுந்திருக்குறிப்பாட்சியே. (௩)

அரியயன்பதமானதும்வேண்டிடேன்
பெரியவீடும்பிறப்புமொன்றுக்கொளேன்
விரியுமென்விருப்பெல்லாம்விமலனீ
தெரியவாளுந்திருக்குறிப்பாட்சியே. (௪)

* காவியேர்கண்ணியர்வலையிற்கடும்
பாவியேனகப்பாடறப்பத்தருட்
கூவியேயெனையாண்டகுரவவென்
னுவியேயடியேனைக்குறிக்கொள்ளே. (௫)

திருக்குறிப்பாட்சி - முற்றிற்று.

ஆ திருவிருத்தம் - ௧௨௪௪.

இறையொடுநோதல்.

—:o:—

வானம்வைத்தனை மாருதம்வைத்தனை மன்னுதீபுனல்மண்ணெ ளவைத்தனை, பூனும்வைத்தனையுற்பவமாரணமுற்றும்வைத்துய ர்முத்தியும்வைத்தனை, யானவித்தனைசித்திரமுற்றிடயாகுலத்தலை வித்தயர்விப்பதே, ஞனிலக்கெனவோவீதெலர்மெனஞானநற்சொ ரூபாவுனைநோவனே. (௧)

பொறிபுலன்கரணங்கட்குப்போனகமானவென்னை
யறிவுறவாண்டநீயேயழித்திடக்கொடுப்பதானு
லறைவதெனுரைநோவேனர்க்குரைத்திடுவேனென்னிற்
பிறிவறுசொரூபாவுன்னைப்பெயர்த்துநொந்திடுவதல்லால். (௨)

குரவனின்னலதொன்றறியாவெனை
மருவுமைம்புலன்மாட்டழித்துன்கழல்
பரவிடாமறப்படிறுசெய்தாற்பயன்
சொரூபனேயுளதோவிதுசொல்லிடே. (௩)

வினைகள்வந்திடில்வெம்பிணிவந்திடிற்
புனைசெயைம்புலன்போதவடைந்திடி
னினைவருஞ்சொரூபாநினைவன்றிவே
றுனவரும்பொருளொன்றையுநோவனே. (௪)

---

* காவிநேர் என்றும் பாடம்.

தொந்தபந்தொடர்ந்திடினுந்துயர்
வந்துவந்துமயக்குறினுங்கிளர்
சிந்தைபந்தனைசெய்யினுந்தேசிகர்
நைந்துநைந்தனைநான்மிகநோவனே. (ரு)

இறையொடுநோதல் - முற்றிற்று.

ஆ திருவிருத்தம்-கஉசக.

இறைநிலைமயக்கமுணருதற்கருமை.

சுருதிகளுன்கீரொன்பான்மிருதிபுராணந்தான் றொகுசமய மாறுவியாகரணஞ்சோதிடநூல், கருதியவாகடங்கீதம்பாரதமொ டாயுதநூல்கதித்தமடநூல்வருணமோவியவாரணநூல், பொருக ரீநற்புரவியொடுபொன்மணிவரத்துவமாம்பூமிகலைகூபகலைபொற் புடைநற்சகுனந், திரிதியுறச்சோர்வுகலையெக்கலையுமுணர்ந்துஞ்சி ற்பறன்றன்செய்வகையின்றிறமதுதேர்வரிதே. (க)

பாசமும்வீடுமானுய்பந்தமுந்துறவுமானுய்
மாசதுந்தேசுமானுய்மயக்கமுந்தெளிவுமானுய்
நாசமும்பிறப்புமானுய்நவின்றவைமுழுதுமல்லா
வீசநின்மயக்குணர்ந்தாரிருநிலத்தெங்கேயெங்கே. (உ)

மறிகடன்மண்ணும்விண்ணுமருவுயிர்மற்றுமுற்று
மறைதருமளவிலண்டமன்னுளதுன்பரீயுஞ்
செறிதருமணுவினுள்ளுஞ்செறிந்தினிதிருத்தியென்று
லறிவருமயக்கமுன்றனருளிலார்க்கறியலாமோ. (ந)

பூதபௌதிகமுமற்றைப்பொறிபுலன்கரணமாயை
பேதமாய்த்தோன்றிநீயேபிறிதொருபொருளுமில்லாப்
போதமாங்குரவனின்றன்பொற்புடைமயக்கமுன்ற
னீதியாமடியர்க்கல்லானின்றவற்கறியலாமோ. (ச)

அனந்தகோடியாரணங்களுமறிந்திலவமரருமயர்கின்றார்
புனைந்தமாலயன்புரந்தரனறிகிலர்புவியிலாரறிகின்றார் [லாந்
நினைந்ததாயவையவைதொறுங்கழன்றௌிர்நிமல நின்மயக்கெல்
தனந்தமின்றியவடியவரறிகுதருனறிகுதருனே. (ரு)

இறைநிலைமயக்கமுணருதற்கருமை-முற்றிற்று.

ஆ திருவிருத்தம் - கஉருச.

கேடுகண்டிரங்கி இறைவனைப்புகழ்தல்.

———:o:———

ஒப்பிலானருள்வடிவுகொண்டணைந்தொருமொழியினிற்றனைநல்கி
யிப்பவங்கழிந்தாண்டுகொண்டிருக்கவுமிறைகழலதுவிட்டுப்
பொய்ப்பதாகியவிடயமன்பதுசெய்துபுவியெலாந்திரிந்தெய்த்தங்
குய்ப்பதேதுமொன்றின்றியுமமைவுறு துழிதருகேடென்னே. (க)

அறமுநல்கிடும்பொருளுடனின்பமுமருந்தவங்களுநல்குந்
துறவுங்கல்வியுந் துணிவொடுநிலமையுந்தூய்மையுமிகநல்கு
நிறமுநீர்மையுநினைத்தவைமுழுவதுநிகரில்வீடதுநல்கு
மறிவனன்கழலொழியவங்கவைநினைந்தழிபவரறிவென்னே. (உ)

ஒன்றேயென்னிலொன்றேயாமனைத்தேயென்னிலதிற்பலவா
மின்றேயென்னிலதுவுண்டேயென்போர்முன்னேயுளனுகுஞ்
சென்றேயென்னிற்செலவேயாஞ்செல்லாதிங்கேயெனிலங்கே
யொன்றேயீசன்திருவருள்மற்றுன்னுதவர்தங்குறையல்லால். (௩)

இறைவனார்திருவுள்ளத்திலேதுமோர்குறையுமுண்டோ
வறையுமாநடனுயிர்தவைம்புலன்காணவந்து
குறைவிலாநிறைவேநல்கிக்கொடும்பவமறுப்பனென்றே
யறைகழலணியவுஞ்சென்றடைவுறுதழிவரந்தோ. (௪)

என்னகேடிததானையோவிறையவர்க்கரியான்வந்திங்
கன்னையிலன்புசெய்தேயருட்டிருவடிவங்கொண்டு
தன்னையேயருளியாண்டதம்பிரான்றாள்கள்விட்டுப்
புன்னுனிப்பனிநீர்வாழ்வைப்புணர்வதற்குழல்வறேதான். (௫)

மூவர்தேடியுங்காணுமாறரியநன்மூலமாமிறைவந்திங்
காவவென்றருள்வடிவுகொண்டடியிணையளிக்கவுமவன்பாத
மேவலின்றிவிட்டிழிவுறுபொருள்களைவிரும்பியேதிரிந்தூந்தா
னுவதொன்றுமங்கன்றியுமமைவுறுதவங்கழிகேடென்னே. (௬)

கேடுகண்டிரங்கிஇறைவனைப்புகழ்தல்-முற்றிற்று.

ஆ திருவிருத்தம்-௧௨௬௦.

தமைவெறுத்துரைத்தல்.

———:c:———

தந்தைதாயுறுதாரமுமகமுதல்சாற்றியதிரளெல்லாம்
பெந்தமாமுறுபிணியெனவறிந்துநான்பேரிடர்க்கடல்வீழ்ந்து

வந்துவந்திடரின்பமாந்திரைபொரமடிந்தலைந்தழிந்தேவிட் [னே.
டெந்தையென்னைவந்தாண்டவனென்பதற்கென்செய்துமுடிந்தே

காயமானதுநீரிடைக்குமிழிபோற்கழியுமென்றறிந்தேயு
மாயுமூனினைமெய்யெனமுழுமலவயிறதுவளர்த்தற்கே
யாயதிவினைமருவியங்கழிதொழிலவைசெய்துகழிந்தேவிட்
டேயுமாறெனையாண்டவனென்பதற்கென்செய்துமுடிந்தேனே.()

விடையமானதுமெய்ந்நெறிமயக்கிடும்விடமதிலுறுமின்பங்
கடையில்கானலினீரொடுகனவினிற்பொருளதென்றறிந்தேயு
முடையநாயகன்பதத்தைவிட்டுலகினிலுணர்விலார்தொழிலெய்தி
யிடையிலாதிரவொடுபகல்வருத்தமுற்றென்செய்தெனனேனே.()

தம்பிரான்கழற்கேவற்செய்கின்றிலேனென்றத்துவநெறியோ
ரேனும்பரானடியவர்க்கொருபொருளினையுதவுமாறதுமில்லேன்,
வம்பதேதிரிந்துழன்றுகாகங்கள்போல் வயிறதுவளர்த்தேபோ,
யெம்பிரானெனையாண்டவன்கழல் பிரிந்தென்செய்தெனனேனே.

தருமஞ்செய்திலேன்ஞானமுஞ்செய்திலேன்றவநெறியதுவோ
ரேன், கருமந்தானுமோரழிவறச்செய்திலேன்கலைகளினுழைவில்
லேன், வெருவுந்தீவினையெரியினில்விட்டில்போற்சுழன்றுவீழ்ந்து
ணவுன்னிக், குரவன்றாளிணைகனவிலுங்குறுகிடக் குறித்திலேன்
கொடியேனே. (௫)

* இட்டிலேன்முன்னமாதலினிப்பொழுதேற்பதேதொழிலானே
ன், விட்டிலேனுறுவேட்கையின்விருப்பமும்விடயவிவ்விதவிசித்தி
ரமனைத்தையும், சிட்டனார்கழல்தொழுதெழுந்துய்ந்திலேன்சிதட
னேன்றிரிந்தற்றேன், கட்டனேனுறுகனவினுமிறைவனைக்கருதி
டேன்கழிந்தேனே. (௬)

தமைவெறுத்துரைத்தல்-முற்றிற்று.
ஆ திருவிருத்தம்-கஉ௬௬.

ஏவல்விரும்பல்.

:o:

மாலயன்வாழ்வுவேண்டேன்வானவர்முழுதும்போற்ற
சாலமூவுலகுமாளுஞ்சக்கரச்செல்வம்வேண்டே
ஞேலவென்றெனையாண்டவும்பர்கின்கழல்கட்கேவல்
சாலவும்விரும்புகின்றேன்றந்திடவேண்டும்வேண்டும். (க)

* ஈட்டிலேன் என்றும் பாடம்.

அத்தனேயெனக்கருளிடவேண்டுநின்னருட்கழலிணைகட்கே
சித்தமார்தரமகிழ்ந்துகந்துநின்றிருப்பணியதுசெய்ய
வெத்திறனுமெக்காலமுமெவ்விடத்தினுமுன்னையிதுவேநான்
மெய்த்தவாவொடுவிரும்பிநின்றிரப்பன் வேறொருபொருள்வேண்
[டேன். (உ)

விடையவெவ்விடமழிதரவினைகளுமடிதரவிடயஞ்சென்
றடையுமைம்புலனறுபகைமுறிதரவரும்பவமிரிந்தேக
விடையறுவகையிரவொடுபகனுநின்னெழிறருகழல்கட்கே
தடையிலாதரவதுகொடுபணிசெயத்தலைவதந்தருளாயே. (ங)

எங்கணாயகனேயீரேழுலகமும்பெறினும்வேண்டேன்
றங்கவெண்சித்திவேண்டேன்றுகளிலெண்செல்வம்வேண்டே
னிங்குவந்தென்னையாண்டவிணையடிக்கேவல்செய்யப்
பங்கமில்செல்வமொன்றும்பரமனேவேண்டும்வேண்டும். (ச)

ஏவல்விரும்பல் - முற்றிற்று.
ஆ திருவிருத்தம்-கஉஎ0.

ஏவற்சிறப்பு.

:o:

தருமமோடுதவம்பலவேள்விசெய்
கருமமோடுறுபல்கலைக்கல்வியும்
வருமொர்மாத்திரைவள்ளலுக்கேவல்செய்
பரமர்வேண்டுவரோவிந்தப்பாழ்களே. (க)

யோகமெட்டுடனேயெண்குறற்சித்தியு
மேகுநன்கதியோடெண்குணங்களு
மாகுமோர்கணமாண்டவற்கேவல்செய்
பாகர்வேண்டுவரோவிந்தப்பாழ்களே. (உ)

சவலைவாதமுஞ்சாற்றியதற்கமுங்
கவலைநூல்களுங்கற்பிதவேடமு
மவலஞானமுமாண்டவனேவல்செய்
பவரும்வேண்டுவரோவிந்தப்பாழ்களே. (ங)

சத்தநூல்பலகற்றுஞ்சழக்கது
மத்தினாவுளதாமகங்காரமு
முத்தனார்கழற்கேவன்முயன்றிடும்
பத்தர்பாலுமுண்டோவிந்தப்பாழ்களே. (ச)

காலவஞ்சகமுங்காயசித்தியுஞ்
சாலுசத்திமையுந்தாதுவிச்சையு
மேலவந்தெனையாண்டவனேவல்செய்
பாலர்வேண்டுவரோவிந்தப்பாழ்களே. (ரு)

ஏவலால்வருமெண்வகைச்சித்தியு
மோவில்செல்வமுமொன்றுமக்கல்வியுந்
தாவில்வீடதுந்தானெனையாண்டவ
னேவலாவிதற்கொப்பில்லையில்லையே. (சா)

பழுதில்வேலைசெய்பாலன்மிசைச்செலு
வழுவில்காலனுமாரணமுற்றன
னழிவிலாவமலன்கழற்கேழுய
லொழிவிலேவலுக்கொப்பில்லையில்லையே. (எ)

இறைவனுக்குறுமேவலினுளொரு
சிறுவணுத்திகழ்மேருவதாயிடு
மறைகள்மற்றரிதென்பவற்றுள்ளெலா
மறையுமேவலரும்பொருளென்னுமால். (அ)

இருகையுமெடுத்துநின்றங்கெழின்மறையிசைத்ததொன்றே
பொருவிலாகமம்புராணமுதலெலாம்புகன்றதொன்றே
யரியயனமரரெல்லாமறுதிசெய்தற்றதொன்றே
யருபரனேவறன்மேலரும்பொருளில்லையன்றே. (கூ)

குரவனார்குறைகழற்குரைமனங்காயமுங்கோதறவொருமித்தே
யிரவினோடுநன்பகலுமன்புடனுவந்தியற்றிசெய்திடுமேவற்
பெருமைதான்மறைபெருகியவாகமமிருதிகள்முதலெல்லா
மொருமையாகநின்றோதுதலரிதெனவோதிடுமததானே. (க0)

ஏவற்சிறப்பு-முற்றிற்று.

ஆ திருவிருத்தம் - கஉஅ0.

அன்பினைவேண்டல்.

———:o:———

பாருள்ளார்விசும்பினுள்ளார்பாதாளத்துள்ளாரெல்லாஞ்
சாருமாறறியாதுன்னைத்தான்றடுமாறவென்னைப்
பாருளேவினவியாண்டபரமனின்கழற்கணன்பு
கூருமாவிரும்புவாருங்குறிப்பரோபிறிதுமொன்றை. (க)

அருந்துயர்பிறப்பேயாகவரியவீடதுவேயாகப்
பொருந்துமாதவத்திலாமாகாதெனும்பொருண்மைவேண்டேன்
றிருந்துநன்கழல்கட்கன்புதினந்தினம்வளர்ந்துளோங்க
வருந்தவற் * கரைசேசாயேற்கருளிடவேண்டும்வேண்டும். (உ)

அண்ணலேவருந்துகின்றேனூர்வமோபெரிதெனுள்ளத்
தெண்ணமுமிதுவேயன்றியிடையொருபொருளும்வேண்டேன்
கண்ணியபொருளேதென்னிற்கருதருகழற்கணன்பே
யுண்ணெகிழ்ந்துருகியோவாதோங்கிடவேண்டும்வேண்டும். (௩)

சித்தனேயுனையென்றுயிரப்பனுன்றேசிகாவுனையென்றுயிரப்பனு, னித்தனேயுனையென்றுயிரப்பனுனின்மலாவுனையென்றுயிரப்பனுன், சுத்தனேயுனையென்றுயிரப்பனுன் சொரூபனேயுனையென்றுயிரப்பனு, னொத்தினுலுமெப்போதுமிரப்பனுனெம்பிரான்கழற்கெல்லையிலன்பதே. (ச)

அண்டமுண்டவருட்சொரூபாவுனைக்
கண்டுகண்டுகளித்திடுகின்றவத்
தொண்டர்தன்றலையாதநல்லன்பினை
யண்டவிங்கடியேன்பெறவேண்டுமே. (ரு)

அன்பினைவேண்டல் - முற்றிற்று.
ஆ திருவிருத்தம்-கஉஅ.

பத்திமகாத்மியம்.

:o:

பத்திதன்வடிவேதென்னிற்பரம்பரன்படியிலாவடிவத்தை
மெய்த்தவன்பர்கண்டநுபவிப்பதுவலால்விளம்பிடாவிரகில்லா
வத்தன்மைத்தெனவடியவருளத்திலுமநுபவவுருவத்தை
யித்தன்மைத்தெனவியம்புதலரிதெனவியம்பினமறையெல்லாம்.()

மறையினிறுவாசாமகோசரமெனமாலயன்மயலெய்த
வறியுமாறொருவரும்விரகறிகழரியவனவனன்பிற்
செறியுமாசறவுளவிருள்கடியுமத்திகழுளங்குடிகொண்டே
யுறையுமாதலிலன்பினன்பெருமையையுணர்பவரெவரந்தோ. (உ)

மூழுதுந்தன்னையேதழுவிடமுவிடுமூலமாமிறைவந்து
பழுதொன்றின்றியபத்திநல்வலையினிற்படுமெனுமதுகண்டா

---

* அரசே என்றும் பாடம்.

லெழுதுகல்வியுமிலங்குநற்றவங்களும்யோகஞானமுமெங்கே
யழிவொன்றின்றியவன்பினன் பெருமையையறையவுமுடியாதே.

பத்திமகாத்மியம் - முற்றிற்று.

ஆகு திருவிருத்தம்-௧௨௮௮.

அன்பர்தங்கூட்டம்.

:o:

மயலகற்றிடுமதிநலமளித்திடுமகிழ்வொடுமிடியென்னுஞ்
செயலறுத்திடுஞ்சிவமதுநிகழ்ந்திடுந்திகழ்தருதெளிவாகி
யயலறுத்திடுமகமிதமுதல்வருமடையவுமொருநாமா
மியலிசைத்திடுமிறைவனதடியவரெழின்மிகுதிரடானே. (௧)

ஆலமார்தருபிறவியையறுத்திடுமன்பொடுபகையில்லாச்
சீலமேதருசினமுதல்களைதருஞ்சென்றடைபவர்க்கெல்லா
மூலமாகியவொருபொருண்முழுத்திடுமுனிவிலாவருளாய
கோலமார்தருகுருபரனடியவர்குலவியதிரடானே. (௨)

கருத்தெலாங்கரைந்துருகநைந்திடுவார்கழலிணைகண்டுகண்டு வப்பார், வருத்தமெய்திடுவார்வள்ளலேயென்னுமகிழுவார்புகழு வார்வாழ்வார், சிரித்துநின்றழுவார்செயலுரையிறந்து சித்திரம் போலவேநிற்பார், திருத்தநின்றெணையாள்செய்யநற்சொரூபன்றி கழுநல்லடியவர்திரளே. (௩)

தோத்திரப்பொருளைச்சொல்லுவார்கேட்பார் சுடருநற்கழல் களைமுன்னோ, ரேத்தியவுரைகளுடனிசைத்திடுவாரெஃகியபொரு ளைமெச்சிடுவா, ரோர்த்துளமகிழ்வாரொருவருக்கொருவருறவுற த்தழுவுவாருகப்பார், பார்த்துவாழ்ந்திடுவார்பரமநற்சொருபன்ப ழுவடியார்திரட்பரிசே. (௪)

எவ்வகைப்பொருளுமிறைவநற்கழலாலிருந்தவாறென்னென வியப்பார், கைவகைப்பொருளாயெவற்குமொத்திருப்பக்கண்டி டாமையிதென்னெனக்கலுழ்வார், தெய்வநற்கழல்கள்செய்யுவல் லபத்தைத்தெரியுமோதானெனத்திகைப்பா, ரெவ்வகைச்செயலு மிகழ்ந்திருந்திடுவரிதுவிறையடியவர்க்கியல்பே. (௫)

ஓதுநான்மறைப்பொருண்முடிவிணையொருமொழியினிலுரை செய்யுங், காதும்வாதநற்கவலையெலாங்கெடக்கருணையின்மிகநல் கும்,பேதமாமயற்பேரிருள்கழிதரப்பேரொளிபெரிதோங்கு, நா தநானுயவந்தநற்சொருபநல்லடியவர்திரடானே. (௬)

ஆதியேயெனவலறுவார்விழுவாரழன்மெழுகெனவுருகிடுவார்,பேதையேனைவந்தாண்டதெனென்பார்பித்தனேயென்றுபித்தாவார், நாதநாதவென்றகமகிழ்ந்திடுவார்நயமுறநெக்குநெக்கேங்கிநின்றிடுவா, ரோதுமாறுளதோவொளிமிகுசொரூபவொப்பிலாவடியவரியல்பே. (எ)

அன்பர்தங்கூட்டம்-முற்றிற்று.

ஆ-திருவிருத்தம்-கஉகூ.

அன்பருட்கூடவிரும்பல்.

:o:

மமதையோடகங்காரவன்பிணியுமதமுமானமுமையலுங்கழிய, வமைவதேமிகவாறுநெஞ்சினனு யறிவிலேனும்வந்தடையுநாளென்றோ, கமலனுன்முகன்கண்ணனோடமரர் கருதுமாறறியாவணநின்ற,வமலனே * யுனதாரருட்கடல்சேர்ந்தாருமன்பர்தமழகுறுந்திரளே. (க)

விடையவேட்கையும்வெருளியுமதியாமேலெழுச்சியுமெனுமிவையொழிய, வடையுமன்பினோடாறுநெஞ்சினனுயாதனேனும்வந்தடையுநாளென்றோ, குடியதாகவர்தடிமைகொண்டருளுகுருபராவருட் குணப்பெருஞ்சொரூபா, தடையிலாவகையுனதருளடியார்சரணபங்கயந்தன்னினன்குறவே. (உ)

செருக்குடன்சினமுஞ்செற்றமுமிகலுந்தீச்சொலுந் தீச்செயன்முழுதுந், திருக்குறுமிறப்பும்பிறப்புமுப்பொழியச்சிறியனேனடையுநாளென்றோ, கருக்குழியிலிகான்கண்டிடாவண்ணங்கழலிணைதந்தகற்பகமே, யுருக்கிடுமுனதாளுலடையநல்லடியாரொண்கழனன்குவந்துறவே. (௩)

களவுதன்னினுமிகமயவரின்னலங்கண்டிடாதநின்கழலிணைக்கமலம்,வினவிவந்தெனக்களித்தனையளித்தால்விமலநாஅருமையுமறிகுவனோ,வனையநின்பெருமரியநல்லருடானங்கணத்தமுதாயிடாவண்ணம், புனையுமுன்பழவடியவர்திருட்புலையனேன்பொருந்திடும்வணமருளே. (௪)

அரியதோவுலகம்படைத்தளித்தழிக்கு மமலவுன்விளையாட்டுவிச்சை, யரியதோவுன்னுளகிலமுமடங்கியணுவுனியடங்கட்கருவிச்சை, யரியதோவயன்மானிற்கவென்றன்னையருட்கனுன்முழுந்த

---

* உனதாரருட்கழல் என்றும் பாடம்.

நோக்குவிச்சை, யரிய துன்னடியா ரடியெனக்கருளுமாரியவிச்சை யேயன்றே. (௫)

என்றுமோர்தன்மைத்தாகுமீறிலாவின்பமாமுன்
பொன்றிகழ்கமலபாதம்புரையறநிறைந்தென்னுள்ளந்
துன்றியேயிருந்தக்காலுந்தொண்டர்தந்திரளுளன்றி
யென்றுமின்சுவைதாராதாலெனக்கதையருளவேண்டும். (௬)

எல்லையில்லருளால்வந்திங்கியாவருநிற்கவென்னை
கல்லினைக்கனிசெய்தாண்டகடவுளேகருணைமூர்த்தி
சொல்லினுக்கரியதுய்யசொருபவாரமுதேயுன்ற
னல்லடியார்கள்கூட்டநாயினேற்கருளவேண்டும். (எ)

அன்பருட்கூடவிரும்பல் - முற்றிற்று.
ஆக திருவிருத்தம்-கஉ0உ.

அடியவரிற்கூடியவியப்பு.

---:o:---

யாவராலுமொன்றறிவரியமலனென்போல்வந்
தாவவென்றனையாண்டவற்புதமுமன்றியிலே
யோவிலாததன்றொளியுருவடியருளடியேன்
மேவிவாழுமாசெய்தவித்தகமலால்வியவேன். (க)

நாளுந்தேடியுநான்மறைநாடிடவரிய
வாளுங்கோலம்வந்தாண்டவற்புதமுமன்றியிலே
கேளுங்கேளுமிவ்வதிசயங்கீழ்மேலுமுண்டோ
நாளுந்தன்னடியரிலெனைக்கூட்டியநலமே. (உ)

கேளுங்கோள்புவியுள்ளவர்விசும்புளோர்கீழோர்
தாளுந்தோளுமாய்ச்சதுர்மறைக்கரியவன்சகத்தே
யாளுங்கோலம்வந்தாண்டதுமன்றியேயந்தோ
மீளுந்தன்னடியருளெனைக்கூட்டியவியல்பே. (௩)

மறைகளுக்குநல்வானவருக்குமண்ணுலகி
லுறைபவர்க்குமற்றுலகினுள்ளவர்க்குமங்கையோ
விறையுமோர்வறத்தமதுளத்தொளித்தநல்லிறைவ
னறிவிலேனையாண்டடியருட்கூட்டினனன்றே. (௪)

சித்தனாருளியநெறிதெரிவதுநிமலனற்கழலென்னுஞ்
சுத்தவாரமுதறுசுவைதருவதுஞ்சொருபனார்கழற்கன்பாம்

பித்ததாகியபெருநலம்விளைவதும்பேரெழிலடியாரி
லத்தினலடியவரவைகூடியவதிசயமளவன்றே. (ரு)

கல்லதாகுமென்னுளங்கனிந்தொழுகிடுங்கருதருகழல்கட்கே
யெல்லைதானறுமென்பெலாமுருகிடுங்கண்கள்கார்மழைபோலுஞ்
சொல்லுமாறலவெழுதருமதிசெயந்தகளுறுகடையேனுஞ்
செல்வனாரடியவர்நடுவெய்திடச்செய்திடுமியறுனே. (சா)

ஓதிடாமலெக்கலைகளின்பொருள்களுமுதித்திடுமுலகெல்லாம்
போதமாயெழும்போதகவிரகினுட்பங்களும்பிரிந்தோங்கு
நீதிவாய்மையோடுறுகமைநிலவியவியலிசைநிகழுந்தா
னுதியாரடியவரவைகூடியவதிசயமறியேனே. (எ)

அடியவரிற்கூடியவியப்பு - முற்றிற்று.

ஆ_திருவிருத்தம் - கஙoக.

அன்பர்தஞ்சிறப்பு.

:o:

எப்பொருளுமுள்ளாகப்பெரியவைம்பூதங்களவையுமுள்ளாகச், செப்பரியமாயைபெரிததுவுளாகத்தெரிந்துணர்வாநீபெரியை நிகழுநின்னை,யெர்ப்பரியதன்னுளதாய்பெரிதுநாமமோங்கடியார் நாவுளதுமுறைவதானு, லிப்பரிசுபெரியனிதடியார்தம்மி லிறை பெரியையெனுமிதுவுமிசைவதன்றே. (க)

அவமறமறைகளெல்லாமருவமென்றுரைக்குநீயே
புவியினிலுருவதாகிப்புகுந்துறத்தேடியெங்கு
நவமுறுமன்பருள்ளநாடியேவாழ்தியென்று
லவமறுமன்பர்மேன்மையறிபவரெங்கேயெங்கே. (உ)

அழிவிலாத்திருவுமளவிலாவலியுமளவிலாப்பெருமையுமுடனே, முழுதுமாய்த்திகழுமூலமாமிறையைமுழுத்தவேயன்பர்தாமுடைய, ரழிவிலாவிறைவற்காருளரென்போமாதலாலன்பர்தம் பெருமை, யொழிவிலாவிறைதானறிகுதலல்லாலொழிகுதலின்றி வேறுண்டோ. (ங)

அன்றுபாண்டவர்க்கரியதூதுறலாலரியபாண்டவர்தூதனென்பேரு,மொன்றுபார்த்தனுக்குற்றதேர்ப்பாகாயோதுபார்த்தசாரதியெனும்பேரு, மென்றுமீசனுக்கெலையிலாமறைகளிசைக்குமா

தலிலன்பர்தம்பெருமை,யொன்றுமாமறையோதுமாறறியாவோ தவல்லவருலகிலிங்கெவரே. (௪)

மிகுதிகூறியங்கன்பனுடைவுணன்வெகுண்டுதூணினைத்தட்டி யங்கொட்ட, வகமெலாமகிழ்ந்தருகுமன்பனுக்காவன்று தூணினி லாதிற்பிரம, மொருமொகென்றிடமுழங்கியேதோன்ற விரை த்தலான்முகமுடலம்வேறுருவாய், செகமதுய்ந்திடத்தோன்றலா லன்பர்தஞ்சிறப்பினைச்சாற்றுவாரெவரே. (௫)

மாலுநான்முகற்கரியபொற்பாதம்வழியெலாங்குழியாகவோ ரிரவுங், கோலுமன்பர்நற்றூதுமாய்ப்பரவைகோயில்சென்றுழந் திட்டதுமுன்னஞ், சாலுசங்கிலிக்கொற்றியூரதனிற்சந்துசெய்து ழந்திட்டதுங்கண்டாற், கோலுமன்பர்தங்குலவியபெருமைகூறவ ல்லவர்குவலயத்தெவரே. (௬)

மின்றனன்பர்கணினைந்ததேகுறித்துமினைவின்முந்திநீநெடிது செய்திடலாற், றுன்றுமன்பர்கள்சொன்னவாகுறித்துத்துகளிலா வகைதுணிந்துசெய்திடலா, லொன்றுமன்பர்கள்செய்ததேதவமா யுவந்துகொண்டுநீயொன்றிடுமியல்பா, லென்றுமேவலிப்பரிசிறை யியன்றுலன்பர்தன்சிறப்பென்னியம்புவதே. (௭)

கண்டிடக்கண்ணுங்கருதிடமனமுங்கழலிணைபுகழ்ந்திடநாவு மண்டநிற்கழலைத்தழுவிடக்கையுமடியிணைசூடிடத்தலையும்[செவியு வண்டெனக்கழற்றேன்மணமுணக்குமிழும் வண்புகழ் கேட்டிடச் முண்டுமற்றன்பர்க்கவர்கடம்பெருமையுலகினி லுணரவல்லவரா [ரே. (௮)

அன்பர்தஞ்சிறப்பு - முற்றிற்று.

ஆ திருவிருத்தம்-௧௩௧.

அன்பர்தந்திறத்தறிகுறிப்பு.

:o:

அந்தணரரசர்வணிகர்வேளாளரரிவையரிழிகுலத்துள்ளோர் பந்தவில்லறத்தோர்துறவினர்பழிக்கும்பாதகர்மாதவரென்னுஞ் சிந்தனைவேண்டாதிகழுநற்சொருபன்றிருவடிசென்னியிற்சூட்டி யந்தமில்பரமாயிருந்திடுமவர்களழகுறுமன்பரென்பவரே. (௧)

அறுவகைச்சமயத்தறையுமெய்ப்பொருளு மறுபத்துநாலுநற்க லையு, மறுவறப்பயின்றுமாசரத்திகழுமதிஞரா மவர்களேயெனி

னுங், குறைவறத்தன்னைக்கொடுத்திடுங்குரவன்குரைகழற்புனைந்தவரன்றேற், பறையர்மற்றவரேபரையரேயெனுமருளுடையவர்பரம்பரரே. (உ)

சடையினைப்பரித்துந் தலையினைப்பறித்துஞ் சேவரந்தா துநற்கலிங்க, முடையெனப்புனைந் துமுடைதனைத்தவிர்ந்துமூணுறக்கங்களைத்துறந்து, படியினிற்சருகும்வாயுவுமயின்றும் பாறொர்டுகல்லிடைத்துயின்று, மிடையதுற்றுழலுமவரருட்சொருபன்மெய்யருள்பெறுதவர்க்கியல்பே. (௩)

உரைப்பதுஞானம்போலவேயாகியுணர்ந்தவர்வேடமுங்கொண்டு, நிரைத்ததுவகிலநீளமுண்டாகநிலவியகலைகளுமொழிந்து, சுரைப்பயிலிடங்கள்சுவடுகொண்டெய்திச்சொல்லொடுசெயல்மனம்வேறுய்ச், சரித்திடுமவர்கடலைவநற்சொருபன்ற மரலாதவர்களென்றறியே. (௪)

ஊழொழிந்துறுவதொருபொருளில்லையென்றுரைத்துண்டுடுத்திருக்கக், கேழிலாச்செல்வங்கிடைத்திடுமென்றுகிறிபடுசாதனைசெய்தும், பாழதற்கிறைத்துப்பலரகந்திரியும்பண்பிலாக் கூடாசாரங்க், டாழ்வவர்க்கருளுந்தலைவநற்சொருபன் றமரலாதவர்கடங்குறியே. (௫)

வடித்திடச்சொல்லிமனம்பறையறையுமதியிலாவவர்களுக்கினமாய்ப், பிடித்ததுபிடித்துப்பிணங்கியாய்வின்றிப்பித்தெனப்பொருள்களும்பிதற்றிப், படித்தவப்பொருள்கள்பிறர்க்குரைத்தவர்கள் பக்கமேபிண்டமோடொன்று, மடித்தலையறியாதவங்கழித்திடுதலடியரல்லாதவர்க்கியல்பே. (௬)

செய்வனமறையார்மறையவன்செய்யார் செகமெலாமழியினுமசையார், மெய்யலதுரையார்மேவினர்பவங்கள்வெந்துவீழ்ந்திடவலால்விழியார், கைதவமறியார்காதலர்பகைஞர்க்கருளலாற்கருதிடவறியா, ரையநற்சொருபனடியிணைக்குரிய வழகுறுமன்பரென்பவரே. (௭)

சாத்திரச்சடலைத்தலைபறியறியார்சகலவேதாகமப்பொருளை, வார்த்தையொன்றுலே மகிழ்தரவறைவர் மதுரமாஞ்சீலமேமொழிவர், பார்த்தவப்பொழுதே பழவினையழியப்பண்ணுவர் பயனிலமொழியா, ரேற்றுதற்கரியவினையடிக்குரியவெழின்மிகுமன்பரென்பவரே. (௮)

சாதியுங்குலமுந்தருமமுந்தயாவுஞ்சதுர்மறைமுதல்கலைபலவு மோதியநலமுமுடையரேயெனினு * மூண்மையேயுணர்ந்திறைகழ காதன்மீதூறாங்கருத்திலராகிற்கருதவர்புலையரிற்கடையே[ற்கே யாதலாலிறைதாளருள்பெறுமவரேயாம்வணங்கடிகளாமவரே.()

வேதமோடங்கமாகமபுராணமிருதியேமுதல்கலைபலவு, மோதியங்குணர்ந்தேயொழுக்கமும்வழுவாவுலைவிலாத்தவத்தினரெனினுஞ், சோதிநற்சொரூபன்றனாகழல்சூடித்துகளறத்தமையுணர்ந்திலரே, லாதரமற்றவரேயறிவிலரேனுமருள்பெறினவர்கண்மாதவரே. (கo)

காலவேதகமுங்காயவேதகமுங்காலமூன்றையுமுணர்ந்துலகஞ், சாலுவேதகமுஞ்சாபநல்லருளுந்தகமிகவுடையரேயெனினுஞ், சீலமார்சொருபன்றிருவடிபுனைந்துசிற்பரம்பொருளுணர்ந்திலரேன், ஞாலமார்மூகரவர்கணன்கிலரேலருள்பெறினமர்களங்கவரே.

அன்பர்தந்திறத்தறிகுறிப்பு - முற்றிற்று.

ஆ திருவிருத்தம்-கஙஉஅ.

அன்பரிற்கூடாவன்பரையஞ்சுதல்.

அந்தணர்தமக்குநீர்ப்போக்குமப்பொருளுமார்க்கும்வாய்ப் போக்குமப்பொருளும், பின்றமக்கென்னுரென்பதெவ்வுலகும்பெருகிடவறிந்திடும்பொருளே, தந்தமக்கருளுமிறைவநற்கரத்தேசகலமுமுதகமாய்க்கொடுத்து, பின்றமக்கவற்றிலன்புசெய்திடுபேதையர்க்கஞ்சிடாதவரார். (க)

தேவதேவர்க்குந்தேசிகன்கரத்தேசிதைதருமுடலுயிர்பொருளைப், பாவியேனுதகம்பண்ணிவைத்தஞ்சாதவற்றினைப்பண்டுபோற்பற்றி, யோவிடாதன்புசெய்துபின்செல்லுமுணர்விலாதவர்களைக்கண்டாற், றேவரேயெனினுமஞ்சியங்கொளிப்பர்தெளிந்தவர்கேட்டுமஞ்சாரே. (உ)

உழிவுழிவந்தவுலைவிலாப்பவத்தைதயொருமொழியாலறுத்தருளு, மழிவினன்குரவனம்பொனற்கரத்தேயன்றுதகங்கொடுத்தவற்றைத், தழுவுறுமனத்துச்சழக்கரைக்கண்டாற்சதுமுகனரிபுரந்தரனு. மழலெனநடுங்கியகலநின்றிடுவரஞ்சிடாதவர்சகத்தாரே.(ங)

---

* உண்மையை என்றும் பாடம்.

அழலினுக்கஞ்சார்வேலையால்காலத்துக்கஞ்சார்
முழுதழிபிரளயத்துக்கஞ்சிடார்முடிவையஞ்சா
ரழிவருமறிஞரென்றுமஞ்சுவரன்பராகி
யொழிவறுமன்பின்மிக்கங்குருகிடாவூமர்கட்கே. (ச)

என்றுமஞ்சுவனிணையடிசூடிடப்பெற்றுப்
பின்றும்பேதையாய்ப்பேய்கள்போல்வயிறதுவளர்த்த
லொன்றுந்தான்பொருளாகவேயுழன்றிறைகழற்கே
நன்றன்பின்றியநாட்டமில்கூழைநாய்களுக்கே. (ரு)

அடியிணைமலர்கள்சூட்டியாண்டவன்கழற்கணன்பா
யிடையறவுருகிமேன்மேலின்புறுதவரைக்கண்டா
லடியுதுதுடங்கியுச்சியளவுமங்கழல்போன்மண்டி
யிடைதருமச்சமெய்தாவூமர்களில்லையில்லை. (சு)

நாளுமஞ்சுவன்ஞானவாரமுதினைப்பெற்று
மாளுந்தாள்களுக்கடியரல்லாதவர்போலத்
தாளுந்தேய்ந்துறுதலர்கடைதொறுந்தடுமாறி
நீளுந்தீவினைவயிறதுவளர்த்துழலுநீசருக்கே. (எ)

கண்களித்திடவந்தாற்கருணைக் கழல்கள்சூட்டிய கடவுளை
யொழிய, மண்கதித்திடுமாமலரயனுய்வந்துதோன்றினும்வணங்கு
வனேதா, னெண்டருட்கழலருளிறையொழிய வேகதேசமோர்
பொருளுமுண்டாகக், கண்டுகேட்டிடுஞ்சவலைநாய்களைக்கனவுதன்
னிலுங்காணவஞ்சுவனே. (அ)

அன்பரிற்கூடாவன்பரையஞ்சுதல் - முற்றிற்று.

ஆ. திருவிருத்தம்-கஙஙசு.

நெஞ்சினைநேர்தல்.

:o:

மாலறிந்திலனுன்முகனறியான்மறைகளுலுநின்றலறியுமறியா [த
மூலனன்பரனெளிதுவந்தருளிமூடனேனையு மாண்டுகொண்டிருந்
சீலமுந்திருக்கருணையுமருளித்திகழுகோலமுமினைந்துணைந்துருகிச்
சாலவன்புசெய்திடுகிலைநெஞ்சே தவறுசெய்தெனைத் தான்கெடுத்
[தாயே. (க)

அரிவரும்பரமனவனியின்வந் தன்னைதன்னிலுலன்புசெய்தரு
ளிச், செறியுநன்கழல்சென்னியிற்சூட்டித்தெரிவிலேனையு மாண்டு

கொண்டிருந்த, விறைவனென்கிலெயெழிலருணினைந்திட்டெரியின்மீதுறுமெழுகெனவுருகாக், கிறிபடுந்துயர்செய்தெனைக்கெடுத்தாய்கீண்மைநெஞ்சமேகிடந்துழைநீயே. (உ)

செயலுரையுணர்வுக்கரியநற்சொரூபன்றேசிகனுகிவந்தருளி, யயலறவென்னைத்தன்னுருவாக்கியன்பருளாண்டு கொண்டிருக்கக், கயமுறுநெஞ்சேகடைகள்போல்விடயங் காதலித்தலமருகின்றுய், நயமதுமுணராய்நன்றியுமறியாய்நாணிலிநீதுணையன்றுல். ()

புலையுறுசெயலாற் புலனுறுபோகப் புகலரும்விடத்தையேநுகர்தற்,கலமருகவலைக்கடலுளேதலைகீழாகவேவிழுந்தழிநெஞ்சே, கலைகளினுணர்வுக்கரியநற்சொரூபன் கழல்களைநினைந்துநைந்துருகி,யிலையறுமன்பாமமுதினைவிரும்பாதேதுகொண்டென்செய்தாய்கெடுவாய். (ச)

அன்பிலாநெஞ்சமரும்பிணியெனவு மளவிலாப்பகைநமக்கெனவுந், துன்பமார்சோகமோகமேமுதலாந்துயரெலாம்விளைநிலமெனவு, மின்பவீடெய்தாதிடர்க்கிடையூரு மிருளுமென்றியம்புவர்பெரியோர், துன்பிலாவிறைவற்கன்பிலாநெஞ்சே துணையலதுணையலையெனக்கே. (ரு)

நெஞ்சினைநேர்தல் - முற்றிற்று.

ஆ திருவிருத்தம்-க௱சக.

நெஞ்சினையிரத்தல்.

———:o:———

சாலவுமிரந்தேனுன்னைத்தமியனேற்குதவுநெஞ்சே
ஞாலமுமற்றுமுற்றுமாகியேநவையொன்றில்லாக்
கோலமாஞ்சொரூபன்செய்யகுரைகழற்குறுநல்லன்பே
மேனுமேல்வளர்ந்துளோங்கவிரும்பிடவேண்டும்வேண்டும். (க)

கன்னலுந்தேனும்பாலுங்கனிகளுமுனக்கொப்போதா
னென்னுடையினியநெஞ்சேயானுனையிரந்துகொண்டேன்
மன்னுநற்றிருநடன்றன்மலரடிக்கெலையிலன்பா
யுன்னுதற்கரியகோலங்கண்டுகொண்டுருகிடாயே. (உ)

உண்மையேயுருகுநெஞ்சேயுறுதுணைநீதானுனை
லெண்ணியவெண்ணமெல்லாமெனக்கினிமுடிந்ததன்றே

வெண்ணமற்றொன்றும்வேண்டேனியானுனையிரப்பதென்றுந்
திண்ணிலையடியற்கன்பன்றிருநடக்கழற்கணன்பே. (௩)

உன்றனையிரக்கின்றேனுனெப்பிலாவினியநெஞ்சே
பன்றியுமன்னமாயும்பார்விசும்பயன்மாறேடி
யொன்றுமங்குணரவொண்ணுவொப்பில்நற்செரூபற்கன்பே
யென்றுநீவிரும்பியென்றனிடர்கெடுத்திடவும்வேண்டும். (ச)

உடையிழந்தவன்கைபோலவுதவிநீயூழியூழி
யடைதருமிடுக்கணீத்தவமுதினுமினியநெஞ்சே
முடிவொடுமுதலுமில்லாமுழுமுதற்சொரூபற்கன்பே
யிடைதரவேண்டுமென்றேமிகமிகவிரப்பனுன்னை. (ரு)

நெஞ்சினையிரத்தல் - முற்றிற்று.

ஆ திருவிருத்தம் - க௩சரு.

நெஞ்சுடன்படுதல்.

—:o:—

நெஞ்சமேயென்சொன்விஞ்சிநீயழியும் பொருள்களைநினைந்துழன்றனைமயால், வஞ்சமேசெய்யுமாயவல்வினையால்வன்பவக்கடலுளேமடிந்தாய், நஞ்சமார்செயலைவிட்டு நீநம்மையாளுடைச்சொரூபநற்கழற்கே, யெஞ்சிடவன்புசெய்திடற் கிசைந்தாயேதுமோர்குறைநமக்கிலையே. (க)

நீயலாற்பெரியாரில்லைக்காணெஞ்சே நீயெனக் குடன்படாவன்றோட், காயமேவடிவாய்க்கண்ணிழந்தவலக்கடலிலே விழுந்துகால்குலைந்தே, ஞயநீயென்னோடின் றுடன்பட்டிங்கழகியதிருநடன்கழற்கே, மேயபேரன்பேயாதலானமக்குமேவுதற்கரியதொன்றிலையே. (உ)

காயநேர்க்குமிழியதிலுறுமின்பங்கானலிற்புனலதுதனக்கிங், காயவத்துயரமளவிலையதுநீயாய்வுறுமையிலழிந்தற்றாய், நீயினிக் *கவலைமயல்களைத்தவிர்ந்துநெஞ்சமேவந்தெனக்குடன்பட்,டாயநற்சொருபற்கன்பதேயிசைந்தாலரியதேதார்நமக்கெதிரே. (௩)

உன்னையேயல்லாலொருதுணையுளதோ வுனையொழிந்திறைகழலடைந்தேன், பொன்னையேபெற்றும் பொதிந்திடக்கூறைப்

---

* கவலை வினைவெலாமொழித்து என்றும் பாடம்.

பொருந்திடப்பொறியிலார்மாலே, யென்னைநீவந்திங்குடன்பட்த்
தழுவியெம்பிரான்றிருநடன்கழற்கே, மன்னுபேரன்பேமருவுநன்
னெஞ்சேவைவயகத்தரியதேதெமக்கே. (ச)

பாராய்நெஞ்சேபத்தர்கள்வைப்புப்பரமீசன்
பேரார்துள்ளந்தன்னிலிருக்கப்பிறர்போல
வோராதேநின்றுழிதரநீதென்றுடன்வந்து
சீராவன்பைச்சிற்சொருபற்குச்செய்யாயே. (ரு)

பொய்யாமையற்கனவதுபோலும்புணரின்ப
மெய்யாமென்னக்கருதிமுன்னேடும்விறனெஞ்சே
யையோபொல்லாத்துவிதரென்னேடுடனுய்வந்
தெய்யாவண்ணமெந்தைகழற்கன்பிசைவாயே. (சு)

தேராய்நெஞ்சேநீயவைசெய்தார்கெடுமாறு
மாராயுஞ்சீர்நின்னையல்லால்வேறறிவாரார்
வாராய்நீவந்தென்வசமானல்நமையொப்பா
ரார்தானிங்குண்டேவிலையங்குமிலையன்றே. (எ)

நெஞ்சுடன்படுதல் - முற்றிற்று.

ஆக திருவிருத்தம் - கஉருக.

நெஞ்சினையுணர்தல்.

———:o:———

ஒப்பிலாததோரொண்பொருளதுதனை யுனக்குணர்த்திடுகி
ன்றேன், வைப்புமாடெனக்குயிர்வலிமதிநலமுழுதமாஞ்சொருப
ன்றன், றப்பிலாதபொற்கழற்கணன்பொன்றுமேதலைமையாவது
நெஞ்சே, யுய்ப்பதாமுலகேழும்விட்டின்பமுமொன்றுமோர்பொ
ருளன்றே. (க)

ஆரணங்களுமமரருமறியாவரியதொன்றினைநெஞ்சே
யோரவுன்றனையுணர்த்திடுகின்றேனதுவுளத்தொன்றக்கேள்
நாரணன்றிசைமுகனரன்பிரமனற்சிவமெனநவில்கின்ற
காரணன்குருபரனலாதிலதெனக்கருதிடுமதுதானே. (உ)

சோகமோகமிக்கிடுதுயர்பவங்கெடத்தொலைவில்வீடுறவென்
றங், காகுசிந்தனையடியரல்லாதவர்க்கடிய ரெண்ணலாநெஞ்சே,
யேகமாய்முதன்முழுதினுமுடி பொருளவரெண்பொருளதுநீகே,
ளாகமாகிவந்தாண்டவன்கோலமன்பொடுகண்டிடலுனே. (ங)

சத்தமேபொருளெனச்சளமுறக்கருதுறுமச்சளரோடொன்றிச்
சித்தனூர்கழலுருதவர்கள்போலத்திரிவதேன்சீசீநெஞ்சே
நித்தனூர்நிமலனூர்சொரூபனூர்நிகழுமோர்மொழியதனாலே
யத்தனாரரியநற்சொரூபமுன்வடிவதாமையமின்றே. (ச)

மண்கலங்கினும்வானதுபொய்ப்பினும்வரைகளுந்தடுமாறி
விண்கலங்கினும்விரிசுடர்வீழினும்வேலையும்வறளாகி
யெண்கலங்கினுமிலையிலையொருதுயரிதுவுணரெழினெஞ்சே
கண்கலந்தெமையாண்டநற்சொரூபன்கழலிணைநமக்குண்டே. (ரு)

பானுவம்புலியிருளதாய்த்திசைகெடப்பாணியந்தழலாகி
யானவங்கியுங்குணங்கெடக்குளூர்ந்துமற்றடங்கலிநிலைமாறித்
தானழிந்திடும்பொழுதிலுமொருதுயரிலையிலதனினெஞ்சே
யூனழிந்திடும்பொழிதினுஞ்சொரூபனையுவந்துகண்டிடுநெஞ்சே. ()

நெஞ்சினையுணர்தல்-முற்றிற்று.

ஆகூ திருவிருத்தம்-கஙுகூ.

நெஞ்சொடுமகிழ்தல்.

அளவில்நற்றவமென்செய்தாய்நெஞ்சமேயருமறைமுடிதேடித்
தளரவிச்சகந்தன்னிலென்போலவேதானோர்மாநுடனாகி
வளமுறப்பழவடிவுகொண்டாண்டுநம்மதிதிருப்பதியாக்கொண்
டுளவனைத்தையுமுண்டநற்சொரூபனுருவந்திருந்தமையாலே. (க)

என்னபாக்கியமீதென்னவதிசயமெனவுடல்பொருளாவி
தன்னதாக்கியொப்பரியநற்சொரூபனென்றன்னையுந்தானாக்கி
முன்னமாக்கியவுலகுயிர்பரமெனுமுழுதுமங்கிலவாக்கிப்
பின்னையாக்கியபரிசுதந்தரமதோபெருநலமுடைநெஞ்சே. (உ)

உற்றமாதவமென்செய்தாய்நெஞ்சமேயுருத்திரனயன்மாலு
மற்றும்வானவர்முனிவர்கள்கனவிலுமதிக்குமாறறியாத
முற்றுமாகியமுழுமுததிருநடனனவினிலெளிவந்து
சுற்றிலோமையுமாண்டடியாருடன்கருணைசெய்தமையாலே. (ங)

என்றுமொருதன்மையுறுமின்பவடிவாயே
நின்றபடிநின்றசொரூபன்கழல்கணின்றன்
புன்றலையிருந்துளநிறைந்துபொலிவெய்தத்
துன்றுதவமென்செய்தனைதொல்லையினிநெஞ்சே. (ச)

வந்தெனைப்புல்லிவண்முத்தமுந்தந்துச்சிமோர்ந்திடத்தா
வுன்றனைப்பெற்றின்றுறுததுண்டோவொருகாலயர்ந்துஞ்
சிந்தைமற்றென்றத்தேசிகன்சிற்சொரூபன்கழற்றே
னந்தனுற்றுண்டன்பினுன்மகிழ்கின்றனனனெஞ்சமே. (௫)

ஏதரிதேதியலாததிங்கென்றெனக்காரெதிர்தா
ஞதனன்பாயுநற்சொருபானந்தனுண்மலர்த்தா
ளோதியன்பாயழல்சேர்மெழுகாகியுருகுகின்ற
வாதில்நெஞ்சுண்டுகண்டீர்மகிழ்தோள்வலிமற்றெனக்கே. (௬)

வானம்வந்திடுகாலெரிநீர்புவி
யானறுந்தவகண்டமுமாகிய
கோனவன்குரவன்சொருபன்கழற்
றேனையுண்டுதிகழ்ந்ததெனெஞ்சமே. (௭)

எய்தாதெனவேதரிதேதினியென்
மைதாவுறுநெஞ்சிறைவன்கழலே
மெய்தாவியவன்பின்மிகுத்ததகோ
பொய்தாவியவன்றுயர்போயறவே. (௮)

நெஞ்சொடுமகிழ்தல் - முற்றிற்று.

ஆ திருவிருத்தம் - ௧௩௬௭.

பாடவிரும்பல்.

—:o:—

ஆதிவீடேனுமளவிலாவின்பமுமருத்தியெனதுவல்லா
லோதுமுவுலகங்களுமொருபொருளாகவுன்னுவனோதான்
வேதநாயகசொரூபனின்வியன்கழல்பாடவேண்டுவன்மென்மேல்
நாதனுனலதொருபொருள்கனவிலுநனவிலும்வேண்டேனே. (௧)

பாதமேபுகழ்ந்துநின்றுபாடநான்வேண்டும்வேண்டு
மோதுநின்புகழெப்போதுமுரைக்கநான்வேண்டும்வேண்டு
நாதநற்சொரூபனின்சீர்நவிலநான்வேண்டும்வேண்டு
மேதுமற்றுளசொற்கூறுதிருக்கநான்வேண்டும்வேண்டும். (௨)

விண்ணுளும்பதம்வேண்டிடாதநான்
மண்ணுள்செல்வமதிப்பனோமனத்
தண்ணுவென்றனதார்வமுள்கழல்
பண்ணுருந்துதிபாடவேண்டலே. (௩)

நாத்தழும்பிடநாயகன்சொரூபனுமங்களைநவின்றேத்தி, யார்த்தெழுந்தழன்மெழுகெனவுருகியங்கங்கள்விண்டமுதூறிப், போத்தொர்போதிலும் பிறிதொருபொருளறப் பொருட்பெருமான்றன், கீர்த்திபாடிடவிரும்புவனதுவல்லாற்கேட்கவும்வேண்டேனே.

நான்முகனரன்மானுடிடவரியாய்நலமிகுசொரூபாவென்
னுனலவாநீயவனியிலுருவாயடைபவர்தமையெல்லாம்
ஞானமதுருவாயிடமொழிவிரகின்னலமிகுமெழில்பாடத்
தேனனமொழியாய்தேசிகபரனேதிருவுளமதுசெய்யே. (ரு)

நாட்டின்பத்தைநயக்கிலேனங்தோ
வீட்டின்பத்தையும்வேண்டலன்மெய்மையே
காட்டின்பக்கழற்றுமரையேபுகழ்
பாட்டின்பத்தைப்பருகிக்களித்திலேன். (சு)

பாடவிரும்பல் - முற்றிற்று.

ஆ திருவிருத்தம்-கநஎரு.

புனிதரைப்பாடாப்புலவற்கிசைத்தல்.

:o:

மொழிகிலீர்சொரூபானந்தமொய்கழன்வெய்யவாழ்க்கை
கழிகிலீரிரங்கியாளுங்கருணையைநினைந்துகண்ணீர்
பொழிகிலீர்புலவீர்பொய்யேபொருளலாதவரைப்போற்ற
வொழிகிலீரவமேயுங்களுரையெலாமுகுத்தீரன்றே. (க)

தானேதனையருளத்தாரணியில்வந்தருளும்
வானேனைப்பாடாமதியிலிகாள் *
யிடுவார்கைபார்த்திங்கிடுகடைகடோறுங்
கெடுவார்பட்டாரேகிறி. (உ)

சொல்லாம்வண்ணங்கொண்டுதுதிக்கிற்சொரூபன்று
ளெல்லாநல்குமின்புறவீடுந்தருமிங்கே
பொல்லாவாழ்க்கைப்புகழிலர்தம்மைப்புலவீர்கா
ளில்லாதெல்லாஞ்சொல்லியிரந்தாலென்பெற்றே. (ங)

புனிதரைப்பாடாப்புலவற்கிசைத்தல் - முற்றிற்று.

ஆ திருவிருத்தம்-கநஎகூ.

---

* ளானுவிடுவார்கைப், பார்த்திங்கிடுகடைடோறும் என்றும் பாடம்.

தோத்திரச்சிறப்பு.

---:o:---

ஆரணங்களின்சிரத்திலாகமத்திலறைதருசமயத்திற்
சேரலுந்திகழ்செபந்தவவேள்வியிற்றியானயோகந்தன்னிற்
காரணன்சொருபன்கழற்றேடுவர்கண்ணிலாதவரந்தோ
பூரணன்கழல்புகழ்பவர்மொழியினுட்பொலிந்திருந்ததுதானே. (க)

அவலநூல்களுமறைதருமளவையுங்கொண்டலமருகின்ற
சவலைஞானிகடத்துவன்கழலிணைதாமறிகுவதெங்கே
கவலைதீர்தரவல்லவர்சொல்லிநின்கழல்களைத்துதிக்கின்ற
தவலிலாதவர்மழலைமென்மொழியதுசரணபங்கயந்தானே. (உ)

ஏழைகாளிதுதான்மதிகெடுநீரிறைவனைத்தவந்தீர்த்த
வூழியோகமற்றுபாயஞானங்களினுணருதற்குழல்கின்றீர்
கேழிலாவருட்சொருபனதருளியல்கீர்த்திபாடிடுகின்ற
தாழ்விலாமொழியமிர்தூணுமேற்றடுமாறுதல்தவிர்வீரே. (ரு)

துதியினுக்கிறையெளிவருமென்பதுசுருதியுமுரையாடு
மதுவுமிற்கவன்றேண்டனுக்கெளிவருமதிசயமறியீரோ
முதியமுத்தமிழ்விரகனுவுக்கிறைமுதல்வருமவரெல்லாம்
பதியினைத்துதிசெய்தவராதலிற்பாட்டுளான்பரனன்றே. (ச)

சதிரிழந்தறிமால்கொண்டுதன்னையாள்குருபரன்றனக்கன்பாய்த்
துதிசெயுந்திருவாதவூரனுக்கிறைசெய்தவாதுணியீரோ[ரெல்லாந்
மதிவான்சடகோபனன்மழிசைகோமங்கைமனமற்றுளா
திருநடன்கழற்றுதியினராதலினதனலமளவன்றே. (ரு)

ஆரங்கார்கினமான்மதம்பாளிதமோடழகுறும்விரைமற்றுஞ்
சேருஞ்செங்கமலங்கழுநீர்முதற்சிர்விரைதிறமுந்தா [ற்
றேதுங்காலொழிவறநிகழ்தருசொருபனதொளிமிகுதுதியேபோ
சீருஞ்செவ்வியுந்திகழ்விரைநிறமதுஞ்சிறந்திடமாட்டாதே. (சு)

கரும்பினிற்சுவையமுதுதேமாங்கனிகட்டிசர்க்கரைபாறேன்
விரும்புநற்பலவின்சுவைமற்றுமிக்குளசுவைகளுமெல்லாந்
தெரிந்திடத்தறுவேம்பினுங்கைத்துத்தேசிகன்சொருபன்ற
னரும்புகழ்ந்துதியதிமதுரத்திடையமுதருந்தினனுக்கே. (எ)

துனிதனற்றெருகுமுடற்சுமைதுடைத்தெனைப்
புனிதமாய்ப்புரணபூரணமதாக்கிய
மனிதனார்கழற்றுதியமுதைமாந்தினோ
ரினிதெனாரெலையிலாவின்பவீடுமே. (அ)

தோத்திரச்சிறப்பு - முற்றிற்று.

ஆ திருவிருத்தம்-௧௩௮௪.

வாழ்த்துவரம்.

———:o:———

உல்கநன்குறவொழிவறுபரமுனியொப்பினற்கழல்வாழ்க
வலகின்மாமறைமநுநெறியழகுறவமலனற்கழல்வாழ்க
கலகநோய்பசிகருவொடுமகிழ்தரக்கருணையங்கழல்வாழ்க
விலகுநன்னலமெவருமெய்திடவெனையாண்டவன்கழல்வாழ்க.(௧)

மன்னர்கோன்மநுநெறியில்வழங்குகமழைபொழிந்துலகெல்லா
மன்னவீடுகவருளறம்பெருகுகவாண்டவன்கழல்சூடிப்
பின்னமாகியபேதைமைநீங்குகபேருலகதுவென்றே
யென்னையாளுடையெழில்மிகுசொரூபனையானிரந்ததுதானே. ()

மையலொன்றறமன்னுநற்சிவத்தினைமலர்க்கையாமலகம்போ
லையனீயெனக்கருளியபெருநலம்யாவரும்பெறவேண்டுஞ்
செய்யமாமறைகளுந்திகழ்மூவருந்தெரிப்பதற்கரிதாய
மெய்யர்மெய்யநற்சிவப்பிரகாசயான்வேண்டியவரமீதே. (௩)

தம்பிரான்கழலருளுகசகமெல்லாந்தருமமேதழைத்தோங்க
வெம்பிரான்கழலருளுகவின்பமேயெய்தியாவரும்வாழ்க
நம்பலாதுலகினிலுளவுரையெலாநாசமெய்துகவென்றே
யும்பரான்றிருநடன்கழல்களியியானுவந்துகொள்வரமீதே. (௪)

சாந்திதாந்திநல்லுபரதிதுவந்துவசமத்துவந்தழைத்தோங்கி
வாய்ந்தமைத்திரியாதிவீட்டிச்சைவண்பத்திதான்வளர்ந்தேமிக்
கேய்ந்தஞானவாரமுதமுண்டியாவருமின்பநற்சிவமாகச்
சேர்ந்துநான்றிகழ்சிவப்பிரகாசனைச்சிறந்துகொள்வரந்தானே. ()

கல்லாநெஞ்சைக்கனிசெய்துசெம்பொற்கழல்சூட்டி
நல்லாரெல்லாமேமுறநாயேற்கருள்செய்த
சொல்லாநெஞ்சாற்றொடர்வறுசற்சிற்சுகவெள்ள
மெல்லாரும்பெற்றின்புறவேண்டுமிறையோனே. (சு)

வாழ்த்துவரம் - முற்றிற்று.

ஆ திருவிருத்தம் கஙகo.

—:o:—

குறுந்திரட்டு முற்றுப்பெற்றது.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீதத்துவராயசுவாமிகள் திருவடிவாழ்க.

சர்வஞ்சின்மயம்.

பெருந்திரட்டுக் குறுந்திரட்டென்னும் நூல்களிற் குறுந்திரட் டிப்போ தனேகம் பிரதிகளைக்கொண் டொருவாறுராய்ந் தச்சிட்டனம். பெருந்திரட்டு மச்சிட வாலோசித் தாராச்சி செய்து வருகின்றனம். இன்னுஞ் சில பிரதிகள் கிடைத்தற் கெதிர்பார்க்கின்றமையால் ஷை பிரதிவைத்திருப்போ ரவசிய மனுப்பவேண்டியது; அனுப்பினு லஃதையும்வைத் தொத்திட் டச்சிடப்படும். ஏன் பலபிரதியை விரும்புகின்றோமென்றால்? திரட்டியருளியது; அதிகநாளானபடியால் ஒருபிரதிக் கொருபிரதியிற் பரஸ்பர விரோதமா யிருக்கின்றமையாலும், ஏடுகள் சிதலரித்துவிட்டமையாலும், அனேகம் பிரதிகள் வேண்டியிருக்கிறது.

மேற்கண்ட நூல்களை அனேகம்பேர்கள் அச்சிட்டு வருகிறோமென்றும், அச்சிடப்போகிறோமென்றும், விளம்பரங்களிற் காட்டியும்; நாளதுவரையி லச்சிடவில்லை. அதுயாதுகாரணத்தாலோ? அவ்வவர்களே அக்காரணத்தை ஆலோசித் தறியவேண்டியது. ஸ்ரீநடேசப்பெருமான் றிருவருளாற் குறுந்திரட்டு முற்றுப்பெற்றது.

கணபதிதுணை.

பரிசோதனபத்திரம்.

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
௬	௨௭	ல்வர் ...	...லவர்.
௨௧	௨௮	ணிருபப் ...	...ணிருப்ப.
௪௧	௨௦	டசுகர் ...	...டசுரர்.
௬௬	௧௩	மனேதாந்தி ...	...மனேகாந்தி.
௧௦௪	௨௧	கூழிலாக்கை ...	...கூறிலாக்கை.
௧௦௯	௧௮	நிழ்ந்திட ...	...நிகழ்ந்திட.
௧௧௫	௧௨	தலையனு ...	...தலையது.
௧௩௧	௩௨	மனிலஞ் ...	...மநிலஞ்.
௧௪௭	௨௯	கயற்க்ண்ணு ...	...கயற்கண்ணு.
௧௬௦	௫	மலற்றாளே ...	...மலர்த்தாளே.
௧௭௦	௪	க்ாரென் ...	...காரென்.
௧௭௮	௨௯	திகழந்தவை ...	...திகழ்ந்தவை.
௧௭௯	௧௮	யுடைட் ...	...யுடை.
௧௮௨	௧௦	வருளுன்மொழி	...வருளுமொழி.
௧௮௭	௧	போனு ...	...போனுபா.
ஷை	௨௪	தேனேன் ...	...தேனே.
௧௯௧	௨௫	நம்பிரான் ..	...தம்பிரான்.
௨௦௩	௩	தெனே ...	...தெனே.
௨௦௫	௨௮	ரிதுவிறை ...	...ரிதுவிறை.
௨௦௮	௨௯	தெர்ப்பாகா ...	...தேர்ப்பாகரா.
௧௪௯	௨௭	பாட்டின் நெம்பர் ௧௦.	பாட்டின் நெம்பர் ௧௧.

௧௧ - ௧௦ - ஆய்த் தவறிய பாட்டு நெம்பர் - ௭௫௦-காப்பியில் மாத்திர முண்டு.

தத்துவராயசுவாமிகள் அருளிச்செய்த திருத்தாலாட்டுமுதல் அமிர்தசார மீறாகிய அடங்கன்முறையும், பாடுதுறையும், பிரம கீதையும், ஈசுரகீதையும், சிவப்பிரகாசவெண்பாவும், தத்துவாமிர்தமும், அச்சுப்புத்தகமாக யாவரும் கிரயத்துக்குப் பெற்றுக் கொள்ளலாம்.

புத்தக விளம்பரம்.

———:o:———

அத்தொய்த சாஸ்திரத்திரட்டு முதற்புத்தகமும், ஷை இரண்டாம்புத்தகமும், ஷை மூன்றும் புத்தகமும், ஷை நான்காம் புத்தகமும், ஷை ஐந்தாம்புத்தகமும், கீதாத்திரயமும், அருட்பாவும், இலக்கண இலக்கிய நூற்றிரட்டும், பஞ்சலட்சண, நேமிநாத, வீரசோழியமும், பாஷிய இருதயவசனமும், வாசிட்டத்திரட்டு, பகவற்கீதைத்திரட்டு, பாகவதத்திரட்டும், பஞ்சதசப்பிரகரண சங்கையுத்தரவசனமும், ஜீவன்முக்திப்பிரகரணவசனமும்,

அத்தொய்தபோததீபிகை வசனமும், தாயுமானவர் அடங்கன்முறையும், பட்டணத்துப்பிள்ளையார் அடங்கன்முறை,பத்திரகிரியார் மெய்ஞ்ஞானப்புலம்பல், சிவவாக்கியர் சிவவாக்கியம், கபிலர் அகவல்,இவைகள்சேர்ந்தபுத்தகமும்,இலக்ஷணவிர்த்தி,தசகம், விவேகசட்கம், சொரூபாநுசந்தான துதி, மனிடாபஞ்சகம், சோபானபஞ்சகம், தக்ஷணாமூர்த்தி அட்டகம், அத்துவிதரசமஞ்சரி,அத்துவிதாநுபவம், ஆகிய மூலங்களும்,விவேகசூடாமணிமூலமும், ஞானவாசிட்டக்கதைகளின் அவதாரிகை, பகவற்கீதை அத்தியாயங்களின் அவதாரிகை, பிரமகீதை அத்தியாயங்களின் அவதாரிகை, ஆகிய வசனம். உபநிடதம், சொரூபசாரம், சுருதிசாரமகாவாக்கியம், மகாவாக்கியம், ரிபுகீதை மனனயுத்தி,முத்திகண்டத்தின் சொரூபநாமம், ஆகிய மூலம். ஆத்மாநாத்ம வைலக்ஷண நிருபகவசனஞ் சேர்ந்த புத்தகமும், பாலசம்வாத வினாவிடை வசனமும், சுவாநுபவத்திருவாக்கு மூலமும், வாக்கியவிருத்தி, அபரோக்ஷாத்மாநுபவ தீபிகை,துவாதசமஞ்சரிகாதோத்திரம், சதுர்த்தசமஞ்சரிகாதோத்திரம், பஞ்சகோச நேதிக்கிரமம், சேர்ந்த புத்தகமும்,

திருக்குறள் மூலமும், நாஞசிவவாதக்கட்டளை, கீதாசாரத்தாலாட்டு, சசிவர்ணன்சரித்திரம், சசிவர்ணபோதம்,துவாதசநாமசங்கீர்த்தனம், ஆகிய மூலமும், பிரபுலிங்கலீலைத்திரட்டு,பிரபோதசந்திரோதயத்திரட்டு, சூதசங்கீதைத்திரட்டு, திருப்போரூர்ச்சந்நிதிமுறையிற், குமுங்கழில்விருத்தஞ்சேர்ந்த புத்தகமும்,ஆத்மபோதடீகாவசனமும், நாலடியார்மூலமும், சுப்பிரமணியர் பிரபந்தக்கொத்தும், அஷ்டாவர்க்கிரர்கீதை வசனம், சிவசிவசங்கீர்த்தனம், அடியவர் திறத்து நிந்தாஸ்துதி, ஆகியமூலமும், கைவல்யநவநீதமூலமும், வேதாந்த சூடாமணி மூலமும், அஞ்ஞவதைப்பரணி மூலமும், சிடாசாரமூலம், ஏதுசொரூபகாரிய அவதிபல லட்சண

வசனம், அட்டப்பிரமாணத்தின் திருஷ்டாந்த தாஷ்டாந்தஉரையும், கொலைமறுத்தல், வைராக்கியசதகம், வைராக்கியதீபம், அவிரோதவுந்தியார், சொரூபவுந்தியார், ஆகியமூலங்களும், மஹாராஜாதுறவு, அத்துவித உண்மை, பிரமாநுபூதிவிளக்கம், ஆகியமூலங்களும், விநாயகரகவல், கந்தர் கலிவெண்பா, திருமுருகாற்றுப்படை, பெருந்தேவபாணி, தோத்திரமஞ்சரி திருவடித் திருத்தாண்டகம், மதுரை அறுபத்துநான்கு திருவிளையாடற் போற்றிகலிவெண்பா,ஆகியபாராயணதோத்திரச்சுருக்கமூலங்களும்,சுவாநுபவத்திருவாக்கியங்கள், சொரூபாநுசந்தானநாமங்கள், ஆகியவசனமும், அர்ச்சனைநாமங்கள், பிரயாகை நித்தியயாத்திரை நாமங்கள், காசிநித்தியயாத்திரைநாமங்கள், காசி அந்தர்க்கிரக யாத்திரைநாமங்கள், காசி பஞ்சகுரோசயாத்திரைநாமங்கள்,தட்சணமிருந்து உத்தரயாத்திரைபோய்வரும் விபரம், தமிழுக்கு இந்துஸ்தானிவார்த்தைகள்விபரம்ஆகிய வசனமும், ராகத்துவேஷப்பிரகரணம், சாதனசதுஷ்டயப்பிரகரணம், ஆகியவசனமும், திருவிடைமருதூர், மும்மணிக்கோவைமூலமும், சித்தாந்தசாரம் மூலம், சத்தியஞானபோதம் சூத்திரமும்,

சித்தாந்தமரபட்டவணை வசனமும், மதுரையாகியகூடற்திருவிளையாடல் யமகவந்தாதி மூலமும், கோயினான்மணிமாலைமூலமும்,பரமாநந்ததீபமூலமும், ஞானவாசிட்டத்தின் வைராக்கியப்பிரகரணார்த்தசங்கிரகவசனமும்,அத்தொய்தசாஸ்திரமான்மிய சங்கிரகவசனமும், திருஞானசம்பந்தமூர்த்திசுவாமிகள்திருவாய்மலர்ந்தருளிய தேவாரப்பதிகங்களும்,நாஞசிவவாதகட்டளை வசனந்தனிப்பாகமும், விநாயகராதி அஷ்டோத்திர நாமமும், பகவற்கீதைவசனமும், ஞானவாசிட்டமும்,

சமிவனக்ஷேத்திரமென்னுங்கோயிலூர். அ. இராமசாமிச்சுவாமியவர்களால் அச்சிற் பதிப்பிக்கப்பட்ட புத்தகங்கள்.

இப்புத்தகங்கள் சென்னபட்டணம் முத்தியாலுப்பேட்டை பவழக்காரத்தெருவு (உ எ) வது நெம்பர் வீடு அ. ராம. இராமசாமிச்சுவாமியவாளிடத்திலும், (நக) வது நெம்பர் வீடு கும. பெரி. கடையிலும், ராம. மு. கடையிலும், சிதம்பரந் தேரோடுங்கீழை வீதி ஸ்ரீமத். மு. சதா. சதாசிவ தீக்ஷிதசுவாமி யவாளிடத்திலும், கிரயத்துக்குப் பெற்றுக்கொள்ளலாம்.